QbwM29
N06

११९५४३



The Rev. Isaac Abraham, C. M. S., Panneivilei

# THE LIFE

OF THE

# REV. ISAAC ABRAHAM, C. M. S.

PANNEIVILEI.

---

கனம்: ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்களின் ஜீவிய விருத்தாந்தம்.

BY


**T. B. Pandian**

*Author of "Indian Village Folk" "Slaves of the Soil" "England to an Indian Eye" and "Ancient Heroes of South Indian Peninsula"*


*With a Preface.*

BY


**The Rev. T. Walker, M.A.**



FIRST EDITION, 1,500 COPIES.

PALAMCOTTAH:

PRINTED AT THE CHURCH MISSION PRESS.

1906.



*(All rights reserved.)*

Copies of this work may be obtained from the Honorary Superintendent, C. M. S. Press, Palamcottah, or Mr. T. B. Pandian, the Author, Palamcottah.

Price 8 Annas. Postage extra.

# Contents.


| CHAPTERS. | | PAGE |
|---|---|---|
| Preface. | ... ... ... | vii |
| Letters of condolence. | ... ... | xi |
| I. | His birth, education and ordination. ... | 1 |
| II. | His family matters. ... ... | 27 |
| III. | His ministry ... ... | 32 |
| IV. | His preaching ... ... | 59 |
| V. | His congregation ... ... | 75 |
| VI. | His spirit of charity ... ... | 93 |
| VII. | His trials ... ... | 106 |
| VIII. | His character ... ... | 111 |
| IX. | The shades of evening ... ... | 131 |
| X. | The end ... ... | 141 |
| Appendix | ... ... ... | 153 |


# பொருளடக்கம்.


| அதிகாரம். | ... ... | பக்கம். |
|---|---|---|
| முகவுரை | ... ... ... | vii |
| அனுதாபக்கடிதங்கள் | ... ... | xi |
| 1. | ஜெனனமுதல் குருப்பட்டம் பெறுதல்வரை | 1 |
| 2. | குடும்ப வரலாறு ... ... | 27 |
| 3. | திவ்விய பணிவிடை ... ... | 32 |
| 4. | பிரசங்கார்த்தம் ... ... | 59 |
| 5. | சபையின் விஷயங்கள் ... ... | 75 |
| 6. | பரோபகார சிந்தை ... ... | 93 |
| 7. | நேரிட்ட சங்கடங்கள் ... ... | 106 |
| 8. | குணாதிசயங்கள் ... ... | 111 |
| 9. | சரீர பலஹீனமும் சங்கத்தாரின் அங்கிகாரமும் | 131 |
| 10. | அந்தியகாலம் ... ... | 141 |
| அனுபந்தம் | ... ... ... | 153 |

# Extracts of opinions.

From

RIGHT REV. A. ACHESON WILLIAMS, M. A., D. D.,

*Lord Bishop of Tinnevelly and Madura.*

The many friends of the late Revd. Isaac Abraham will welcome this life of one who was revered by all who knew him with genuine pleasure.

The book has been a labour of love to the author. Although I did not know Mr. Abraham personally, yet I have heard of his good report among brethren as an earnest worker for God, full of faith and full of love. I pray that this little book, written in an easy and attractive style, may be the means of quickening a fervent desire in many to follow the example of his godly life and character.

From

REV. CANON A. MARGÖCHIS, S. P. G.

I have to thank you for the book about my friend the late Revd. Isaac Abraham of Panneivilei, which appears to be an interesting account of a worthy man.

From

REV. C. P. GNANAKAN, B. A., S. P. G.,

*Idaiyangudi.*

I thank you for the copy of the late Revd. Isaac Abraham's life that you sent me. I went through the

whole book with much profit to myself and found it to be well-written and to contain nothing but facts. It was my privelege to be acquainted with the saintly Clergyman for some 40 years and to see him during my occasional visits to Panneivilei. During these visits I always found him to be a sincere *friend*, a highly polished gentleman and above all a devout and model Clergyman. I have heard people say that if all Clergymen were like the Revd. Isaac of Pannaivilai, Tinnevelly will be converted to Christianity much sooner than it is at present. May we all have grace to walk *in the* footsteps of our departed brother and to serve our Master with true fidelity and self-surrender.

In the book under review you have wisely combined instruction with history. I feel, therefore, sure that the book will prove useful to both Christians and Hindus spiritually as well as morally.

From

REV. J. DAVID, SENIOR PASTOR, C. M. S.,

*Mengnanapuram.*

I have read your work on the life of your dear father-in-law with much interest. It is written in a graphic style. Any man who reads its first page will be led to peruse the whole with advantage and benefit....May the Lord our God raise up many like our beloved and honoured Brother.

From

PASTOR N. SAMUEL, L. E. L. M.,

*Tranquebar.*

I am much obliged to you for the copy of the late Rev. Isaac Abraham's life which you so very kindly sent



me. It is a very interesting and edifying account of the life of one who was a true Christian and a model pastor. The style of the book is neither pedantic nor vulgar, but pleasant and easy.

I am sure that every one who gives the biography a *careful* perusal will be amply rewarded. May the Lord bless this publication to the good of the Church in the Tamil country.

*From*

REV. J. LAZARUS, B. A.,

*Madras.*

I have read through your *life* of the late Rev. Isaac Abraham with great interest." Apart from the incidents recorded regarding the life and work of the godly minister, the style itself is attractive and amply repays perusal......"

I am convinced that the publication of the life of late Mr. Abraham will do much good to all Tamil Christians.

From

REV. S. G. MADURAM, B. A.,

PASTOR, C. M. S.

*Palamcottah.*

I have read the life of the late Rev. Isaac Abraham of Panneivilei with great interest and profit. I had known him personally in his latter days and had admired his fragrant and self-forgetful life, but had not known that his early life also was so very full of interesting incidents as seen in this book. The Tamil Christians will surely thank Mr. Pandian for giving them to know the full history of this Saintly Minister of Christ, but they will thank God

more for the marvels of grace manifested in this life. May God use it abundantly to the edification and encouragement of many believers!

From

Mr. E. J. Gnanavuyir Pillai,
Tamil Pandit,
Sarah Tucker College,
*Palamcottah.*

I very carefully went through these 170 pages during my long vacation...... The character sketch is simple yet grand and majestic, edifying and lovely.

Some passages in the book besides being true to nature, are very graphic, vivid, and calculated to draw the attention of even a casual reader!

The language used throughout is simple, soft, sweet and melodious, while the examples and illustrations adduced are most touching, true and telling and to the point.

The various natural and artificial descriptions run like so many silver and gold threads going in and out, just adding beauty and lustre to the saintly life described. Those who read this good man's life must be amply rewarded and benefited.

I must congratulate you for bringing this good little book to such a finish in such a short time among your multifarious labours.

May the Lord Jehovah make this highly spiritual man's life an instrument for drawing many souls from all castes and creeds in the Tamil speaking districts and raise up many more Isaacs.



From

A. S. Appasami Pillai Esq.
*Palamcottah.*

னம்: நசாக்கு ஐயரவர்களின் ஜீவிய சரித்திரத்தை வெகு ஆவலோடு கவனமாய் வாசித்தேன்.

நான் சாயர்புரத்தில் படித்துக்கொண்டிருக்கும் காலத்திலேயே, அவர்கள் பரம சாதுவென்று அவர்களின் நல்நடத்தையையும் குணசீலத்தையும்பற்றி நன்குமதித்து வந்த பெரியோர்களால் கேள்விப்பட்டிருக்கிறேன்.

“நான் கிறிஸ்துவைப் பின்பற்றியதுபோல் நீங்களும் என்னைப் பின்பற்றுங்கள்” என்றும், அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, சாந்தம், விசுவாசம், இச்சையடக்கம் முதலிய ஆவியின் கனிகளால் நிரம்பிய கற்பகத்தருவைப்போல் ஒவ்வொரு உத்தம கிறிஸ்தவ பக்தனும் விளங்கக் கடமைப்பட்டிருப்பதாக இச்சரித்திரம் போதித்துக்கொண்டிருக்கிறது.

*N. B.*—The errors of orthography which have crept
avoidably in this edition will be corrected (D. V.)
next.

*T. B. P.*

# PREFACE.

I have been asked to write a few lines by way of Introduction to the Life of the Rev. Isaac Abraham. My first meeting with him was during a visit I paid with Bishop Sargent to Panneivilei soon after my arrival in India, and I have still a distinct impression of that first acquaintance with him. One incident of that visit stands out in special prominence. A Hindu devotee of some note was then residing in the neighbourhood, a man who knew the Sastras well. I remember his singing stanza after stanza in Sanskrit and Tamil for the Bishop's delectation,—to the amazement of my unaccustomed ears. I remember, even more distinctly, his saying with something of solemnity, "Sir, if your Christians were all like Mr. Isaac, we should all be Christians". Whatever we may think of the sincerity or insincerity of the rest of his remarks, at least he was sincere in the testimony which he bore to the Subject of this memoir. I have little doubt that the Gospel would spread much more rapidly in India, if all who name the name of Christ would follow in the footsteps of the late Panneivilei Pastor. The acquaintance thus begun ripened into appreciative friendship as the years passed by. Both in itinerating work, and in my connexion with him as Chairman of the District Church Council, I ever found in him a faithful friend and fellow-worker. And when, later still, I went to reside in Panneivilei for a few years, it was my privilege to be still more closely associated with him and to see more intimately the consistency of his humble,

holy life. I loved him for his truthfulness, his trustworthiness, his unselfishness, his freedom from caste-spirit. He was the father and the friend of all. May the record of his life be made a blessing alike to Christians and non-Christians, and may our Lord, in His great mercy, raise up many others to follow him even as he followed Christ.

*July 13, 1905.* T. WALKER.

# முகவுரை.

கனம்: ஈசாக்கு ஆபிரகாம் ஐயாவர்களுடைய ஜீவிய சரித்திரத்துக்கு முகவுரையாக சில வார்த்தைகள் எழுதும்படி என்னைக் கேட்டுக்கொண்டதால் இதை பின்வருமாறு எழுதலானேன். நான் இந்தியாவுக்கு வந்த சமையத்தில் சங்கை சார்ஜண்ட் அத்தியக்ஷாவர்களுடன் பண்ணைவிளைக்குப் போக நேரிட்டபோது, கனம்: ஐயாவர்களை, முதல் முறையாக சந்தித்தேன். அப்போது சம்பவித்த விஷயங்கள் இந்நாள் மட்டும் எனக்கு நன்றாய் ஞாபகத்தில் இருக்கின்றன. அதில் ஒன்று, சிறப்புற்று தெளிவாய் இச்சமையத்தில் ஞாபகத்தில் வருகிறதை இங்கு எடுத்துரைக்கிறேன். இந்து சாஸ்திரங்களில் பாண்டித்தியமடைந்து சற்று பிரபல்லியம் பெற்ற இந்துமார்க்க சன்னியாசி ஒருவர், பண்ணைவிளைக்குச் சமீபமான ஓர் கிராமத்தில் வாசஞ்செய்து கொண்டிருந்தார். அவர் சங். அத்தியக்ஷாவர்களிடம் வந்து, சமஸ்கிருதத்திலும், தமிழிலும் இனிய குரலுடன் ஒவ்வொன்றாய் அநேகங் கவிகளைப் பாடினதினால், அத்தியக்ஷாவர்களுக்கு ஆனந்தத்தையும், இப்பாஷைகளையறியாத எனக்கு ஆச்சரியத்தையுங் கொடுத்தது. அதன்பின், அந்த வைதீகன் சற்று பக்திவினயத்தோடு "ஐயா தங்களுடைய கிறிஸ்தவர்கள் எல்லாரும் கனம்: ஈசாக்கு ஐயாவர்களைப்போல் இருப்பார்களேயானால், நாங்கள் எல்லாரும் கிறிஸ்தவர்களாகி இருப்போம்" என்று சொன்ன வார்த்தையை நான் எளிதில் மறக்கத்தக்கதில்லை. இந்த சன்னியாசியார், சொன்ன மற்றக்காரியங்களின் யதார்த்தம் எவ்விதமாயினும், கனம்: ஆபிரகாம் ஐயாவர்களைப்பற்றிக் கொடுத்த சாக்ஷியத்தில், அவர் சத்தியத்தையே பேசினார் என்பது வாஸ்தவமே. கிறிஸ்துவின் நாமத்

முகவுரை.

னால் அழைக்கப்படுகிற யாவரும் கர்த்தருடைய ராஜ்ஜியத்துக் [illegible]ப்பட்ட பண்ணைவிளைப் போதகருடைய அடிச்சுவடுகளைப் பின்தொடர்வார்களேயாகில், இந்தியாவில் சுவிசேஷம் அதி தீவிரமாய்ப் பரவுமென்பதற்கு சற்றும் ஐயமில்லை. இவ்விதமாய் நான் கனம் ஐயரவர்களோடு துவக்கின அறிமுகமானது, நாளடைவில் அதிகரிக்க, எங்களுக்குள் பரஸ்பர சிநேகமுண்டாய்விட்டது. நான் தேசாந்திர பிரசங்கியாயிருந்தபோதும், ஜில்லா ஆலோசனை சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்தபோதும், அவர்கள் எனக்கு, எப்போதும் மாறாத உண்மையுள்ள சிநேகிதராயும், உடன்வேலைக்காரராயுமிருந்தார்கள். இதற்குப்பின் நான், பண்ணைவிளையில் சில வருஷம் வாசஞ்செய்தேன். அக்காலத்தில் ஐயரவர்களோடு அன்னியோன்னியமாய் அடுத்துப் பழகினதினால், யதார்த்தமுள்ள அவர்களுடைய தாழ்மையையும், பரிசுத்தமுள்ள அவர்களுடைய ஜீவியத்தையும் அதிகமாய் நெருங்கி கவனிக்கத்தக்க சிலாக்கியமும், சந்தோஷமும் எனக்குக் கிட்டியது. ஐயரவர்களில் காணப்பட்ட உண்மைக்காகவும், நம்பப்படத்தக்க தன்மைக்காகவும், சுயநயமின்மைக்காகவும், ஜாதிபேதமென்னும் கந்தையை அணியாத பாக்கியத்திற்காகவும் நான் அவர்களைச் சிநேகித்தேன். அவர்கள், யாவருக்கும் பிதாவாயும், யாவருக்கும் சிநேகிதராயுமிருந்தார்கள். அவர்களுடைய சிறந்த ஜீவியமடங்கிய இப்புஸ்தகம், கிறிஸ்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருப்பதாக. நம்முடைய பரமபிதா தாமே, அவருடைய மட்டற்ற இரக்கத்தினால் இன்னும் அநேகரை எழுப்பி ஐயரவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினதுபோல அவர்களைப் பின்தொடரச் செய்வாராக.

ஜூலை 13, 1905.

T. உவாக்கர்.

# Letters of Condolence.

BISHOP'S HOUSE,
MADRAS.
*April 4, 1904.*

MY DEAR SIR,

I have heard with great regret of the death of your father, the Rev. I. Abraham. Mr. Carr has told me of the excellent work which he had done and the influence for good which he exerted on both Christians and Non-Christians in Tinnevelly. Please accept this expression of sincere sympathy with all the members of his family in the great loss which they have sustained and their sorrow.

Yours sincerely
HENRY MADRAS.

NAZARETH,
TINNEVELLY DISTRICT.
*March 17, 1904.*

MY DEAR SIR,

I condole with you and your family on the death of your good father, who has been my friend for nearly 30 years. R. I. P. He was our Tinnevelly Saint.

Yours truly
A. MARGÖSHIS.

CHURCH MISSIONARY SOCIETY,
MEGNANAPURAM.
*March 19, 1904.*

DEAR MRS. ISAAC,

It is only this morning I learnt the sad news of the Home Call of your dear husband. Your son—I see now it must have been he wrote to me two days ago, but I could not distinguish the name, and he only said "My father". Now I know it is he who was indeed a true Father to thousands.

It is sad indeed to you, but to him it is an exchanging of corruption for incorruption, of toil and sorrow and weakness for joy unspeakable. Like John he truly loved: his whole life breathed the sweet fragrance of love. And how lovingly and prayerfully he followed his Master! What a holy example he was to all! "*Dear* old Mr. Isaac" was an epithet by which we often familiarly called him.

I shall hope to see you soon in person. May the good Lord comfort you and your family. May He give all grace to follow Christ as faithfully as dear Mr. Isaac did.

Yours in sympathy
EDWIN A. DOUGLAS.

---

DEAR MR. JOHN ISAAC DEVAR,

I was extremely grieved to hear of the decease of your late beloved father. He has lived an exemplary life and brought glory to the Name of his Master Whom he loved to serve.

Though he has not been able to do much active work for the last few years, it has been a great source of help to us to have his counsel and advice when we were in difficulties.



May God comfort your old mother and all of you, and enable you to follow closely in the steps of your father, as he followed Christ.

I will forward your letter to Mr. Walker.

Yours very truly
E. S. CARR.

---

BEX,
SWITZERLAND.
*April 14, 1904.*

MY DEAR FRIEND,

We deeply sympathise with your family in the bereavement you have suffered in the death of your father. He was one in a million, and his Christian character and conduct were beyond reproach. There was no one in the Tinnevelly Mission more universally respected, and there will be only one voice on the part of the whole community to testify to the loss which the Tamil Church has sustained.

For ourselves we loved and honoured him almost as a father and I shall look back with pleasure on the days when he and we were so intimately associated in God's work together. His example may well serve to stimulate us all to a life of humility and holiness.

Please convey our warm sympathy to your mother and sisters. May you all tread in his steps, and live an unworldly life.

Commending you all to the comfort of God's grace.

I am
Yours sincerely
T. WALKER.

PALAMCOTTAH,
*4th April, 1904.*

MY DEAR FRIEND,

The removal of your beloved Father from this earthly scene, after so long a life of loving and devoted service, must have created in your family circle an indescribable blank—an aching void that can never be filled up. Pannivillei without the well-known, highly esteemed, and much loved form of your dear father, will not seem like the same place. You *know* how deeply we sympathize with your dear mother, and all the family in this sad bereavement, and you need not to be assured that, since we heard of your dear father's lamented death, we have not ceased to pray that the God of all comfort and consolation will sustain and comfort you all. He the noble and devoted Christian Father—Teacher—Pastor—Friend, has gone into glory to be forever with the Lord. And so you, and we all, have in Him, a rich treasure in heaven. And, mindful of his precious exhortations, we can understand with what earnestness and constancy now you will seek to lay up treasure in heaven—and be rich towards God. It is a glorious truth the Christian has to rest upon when loved ones are called away from this earth, and we see them no more in the body. "For if we believe that Jesus died and rose again, even so them also that sleep in Jesus will God bring with Him" (1 Thess. iv. 14). May this assurance be your endless comfort and joy!

With warmest sympathy with your dear mother—yourself—and all your bereaved family—

I am, my dear friend,
Yours most sincerely
T. KEMBER.

---



OOTACAMUND,
*April 14, 1904.*

DEAR SIR,

Thank you for your kind letter about my dear old friend, your father. I knew him well in 1872 and 73 and esteemed him very highly he was truly a man who walked with God. I trust all his children will have grace to follow his holy example.

I am
Yours faithfully
A. H. LASH.

---

**Extract from the Proceedings of the Tinnevelly C. M. S. Executive Committee.**

*Dated July 14, 1904.*

II. Death of the Rev. Isaac Abraham of Pannavelei.

The Committee heard with regret of the death of the Rev. I. Abraham of Pannavelei, and called to remembrance his long and faithful service to the Master, and his unimpaired integrity in all that he said and did. He was a member of this Committee from the beginning and rendered valuable service. In recording his death, the Committee votes a bonus to his widow equal to three months' salary.

(True extract).

SUVISESHAPURAM, *August 25, 1904.* (Signed) E. S. CARR, (*Chairman*).
P. G. SIMEON, (*Secretary*).

Nalumavadi,
16—3—04.

கிறிஸ்துவுக்குள் எங்கள் தாயாராவர்களாகிய கனம்: அம்மாள் அவர்களுக்கு ஸ்தோத்திரம் சொல்லி எழுதிக்கொள்ளுகிற ஆறுதலின் கடிதம்.

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் அருமைத்தகப்பனும், தங்கள் அருமைப் பர்த்தாவுமாகிய, கனம்: ஐயரவர்கள் பிரிந்து போன செய்தியைக் கேள்விப்பட்டு மிகவும் துக்கப்பட்டோம்.

கர்த்தருடைய வல்லமையான ஊழியன். ஜனங்களுக்குள் எவராலும் மிகவும் அருமையாய் நேசிக்கப்பட்டவர்கள். தன் ஜீவகாலமெல்லாம் உண்மையோடும், உத்தமத்தோடும், பரிசுத்தத்தோடும் தன் இரட்சகரை நேசித்த தேவபக்தன். பிறர் சரீர ஆத்ம நன்மைகளை ஆத்திரத்தோடே தேடி நன்மை செய்துவந்த பரோபகாரி. எந்த ஏழைக்கும் உதவிசெய்த தருமசாலி. எந்த அன்னியரையும் வித்தியாசமில்லாமல் உபசரித்துவந்த புண்ணியபுருஷர். எல்லா மதக்காரராலும், நற்கீர்த்திபெற்ற வாசனைப் புஷ்பம். கோபத்தையாவது தன் அதிகாரத்தையாவது காட்டாமல், அன்பையே காட்டி, இருதயங்களைச் சேர்ந்து கொண்ட உத்தமசேகன். இவர்களை இழந்துவிட்டது எங்களுக்குமிகுந்த துக்கம். அவர்கள் ரூபம் என் முன்னே நிற்கிறது

கர்த்தருக்குள் உங்கள் பிள்ளையாகிய,
P. J. HARRIS ஐயர்,
நாலுமாவடி.

## I-ம் அதிகாரம்.

### ஜெனனமுதல் துருப்பட்டம் பெறுதல்வரையும்.

பூர்வீகத்தில் பாண்டிய நாடென்றுந் தற்காலத்தில் திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களென்றும் பெயர் வழங்குகிற இந்துதேசத்தின் இத்தெக்ஷிண பாகத்தில் மறவர்கள் என்றோர் வகுப்பார் வாசஞ்செய்துவருகிறது யாவருக்குந் தெரிந்தவிஷயமே. இந்து தேச சரித்திரத்தின் மூலமாய் இவ்வகுப்பார்களின் முன்னோர் பாண்டிய ராஜ்யத்தையும், சோழராஜ்யத்தையும் ஸ்தாபித்ததாகத் தெரியவருகிறது. தற்காலத்தில் மதுரை ஜில்லாவில் ராமனாதபுரம், சிவகெங்கை என்னும் ஜமீன்களும், திருநெல்வேலி ஜில்லாவில் மணியாச்சி, சடம்பூர், சிங்கம்பட்டி, சுரண்டை, ஊர்க்காடு, சேத்தூர், நெற்கட்டுஞ்செவல், தலைவன்கோட்டை, சொக்கம்பட்டி, சிவகிரி முதலிய ஜமீன்களும் இவ்வகுப்பார்களாலேயே ஸ்தாபித்து ஆண்டனுபவிக்கப்பட்டு வருகின்றன. இவர்களின் பெரும்பான்மையோர் மதுரை ஜில்லாவில் தென் கீழ்பாகத்தில் குடியேறியிருக்கிறார்கள். இப்பாகத்திற்கு "மறவர் நாடு" என்றுபெயர்.

இவ்விரண்டு ஜில்லாக்களிலும் இவர்களில் அநேகர் விபசாயஞ் செய்துவருகிறார்கள். சிலர் குடி காவல் வேலையைத் தொன்றுதொட்டு பாரம்பரையாய்க் காத்துவருகிறார்கள். இவர்களிடத்தில் எவ்வளவு சிறந்த நற்குணங்களிருந்தபோதிலும், பழி பாவங்களுக்கு அஞ்சா நெஞ்சையுடையவர்கள் என்றே சொல்லவேண்டும். சர்வ சிருஷ்டிகளையும் விசாரித்து நடத்துகிற சாக்ஷாத் கடவுளின் அநுக்கிரகத்தினால் இவர்களில் சற்றேறக்குறைய எல்லோரையும் ராஜரீக மேன்மையையும் ஆடம்பரத்தையும் வெகுகாலமாய் அடைந்துவரத்தக்கதாய் செய்திருக்

தபோதிலும், இக்குப்பார் தெய்வத்தை நினையாமல் வரவர
நாளடைவிலேயே செய்துகொண்டுவந்த தூர்ச்செய்கைகளாலே
யே தற்கால நிலைமைக்கு வந்திருக்கிறார்களெனச் சொல்லலாம்.
“இருளிலிருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்
கள். மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம்
உதித்தது” என்று இவர்களைக்குறித்துச் சொல்லும்படியான
காலம் வரும்போது, இவர்கள் எவ்வளவோ சிறப்புற்று செழித்
தோங்கத்தக்கதாக தெய்வ கடாட்சம் உண்டாகும்.

சங்கை கால்டுவெல், அத்தியட்சரவர்கள் திருநெல்வேலி
ஜில்லாவில், சற்றேறக்குறைய அறுபது வருஷம் தெய்வ பணி
விடை செய்து, அநேக பிரபந்தங்களை எழுதி ஜனங்களுக்கு
இகபர நன்மைகளுண்டாகும்படி விடாமுயற்சியோடே
இயேசு வள்ளலே வள்ளலென்றும், யாரொருகெட்டாத ரகசி
யம் மனு அவதார மூர்த்தியாய் மண்ணில் தோன்றி, சகல ஜனங்
களையும் பேரின்ப வீடாகிய மோக்ஷத்திற்கு ஆளாக்க வந்தார்
என்ற விந்தையை விவரித்துக் காட்டி, சந்துபொந்துகளெல்
லாம் சுவாமி இயேசு பெருமானே சருவலோக மீட்பரென
பலமுறையும் சாக்ஷிகொடுத்தவர்களென்று அநேகருக்குத் தெ
ரிந்திருக்கலாம். இந்த வேத சாஸ்திரி, மறவர்கள் “கிறிஸ்தானு
சாரிகளாகி நன்றாய்க் கல்வி பயின்றால் அவர்களுக்கு இயல்பா
யிருக்கிற எதற்குமஞ்சாத திடச்சித்தமும், உற்சாகமுமான
ஆவியும் அவர்களை உயர்ந்த ஸ்தானங்களில் கொண்டுபோய்
விடும்” என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் தாமிரபருணி நதியும் சித்திரா
நதியும் சங்கமமாகிற இடத்தில் சிவலப்பேரி என்ற ஓர் கிராமம்
உண்டு: இதை புண்ணிய ஸ்தலங்களில் ஒன்றாய்ப் பாவித்து,
வருஷத்தில் பலமுறையும் தீர்த்தமாட இந்துக்களில் அநேகர்
போகிறதுமுண்டு. என்றாலும் சதாகாலங்களிலும் இந்நதிக்
கரையோரத்தில் வசித்துத் தீர்த்தமாடிக்கொண்டிருக்கிற இவ்
வூர் வாசிகளுக்குப் பாவ அழுக்கை நீக்கி இந்தப் புண்ணிய
தீர்த்தம் ஆத்மசுத்தி உண்டாக்கப் போதாததாயிருக்கிறது பாவ

ருக்குந் தெரிந்ததே. இவர்களின் குரூரத்தன்மை நீங்காமலே, மெய்யறிவாகிய ஒளி இவர்களின் இருதயத்தில் வீசவாவது இடமில்லாமல்போயிற்று. விசேஷமாய் இவ்விடத்தில் வாசஞ் செய்கிற மறவர்களோ, வரவர மதிமயங்கி சகல துர்க்குணங் களுக்கும் ஆளாகியிருக்கிறார்கள். இந்த ஜில்லாவிலுள்ள மறவர்கள் யாவருக்கும், குலதேவதையாகிய பூலாவுடையாரின் கோவில் இவ்வூரிலிருக்கிறது. இங்கு வருஷா வருஷம் பங்குனி உத்திரத்தில் பற்பலவிடங்களிலிருந்து அநேக மறவர்கள் வந்து ஒன்றாய்க்கூடி திருநாள் கொண்டாடுகிறார்கள். இந்தத் திருநாள் முடிந்து போகும்போது "உவர்நிலத்தில் நல்விதை விதைத்திடினும் விளைவெய்திடாது; பன்னகந் தனக் கமுர்தங் கொடுத்திடினும் விடமொழியப் பயன்கொடாதே" என்று சொல்லியபடி இவர்களுடைய ஆத்ம கேடான நிலைமை முன் போலவே மாறாததாயிருக்கிறதைக் காட்டிக்கொண்டு போவது வழக்கம்.

சற்றேறக்குறைய 100 வருஷத்திற்கு முன் இக்கிராமத்தில் வசித்த மறவர்களில் ஒரு குடும்பத்தில் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். இவர்கள் பழி பாவங்களைச் செய்தவர்களென்பதற்குச் சரியான அத்தாட்சிகளுண்டு. இவர்கள் வீட்டுக் குடும்பசகிதமாய் அம்பாசமுத்திரம் தாலூகாவிலுள்ள பண்டாரக் குளம் என்கிற ஊரில் குடியேறினார்கள். சிலகாலத்திற்குப் பின் இம்மூவரில் ஒருவருடைய மகன் சீவலப்பேரிக்குத் திரும்பிவந்து, அவ்விடத்திலே ஒரு பெண்ணை விவாகம்பண்ணி கிருஷித்தொழில் செய்துகொண்டிருந்தார். இவருக்குப் பிரமுத்துத் தேவர் என்று பேர். ஆனால் ஜனங்கள் வழக்கமாய் இவரைக் கொன்னை பிரமுத்துத் தேவர் என்று அழைப்பார்கள். இவருக்கு அழகப்பன், நல்லகண்ணு என்கிற இரண்டு குமாரர்களும் வெள்ளச்சியம்மாள் என்ற ஒரு புத்திரியுமிருந்தார்கள். இவர்களில் நல்லகண்ணு 1829-ம் ௵ நவம்பர் ௴ 28௳ ஜெனனமானார். இவர்தான் பிந்தியகாலத்தில் கனம் ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்கள் என்று பேர்பெற்று விளங்குகிறார். பிரமுத்துத்

தேவருடைய மனைவி சிவந்தமேனியும், சிரித்த முகமும், தர்ம
சிந்தையுமுள்ள உத்தமியாயிருந்தமையால் அமாவாசைதோறும்
தன் குடும்பத்திற்குச் செலவாகிற அமுதோடு அதிகமாய் அமு
தாக்கி, அந்நியருக்குள்ளும், இனத்தாருக்குள்ளும், ஏழைகளான
வர்களுக்கு அன்னதானங் கொடுத்து வருவதுண்டு. இவ்வித
ஜீவகாருண்ணியமுள்ள இந்த அம்மாள் தன் குடும்ப விஷயத்
தைமிகவும் ஜாக்கிரதையோடு கவனித்துப் பார்த்துக்கொண்டு
வரும்போது மரித்துவிட்டாள். அப்போது நல்லகண்ணு என்
கிற புத்திரனார்க்கு ஏழுவயது. அதிபால்யத்திலேயே தன் தாயை
இழந்து மாதாவின் சோகத்தினால் மயங்கித் திகைத்து நின்ற
இச்சிறுவர்களுக்குத் தயாநிதியாகிய கருணைப் பெருங்கடலே
அன்னையும் பிதாவுமானார்.

இக்குடும்பத்திற்கு ரூ. 500 பெருமான சொத்தும் கொஞ்
சம் ஆடுமாடுகளும் இருந்தன. பிரமுத்துத் தேவரும் அவரு
டைய மூத்த குமாரனாகிய அழகப்பத்தேவரும் நிலத்தைப் பண்
படுத்திப் பயிராக்கிப் பலனடைவதில் தங்கள் காலத்தைச் செல
விட்டு வந்தார்கள். ஏழு வயதுள்ள நல்லகண்ணை தங்கள் ஆடு
மாடுகளை மேய்த்துவர அனுப்புவார்கள். பகலின் உஷ்ணத்
தையும் வெயிலின் கஷ்டத்தையும் பெரிதாகக் கவனியாமல்,
மற்ற ஆடுமாடுகள் மேய்க்கிற சிறுவர்களோடு சேர்ந்து, புல் செ
ழித்துள்ள இடங்களில் மாடுகளை மேய்த்து, தாமிரபருணி நதி
யில் தண்ணீர் காட்டி, தன் வீடு சேர்ப்பது நல்லகண்ணின்
வழக்கம். மாடுகளை மேய்க்கிற இவருடைய தோழர்கள் தின்
பண்டங்கள் கொண்டுவந்து தின்பது சகஜம். ஒருநாள், எல்
லாரும் தின்பண்டம் கொண்டுவருவதாய்த் தீர்மானித்துக்
கொண்டார்கள். மறுநாள் காட்டில் கூடினபோது ஒவ்வொரு
வனும் தன் தன் பலகாரத்தை எடுத்துத் தானும் புசித்து மற்ற
வர்களுக்கும் கொடுத்தான். கடைசியாய் நல்லகண்ணின் முறை
வந்தது. இவர் விரைவாய் ஓடி, வேஷ்டியில் சுற்றி, மரத்தடி
யில் வைத்திருந்ததை எடுத்துக்கொண்டுவந்து தன் தோழர்களைச்
சூழ நிற்கச்செய்து, முடிப்பை அவிழ்த்துத் திடீரென்று இதோ



என் பண்டம் என்று ஒரு கல்லைக் கீழே போடவே எல்லாத்
தோழர்களும் குலுங்கக் குலுங்க நகைத்தார்கள்.

இன்னொரு நாள், காட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்
பொழுது காட்டில் ஒரு வேஷ்டி கிடக்கிறதை நல்லகண்ணு
காண அதை எடுத்து ஒரு புன்செயில் தன் தோழருக்குத் தெரி
யாமல் புதைத்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டார். வழக்கப்படி
மறுபடியும் காட்டில் கூடும்போது வேஷ்டியை இழந்தவன்
தன் வேஷ்டியை யாராவது எடுத்ததுண்டோ? வென்று ஒவ்
வொருவனாய் வினவினான். நல்லகண்ணைக் கேட்டபோது
நான் உன் வேஷ்டியிருக்கிற இடத்தைக் காட்டுகிறேன், ஆனால்
நீ அஜாக்கிரதையாய்ப் போட்டுவிட்டுப் போனதற்கு இப்
போது மூன்றுதரம் தோப்புக்கரணம் போடவேண்டுமென்று
சொல்ல அவ்விதம் அவன் செய்யவே வேஷ்டியைப் புதைத்து
வைத்திருந்த இடத்தைக் காட்டினார்.

வழக்கப்படி ஒருநாள் நல்லகண்ணு, மாடு மேய்த்து வரும்
போது சப்பாத்துகள்ளியிலிருந்து வெளியேறின ஒரு நல்லபாம்
பைக் கண்டு பயந்து நடுங்கி, தங்கள் குலதெய்வமாகிய பூலா
வுடையாரைக் கூப்பிட்டு, கூப்பிட்டு ஓடி தான் ஒரு தேங்காய்
வாங்கி உடைப்பதாக நேர்ந்துகொண்டாராம். இன்னொரு
முறை தன் தோழர்களில் ஒருத்தனுக்கு உள்ளங்காலில் நீண்ட
ஓடைமுள் தைத்து முறிந்துகொண்டபோது அவன் நடக்கிற
தற்கு ஏதுவில்லை. அந்திப்பொழுதுமாயிற்று. மாடுகளும் ஊரை
நோக்கிச் சாய்ந்தது. மற்றப் பையன்களும் மாட்டைப் பின்
தொடர்ந்தார்கள். நல்லகண்ணு என்கிற பிள்ளையோ, உருக்க
மாய்த் தன்னுடைய தோழனை முதுகில் யேற்றிக்கொண்டு
ஊரை நோக்கி நடந்தார். வருகிற வழியில் ஓடையிலிறங்கும்
போது சுமை பொறுக்கமாட்டாமல் பையனைக் கீழேபோட்டுத்
தானும் கீழே விழுந்தார். பிற்பாடு அவனைக் கையால் பிடித்
துக்கொண்டு நொண்டி நொண்டி கொஞ்சதூரம் நடக்கச்
செய்து மறுபடியும் அவனைத் தன் முதுகின்மேல் ஏற்றி இவ்
வாறு கஷ்டப்பட்டு அவனை வீட்டிற் சேர்த்து பின் தன் வீட்

கேக்குத் திரும்பி மாடுகள் வந்ததாவென்று விட்டாரிடம் விசாரித்தார். மாடு வராததினால் நல்லகண்ணும் அவருடைய தகப்பனாரும் மாட்டைத் தேடிப்போகிற வழியில் மாடுகள் பருத்திப் புன்செயில் மேய்ந்ததாகவும், பவுண்டில் அடைத்திருக்கிறதாயும் கேள்விப்பட்டு தகப்பனாருக்குக் கோபமுண்டாகி பிள்ளையாண்டானை விளாரினால் பொறுக்க இரக்கமில்லாமல் அடிக்கவே, பிள்ளையாண்டான் சுருண்டு விழுந்து நடந்த சங்கதியைச் சொன்னார். "அவனுக்கு முன் தைத்தால் நமக்கென்ன? நாம், இப்போது தெண்டமிருக்க வேண்டியதென்று தகப்பனார் சொன்னார். "விளையும் பயிர் முளையிலே" என்றபடி ஈசாக்கு ஐயரவர்களுடைய காருண்ணியம் சிறுபிராயத்திலேயே விளங்கினது.

ஒரு சமையத்தில் இவர்களின் மூத்த சகோதரனாகிய அழகப்பன் என்னப்பட்டவர் அடுத்த கிராமத்திற்குத் தன் இனத்தார் வீட்டுக்கு ஒரு அவசரமாய்ப் போயிருக்கும்போது, தகப்பனார் பிரமுத்துத் தேவருக்கு இரவில் அபாயகரமான சுகவீனமுண்டாகி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறதை நல்லகண்ணு கண்டு தகப்பனாருக்குத் தெரியாமல் அந்த இருட்டில் வைத்தியன் வீட்டை நோக்கி ஓடினார். வைத்தியன், வீட்டுக்குச் சமீபத்தில் வந்தபோது அவனுடைய நாய் இவர்மேல் பாய்ந்து கடிக்கவர இவர் உடனே அதன் வாயைத் தன் கையால் பிடித்துக்கொண்டு வைத்தியரே வைத்தியரே என்று அழைத்தார். வைத்தியர் வெளியே வந்து நாயை விலக்கி நடந்தகாரியம் என்னவென்று விசாரிக்க, பிள்ளையாண்டான் தன் தகப்பனார் மரணவஸ்தையிலிருக்கிறாரென்று சொல்லி அழுதுகொண்டு தன் தகப்பனாரை வந்து பார்க்கச் சொன்னார்.

இச்சிறு பிராயத்தில் குணசீலமும் புத்திக்கூர்மையும் திறமையும் காட்டின நல்லகண்ணு என்கிற இளைஞரை கிறிஸ்து மார்க்கத்தில் நிலைப்படுத்தும்படி அழைத்த மகானாகிய கனம் டக்கர் ஐயரவர்களைப்பற்றி சில விஷயங்களை இவ்விடம் எடுத்துரைப்பது அவசியமாயிருக்கின்றன. 1558 முதல் 1603-ம்



வருஷமட்டும் இங்கிலாந்து தேசத்தை அரசாண்டுவந்த எலிசபெத் என்னும் மகா ராக்கினி காலத்தில் டக்கர் என்னும் பெயருடைய ஓர் பேர்போன குடும்பத்தார் செல்வச்செருக்குள்ளவர்களாயும், இவர்களின் பிந்தின சந்ததியாரில் சிலர் மிகவும் விசேஷித்த பெயர்பெற்றவர்களாயுமிருந்தார்கள். இக்குடும்பத்தில் ஒருவர் கேம்பிரிட்ஜ் என்னும் சர்வகலாசாலையில் படித்துத் தேறி, கண்ணியமுள்ள அதின் ஒரு அதிகார சபையாராகி, இங்கிலாந்து தேசத்து சபையின் ஓர் போதகராயிருந்தார். இவருடைய மக்களில் ஒருவர் சாலிஸ்பெரி என்னும் பட்டணத்தில் வியாபாரியாயிருந்தார். அவருக்கு ஒரு குமாரன் பிறந்தார். அந்தக் குமாரனுக்கு ஜான் தோமாஸ் டக்கர் என்று பேர். இவர் கல்வியில் தேறி 15-வது வயதில் இங்கிலாந்து தேசத்தில் தென்மேற்கு மாகாணத்திலுள்ள டார்க்குயி என்ற பட்டணத்தில் பேர்போன வைத்தியராயிருந்த ஹென்றி கார்ட் என்ற துரையினுடைய சிஷனாகி, பற்பல வைத்திய சாஸ்திரத்தின் விதிகளைக் கற்று இரண வைத்தியத்திலும் தேறினார்.

மேலும் 1836-ம் வருஷத்தில் இப்பட்டணத்தில் பேர்போன குருவாயிருந்த புட் என்பவரின் சிநேகிதராகி, இவருடைய போதனையைக் கேட்டு தான் லௌகீக விஷயத்தில் பெருஞ் செல்வமடையலாமென்று எண்ணியிருந்ததை மறந்து கிறிஸ்து யேசுபெருமானுடைய சித்தையுள்ளவராகி மற்றவர்களுடைய ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்பொருட்டு தன்னையும் தனக்குள்ளவைகளையும் பிறருக்காகத் தத்தம்செய்யத் தீர்மானித்துக் கொண்டு பரமபிதாவை நோக்கிப் பிரார்த்தித்து அவருடைய திருவுளச் சித்தத்தின்படியே தன்னை வழிநடத்த வாஞ்சித்துக் கொண்டிருந்தார். இவர் அதிகாலையில் எழுந்து மூன்று மணி நேரம் ஜெபத்திலும், பரம தியானத்திலும், வேதம் வாசிப்பதிலும் காலங்கழித்துவந்தார். இவ்வாறாய் உன்னத ஆவியானவர் இவருடைய இருதயத்தில் குடிகொண்டு பரம சந்தோஷத்தை உண்டாக்கினதால் பூமியின் எப்பாகத்திற்கும்போய்ச் சுத்தாங்க சுவிசேஷத்தை மனுகுலத்தாருக்குப் பிரசங்கித்து, அநேகரை

திவ்விய வெளிச்சத்தண்டை நடத்தவேண்டுமென்ற எண்ணமதிகரித்து, இவ்வுலகமும் அதிலுள்ளவைகளும் அநித்தியம் என்று இவருடைய காதில் சதாகாலமும் தொனித்துக்கொண்டிருந்தது.

இவரை யௌவன பிராயத்தி லறிந்தவர்கள் இவருடைய குணாதிசயத்தைக் குறித்து அமுர்தம்போன்ற மதுரமான பட்சதாபமும், மனத்தாராளமும் மிகவும் பெருந்தன்மையுள்ளவரென்றுஞ் சாக்ஷியிட்டிருக்கிறார்கள். சிலகாலங்களுக்குப்பின் டக்கர்துரையவர்கள் தன்னுடைய அன்பான பெற்றோரைச் சந்தித்து, அந்நிய தேசத்துக்கு சுவிசேஷப் பிரசங்கியாய்ப் போகவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறதாய்த் தெரிவிக்க இதைக் கேட்டவுடன் அவர்கள் மனஞ்சோர்ந்து அந்நிய தேசத்துக்கு தங்கள் அருமைப் புத்திரன் போக யோசித்துவிட்டாரோ என்று மிகவும் வியாகுலப்பட்டார்கள். பிறப்பிலே கிடைத்திருக்கிற ஐசுவரியத்தையும், வைத்தியனாய் அடையக்கூடிய சிலாக்கிய பாக்கியங்களையும் வைத்துக்கொண்டு, மகனே, தெய்வத்திற்கு உகந்தவனாய் இவ்விடத்திலேயே நடந்து, தானதர்மங்களைச் செய்து கிறிஸ்துவினுடைய புண்ணியத்தினால் மோக்ஷகெதி யடையக் கூடாதா? வென்றும் சொல்லி புத்திர சோகத்தால் மயங்கினார்கள்.

இங்கிலாந்து தேசத்தாராகிய நாம் அந்தகார இருளிலிருந்தபோது அந்நியதேசத்தார் கிறிஸ்தவப் போதகர்களை நமக்கு அனுப்பி சுவிசேஷத்தையும், அதால்வரும் சகல சிலாக்கியத்தையும் இந்நாடுமட்டும் கொண்டுவந்துவிட்டார்களே. மனுஷஜாதியாரின் ஓர் அவயவமாயிருக்கிற நான், எங்கே எங்கே அமான இருள் பாவி, அறியாமை குடிகொண்டு, பூதயையின்றி பேராசைகொண்டு, மெய்ப்பொருளுணராது, யேசுரக்ஷகரை அறியாதிருக்கிறார்களோ அங்கே நான் போய் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் உண்டாவதாக" வென்று அறிவிப்பது என்பேரில் விழுந்த பெருங்கடமையல்லவா? என்பதாய் அதிகமாய்ச் சொல்லி, அவர்களைச்



சாந்தப்படுத்தி, விடைபெற்று குருத்தொழிலுக்கு ஆயத்தம்பண்ணப் புறப்பட்டார். அப்படியே 1841-ம் வருஷம் லண்டன் பட்டணத்திலுள்ள வேதசாஸ்திர பள்ளிக்கூடத்தில் சேர்ந்து அவ்விடத்தில் அதிக ஜாக்கிரதையாய் தனக்குக் குறிப்பிட்ட பாடங்களைப் படித்துத்தேறி 1842-ம் வருஷம் மார்சால அம்மாளை மணம் புரிந்து நியூசிலாண்டு தேசத்துக்குப் போதகராகப் போகத்தீர்மானித்தார்.

கொலம்பஸ் என்கிற மகா மாலுமி இந்தியாவைக்கண்டுபிடித்து, அதன் ஐசுவரியத்தை அடைந்து, பேர்பெறவேணுமென்ற எண்ணத்தோடே அத்திலாந்திக் என்னும் மகாசமுத்திரத்தில் தன் கப்பல்களை ஓட்டி மேல் திசையை நோக்கிப் போகப்போக, இந்தியாவையல்ல, அமெரிக்காவை யடுத்த ஓர் பாகத்தைக் கண்டடைந்தார். அதினால் உலகமுண்டானதுமுதல் மறைந்துகிடந்த விலையுயர்ந்த வெள்ளி, பொன், வைடூரிய முதலியவைகளை வெளியாக்கவும், விஸ்தீரணமான இத்தேசத்தின் சகல ஐசுவரியத்தையும் மனுஷஜாதியாரின் பிரயோஜனத்திற்கு கொண்டுவரும்படிக்கு நேரிட்டது. கொலம்பஸின் கப்பல்கள் அவர் எதிர்நோக்கிச்சென்ற இந்தியாவுக்குப் போகாமல் அமெரிக்காவின் திட்டுகளில்ப்போய் சேரும்படி செய்த கர்த்தர் நியூசிலாண்டுக்குப் போகவேண்டுமென்றிருந்த கனம். ஜான் தாமஸ் டக்கர்துரையவர்களை இந்தியாவுக்கு வழிநடத்தி சர்ச்சு மிஷியோன் சங்கத்தாரின் சம்பந்தமாய் திருநெல்வேலி ஜில்லாவுக்கு 1819-ம் வருஷம் அக்டோபர் மீ வந்து சேரச்செய்தார். இவ்விடத்தில் விலைமதிக்கப்படாத ஆத்துமாக்களை ஐசுவரியவான்களாக்கவும், உலகம் தரக்கூடாத சமாதானத்தை அவர்கள் கண்டடையச் செய்யவும், ஓர் கருவியாய் கர்த்தருடைய கரத்தில் வெளிப்பட்டார்கள்.

இவ்விடத்திய தமிழ்ப்பாஷையை கற்கவும், மிஷியோனைச்சேர்ந்த பற்பல கிராமங்களுக்குப்போய் ஜனங்களுடைய தாரதம்மியங்களை யறியவும், சற்றேறக்குறைய இரண்டு வருஷங்கள் சென்றது.

1814-ம்வரு கணம். டக்கர் ஐயரவர்களும் அம்மாளும் நீர்வளம், நிலவளம் பொருந்திய பண்ணைவிளை என்ற ஓர் கிராமத்தில் கோவில் பங்களா முதலியவைகளைக் கட்டிவசித்தார்கள் இவ்விடத்திலிருந்து பற்பல கிராமங்களில் வியாதியாய் வருந்தப்படுகிறவர்களுக்கு வைத்தியஞ் செய்து கிறிஸ்துவை ரக்ஷகராக ஏற்றுக்கொள்ளும்படி அவர்களைப் பட்சமாய்க்கேட்டு ஊக்கமாய் அநேகரைப் பரலோகத்தின் பிள்ளைகளாக்கவும் முயற்சித்தார்கள்.

இவர்களின் விசாரணையைச் சேர்ந்த கிராமங்களுக்குள் ஹேகண்ட சேலப்பேரியும் ஒன்று. இதில் அநேக மறவர்கள் கிறிஸ்துமார்க்கத்தில்ச் சேரவேண்டுமென்று வேதம் படித்து வந்தார்கள். இங்கே கோவிலும், பள்ளிக்கூடமும் புதிதாய் ஸ்தாபித்திருந்தது. அதில் அநேக பிள்ளைகள் படித்துவந்தார்கள். பிரமுத்துத் தேவரும் தன் மூத்தமகனாகிய அழகப்பத்தேவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பியிருந்தார். இளைய மகன் நல்லகண்ணு தானும் பள்ளிக்கூடத்திற்குப் போகவேணுமென்று ஆசைப்பட்டுக் கேட்டபோது, அவனைத் தடுத்து வழக்கப்படி மாடு மேய்க்க அனுப்பினார். ஓய்வுநாள்தோறும் புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்திருக்கிற எல்லாரும் குடும்பசகிதமாய்க் காலையில் கோவிலுக்கு வரவேண்டுமென்றும் யாராவது வரத் தவறினால் அபராதம் கொடுக்கநேரிடும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நல்லகண்ணு தேவர் கிறிஸ்தவ கோவிலுக்குப் போகக்கூடாதென்று தீர்மானம்பண்ணித்தன் மாடுகளைப் பத்திக்கொண்டு போக எத்தனிப்பார். இவர் தகப்பனார் மிகவும் நல்லவார்த்தைகளைச் சொல்லி கோவிலில் உபதேசியார் பேர் வாசிக்குமட்டுமாவது வந்திருந்து அப்புறம் போவென்பார். அவ்வாறே நல்லகண்ணு பேர் வாசித்தவுடன் தன் மாடுகளைப் பத்திக்கொண்டு காட்டிற்குப் போய்விடுவார். இவர் துவக்கத்தில் கிறிஸ்து ஆலயத்தைக்குறித்து எதுகாரணத்தினாலோ வெறுப்பையும் துவேஷத்தையும் காட்டுவார். ஒருநாள் கோவிலுக்குப் போ



யிருக்கும்போது, அன்றையத்தினம் உபதேசியார் பெயரை முந்தி வாசியாமல், ஜெபம்பண்ணி முடித்து உயிர்த்தெழுதலைப் பற்றிப் பிரசங்கித்தார். மரித்தவர்கள் எல்லாரும் மறுபடியும் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்பதை இவர் கேட்டு, தனக்குள் ஆச்சரியப்பட்டு மரித்துப்போன தன் அருமையான மாதாவும் உயிரோடெழுந்திருப்பாளே,! இவர் சொன்னபடி நானும் அவளைப் பார்க்கலாமே யென்று தனக்குள்ளே தனிமையாய்க் காட்டிலிருக்கும்போது இதைக்குறித்து சிந்தித்துக்கொண்டிருப்பார். இப்படியிருக்குங்காலத்தில் மற்றப் பையன்களைப்போல் தானும் படிக்கவேண்டுமென்ற ஆசை அளவிற்கு அடங்காமல் உண்டாயிற்று. என்றாலும் இவர் தகப்பனார் பள்ளிக்கூடத்திற்கு தன்னை அனுப்பயிடமில்லை என்று கண்டு, தனக்குக் கிடைக்கிற தின்பண்டங்களைத் தன் தோழர்களுக்குக் கொடுத்துத், தன் மாடுகளைப் பார்க்கச்சொல்லிவிட்டு, பள்ளிக்கூடத்திற்குப் போய் தமிழ்ப் பாஷையின் எழுத்துக்களைக் கற்றுக்கொண்டார். சிலசமையங்களிலும் இராக்காலங்களிலும் தகப்பனாருக்குத் தெரியாமல் உபாத்தியாயரிடத்தில் போய்ப் பாடம் கேட்டுக்கொள்வார். இவ்வாறாய்க் கூடியசீக்கிரத்தில் தமிழ் பாஷையை வாசிக்கக்கற்றுக்கொண்டார். படிக்கவேணுமென்று இவருக்கிருந்த ஆவலை உபாத்தியாயர் அறிந்து இவர் பிதாவினிடம் பலமுறையும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவேணுமென்று கேட்டுக்கொண்டபோதிலும், தன் வீட்டுக் காரியங்களைப் பார்க்க அவசியம் நேரிட்டதினால் இவரைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறதற்கு ஏதுவுமில்லாதிருந்தது. உபாத்தியாயர் தமிழ் பாஷையில் ஒரு சுவிசேஷத்தை இவரிடம் கொடுத்து "பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன். உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன் நீ என்னுடையவன்" என்று இருத்தொண்டனாகிய யாக்கோபுக்குச் சொன்ன கர்த்தர் உனக்கும் அத்தன்மையாகச் சொல்வாராக என்றும், இந்தப் புஸ்தகத்தைக் கவனமாய் வாசி, தெரியாத விஷயங்களை என்னிடம் வந்து கேள், என்றும் ஓர் சமையத்தில் சொன்னார். சுவிசேஷம் தனது

கைவந்தவுடன் தன் முந்தின சிநேகிதர்களோடு சேர்ந்து விளை யாடுகிறதற்கு இவருக்கு நேரமில்லை, மாட்டைக் காட்டில் மேய விட்டு, கருவைமரத்தின் நிழலிலே தனிமையாய் உட்கார்ந்து, கொண்டு சுவிசேஷத்தை வாசித்துக்கொண்டேயிருப்பார். வா சிக்க வாசிக்க அதிலே இனிமைகொண்டு கவனத்தோடு அநேக பாகங்களையும் பாராமல் படித்தார். பின்னும் உபாத்தியாயரை அடிக்கடி கண்டுபேசி அவரிடத்தில் நல்லபுத்தி போதனைகளைக் கேட்டுவருவார். அப்புறம் கோவிலுக்கு ஒழுங்காய்ப்போய் இராக்காலங்களில் சுவிசேஷத்தில் தனக்குத் தெரியாத பாகங் களை உபாத்தியாயரிடத்தில் கேட்டறிவார். இவ்விதமாயிருக் கிற இந்தச் சமையத்தில் துஷ்டப்பிள்ளைகளோடு சேரவாவது, கெட்ட வார்த்தைகளைப் பேசவாவது கொஞ்சமும் மனமுமில் லாமற்போயிற்று.

இவர் சில சமையங்களில் தன் வீட்டில் போஜனம் தயார் செய்வதில் உதவிசெய்கிறதுண்டு. காலை ஆகாரம் சாப்பிடுவ தற்கு இவர்தமையனார் விருப்பத்தின்படியே துவையல் அரைக் கும்படி கொஞ்சம் பயிறு கொடுக்க, அது திருட்டுச் சொத் தென்று இவர் தெரிந்து துவையலை அரைத்துவைத்து தான் அதைச் சற்றேனும் எடுத்துக்கொள்ளாமல் பழைய ஆகாரத் தைமாத்திரம் புசித்து காட்டுக்கு மாட்டை ஓட்டி மேய்க்கப் போனார்.

ஒருநாள் இவர் தகப்பனாரும் தமையனும் அதிகாலையில் போஜனஞ்செய்து புன்செய்க்குப் போய்விட்டார்கள். நல்ல கண்ணு தன்காலை ஆகாரத்தைப் புசிக்க ஆயத்தமாயிருந்த சமை யத்தில் விருத்தாப்பியமான ஒரு ஏழை மனுஷன் வந்து தான் மிகவும் பசியாயிருக்கிறதாகச் சொல்ல, உடனே தன் பங்கு ஆகார முழுவதையும் கொடுத்து, அவனைப் பசியாற்றிவிட்டு நீராகாரத்தைச் சாப்பிட்டுக்கொண்டு, சுவிசேஷத்தையும் கையி லெடுத்து மாட்டைக் காட்டுக்குப் பத்திக்கொண்டுபோய் மேய விட்டு இவர் வழக்கமாயிருந்துவாசிக்கும் தன்னுடைய கருவை மரத்தினடியில்போய் உட்கார்ந்தார். இவருக்குப் பசி அதி

கரித்ததால், பக்கத்துப் பருத்திப் பூன்செயில் வெள்ளரிச்செடி காய்த்திருக்கக் கண்டு, அதில்போய்ச் சில காய்களைப் பறித்து பசியாற்றிக்கொள்ளலாமென்று நினைத்து, சுவிசேஷத்தை மரத்தின் நிழலில் வைத்துவிட்டு வெள்ளரிக்காய்மேல் கைவைத்தார். இன்றொன்று உபாத்தியாயர் எப்பொருளையாகிலும் திருடுகிறவர்கள் நரகத்துக்குப் பாத்திரவான்களென்று சொன்னாரே, கடவுள் எங்குமிருக்கிறவர் இங்கும் நம்மைப் பார்ப்பாரே, என்று நினைத்துப் பயந்து காயைப் பறியாமல் கருவைமரத்தினடியில் மறுபடியும் போய் உட்கார்ந்தார். சுவிசேஷத்தைக் கையிலெடுத்து வாசித்தபோது மனுஷன் ஆகாரத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்கிற வாக்கியத்தை வாசித்து, ஆச்சரியப்பட்டு இதைப்பற்றி உபாத்தியாயரிடத்தில் கேட்கவேணுமென்று நினைத்துக்கொண்டார். பத்து வயசுள்ள இந்தப் பாலனுக்கு பசி அதிகரித்ததினாலே சோர்ந்து கருவைமரத்தினடியிலே படுத்துக்கொள்ள, இந்தச் சமயத்தில் இறந்துபோன இவருடைய தாயின் நினைவு வந்துவிட்டது. என் தாயிருந்தால் நான் பசியாய்வரப் பார்ப்பாளா,? இந்த சித்திரை மாசத்து வெயிலில் காலையிலிருந்து மதிய நேரமட்டும் ஆகாரமில்லாமல் காட்டிலிருக்க சம்மதப்படுவாளா,? என்று கண்ணீர்விட்டு அழுதாராம். இந்த சமயத்தில் காட்டில் வேலைசெய்கிற தன் இனத்தாருக்கு மத்தியானக் கஞ்சி கொண்டுபோகிற ஒரு பெண் இவ்வழியாய் வந்தாள். கருவைமரத்தண்டை மயங்கிக் கிடக்கிற பையனை அவள் கண்டு கிட்டப்போய்க் கூப்பிட்டு என்னப்பா! ஆயாசமாய் படுத்திருக்கிறாய் என்று கேட்க, நடந்த விபரத்தைச் சொன்னார். அவள் உடனே பரிதாபப்பட்டு, தான்கொண்டுபோகிற ஆகாரத்தில் கொஞ்சம் கொடுத்து அவர் பசியை ஆற்றினாள். "ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன் பாலகனை மறப்பாளோ?" என்று சொன்ன சர்வதயாபரராகிய கடவுள் நல்லகண்ணை மறப்பதில்லை என்று காட்டினார்.

எக்காலத்திலும் ஒவ்வொரு விசேஷித்த நோக்கத்துக்கென்று தாயின் கர்ப்பத்திலிருந்து, பிரித்தெடுத்துப் பக்குவப்படுத்தி, பரவசப்படுத்தி, தம்முடைய திருவுள்ள சித்தத்தை நிறைவேற்றும்பொருட்டு, திவ்விய பணிவிடை யாட்களைத் தெரிந்துகொண்டுவருகிற எல்லாவற்றையும் பார்க்கக்கூடிய மங்கா ஒழி கண்ணாகிய கடவுளின் மகத்துவத்தைப்பற்றி என்ன சொல்ல? பஞ்சத்தினாலும், பசியினாலும், பிரயாணத்தினாலும் மெலிந்து களைத்து பேரீச்சமரத்தினருகில் படுத்துக்கொண்டிருந்த தம்முடைய தாசனாகிய எலியாவைக் கண்ட திருக்கண், தாமிரபருணி நதிக்கரையில் கருவைமரத்தண்டையில் பசியினாலும் உஷ்ணத்தினாலும் சோர்ந்து, படுத்திருந்த நல்லகண் இளைஞனையும் கண்டது. எலியாவே! எழுந்து புசி, நீ போகவேண்டிய பிரயாணம் தூரமாயிருக்கிறதென்று சொன்ன கர்த்தர், நல்லகண்ணையும்பார்த்து, எழுந்து புசி, உன் தாயை இழந்தோமென்று துக்கியாதே, நீ எலியாவைப்போல நாற்பது மைல் தூரமாத்திரமல்ல 67 வருஷம் எனக்காகச் சாக்ஷிபகரவேண்டியதிருக்கிறது. "இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள், கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புதுப் பெலனடைந்து, கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" என்று சொன்னதுபோலிருக்கிறது. அத்திமரத்தண்டையில் நாத்தான்வேல் என்னும் அடியானைக் கண்ட திருக்கண், அத்திமரத்தின்மேலிருந்த சகேயுவென்னும் தாசனைக் கண்ட கண், கல்வாரிமலையில் சிலுவைமரத்தில் தொங்கிக்கொண்டிருந்த கள்ளனை நோக்கின கண், சேவல் கூவுமுன் தம்மை மூன்று தரம் மறுதலித்த பேதுருவை நோக்கின கண், தூர தேசத்தில் போய், தன் சத்துசாரத்தை இழந்து, ஆத்மாவின் தேவ சாயலைக் குறைத்து, தூரத்தில் வருகிற கெட்ட குமாரனை நோக்கிக்கொண்டிருக்கிற அருட்கண் தாம்பிரவருணி நதிக்கரையோரத்தில் கருவைமரத்தடியில் பகலில் உஷ்ணத்தினாலும் பசியினாலும் சோர்ந்து, மயங்கிப் படுத்திருந்த நல்லகண்ணையும் கண்டது.



இச்சமயத்தில் கிராமங்கள்தோறும்போய், சபைகளைச் சந்தித்து இந்துக்கள் முதலானவர்கள் மத்தியில் பிரசங்கித்துவருகிற வழக்கப்படி சிவலப்பேரிக்கு, தேவ அன்பின் சாயலை அணிந்திருந்த களங்கமற்ற உத்தம போதகராகிய கனம்: டக்கர் ஐயரவர்கள் வந்தார்கள். உபாத்தியாயர் நல்லகண்ணை விசேஷமாக அவரிடத்தில் கூட்டிக்கொண்டுபோய்க் காண்பித்து, இவ்வூரின் முதல் பலனாகிய கர்த்தருக்கென்ற காணிக்கை இது தான் இதுதான் என்றுசொல்லி, நல்லகண்ணைக்குறித்துத் தனக்குத் தெரிந்த விபரத்தை அவர்களிடத்தில் அறிவித்தார். அவர்கள் அகமகிழ்ந்து, நல்லகண்ணை என்னோடு பண்ணைவிளைக்கு வருகிறாயா? என்று கேட்க, அதற்கு அவர், உடனே நல்லதென்று சிறு குழந்தையாயும் பிதாவாசையும் சகோதர சிநேகமும் இனப்பற்றும் ஜனப்பற்றுமுள்ளவராயிருந்தும் சம்மதித்தார். "சீயோன் குமாரத்தியே! நீ உன் தாய் வீட்டையும் தகப்பன் வீட்டையும் மற, அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்" என்ற வேதவாக்கியத்தின்படியேயும், கர்த்தர் ஆபிரகாமை நோக்கி; நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாயிருப்பாய் என்று திருவுளம்பற்றினதுபோல நல்லகண்ணும் ஐயரவர்கள் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து, பிரியங்கொண்டு அவர்களிடம் செல்ல ஆரம்பித்தார். இவரைக் கனம்: டக்கர் ஐயரவர்களோடு அனுப்புகிறதற்கு இவர் தகப்பனாருக்கு மனம் சற்றாகிலுமில்லாமலிருந்தும், இவர்தான் டக்கர் ஐயரவர்களோடு கூடப்போகவேண்டுமென்று உறுதியாகச் சாதிக்க, இவர் தகப்பனார் ஒருவாறு சம்மதித்து இவரை வழிவிட்டனுப்புகையில் "நீ என் பிள்ளையல்ல வெள்ளைக்காரன் பிள்ளை நீ செத்துப் போய்விட்டாய் என்று நினைத்துக்கொள்வேன்" என்று வெறுப்போடும் துக்கத்தோடும் வழிவிட்டார்.

இது 1845-ம் வருஷம் நடந்தது. நல்லகண்ணு என்னும்

பிள்ளையாண்டானை வெகு அருமையாய்த் தன்னோடே தங்கள் ஸ்தானமாகிய பண்ணைவிளைக்குக் கூட்டிவந்தார்கள். இவரோடுகூட சில பிள்ளைகளைச் சேர்த்து போஜனமும் படிப்பும் நடக்கக்கூடிய ஓர் பள்ளிக்கூடத்தை புதிதாய் ஸ்தாபித்தார்கள். இந்த நல்லகண்ணு மாணாக்கர் மற்றப்பிள்ளைகளைவிட அதிக ஜாக்கிரதையாய் தனக்குக்குறித்த பாடங்களை படித்து வகுப்பின் முதல் ஸ்தானத்தை அடைந்தார். ஒரு சமையத்தில் திருநெல்வேலி ஜில்லா ஜட்ஜ் துரை ஒருவர் வந்து, இந்தப்பிள்ளைகளைப் பரீட்சித்ததில், நல்லகண் பிரதமை மாணாக்கராகத்தேறி இரண்டு ரூபாய் பரிசு பெற்று, அந்த ரூபாயிலிருந்து 1½ ரூபாய்க்கு வட்டில் ஒன்று வாங்கி போஜனம் செய்துவந்தார். அதினால் பிள்ளைகளில் சிலர் பொறாமையினால் அதில் அடிக்கடி துப்பி வைப்பார்களாம். அப்படிப்பண்ணினாலும் இவர் அவர்களோடு ஒருநாளும் சண்டை பிடிப்பதுமில்லை கோப முகம் காட்டுவது மில்லை வாயைத் திறப்பதுவுமில்லை.

இதல்லாமலும், இவர் இராக்காலத்தில் தூங்கும்போதும் சில பையன்கள் இவர் காலைப்பிடித்துக் கரகரவென்று இழுத்துக் கட்டிடத்திற்குவெளியே கொண்டுவந்து போடுவதுமுண்டு. இவர் இதனால் பள்ளிக்கூடத்தைவிட்டு ஓடவாவது, அவர்களுக்குப் பதிலுக்குப் பதில் செய்யவாவது துணியாமல் இந்த வருத்தங்களை எல்லாம் பொறுமையோடு சகித்துக்கொண்டு, பரம சாதுவாகி, சகலரும் மெச்சக்கொள்ளத்தக்கதாய்க் காணப்பட்டார். இரவிலும் அதிகாலையிலுஞ் சாக்ஷாத் பரப் பொருளே, அடியேனைத் தற்காத்து இரக்ஷித்தருளே என்பதாய் ஜெபித்துத் தன் வழிகளை அவருக்கு ஒப்புவித்துவந்தார்.

நல்லகண்ணு மாணாக்கராகிய பிள்ளை, ஒரு வேளையில் தன் பாடத்தை நன்றாய் ஒப்புவியாவிட்டால், மத்தியானம் சாப்பிடாமல் தன்னைத்தானே தண்டித்துக்கொள்வதுண்டு. வரவர மேல் வகுப்புகளிலெல்லாம் முதல் பையனாகயிருந்தார், என்றாலும், அதையிட்டு தன்னைப் பெருமையாய் ஒருக்காலும் காட்டிக்கொள்கிறதேயில்லை. கிறிஸ்துவின் சிந்தை அப்போதே



இந்த இளைஞருக்குள் குடிகொண்டதாய்க் காணப்பட்டது. இவரோடே கனுண்டிவிளையிலிருந்து படிக்கவந்த பாக்கிய மாணாக்கருக்கும் இவருக்கும் நகமும் சதையும்போல் வித்தியாசமில்லாமல் அந்நியோன்னிய சிநேகிதர்களாயிருந்தார்கள். தன் இனத்தையும் ஜனத்தையும், விட்டுவந்து அன்னியனாய்ப் படித்துக்கொண்டிருக்கிற நல்லகண்ணு மாணாக்கருக்கு, பாக்கிய மாணாக்கருடைய கலக்கமற்ற சிநேகிதமும் ஆலோசனையும் மிகவும் அருமையாயிருந்தது. பள்ளிக்கூடம் முடிந்தபின், பாக்கியனாதர் இவரைத் தன் வீடுமட்டும் கூட்டிப்போய் உபசரித்து உலாத்திக்கொண்டும் வருவார். பாக்கியனாதர் தன் மரண பரியந்தம் இவருடைய பிராண சிநேகிதராயிருந்தார்.

கனம்: டக்கர் ஐயரவர்களும் அம்மாளும் தங்கள் சொந்தப் பிள்ளையாய்ப் பாவித்து, நல்லகண்ணு மாணாக்கரை நடத்தி வந்தார்கள். இவர் தன் பாடங்களை அதிதீவிரமாய்க் கற்றுத்தேர்ந்ததுமல்லாமல், கிறிஸ்துமார்க்க சத்தியங்களையும் அறிந்து அவற்றிலும் பொதுவான அறிவுடையவரானார். வேதாகமத்தைத் தவறாமல் ஒழுங்காய் வாசித்து தியானித்து வந்தார்.

இவர் பண்ணைவிளைக்கு வந்த 18[illegible]5-ம௵, நவம்பர் மாசத்தில் கனம்: டக்கர் ஐயரவர்கள் இவருடைய விசுவாசத்தையும், தாழ்மையையும் கவனித்து, விசுவாசிகளுக்கெல்லாம் தகப்பனென்று அழைக்கப்படுகிற ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் நாமதேயத்தை இவருக்குச்சூட்டி, இவருக்கும் ராகேல், ஞானவடிவு என்ற இரண்டு மறப்பெண்களுக்கும் ஞானதீட்சையைக்கொடுத்தார்கள். இந்த ராகேல் அம்மாளே பிந்திய காலத்தில் தெய்வாதீனமாய் ஈசாக்கு ஐயரவர்களின் மனைவியானார்கள்.

பண்ணைவிளையில் படிக்கக்கூடிய படிப்பு முடிந்தவுடன் இவர் காட்டிய வைதீக நோக்கமும், தேவதாபக்தியும், தெளிந்த புத்தியும், நற்ஜீவியமும் யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கின. இவருடைய திறமையை அறியும்படி கனம்: டக்கர் ஐயரவர்கள் பரீக்ஷித்தபோது இவர் பண்ணுடை

யைப்போல தன்னிடம் அமிர்தம்போன்றவைகளை ஒழுகவிட்டு, அவற்றின்ன க்கொடையும் கெட்ட ஈயையும், எறும்பையும், பற்றிக்கொள்வதுபோல இராமல் பாலையும் நீரையும் கலந்துவைக்க நீரைப்பிரித்து பாலை மாத்திரம் உட்கொள்ளும் அன்னப்பக்ஷியைப்போல சாரத்தை உட்கொண்டு அசாரத்தை வேறு பிரித்துவிடும் முதல் மாணுக்கராகவே காணப்பட்டார்.

ஆனபடியால், இவரை சிறந்த வேதியனுக்கவேணுமென்ற மேலான நோக்கத்தோடே டக்கர் ஐயரவர்கள், பற்பல இடங்களில்போய் ஜெபித்து, ஆத்ம ஈடேற்றத்தைக்குறித்து விசாரிக்கிறவர்களோடு சம்பாஷிக்கும்படி, அடிக்கடி அனுப்புவார்கள். இவர்பேரில் அதிகப் பட்சமாயிருந்தமையால் [illegible] 1-க்கு [illegible]கத்தில், இரண்டரை ரூபாய் சம்பளமும், பண்ணைவிளையிலேயே மிஷனைச் சேர்ந்த ஒரு வீட்டையும் இவர் வசிக்கக்கொடுத்தார்கள். அக்காலத்தில் ஒரு கோட்டை நெல் விலை 12 அணா. மற்ற சாமான்களும் அதிக சொற்ப விலைக்கு விற்கப்பட்டன.

இவர் சேவைப்போரியைவிட்டு வரும்போது நீ எனக்கு உதவமாட்டாய் என்று சொன்ன தகப்பன், கொஞ்சம் புல்அகையும் நெல் மாவும் எடுத்துக்கொண்டு மகனைப் பார்க்கவந்தார். தன் தகப்பனைச் சந்தோஷமாய் பெற்றுக்கொண்டு, அவருக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து உணவூட்டினின்றார். மேலும் தனக்குக் கிடைக்கிற சொற்பச் சம்பளம் 2½ ரூபாயிலிருந்து ரூபாய் 1½யை தனக்கும் தன் வீட்டுசெலவுக்கும் வைத்துக்கொண்டு மீதி ரூபாய் ஒன்றை மாசந்தோறும் தன் தகப்பனுரை வந்து வாங்கிக்கொண்டு போகும்படி கேட்டுக்கொண்டார். என்ன ஆச்சரியம்! இவர்களுக்கு 1860-ல், மேலில் காட்டிய ராகேல் அம்மாளை விவாகம் செய்திருந்தது.

கண்ணின் கருவிழியைப்போல பாராட்டி, சீராட்டி, கல்வியைக் கற்க திரண்ட பணங்களை செலவிட்டபின், தங்கள் பிள்ளைகள்தகுந்த சம்பளங்கள் வாங்கி சௌரியமாய் வாழும்போது விருத்தாப்பியமான பெற்றோர்கள் வந்து உதவி கேட்டால்



கடின முகத்தைக் காட்டுவோர் பலர் உளர். கள்ளச் சாக்குப்போக்குச் சொல்வார் சிலர். மற்றும் சிலர் மறுபடியும் தங்களிடம் வாராதபடி சினந்துபேசி சின்னத்தனம் காட்டுவார். இப்படிப்பட்டவர்களும் கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிறார்களே!

அன்பின் சொரூபியாகிய இயேசுசுவாமி, தம்முடைய மரணத் தருணத்தில் தாயை நோக்கி: ஸ்திரியே இதோ! உன் மகன் என்றும் தாம் அன்பாயிருந்த சீஷனை நோக்கி: அதோ! உன் தாய் என்று சொல்லி தம்முடைய கரிசனையையும் காருண்ணியத்தையும் காட்டினாரே. அதை அவருடைய அடியார்கள் நினைக்க வேண்டாமா? ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் கிறிஸ்துவின் ஆவியையுடையவர்கள் எவ்வளவாய்த்தங்களுடைய பெற்றோர்களுக்குக் கனிசம் உண்டாகும்படியாய் நடந்துகொள்ளுகிறார்கள். பெற்றோரைக் கவனியாதவர் மனுஷ பதர் என்றே சொல்லவேண்டும். அவர்களோடு அருமையான வார்த்தையை மாத்திரம் பேசி பணப்பெட்டியில் கைவைக்கக்கேட்டால், பாம்புப்பெட்டியில் கைவைப்பதாய் நினைக்கிறவர்களை மாமாம்பழமென்றே சொல்லலாம்.

ஜப்பான் தேசத்தில், அநேக வருஷங்களுக்கு முன் ஒரு ஏழைக் கைம்பெண்ணிருந்தாள். இவளுக்கு மூன்று குமாரர்களுண்டு, இம்மூவரும் கூலிவேலை செய்தும் தங்கள் தாயைப் பசிதாகத்தினுல் வருந்தாதிருக்கும்படி உதவிசெய்யக்கூடாமல் போயிற்று. அக்காலத்திய அத்தேச சட்டத்தின்படி, திருடனைக் கொல்லுகிறதும், அவனைப் பிடித்து வருகிறவர்களுக்கு இராஜாங்கத்தால் திரவிய சகாயம் செய்கிறதுமுண்டு. ஆனபடியால், இந்த மூன்று சகோதரர்களில் ஒருவன் தாயைப் பாதுகாக்கும்பொருட்டு, தன் மற்றச் சகோதரர்களிடம் தன்னைக் கள்ளனாய் நியாயாதிபதியிடம் கொண்டுபோய் ஒப்புவிக்கும்படி சொன்னான். அவ்விதம் ஒப்புவித்து திரவிய சகாயம்பெற்று திரும்பும்போது, இந்த இரண்டு சகோதரர்களும் சிறைச்சாலைக்குள்போய் தங்கள் சகோதரனைத் தழுவி, கண்ணீர்விட்டழுது, விடைபெற்றுப் போனார்கள். இதைப் பார்த்திருந்த சிறைச்

சாலைக் காவல்க்காரன் ஒருவன், இந்த காரியத்தை நியாயாதி
பதியிடம்போய்ச் சொன்னான். அவர் அவர்களிருவரையும் உட
னே பின்தொடர்ந்து அவர்கள் யாரென்று அறிந்து வரும்படி
கட்டளைகொடுத்தார். இவ்விரண்டு வாலிபர்களும் தங்கள் தா
யாரிடம் பணத்தைக்கொடுத்து நடந்த காரியத்தைச் சொன்னா
ர்கள். அவர்கள் தாயோ! அலறியழுது. இந்தப் பணம் வேண்
டாம், பசியினால் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லி
பணத்தைக் கீழே விட்டெறிந்தாள். இவ்விஷயத்தைத் தெரி
ந்துகொண்ட காவல்க்காரன் நியாயாதிபதியிடத்தில் சொன்னான்.
நியாயாதிபதி அதை ராஜாவுக்கு அறிவித்தார். இராஜா அவர்
களை வரவழைத்து, காரியத்தை நன்றாய் விசாரித்தறிந்து, தன்
னாட்டின்கண்ணே, இவ்வளவு சிறந்த மேலான சித்தமுள்ள
கூலிக்காரர்கள் இருக்கிறார்களாவென்று ஆச்சரியப்பட்டு, அன்
சிறந்த வெகுமதிகளை அவர்களுக்கு அளித்து, அவர்களைத் தன்
னுடைய ராஜ்யத்தில் உயர்ந்த உத்தியோகத்திலும் வைத்தார்.

இதுநிற்க, சிறு பிராயத்திலிருந்து ஈசாக்கு பிரசங்கியார்.
டக்கர், ஐயரவர்களுடைய தயாள சித்தத்தையும், களங்கமற்ற
அன்பையும் கண்டு களிகூர்ந்து, அந்த நற்குணங்கள் தன்னில்
விளங்க கர்த்தாவைப் பிரார்த்தித்துக்கொண்டுவருகிற வழக்க
மூண்டு, குருவைப்போல சீஷனென்று சொல்வதுபோல
டக்கர், ஐயருடைய முன்மாதிரியையே ஈசாக்கும் பின்பற்றி
னார்.

ஒரு வருஷம் அதிகமாக மழைத்தாழ்ச்சியுண்டாயிற்று.
புல், பூண்டுகளும், பயிர் பச்சைகளும் வாடின. சபையார் எல்
லாரும் பண்ணைவிளையில் கூடிவர டக்கர் ஐயரவர்களும், ஈசா
க்கு தேசிகரும் வெகு கரிசனையோடு மழைக்காக ஜெபித்து
அவர்களைத் திரும்ப வீட்டுக்கு அனுப்பும்போது, அற்புதத்தை
எதிர்பாராதேயுங்கள் என்று எச்சரித்து, அவருடைய கிருபாகடா
க்ஷத்துக்காக காத்திருங்கள் என்று சொன்னார்கள். அந்த நாள்
கழித்தபின் முழக்கத்தோடும், இடியோடும். மின்னலோடும்
மழை சோனமாரியாய் ஒரு இரவில் பெய்ய மறுநாள் காலையில்



ஜனங்கள் சந்தோஷத்தோடு, பற்பல பாகங்களில் வெட்ட
வும், உழவும், பயிர்செய்யவும் ஆரம்பித்தார்களாம். இவ்வுலக
ஆசாபாசங்களில் சிக்கிக்கொள்கிறவர்களுக்கு இப்பரம ரகசி
யம் வெளிப்படாது.

அன்றியும், டக்கர் ஐயரவர்களும் ஈசாக்குப் பிரசங்கியா
ரும் ஒருநாள் இந்துக்களுக்குப் பிரசங்கித்துக்கொண்டிருக்கும்
பொழுது, ஒருவர் இவர்களைப்பார்த்து நீங்கள் சம்பளத்துக்காக
வந்து பேசுகிறீர்கள் என்று கேட்டார். ஆம்; நாங்கள் சம்பளம்
வாங்குகிறது மெய்தான் எங்களை அனுப்புகிறவர்களும் எங்க
ளுக்குச் சம்பளம் கொடுக்கிறவர்களும் இதினால் என்ன பிரதி
பலன் அடைகிறார்கள் என்று மறுமொழியாய் சமாதானம்
சொன்னார்களாம். கிறிஸ்தவ பிரசங்கிகளிடம் அறிவினா, அறி
யாவினா, மடவினா என்கிற கேள்விகளை உலகத்தார் வினவு
கிறது நவமான விஷயமல்லவே. அவர்கள் தங்கள் உள்ளத்தில்
மாறுதல் உண்டாகக்கூடியதைக் கருதாமல் வீண் கேள்விகளைக்
கேட்டுப் போவதின் பயன் யாது?

இவ்வுலகத்தில் எவ்வளவோ மாறுதல்களிருக்கின்றன. சில
வருஷங்களுக்குமுன், காடாய்க் கிடந்தயிடம் இப்போது பூஞ்
காவனமாய்ச் செழித்திருக்கிறது. சில வருஷங்களுக்குமுன்,
குடிசைகளாயிருந்தவிடத்தில் இப்போது ராஜமாளிகை, கூட
கோபுரம் கட்டப்பட்டிருக்கின்றன. சில வருஷங்களுக்குமுன்
அறியாமையும், பேதையுமாயிருந்த ஒரு பையன் இப்போது
சாஸ்திர சம்பிரதாய நிபுணனாய்த் தேறிவிட்டான். சில காலங்
களுக்குமுன், சிரங்கு சிரங்குகளால் அகங்கையும் புறங்கையும்,
அருமையான முழங்கையும் அழுகிவிழுந்துகொண்டிருக்க, மூக்கும்
முகமும் அமுங்கிப்போய், அவலட்சண ரூபியாய் தோன்றின
வன்: இப்போது, அழகிய மேனியும் இனிய சொற்களுமுள்ள
யௌவன பாலியனாயிருக்கிறான். ஆனால் சில வருஷங்களுக்கு
முன்னே அநியாயம் செய்துகொண்டிருந்தவன் இந்த நிமிஷ
மட்டும் அநியாயம் செய்துகொண்டிருக்கிறான். அநேக வரு
ஷங்களுக்குமுன் குடிகாரனாயிருந்தவன் இந்த நிமிஷம் வரை

குடித்து வெறிக்கிறான். முன்னே சகல பாவத்துக்கும் உறைவிடம் என்று சொல்லப்பட்டவன் இப்போதும் யாதொரு மாறுதலற்றவனாய் பாவத்தின் சகல கசப்புங் கலந்தவனாய் இருக்கிறான். மனுஷன் வாசஞ்செய்கிற பூமி மாறுகிறதே, இவன் புத்தி மாறுதலடைகிறதே, இவன் தேகம் மாறுதலடைகிறதே. இவன் உள்ளம் சற்றெங்கிலும் உருகவில்லையே, இவன் இருதயத்தின் புண்கள் ஆறவில்லையே. விதைப்புக்காலமுஞ் சென்றுபோயிற்று அறுப்புக்காலமுஞ் சென்றுபோயிற்று. ஜென்மபாவ சீர்கேட்டினால் மதிமயங்கின பாவியோ அவன் இருந்தபடியே இருக்கிறான். மாரிகாலமும் சென்றுபோயிற்று, இளவேனிற்காலமும் வந்துவிட்டது, காட்டுச்செடிகளெல்லாம் புஷ்பித்துக் கமகமவென்று பரிமளிக்கின்றன. "கிலேயாத்திலும் பிசின் தைலமில்லையோ! அங்கே இரணவைத்தியனில்லையோ? ஏன்? என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமாகவில்லை" என்று சொன்ன கடவுள் உங்களைப்பார்த்து ஏன்? இன்னம் இயேசு இரட்சகரை யண்டிக்கொள்ளவில்லை என்று கேட்கிறார். உங்கள் ஆத்தும காயத்தில் காருண்ணியமென்னும் தைலத்தை வார்த்து, தம்முடைய நீதி என்னும் வஸ்திரத்தினால் உடுத்தி, தாழ்மை என்னும் மரியின் மேல் ஏற்றி இரட்சணை என்னும் சத்திரம் கொண்டுசேர்க்கக்கூடிய [illegible]. பசு, பதி, பாசம் அநாதியானமையால் மனுஷனில் தோன்றிய பாவம் அநாதி என்று சொல்லுவீர்களோ? அப்படியானால் மதுவில் மறவனை ஈசாக்குப் பிரசங்கியாரை வந்து பாருங்கள். அவர் கிறிஸ்துவாகிய ரக்ஷண்ணியபெருமானின் திருத்தொண்டராயிருக்கிறார். இதோ! பழையவைகள் ஒழிந்தன எல்லாம் புதிதாயின. இவர் இப்போது சிவந்த மேனியும், மலர்ந்த முகமும், வளர்ந்து, மெலிந்து, ஒழுங்காய் செப்பனிட்டதுபோலொத்த தேகமும், மனதிடச்சித்தமும், சௌரியமுமுள்ளவரானார். இவர் உள்ளத்திலோ, திவ்விய கிரியைகள் நடந்தேறின. இவருடைய விசுவாசமாகிய கரங்கள் [illegible]த்தின் கொம்பினை எட்டிப்பிடித்தது, தாழ்மை என்னும் பள்ளத்தாக்கில், இவர் சந்தோஷமாய் நடக்கக் கற்றுக்கொண்டார்.



மமதையை ஒருகாலின் கீழேபோட்டு மிதித்துசுய நயமாகிய கந்தையைத் தூரேஎறிந்துவிட்டார். பரிசுத்த ஜீவியமென்னும் சரப்பணியைத் தன்னைச் சுற்றிலும் சிறப்பணியாய் அணிந்து, மனசாக்ஷி என்னும் கேடகத்தைக் கையிலேந்தி, தன்சித்தத்தைப் பரவ சப்படுத்தினார். இவ்வாறு கடவுளுடைய ஆவியினால் புதுப்பிக்கப்பட்ட ஒரு புது சிருஷ்டியாய் பழையவைகள் ஒழிந்தன எல்லாம் புதிதாயின என்று தன் வாக்கினாலும் செயலினாலும் பிரசங்கம் செய்தார்.

கனம்: டக்கர் ஐயரவர்களால் 1852-ம் வருஷ, பாளையங்கோட்டையிலிருந்த வேதசாஸ்திர் பள்ளிக்கூடத்திலும் கற்றுத்தேறும்படி தன் மனைவியோடே அனுப்பப்பட்டார். இவ்விடத்தில் $2\frac{1}{2}$ வருஷம் படித்து எல்லா வகுப்பிலும் முதலிலிருந்து தெய்வ பக்தியையும், மனவிசாலத்தையும் காட்டி வருகையில் அப்போது இந்தக் கல்விச்சாலைக்குத் தலைமையாயிருந்த கனம்: சார்ஜென்று ஐயரவர்கள் (பிந்தி அத்தியக்ஷரான) இவர்களை அதிகமாய்க் கவனித்து, சொல்லவொண்ணாத அன்போடு நடத்தினார்கள். இவ்விடத்தில் பாடங்களெல்லாம் தமிழ்ப் பாஷையிலேயே சொல்லிவிக்கப்பட்டன. என்றாலும், கிரீக், எபிரேயு, இங்கிலீஷ் என்னும் இந்தப்பாஷைகளைத் தன் சொந்த முயற்சியால் கற்றுக்கொண்டார். ஆனால் மூலபாஷையாகிய மேலேகூறிய இரண்டு பாஷைகளிலும் தேறச் சமையம் வாய்க்கவில்லை. இங்கிலீஷ் பாஷையை மாத்திரம் கொஞ்சம் பேச வாசிக்கப்பழகி, வேதசாஸ்திரங்களையும் திட்டமாய்க்கற்று, எல்லா மாணாக்கரையும் ஒன்றாய்ப் பரீக்ஷைசெய்ததில் பற்பல பாடங்களில் முதலில் இருந்ததற்காக பற்பல பரிசு கிடைத்தன. அப்படியே பிரசங்கத்தில் முதலில் இருந்ததற்கும் ரூபாய் 20-ம் வெகுமானமாகப் பெற்றுக்கொண்டார்கள். இவர்களோடேகூடப் படித்த மாணாக்கர்களாலும் வாத்திமார்களாலும் நன்கு மதிக்கப்பட்டு மறுபடியும் பண்ணைவிளைக்கு அனுப்புகையில் சா. ஜென்று ஐயரவர்களுடைய அம்மான் "இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரேயன்றி வேறொன்

றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" (1 கொரி. 2: 2) என்கிற வாக்கியத்தைத் தானே எழுதியிருந்த ஒரு தையல் துணியை சந்தோஷமாயும் பிரியமாயும் ஈசாக்கு மாணாக்கரிடம் கொடுத்தார்கள். மேலும் கனம்: சார்ஜென்று ஐயரவர்களும் இவர்கள் போகும்போது டக்கர், ஐயரவர்களுக்கு ஒரு காகிதத்தைக் கொடுத்தார்கள். "ஈசாக்குபேரில் உம்முடைய கண்ணிருப்பதாக, சுதேசிகளுக்குள் இவனைப்போல மனசாக்ஷியுள்ளவனை நான் பார்க்கவில்லை" என்று அதில் எழுதியிருந்தது. இங்கிருந்துபோய் முதலில் மணக்கரை என்கிற கிராமத்தில் இருபத்திமூன்றுநாள் பிரசங்கியாய் வேலைபார்த்துவந்தார்கள். இவர்களுக்கு அங்கே சுரம் கண்டு வருத்தப்பட்டதை கனம்: டக்கர் ஐயரவர்களும் டக்கர் அம்மாளும் அறிந்து பண்ணைவிளைக்கு வருவித்துக்கொண்டார்கள். இவர்கள் இங்குவந்து பற்பல கிராமங்கள்தோறும்போய் பிரசங்கித்து டக்கர் ஐயரவர்களுடைய திவ்வியபணிவிடையில் உதவிசெய்துகொண்டு வந்தார்கள். அது மாத்திரமல்ல வடதிருநெல்வேலியில், தேவதாபக்தியில் சிறந்தவர்களும், சாஸ்திர அறிவில் தேர்ந்தவர்களுமான இராக்கிலாண்டு ஐயரவர்களோடு கூடப் பிரசங்கம் செய்துகொண்டு அவர்களோடு இருக்கும்பொழுது இவருக்குச் சுரம் கண்டது. கூடாரத்தில் ஒரு பக்கத்தில் பாயை விரித்து படுத்திருந்தார்கள். அந்தக் கூடாரத்தில் கனம்: இராக்கிலாண்டு மாமுனியவர்கள் படுக்கிற ஒரே கட்டிலிருந்தது. அதில் இவர்களைப் படுத்துக்கொள்ளும்படி பலமுறையும் கேட்க, இவர்கள் அது தகாதென்று தடுத்துக்கொண்டு வந்தார்கள். ஆனால் இராக்கிலாண்டு என்னும் புண்ணியவான் நீர் கட்டிலில் படுத்தாலொழிய என்னை சந்தோஷப்படுத்தமாட்டீர் என்று சொன்னார்கள். உடனே இவர்கள் கட்டிலில் ஏறிப் படுத்தார்கள். கட்டில் பக்கமாய் கனம்: ஐயரவர்கள் வந்து நின்று, சுகத்தையும் பலத்தையும் இவர்களுக்குக் கொடுக்கும்படிக் கடவுளைநோக்கி விண்ணப்பம் செய்து கூடாரத்திலே ய பாயில் படுத்துக்கொண்டார்கள். இவ்விதமாய் இந்துக்களும்



கிறிஸ்தவர்களும் இருக்கும் பற்பல இடங்களுக்குப்போய் தெய்வ பணிவிடைசெய்து கொண்டிருக்கும் காலத்தில், சென்னைபட்டணத்தில் சி. எம். எஸ். காரியதரிசியாயிருந்த கனம்: நைட் ஐயரவர்கள் தமிழ் நாட்டிலுள்ள தமது சபையைச்சேர்ந்த பிரசங்கிகள் எல்லாருக்கும் பரீட்சை வைத்து மனச்சாக்ஷியைக் குறித்து பிரசங்கம் எழுதியனுப்பக்கேட்டுக்கொண்டார்கள். இந்தப் பரீட்சைக்கு எல்லாரும் எழுதியனுப்பினார்கள். அதில் முதலில் தேறினது ஈசாக்கு பிரசங்கியார்தான். இவர் சுத்திகரிக்கப்பட்ட மனச்சாக்ஷியைக் குறித்து மிகத்தெளிவாய் எழுதியிருந்தாராம். மறுபடியும் கனம்: டக்கர் ஐயரவர்கள் இவரை பாளையங்கோட்டைக்கு ஒரு வருஷம் போயிருக்க அனுப்பினார்கள். இங்கே உதவிக்குருப் பட்டத்திற்குவேண்டியவைகளைப்படித்து வந்தபின் கனம்: தோமாஸ் ஐயரவர்கள் பண்ணைவிளையில் இவர்களையும் மற்றக் குருப்பட்டத்திற்குப் போகிறவர்களையும் பரீட்சித்தார்கள். ஈசாக்குப் பிரசங்கியார் பரீட்சை எழுதிவைத்த தாள்களில் சிலதை வேணுமென்று ஒரு சுதேச கிறிஸ்தவன் பங்களாத் தோட்டத்தில் ஒரு பக்கத்தில் போட்டுவிட்டான். கனம்: டக்கர் ஐயரவர்கள் தற்செயலாய் ஒரு பாகத்திலிருந்து இன்னொரு பாகத்திற்குப் போகும்பொழுது இந்தத் தாளைக் கண்டெடுத்து பரீட்சை எழுதினவர்களுடைய தாள்களைக் கொண்டுவந்து சேர்ப்பிக்க நியமிக்கப்பட்டிருந்த மனுஷனைப் பார்த்து ஈசாக்குக்குத் தீமை செய்யவல்லவோ அவனுடைய தாள்களை வெளியே விட்டுவிட்டாய், ஆனால் கர்த்தரோ மாறாதவர் அவர் ஈசாக்கை, அழைத்த அழைப்பை நிறைவேற்றும்படி வாய்வுக்குக் கட்டளையிட்டார். நீ வெளியே கொண்டுபோய்ப்போட்ட உத்திரவு எழுதிய தாட்களை என் கண்ணுக்கு முன்பாக காணும்படி தள்ளினார்" என்று சொல்லி, அந்தத் தாட்களை எல்லாம் தோமாஸ் ஐயரவர்களிடம் கொடுத்தார்கள். 1859-ம் ௵ டிசம்பர் ௴ 18௳ சென்னைபட்டணம் அத்தியக்ஷராகிய டெல்திரி என்பவர்கள் ஈசாக்கு பிரசங்கியாருக்கும் அவரோடுகூட எழுபேருக்கும் பண்ணைவிளை

யில் நவமாய்க் கட்டப்பட்ட தேவாலயத்தில் உதவிக்குருப்பட்டம் கொடுத்தார்கள். அச்சமயத்தில் பட்டம் பெற்றவர்களுடைய மேலான கடமையை உணர்த்தி கூடிவந்த மற்றும் யாவருக்கும் பரவசம் உண்டாகத்தக்கதாக நாசரேத்திலிருந்த கல்வித்திறமையும் தேவதாபக்தியும், களங்கமற்ற அன்புமுள்ள மஹானாகிய பிரதரிட்டன் என்னும் சாஸ்திரிகள் சாதுரியமாய் தமிழ் பாஷையில் திருஷ்டாந்தங்களோடு உபன்னியாசம் செய்தார்கள். 29 ஐரோப்பியர்களும் 1100 சுதேச கிறிஸ்தவர்களும்கூடி இந்த மகோற்சவத்தைக் கொண்டாடினார்கள். மறுநாள் காலையில் ஆராதனை செய்யும்படி யாவரும் கூடிவந்திருந்த சமயத்தில் ஏராளமான ஜனங்களால் கோவில் நிறைந்திருந்தது; கோவிலுக்குள் பாடகருக்கென்று கட்டியிருந்த மெத்தையின்மேல் அநேக ஜனங்கள் ஏறியுமிருந்தார்கள். அது பாரம் தாங்கமாட்டாமல் பிரதானமான உத்திரம் நிகழ, மெத்தை கீழே விழத்தலைப்பட்டது ஆனால் அந்த உத்திரத்தையும் குறுக்குக் கம்புகளையும் இணைத்திருந்த ஆணிகளோ, ஒரு அடிமட்டும் அவ்வுத்திரத்தைக் கீழேவிட்டபோதிலும் ஜனங்கள் தங்கள் ஜீவன்தப்பி ஓடிப்போகும்படி இடங்கொடுத்தது. தேவாராதனை சற்று நேரம் தாமதப்பட்டபோதிலும் குருக்களும் சபையாரும் அச்சமயத்தில் கடவுள் செய்த உபகாரத்திற்காக நன்றியறிந்த மனதோடே ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். மெஞ்ஞானபுரம் தோமாஸ் ஐயரவர்கள் தமிழிலே எழுப்புதலான பிரசங்கத்தைச் செய்தார்கள். இவ்விஷயத்தைக்குறித்து கனம்: டக்கர் ஐயரவர்கள் பரமானந்தத்தோடு எழுதுகிறதாவது:—நான் திருநெல்வேலி ஜில்லாவில் முதலில் வேலையைத்துவக்கினபோது இந்தப் பனங்காட்டுக்குள் இப்பேர்ப்பட்ட கோவிலைக் கட்டுவோமென்று கனவிலும் நினைத்ததில்லை, அதிலும் என் ஜீவகாலத்தில் இந்தக் கோவிலுக்குள் பதின்மூன்று பேர்களுக்குப் பட்டாபிஷேகம் கொடுக்கப்படுமென்று எப்படி நினைத்திருப்பேன்? இவ்விதமாய் எண்ணிக்கையுள்ள ஈசாக்கு தேசிகராயிருந்தவர்கள் - குருப்பட்டம் பெற்று தேவனிடத்திலும் மனுஷனிடத்திலும் தயவைப் பெற்றுக்கொண்டார்கள்.

## 2-ம் அதிகாரம்

### குடும்ப வரலாறு.

பண்ணைவிளைக்கு அடுத்த பெருங்குளத்தில் வசித்த ஒரு மறக்குடும்பத்தில் சிவகாமிக்கும் நல்லகண்ணுத் தேவருக்கும் இரண்டு குமாரரும் இரண்டு குமாரத்திகளும் இருந்தார்கள். அதில் மூன்றாவது மகளுக்கு ராகேல் என்று பேர். இந்தப் பிள்ளையைக் கனம்: டக்கர் ஐயரவர்கள் அம்மாள் மிகவும் அருமையாய் வளர்த்துவந்தார்கள். அவளுக்கும் ஈசாக்கு ஐயரவர்கள் ஞானஸ்நானம் பெற்ற அதே நாளில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஈசாக்கு ஐயர் தகப்பனார் தன் மகனுக்கு ஒரு பெண்ணை விவாகம்செய்து வைக்கவேணுமென்று வெகுவாய் முயற்சித்திருந்தபோதிலும், கனம்: டக்கர் ஐயரவர்கள் அம்மாள் தான் அருமையாய் வளர்த்துவந்த ராகேல் அம்மாளை ஈசாக்கு ஐயர் மணம்புரியவேண்டுமென்று விரும்பினார்கள். அதன்படியே 1850-ம் வரு ஜூலை மீ 14உ விவாகம் நடப்பிக்கப்பட்டதென்று முந்தின பாகத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்மாள் இவர்களுடைய திவ்விய ஊழியத்தில் தன்னால்கூடியமட்டும் உதவிசெய்து குடும்ப விஷயத்தை சந்தோஷத்தோடு நடத்திக்கொண்டு சபைக்கடுத்த வேலைகளிலும் முயற்சிசெய்துவந்தார்கள். இவர்களுக்கு நாலு ஆண்பிள்ளைகளும், நாலு பெண்பிள்ளைகளும் பிறந்தார்கள். இவர்கள் புத்திரன் ஜானுக்கு டக்கர் ஐயரவர்கள் ஞானத்தகப்பனாயும் டக்கர் அம்மாளவர்களும் கனம்: ஞானமுத்து விசாரணை உபாத்தியாயருடைய மனைவியும் ஞானத்தாயுமாயிருந்தார்கள். இவர்கள் இரண்டாவது மகளுக்கும் டக்கர் அம்மாள் ஞானத்தாயுமாயிருக்க விரும்பினார்கள்.

இவர்களுடைய இன்னொரு மகள் மேரியம்மாளுக்கு சிம்மன்ஸ் ஐயரவர்கள் ஞானத்தகப்பனும் அவர்கள் அம்மாளும் கனம்: சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்கள் அம்மாளும் ஞானத்தாயுமாயிருந்தார்கள். ஐயரவர்கள் தனக்கு கனம்: இராக்லாண்டு ஐயரவர்கள் காட்டின பக்தியையும், அருமையையும், பெருமையையும் நினைவுகூரும்படி தன்னுடைய ஒரு மகனுக்கு இராக்லாண்டு யோசேப் என்றும், கனம்: சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்கள் தனக்குஆசானும் போதகராயும் செய்த நன்மையை நினைவுகூரும்படி தன்னுடைய மூன்றாவது மகனுக்கு எட்வாட் தானியேல் என்றும், தன்னைப் பிள்ளைபோல்வளர்த்து கர்த்தருடைய ஊழியத்திற்கு முஸ்திப்புபண்ணிவிட்ட கனம்: டக்கர் ஐயரவர்கள் பேராகிய ஜான் என்கிற நாமத்தால் தன் மூத்த மகனுக்கும். இவர்களோடு வேலைசெய்த சிம்மன்ஸ் ஐயரவர்கள் சாங்கோபாங்கோ வழிகளை நினைவுகூரும்படி இவர்களுடைய இளைய மகனுக்கு யோனத்தான் என்றும் பேரிட்டார்கள். அவர்களின் மூத்த குமாரத்தியை முத்துநல்லதம்பி ஐயருக்கு விவாகம்செய்து கொடுத்திருந்தது. அவர் வடதிருநெல்வேலி, நீலகிரி, பீர்மேடு முதலிய இடங்களில் போதக ஊழியம்செய்து ஐரோப்பியர்களாலும் சுதேசிகளாலும் அதிகமாய் மதிக்கப்பட்டு கொஞ்சக்காலத்துக்கு முன் பீர்மேட்டில் கர்த்தருக்குள் மரித்தார். இவர் மனைவியும் சில காலங்களுக்கு முன் மரித்துவிட்டார்கள். ஈசாக்கு ஐயரவர்களுடைய குமாரன் ஜான் ஈசாக்குத் தேவர் பி. ஏ. ஜில்லா ரிஜிஸ்ட்டாராய் வேலைபார்த்து வருகிறார்கள். இவர்களுடைய மூன்றாவது குமாரனுக்கு எட்வாட் தானியேல் என்றும் 4-வது குமாரத்திக்கு லேயாள் அம்மாள் என்றும் ஐந்தாவது குமாரத்திக்கு ராகேல் அம்மாள் என்றும் 6-வது குமாரத்திக்கு மேரி அம்மாள் என்றும் 7-வது குமாரனுக்கு யோசேப்பு இராகலாண்டு என்றும் 8-வது குமாரனுக்கு யோனத்தான் என்றும் பெயர். தானியேல் என்ற மூன்றாவது குமாரர் வைத்திய சாஸ்திரத்தைக்கற்று மைசூர் ராஜாங்கத்தில் வைத்தியராயிருக்கிறார். ஈசாக்கு ஐயரவர்களுடைய குமாரத்திகள் மூன்று



பேர்களை நவமாய்கிறிஸ்துமார்க்கத்திற்கு வந்தவர்களாகிய மோசஸ் ராஜய்யாவுக்கும், பொன்னுச்சாமித் தலைவருக்கும், T. B. பாண்டியனுக்கும் விவாகம்செய்து கொடுத்தார்கள். அந்த T. B. பாண்டியனே இந்நூலை எழுதத்தக்க சலாக்கியத்தைப் பெற்றார். இவர்கள் குமாரரில் இராக்லாண்டு யோசேப் என்பவர் பாலியமாயிருக்கும்போதே அதிக தெய்வபக்தியுடையவராயிருந்து கர்த்தருடைய ராஜியத்திற்குட்பட்டார்.

கனம்: ஈசாக்கு ஐயரவர்கள் ஒவ்வொருநாளும் இரவில் போஜனத்துக்கு முந்தியும் அதிகாலையிலும் வேதாகமத்தை ஒழுங்காய் வாசித்து தன் பிள்ளைகளிடத்தில் அதைக்குறித்து வினவி சில குறிப்பை அவர்கள் மனதில் படத்தக்கதாக விளக்கி ஜெபித்து வருவதுண்டு, அல்லாமலும் அவர்கள் ஒவ்வொருவரும் வேதாகமத்தைத் தனித்தனியே வாசிக்கவும், ஜெபித்துவரும்படியாகவும் ஏவிவிடுவார்கள். தன் பிள்ளைகளின் குற்றத்தை மிகவும் கண்டித்து புத்திசொல்லி அவர்கள் நல்வழியில் நடக்கும்படியாக ஜெபித்தும் வருவார்கள். தன் குடும்பத்தில் சீரடையாதவர்களுக்காக கடவுளிடத்தில் பிரார்த்தித்து அதிக ஊக்கமாய் கர்த்தரோடு போராடுவார்கள். இவர்கள் குடும்ப ஜெபம்பண்ணுகிற காலத்தில் கூடயிருந்தவர்களின் மனதில் இவர்கள் தேவப்பிரசன்னம் விளங்கிய பரமண்டலத்தினின்று ஜெபிக்கிறதாகவே விளங்கும். தன் குடும்ப காரியத்தைப் பார்க்கிலும் தெய்வ பணிவிடையும், சபைக்கடுத்த எந்தக் காரியார்த்தமும் சிரேஷ்டமென்று எப்பொழுதும் நினைத்தார்கள் இவர்களுடைய மனைவி அதிகச் சுகவீனமாயிருந்தபோது மடத்துப்பட்டி என்கிற கிராமத்தில் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பரிமாறுகிறதற்கு இவர்கள் போகும்படி நேரிட்டது. வைத்தியரும் மற்றவர்களும் இவர்கள் மனைவி மரணவஸ்தையால் மிகவும் வருத்தப்படுகிறதால் இச்சமயத்தில் போவது சரியல்லவென்று சொல்லித் தடுத்தார்கள். என்றாலும் இவர்கள் தன் மனைவி படுத்திருந்த கட்டிலுக்கு சமீபமாய் நின்று, கடவுளை நோக்கி ஜெபித்து வியாதியாயிருக்கிற தன் மனைவியை

பரம பிதாவினுடைய நடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்து உடனே கிராமத்துக்குப் போய்விட்டார்கள். இரண்டு நாள்கழித்து திரும்பிவரும்போது தன் மனைவி எழுந்திருந்து பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு கர்த்தருக்கு மிகவும் ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். தன் பிள்ளைகளில் அல்லது தன் வீட்டிலுள்ளவர்களில் யாதாவது வியாதியாயிருந்தால் இராக்காலங்களில் தனித்து இரண்டு மூன்று முறை படுக்கையின் பக்கமாய் முழங்காலில் நின்று இருகரங்களைக் குவித்து வானேக்கி விண்ணப்பஞ் செய்வதும் தவிர தன் வீட்டிலிருந்து யாராகிலும் பிரயாணமாய்ப் போகிறதாயிருந்தால் தன்னுடைய வீட்டிலுள்ளவர்களெல்லாம் சேர்ந்து ஜெபிக்காமல் அனுப்பமாட்டார்கள். இராக்காலங்களில் இவர்கள் விழிக்கும்போதெல்லாம் எழுந்து முழங்காலில் நின்று தெய்வ பிரார்த்தனை செய்து, மறுபடி நித்திரை செய்வார்கள். இரவில் நித்திரை வராமலிருந்தால் பரமதியானம் செய்துகொண்டேயிருப்பார்கள். இவர்கள் விழித்திருக்கிறார்களே என்று கூப்பிடுகிறதற்குப்பதில் இல்லாவிட்டால் பரமதியானம் செய்துகொண்டிருக்கிறார்களென்று நினைத்து அவர்கள் தியானத்தைக் கலைக்கமாட்டார்கள். தியானம் முடிந்தபின் அவர்களே வலிய என்னவென்று விசாரிப்பார்கள்.

1886-ம் வருஷம் இவர்கள் விசாரணைக்குள்ளிருந்த ஏரல்என்னும் கிராமத்தில் சபைக்குள் ஒரு பெரியகுழப்பமிருந்தது. அதைநேர்சீர்ப்படுத்தும்படி பிரயத்தனம்செய்து கவலையோடு போக்கும்வரத்துமாய் இருந்தார்கள். இத்தருணத்தில் இவர்களுடைய பிள்ளைகளில் தானியேல், மேரியம்மாளாகிய இவ்விருவர்களுடைய விவாகங்கள் சமீபமாயிருந்தது. பிதாவாகிய இவர்கள் ரஜா எடுத்து தான் கூடப்போயிருந்து இந்தக் கலியாணத்தை நடப்பிக்கவேண்டியவராயிருந்தும், சபையின் ஊழியமே முக்கியமென்று கலியாணத்திற்குப் போகாமலிருந்து தன் மனைவியையும் பிள்ளைகளையும் மதுரைக்கு அனுப்பும் சமயத்தில் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் என்று சொல்லி ஜெபித்து வழிவிட்டனுப்பி தான் சபையின் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.



இவர்கள் தன் பிள்ளைகள் யாவரையும் ஒன்றுபோல் நேசித்து யாதொரு பேதமில்லாமல் அருமையாய் நடத்திவந்தார்கள். தங்கள் பிள்ளைகள் எல்லாரும் வீட்டைவிட்டுப்போய்ப் பல இடங்களில் வாசம்செய்துகொண்டிருக்கும்பொழுது தங்கள் குடும்ப ஜெபத்தில் காலை தியானம் மாலை தியான முறையாய் வாசித்து ஒவ்வொருவருடைய பேரையுங்குறித்து ஜெபித்து வருகிறதோடு சபையார்களுக்காகவும், தன் வீட்டுக்குச் சமீபமாயிருந்த போஜன பள்ளிக்கூடத்து மாணுக்கருக்காகவும், தன் வேலையில் உதவிசெய்கிறவர்களுக்காகவும், மிஷனெரிமார்களில் சுகவீனமாய் இருக்கிறவர்களுக்காகவும், பிரயாணத்திலிருக்கிறவர்களுக்காகவும், விசேஷித்த வேலைகளைச் செய்து வருகிறவர்களுக்காகவும் இடைவிடாமல் ஜெபத்தில் பிரார்த்திப்பார்கள்.

இவர்கள் குடும்பத்தில் பற்பல வகையான துன்பங்கள் சங்கடங்கள் நேரிட்டாலும் அந்த சமயங்களில் இவர்கள் சோர்ந்துபோகாமல் எல்லாவற்றையும் தெய்வ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து மனசமாதானமுள்ளவர்களாயிருப்பார்கள்.

இவர்களுடைய குடும்பத்தார்களுக்காக எவ்வகையான பூஸ்திதியையும் பணத்தையும் தேடிவைத்ததில்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் மனம் என்று இயேசு ரட்சகர் சொன்னதுபோல பரலோகத்திலே தன் பொக்கிஷத்தை அதிகமாய் சேர்த்துவைத்தார்கள்.

இவர்கள் தன் சொந்த வீட்டையும் குடும்பத்தாரையும் விட்டு கிறிஸ்துவைநோக்கி வரும்பொழுது எனக்கு உதவமாட்டாய் என்று சொன்ன தகப்பனார் கடைசியாய் இவர்கள் நன்மாதிரியையும், பரிசுத்த ஜீவியத்தையும் கண்டு இவர்களால் ஆபிரகாம் என்னும் பேரால் ஞானஸ்நானம்பெற்று சந்தோஷமாய் கர்த்தருக்குள் மரணமடைந்தார்கள். அவர்கள் தேகத்தை கனம் டக்கர் ஐயரவர்கள் அடக்கம் செய்தார்கள். அதுமுதல் ஈசாக்கு ஆபிரகாம் என்கிற பெயர் இவர்களுக்கு வழங்கிவந்தது.

## 3-வது அதிகாரம்.

### திவ்வியபணிவிடை.

விலையுயர்ந்த பரிமளம் நிறைந்த ஓர் பரணியில் ஒரு பூச்சி செத்து விழுந்துவிட்டால் அந்தப் பரிமளத்தின் வாசனையை எவ்வாறு கெடுத்துவிடுகிறதோ அவ்வாறாய், ஒரு போதகரின் திவ்விய பணிவிடையில், தான் அடையவேண்டிய விலையுயர்ந்த வாசனைத்திரவியமாகிய பரிசுத்தத்தின் மகத்துவத்தையும், திவ்விய ஊழியத்தின் பிரயோஜனத்தையும், அற்பசொற்ப குற்றங்குறைகளாகிய ஈக்கள் செத்து மிதக்க இடங்கொடுத்துவிட்டால், அவருடைய ஜீவியகால முழுவதுக்கும் ஓர் ஹானியையும், திவ்விய பணிவிடைக்கு ஓர் இடையூறுமாய் விடுகிறது. இவ்விஷயத்தை தன் ஜீவகாலமெல்லாம் மனதில் வைத்துக் கொண்டிருந்த போதகமார்களில், கனம்: ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்கள் ஒருவரெனச் சொல்லலாம்.

கிரீக் தேசத்தின் பேர்போன கவிச்சக்கிரவர்த்தியாயிருந்த ஹோமர் என்னும் மகா வித்வான் மரித்தபோது, அத்தேசத்தில் பிரதானமான ஏழு பட்டணத்தார் அவர் தேகத்தை அடக்கம் செய்ய ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்களாம். ஆனால் அவர் உயிரோடிருந்தபோது அன்றன்றுள்ள ஆகாரத்திற்காக அந்த நகரங்களின் தெருவழியே பிச்சைபுகினாராம். இது ஆச்சரியமான விஷயந்தான். இவ்வாறுதான் இவ்வுலகம் சகல மகாத்துமாக்களையும் நடத்திக்கொண்டு வருகிறது. என்றாலும் கனம்: ஐயரவர்களுடைய ஜீவனின் ஓட்டத்தில் இவர்கள் நடப்பித்துவந்த திவ்வியபணிவிடையின் சலாக்கியத்தினால் சகலரும் இவர்களை நன்குமதித்து நடத்தி,



இவர்களைக் காணும்போதெல்லாம் கர்த்தருடைய மனுஷனென்றே எண்ணி அவரவர்களால் கூடிய சகாயம் புரிய ஆயத்தமுள்ளவர்களாகவேயிருந்தார்கள். ஐயரவர்கள் தன் பணிவிடையின் காலமெல்லாம் முயற்சியின்றி ஒரு பக்கமும் அமைதலாயிருக்க விரும்பினதாகக் காணவில்லை.

சாதாரணமான மனுஷர்கள் தாங்கள் விரும்பிய காரியம் சித்தியானவுடன் ஒரு பக்கத்தில் அமைதியாயிருக்க விரும்புகிறது வழக்கம். ஜெயவீரனான ஒரு தளகர்த்தர் தாம் அடைந்த ஜெயத்தினால் கிடைத்த வெகுமதிகளும் கௌரவமும் உடையவராய்; உலகத்தில் ஓர் பாகத்தில் திருப்தியோடு அமைதலாய் நாட்கழிக்கப் பார்க்கிறார். அதிக கஷ்டத்தோடும் விடாமுயற்சியோடும் ஐசுவரியத்தை சம்பாதித்த ஒருவர் அதை அமைதலாய் அனுபவிக்க ஒரு இடத்திற்கு திரும்பிப்போகிறார். இன்னொருவன் அதிகத் துணிவுடனே சில காரியங்களில் சித்தியடையலாமென்று முயற்சித்ததில் அபஜெயமடைந்து ஓரிடத்தில் அதைரியத்தோடே உட்காருகிறான். ஒருவன் வாலிபனாயிருந்தபோது, அநேக சிறந்த எண்ணங்களோடு, கழுகைப்போல தன இறக்கைகளை விரித்து, பறந்து, சூரியனைப்போய் எட்டிப் பார்த்து, தன் இறக்கைகள் மெழுகுபோல இழக, பூமியில் விழுந்து மறுபடியும் எழும்பாமல் கிடக்கிறான். பால்யமுதல் அமர வயசுமட்டும் ஒருவர் இடைவிடாது முயற்சிசெய்வது அபூர்வமான விஷயம். பாலியத்தில் சகல ஆயத்தமும் செய்து மென்மேலும் சற்குணங்கள் சிறக்க, வர வர ஞானத்தையடைந்து, அறிவில் தேறி, தேவ பக்தியில் வளர்ந்து, முதிர்ந்து, களஞ்சியத்திற்கு தகுதியான தானியத்தைப்போல முதிர்ந்த வயதிலே தன் பிதாக்களோடே சேர்க்கப்படுமட்டும் முயற்சிப் போர், சிலர்மாத்திரமே.

தான் நோக்கின காரியம் சித்தியானதின்பின், அசந்து, அமர்ந்து, அலங்கோலமாய்ப் போய்விடுகிறது அநேகருடைய வழக்கம். ஆனால் கனம்: ஐயரவர்கள் திவ்வியபணிவிடையில் எக்காலத்திலும் ஜாக்கிரதையும் விழிப்பும் விடாமுயற்சியும்

உள்ளவர்களாய், பிறனுக்கு நன்மையேசெய்ய கருதி சுற்றித்திரிந்தார்கள். ஒவ்வொரு சபையாரின் நிலைமையையும் இவர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள். பரதேசியின் மோக்ஷ பிரயாணம் என்னும் புஸ்தகத்தில் கிறிஸ்தியான் என்பவன் சுவிசேஷகனைத் தேடிப்போனதாக அல்ல, சுவிசேஷகரே கிறிஸ்தியானைத் தேடிப்போனதாக வாசிக்கிறோம். வைத்தியன் வியாதியஸ்தன் நிலைமையையும், உபாத்தி தன் மாணாக்களின் தன்மையையும், வக்கீல் தன் கட்சிக்காரன் விஷயத்தையும், நன்றாய் அறிந்துகொள்வது காரிய சித்திக்கு எவ்வாறு அவசியமோ அவ்வாறே ஐயரவர்கள், ஏழை என்றும், வலியவனென்றும், ஆணென்றும், பெண்ணென்றும், சிறியோனென்றும், பெரியோனென்றும், வித்தியாசம் பாராமல் அவர்கள் வீடுவீடாய்ப்போய் அவர்களின் நிலைமையை அறிந்து அவர்களுக்கு தகுந்த வார்த்தைகளாலே எச்சரித்து புத்திசொல்லி ஜெபித்து வருவார்கள். தண்ணீரில் அமிழ்கிற ஒருவனுக்கு ஆகாரத்தை, அல்லது உடுப்பைத் தருகிறேன், என்று சொல்லலாமா? ஒரு கயிற்றையல்லவா அவனிடத்தில் எறிந்து அவனைத் தூக்கவேண்டும். அத்தன்மைபோல் எந்தெந்த நிலைமையில் எந்தெந்த கிறிஸ்தவன் இருந்தானோ அந்தந்த நிலைமைக்கு தகுந்த நன்மையான வார்த்தைகளைப் பேசி சகாயம் செய்துகொண்டு வரத்தக்க தன்மையைக் கடவுள் இவர்களுக்குக் கடாக்ஷித்திருந்தார்.

குருப்பட்டம் பெற்றவுடன் எத்தனையோபேர் இறுமாப்படைகிறார்கள். தன் தோழனையும் பழைய சிநேகிதர்களையும் அற்பமாய் நினைக்கப்பார்க்கிறார்கள். சபையாருக்காக அவர்கள் குருப்பட்டம் பெற்றதென்று நினையாமல் குருக்களுக்காகத்தான் சபையார் இருக்கிறதாக அவர்கள் அற்பசொற்பமாய் நினைத்து விடுகிறார்கள். ஐசுவரியமுள்ளவர்களையும் வாய்சாதுரியமுள்ளவர்களையும் கவனித்து மற்றவர்களை அசட்டைபண்ணுவதானது மகத்துவமான திவ்விய பணிவிடை பார்ப்பவர்களின் கடமையா? ஐயரவர்களுக்கும் இப்பேர்ப்பட்ட போலிப் போதகமார்களுக்கும் இருக்கிற வித்தியாசம் கொஞ்சமா?



அநேகர் வாலிபத்தில் அலைந்து திரிந்து பற்பல வேலைகள் செய்து நடுவயது முதிர்வயதானவுடன் தங்களால் செய்யக்கூடியது கொஞ்சமென்று நினைக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஐயரவர்களுடைய உற்சாகமான ஆவியைக் கவனிப்பார்களானால் ஐயரவர்களை நீர்க்கால்கள் ஓரமாய் நடப்பட்டு, முதிர்வயதான காலத்திலும் தன் கனியைத் தந்து, இலை உதிராதிருக்கிற மரத்தைப்போலிருந்தார்கள் என்று சொல்வார்கள். திவ்விய பணிவிடையை நடத்திவந்ததில் ஐயரவர்களுக்கு நடுவயதும் விருத்தாப்பியமும் ஒன்றுபோலதானிருந்தது. காவா இவர்கள் பலத்து, விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, அநேக ஆச்சரியமான கிரியைகளை நடப்பித்துவந்தார்கள். கிறும்வெல் என்னும் பேர்போன அங்கிலேய துரை 40 வயதுமட்டும் சமுசாரியாய் இருந்து அப்புறம் இங்கிலாந்து தேசத்தில் பெரிய காரியங்களை நடப்பித்தாரல்லவா? • கவுப்பர் என்னும் கவிஞன் 50 வயதுக்கு மேலே சற்றேறக்குறைய அவர் பாடின சகல இன்பமும், எழுப்புதலுமான கவிகளை எழுதினாரல்லவா?

ஐயரவர்கள் தாம் செய்த திவ்விய பணிவிடையில் சபையாரின் சகல பாவங்களையும், கண்டிக்கக்கூடிய நிலைமையிலிருந்தார்கள். சபையாரில் யாராகிலும் யாதாமொரு பாவத்தில் விழுந்திருந்தால்; அதை இரகசியமாயும், பகிரங்கமாயும், கண்டித்துவந்தார்கள். கோவிலில் பிரசங்கம் பண்ணுகையில் மனுஷருடைய மீறுதல்களையும், தப்பிதங்களையும், எடுத்துக்காட்டி பாவம் செய்கிற ஆத்துமா தேவ சன்னதியிலிருக்கிற பரமானந்தத்தையும், பரிசுத்தத்தின் மகத்துவத்தையும் அடையாமல் தூரமாய்ப் போகிறதே என்று மிகவும் பரிதாபத்தோடே பேசுவார்கள். தன் சேகரத்தில் வேலைசெய்த மிஷன் ஆசாமிகள் யாதாமொரு தப்பிதங்களை செய்திருந்தால், தன் அறைக்குள் அவரைக் கூட்டிவைத்துக்கொண்டு, கதவுகளையும், சன்னல்களையும் பூட்டி, அவரோடே தனித்துப்பேசி, அவர் குற்றத்தை எடுத்துக்காட்டி, எச்சரித்து, புத்திசொல்லி, உருக்கத்தோடே ஜெபித்து அனுப்புவார்கள். அப்படிப்பட்டவர்களை அவதூறுபண்ணி,

அற்பமாய் நினைத்து நடத்தமாட்டார்கள். சபையார்களில் எவ்விதமான தப்பிதங்களைச் செய்தவர்களைக் கண்டாலும், அவர்களையும் அவ்வாறு எச்சரித்து புத்திசொல்வார்கள். இது கர்த்தருடைய ஊழியர்களிடத்திலிருக்கவேண்டிய சிறந்த இலக்ஷணம். இப்படி சபையார்களையும் தன் கையின்கீழ் வேலை செய்யக்கூடிய மற்ற தேவ ஊழியர்களையும் கண்டிக்கக்கூடிய போதகன் தன் ஜீவியத்தை எவ்வளவோ எச்சரிக்கையோடும், பரிசுத்தத்தோடும் நடத்திக்கொண்டுபோகவேண்டும். போதகரானவர் வாயினால் மற்றவர்களுடைய குற்றங்களை எச்சரித்து பேசுங்கால் இருதயமோ பூமியைப் பற்றிக்கொண்டிருக்க இடங்கொடுத்து விடுவாரானால், ஓ, வானமே! வானமே! என்று சொல்லி, தன் கையினாலே பூமியைநோக்கிச் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்த சிமிர்னாபட்டணத்து கோமாளிக் கொப்பாயிருக்கமாட்டாரா? குருநாமும் குரு குணமுங்குடிகொண்டு மற்றவர்களுக்கு நன்மை செய்வதற்குபதிலாக தீமை செய்யக்கூடிய ஒரு போதகனைக் கண்டால் குடிகாரனான சபையானுங்கூட, பாரசீக தேசத்து கவிஞனான ஊமார் காயான் சொல்லியபடி ஆ! குருவே நகரவாசியே, நான் திராட்ச ரத்தம் வாஞ்சையாய், நித்தம் உண்ண பித்தமிஞ்சுதே, சித்தமின்றி நரர் இரத்தம் குடிக்கிறீர், என்னைமிஞ்சி, அஞ்சிடாமல்போகிறீர், குருநாமுடையார், நம்மில்யார்? அறிவீர்! என்று சொல்வதுபோல கேட்கமாட்டானா?

ஐயரவர்களுடைய திவ்விய பணிவிடையின் காலத்தில் எப்பேர்பட்டவர்களாகிலும் ஒருவனை குற்றவாளி என்று சொன்னால், அதை எளிதில் நம்பி அவனை அசட்டை பண்ணி, அவனை அப்புறம் போவென சொன்னவர்கள் அல்ல. அப்படியிருக்க தான் ஒரு மனுஷனை யதார்த்தமானவன் என்று அறிந்திருந்தால் மற்றவர்கள் வார்த்தையைக் கேட்டு அவனை வருத்தத்திற்குட்படுத்த ஒருக்காலும் துணிந்தவர்களல்ல. சாதாரணமாய் ஒருவர், ஒரு காரியத்தை நன்றாய் அறிந்திருந்தாலும் மற்றவர்கள் சொல்லுகிறதைக் கேட்டுக்கொண்டு எத்தனையோ



முறை நன்மை செய்கிற சமயங்களை விட்டுவிடுகிறார். எத்தனையோபேரை மற்றவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு துன்பதுயரத்துக் குட்படுத்திவிடுகிறார். ஒருவரை ஒருவர் அறிகிறதற்கு நேரமில்லை. ஒருவரை ஒருவர் நன்றாய் அறியும்படி பிரயத்தனப்படுகிறதுமில்லை. ஒருவரை ஒருவர் நன்றாய் அறிந்திருப்பார்களானால், எத்தனையோபேர்களுக்கு சந்தோஷத்தையல்லாமல் துக்கத்தை உண்டாக்காமல் இருக்கலாம். நம்மிடத்தில் வருகிற யாவரையும் அசிரத்தையாய் தள்ளிவிடாமல் அவர்கள் இருதயத்தில் மனமகிழ்ச்சியை கர்த்தருடைய உதவியை முன்னிட்டு உண்டாக்கிவைக்கலாம். நம்முடைய இரக்ஷகர் சொன்னதுபோல உங்களில் பாவமில்லாதவன் "முதலாவது (பிறன்மேல்) கல்லெறியக்கடவன் என்று நாம் மற்றவர்களைப் பார்த்துச் சொல்லலாம். ஒரு ஸ்திரி தன்புருஷன் மரணாவஸ்தையில் இருக்கிறார் என்று வைத்தியருக்குத்தெரிவித்தாள். வைத்தியர்வந்து கையைப் பார்த்து அவர் செத்துப்போனார் என்று அந்த ஸ்திரியினிடத்தில் சொன்னார். ஆனால் அந்த வியாதியஸ்தனோ கொஞ்சம் தன் தேகத்தை அசைத்து, மெதுவான வார்த்தையாய் நான் சாகவில்லை என்று சொன்னார். பக்கத்தில் நின்ற அவர் மனைவியோ உமக்குத் தெரியாது. வைத்தியருக்கு நன்றாய் தெரியும். ஆகையால் நான் வைத்தியர் சொல்வதைத்தான் நம்புவேன் என்று சொன்னாளாம். இந்த மதியீனமான ஸ்திரியைப்போல் எத்தனையோபோ தன்னில்தானே நியாயமாய் காணப்படுகிற ஓர் விஷயத்திற்கு விரோதமாய் மற்றவர்கள் வார்த்தையை நம்பி, மௌடீகமாய் தன்னுடன் சிருஷ்டிகளுக்கு தீமைசெய்துவிடுகிறார்கள். ஐயரவர்களின் திவ்விய பணிவிடையின் முடிவுமட்டும் இவ்விதமாய் பிறருக்கு செய்தார்களென்று ஒரு பிராணியும் சொல்ல துணியாது.

ஐயரவர்கள் தம் திவ்விய பணிவிடை செய்துவருங்காலத்தில் வெளியே போகும்போதெல்லாம் வேதாகமத்தையாவது, அல்லது மற்றோர் பக்திக்குரிய ஒரு பிரபந்தத்தையாவது கையிலேந்திக்கொண்டு போனதாக சொல்ல ஏதுவில்லை.

ஆனால் தம் ஜீவன் முடிவுமட்டும் தம் இருதயத்தின் மறைவிடத்தில் சத்தியத்தை பத்திரப்படுத்திக்கொண்டிருந்தார்கள். புறம்பான வெளி வேஷங்களை தரித்துப்போகிற போதகர்களைப்பார்க்கிலும், உள்ளாக ஜீவாதிபதியின் உதவியைப்பெற்று, ஜீவித்துக்கொண்டிருந்த ஐயரவர்களைப்போன்ற ஜீவியமே மேன்மையான ஜீவியமும், திவ்வியபணிவிடையுமே. இவர்கள் தன் திவ்விய பணிவிடையில் அடைந்த சகல ஜெயத்திற்கும் மூலகாரணம் கர்த்தருடைய வேதமாகிய சத்தியத்தை தன்னிருதயத்தின் மறைவிடங்களில் புதைத்துவைத்திருந்த உண்மையுள்ள ஊழியக்காரராய் விளங்கினதினாலேதான் எனச் சொல்லலாம்.

உலகத்திலுள்ள விசேஷித்த வைரங்களில் "பெரிய சான்சி", என்பது ஒன்று. இதை ஹார்லின் சான்சி பிரபு கீழ் தேசத்திலிருந்து ஐரோப்பாவுக்குக்கொண்டு போயிருந்தார். தனக்கு பணம் அவசியமாயிருந்தபடியால் நம்பிக்கையான தன் வேலைக்காரனிடத்தில் அந்த விலையுயர்ந்த இரத்தினத்தைக்கொடுத்து, நாலாவது ஹென்றி என்னும் அரசனிடத்தில் சேர்த்து, நாற்பதினாயிரம் பவுன் வாங்கிவர அனுப்பினார். அவன் போன வழியில் காணாமல்போனான். தன் வேலைக்காரனுடைய உண்மையையும், புத்திதீக்ஷண்ணியத்தையும், அறிந்திருந்த அந்த பிரபு, தன் வேலைக்காரன் திருடன்கையில் அகப்பட்டு மோசம்போனானென்று நினைத்து, ஆரண்ணியமான காடெல்லாம் தேடிப்பார்த்து, தன் வேலைக்காரனின் தேகத்தைக் கண்டுபிடித்தார். திருடர்கள் கையில் தன் வேலைக்காரன் அகப்பட்டு மோசம் போனான் என்று அறிந்து மிகவும் துக்கப்பட்டார். ஆனால் தன் வேலைக்காரனுடைய உண்மையைமாத்திரமல்ல, அவனுடைய புத்திக்கூர்மையையும் அறிந்திருந்த எஜமான், அவனுடைய உடுப்பையெல்லாம் தேடிப்பாருங்கள் என்று சொன்னார். வைரத்தைக் காணாமையால் அவன் தேகத்தைவெட்டி பரீக்ஷிக்கும்போது, திருடர் கையில் அகப்படாதபடிக்கு, இந்த விலையுயர்ந்த வைரத்தை, அவன் எடுத்து விழுங்கிவிட்டதாக



கண்டெடுத்து, வேலைக்காரனுடைய உண்மைக்காக எஜமான் பரமானந்தம்கொண்டார். இவ்விதமாகவே நமது ஐயரவர்கள் பரம எஜமானின் ஊழியராய் உலகத்திலிருந்த காலமெல்லாம், ஆத்ம சத்துராதிகளாகிய திருடர்கள், தனக்குக் கிடைத்திருந்த சத்தியத்தைத் திருடிவிடுவார்கள் என்று நினைத்து, தன் இருதயத்தின்மறைவிடமான ஓர் பாகத்தில் புதைத்து வைத்திருந்தார்கள். "நான் பாவஞ்செய்யாதபடி உம்முடைய வார்த்தையை மறைத்துவைத்திருந்தேன்" என்று ஐயரவர்கள் சொல்லத்தக்கதாய் விலையுயர்ந்த வைரமாகிய கர்த்தருடைய வேதத்தை தன்னிருதயத்தின் அந்தகரணங்களிலெல்லாம் பிரகாசமடையவும், மனோகாத்திரங்களெல்லாம் வெளிச்சமாகவும் தக்கதாக, தன் உள்ளிந்திரியங்களை வெட்டிப் பரீக்ஷைபார்க்கக்கூடியவராகக்கண்டுபிடிக்கத்தக்கதாக, ஜீவனின் வார்த்தையை அங்கே புதைத்து வைத்திருந்தார்கள். ஆகையால் அவர்களுடைய திவ்விய பணிவிடையின் நாட்களெல்லாம் மனோரஞ்சிதமும், பிரகாசமும், சிறந்த அழகுமாயிருந்தது.

ஐயரவர்களுடைய திவ்விய பணிவிடையைக்குறித்து அவர்கள்தாமே எழுதிவைத்திருந்த ஞாபககுறிப்புகள் முழுவதும் நம்முடைய கையில் அகப்படவில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் ஒழுங்காய் தான் செய்த வேலையைக்குறித்து திட்டமாய் ஞாபககுறிப்பு எழுதிவைத்திருந்ததாகத் தெரியவருகிறது. அவைகளில் 1871, 1873, 1879, 1890, 1891, 1892-ம் வருஷங்களுக்குரிய ஞாபககுறிப்புகள்மாத்திரம் நமது கைக்கெட்டினது. அதை நன்றாய் கவனித்து வாசித்துப்பார்க்கையில், அதிக வேலைசெய்து கொஞ்சமாய் எழுதிவைத்திருந்த உத்தம ஊழியர்களின் கூட்டத்தை அவர்கள் சேர்ந்ததாக காணப்படுகிறது. அதிக வேலைசெய்து கொஞ்சம் எழுதிவைப்பாரும், கொஞ்சம் வேலைசெய்து அதிகமாய் எழுதிவைப்பாரும் உண்டென்பது நமக்குத்தெரிந்த விஷயம். ஐயரவர்கள் இந்த முந்தின கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்பது அவர்களோடு பழகிய கர்த்தருடையமனுஷர் யாவருக்கும் தெரிந்த விஷயமே. இந்த ஞாபக

புஸ்தகங்களின் மொத்தத் தொகுப்பை கவனித்துப் பார்க்கையில் இவர்கள் அறுபதுவருஷக்காலமாய் வாசஞ்செய்த பண்ணைவிளை என்னும், இந்த சிறந்த கிராமத்தைச் சுற்றிலும் அலங்காரமாய் நிற்கிற கற்பகத்தருவாகிய பனைமரங்கள் எத்தன்மையுள்ளவைகளாயிருக்கின்றனவோ, அத்தன்மையாய் கனம்: ஐயரவர்களும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியின் கனியையுடையவர்களாயிருந்தார்கள். "நீதிமான் பனையைப்போல் செழித்து லீபனோனிலுள்ள கேதுருவைப்போல வளருவான்" என்ற திருவாக்கின்படி ஆபிரகாம்ஐய்யரவர்கள் என்னும் நீதிமானாகிய பனைமரம், திவ்விய பணிவிடையில் செழித்தோங்கி வளர்ந்தன என்று சொல்லலாம்.

ஒரு சமுசாரி ஒரு பனங்கொட்டையை பூமியில் புதைக்கிறான். மழை பெய்து கொட்டையானது பிளவிட்டு இரண்டொரு ஓலைகளை வெளியே காட்டுகிறது. மிருகங்கள் அதை ஒடித்து மிதிக்கின்றன. சிறு விளையாட்டுப் பையன்கள் அதன் ஓலையை கிழித்துவிடுகிறார்கள். பனை முளைத்த இடத்தில் ஒன்றும் காண்கிறதில்லை. சில நாள் சென்றபின் முன் காணப்பட்டபனை ஓலைகள் மறுபடியும் அந்த இடத்தில் காணப்படுகின்றன. ஆடுமாடுகளாலும் மிதிபட்டு மறுபடியும் அழிந்துபோகிறது. இவ்விதமாய், எத்தனையோ முறை இச்சிறு வடலி பங்கமடைந்து பார்த்தோர் கண்ணுக்கு அங்கே பனைவடலி இல்லாததுபோல போய்விடுகிறது. என்றாலும் சாரல் பெய்து, தென்றல் வீசி, சூரிய வெப்பமும் பூமியில் உறைக்க மறுபடியும் முளை கிளம்புகிறது. ஒரு சிறு வடலியானது பெரிய வடலியாய் வளர்ந்து, வானத்தை அளாவுகிறது. இவ்விதமாய் பூமியில் மறைந்திருந்த பனங்கொட்டையை அழிக்கவேண்டுமென்று எத்தனையோ இடையூறுகள் நேரிட்டபோதிலும் எவ்வித உபாயத்தினாலும் முடியாமல்போய்விட்டதுபோல ஈசாக்கு ஆபிரகாம் என்னும் பனைமரம் முளைத்தபோது, எத்தனை துன்பங்கள் எத்தனை இடையூறுகள் சம்பவித்தன. அது எல்லாவற்றையும் மீறி ஓங்கிவளர்ந்து, மோட்சத்தின் கூரையைத் தட்-



டிற்று. ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தையாகிய திவ்விய வித்து இவர்களுடைய இருதயத்தில் மறைந்திருந்தது. பரிசுத்தாவி யென்னும் மழை பெய்து, பரம தென்றல் வீசிற்று, நீதியின் சூரியனாகிய ஒளி இவர்களுடைய இருதயத்தில் பிரகாசித்தது. ஆனபடியால் இவர்களுடைய திவ்விய பணிவிடை கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டதாயும், மனிதருக்கு மிகவும் பிரயோசனமுள்ளதாயும் இருந்தது. உலகமாகிய இந்த ஆரண்ணியத்தில் எத்தனையோ மரங்களிருந்தது. அவைகள் தாங்கள் பெரிதாய் வளரவேண்டுமென்றும் தங்கள் மத்தியில் வளருகிற மரத்தைத் தடுக்கவேண்டுமென்றும், தங்கள் கொப்பு கிளைகளை பரப்பினார்கள். என்றாலும் அவர்கள் எல்லாவற்றிற்கும்மேலே கர்த்தருடைய மரமாகிய இந்த ஜீவ விருக்ஷம் ஓங்கி வளர்ந்துவிட்டது. பனைமரமானது மற்ற மரங்களிலெல்லாம் உயர்ந்த மரமாய் காணப்படுவதுபோல ஐயரவர்கள் திவ்விய பணிவிடையில் உயர்ந்து, சிறந்து, விளங்குகிறார்கள். சிலர் தங்களை பெரியவர்களென்றும் கெட்டிக்காரர்களென்றும் சாமர்த்தியர்களென்றும் சொல்லப்படவும் அதிகாரிகளுடைய தயவையும் சம்பாதிக்க எவ்வளவாய் முயலுகிறார்கள். சிலவேளைகளில் உலகத்தை கீழது மேலதாக புரட்டுகிறார்கள். சமயத்திற்குத் தக்கதாய் பேசுகிறார்கள். இவர்களையா கர்த்தர் உயர்த்திவிடுவார்? மனுஷன் பார்க்கிற பிரகாரம் கர்த்தர் பார்க்கிறதில்லையே. அவருடைய பனைமரம அவருக்குத் தெரியும். அதை மாய்மாலமாகிய மற்ற மரங்களுக்கெல்லாம் மேலாக உயர்த்தியிருக்கிறாரே. இவர்கள் காட்டின களங்கமற்ற அன்பும் தாழ்மையும் தயாளமும் இவர்களுடைய சபையாரின் இருதயமாகிய பலகையில் எழுதியிருக்கிறது. பனைமரமானது யாதொரு கோணலில்லாமல் நேர்மையாய் வானோக்கி நிற்பதுபோல ஐயரவர்களும் தன் சபைக்குள் நேர்மையும் யதார்த்தமும் உள்ளவர்களாய் ஜீவித்தார்கள். இவர்கள் அற்பசொற்ப வார்த்தைகள் சபையாரோடு பேசினால் நேர்மையோடு யாதாமொரு கோணலும் திறக்கு முறுக்குமற்ற வார்த்தைகளால் பேசுவார்கள். இவர்கள் செய்-

கைகள் யாவும் கடவுளுக்கு பிரீதியாய் இருந்தமையால் அவைகள் நேர்மையும் யதார்த்தமான செய்கைகளாயிருந்தன. உள்ளதை உள்ளதென்றும் இல்லாததை இல்லாததென்றும் சொல்லுவார்கள். சபைக்குள் யாதாம் ஒரு பிரிவினைகள் மனவருத்தங்கள் நேரிட்டுவிடுமானால் ஐயரவர்கள் ஒரு பக்கத்தில் சார்ந்துவிளர்ந்திருந்தார்கள் என்று சொல்வதற்கு இடமேயில்லை. இந்தியாவில் பரிதவிக்கப்படத்தக்கதான எத்தனையோ ஜாதி வகுப்புகளிருக்கிறதே. ஐயரவர்கள் இந்த வகுப்புகள் ஒன்றுக்காவது சற்று சார்வாயிருந்தார்களென்று யார் சொல்லத் துணிவார்கள். ஜாதிபேதமாகிய கசப்பு நிறைந்த தேசத்தின்கண் திவ்விய பணிவிடை பார்க்கிற குருக்கள் சற்று தாழ வகுப்பு தன் ஜனமென்று கோணிவிடுவார்களேயானால் நீதிமான் என்னும் பனைமரம் அல்லவென்று வெளியிலே தன்னைக்காட்டிவிடுவார். நேர்மையுள்ள நீதிமான் என்னும் இந்த பனைமரம் எப்போதும் சபை நடுவில் வெளிச்சத்திற்குள் நிற்குமா? இருண்ட மேகங்கள் வந்து மூடுகிறதில்லையா? ஐயரவர்கள் நோக்கின காரியம் சித்திக்காமலும் சில காரியங்கள் அதைரியப்படத்தக்கதாயும் அவர்களின் ஜீவனின் ஓட்டத்தில் சங்கடங்களும் வருத்தங்களும் ஒன்றின்பின் ஒன்றாக அவர்களுக்கு எதிர்ப்பட்டன. அவர்கள் சிநேகிதர்களும் சில சமயத்தில் ஒன்றின்பின் ஒன்றாக மாறினார்கள். இவர்களுக்கு நேரே காற்றுங் கொந்தளித்த அலைகளும் மோதின, கர்த்தர் இவர்களை மறந்துவிட்டாரோ என்று சொல்லத்தக்க சமயமும் நேரிட்டது. ஆ! காருண்ணியமுள்ள கடவுள் திவ்விய பணிவிடையை நடப்பித்து வந்த தமது அடியான்பேரில் சற்று பிரகாசிக்கவிடாதபடி, தம்முடைய வெளிச்சத்தை மேகத்தினாலே மூடி பிரகாசியாதேயென்று அதற்குக் கட்டளை கொடுத்தார். ஆனால் இதை வாசிக்கிற சிநேகிதர்களே! இச்சீவனுகிய யுத்தத்தை நடப்பிக்கிறவர்களே! பிரயோசனமான வேலைகளைசெய்து வருகிற கர்த்தருடைய திவ்விய ஊழியக்காரரே! உங்கள் பணிவிடையின் காலத்தில் இப்படிப்பட்ட சமயம் வரும்போது அதைரியப்படாதேயுங்கள். தாவீதாசன்



பாடினதுபோல "செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்" இந்த வெளிச்சம் மேகத்தினால் மறைக்கப்பட்டு கர்த்தருடைய உத்தரவுக்காக காத்திருக்கிறது. காருண்ணியமுள்ள நம்முடைய பரம தகப்பன் பிரகாசி என்று சொன்ன அந்த நிமிஷத்திலே நம்முடைய பாதை எல்லாம் வெளிச்சமாகிறது. நீதிமான் என்னும் நேர்மையுள்ள பனைமரத்தின்மேலே அதனுடைய சகல பிரகாசத்தோடும் மகிமையோடும் பரம வெளிச்சம்படுகிறது. அவ்வாறே ஐயரவர்களுடைய ஜீவியத்திலும் காணப்பட்டிருந்தது. யதார்த்தமாயும் நேர்மையாயும் ஜீவிக்கிற கர்த்தருடைய மனுஷனாயிருக்கிற ஒவ்வொருவருடைய ஜீவனின் ஓட்டத்திலும் கார்மேகங்கள் மூடி வெளிச்சத்தை மறைத்திருக்கலாம் ஆனாலும், கருணாகர கடவுளின் கடாட்சத்தினால் ஏற்றகாலத்தில் வெளிச்சம் உதித்து மனமகிழ்ச்சியானதில்லையா?

பனைமரமானது மூந்நூற்றுச்சில்வானம் பிரயோசனமுடையதாயிருக்கிறது. நீதிமான் என்னும் பனைமரமாகிய ஐயரவர்களும்தன் திவ்விய பணிவிடையின் காலத்தில் எத்தனையோ வகையாய் பிரயோசனமுள்ளவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய ஞாபககுறிப்புப் புஸ்தகத்தினால் நாம் அவர்களைக் கவனித்தமட்டும் சற்று நேரத்தையாகிலும் வீண்பொழுதாக கழித்ததாகக்காணப்படவேயில்லை. கிராமம் கிராமமாய்ப்போய் கோவில்களிலும் வீடுகளிலும் புத்திசொல்லுகிறதிலும் ஜெபிக்கிறதிலும் தரித்திருந்தார்கள். கவலையுள்ள ஒரு மனுஷனைக் கண்டால் அவன் கவலையை எப்படி நீக்குவதென்று முயற்சித்ததில்லையா? துன்பப்படுகிறவர்கள் ஆறுதலற்றவர்கள் கைம்பெண்கள் அநாதபிள்ளைகள் ஐயரவர்கள் மூலமாய் ஆறுதலும் மனமகிழ்ச்சியும் அடைந்ததில்லையா? தேவனுடைய மனுஷன் சகல நற்கிரியைகளுக்கும் ஆயத்தமுள்ளவனாயிருக்கவேணுமென்று ஐயரவர்கள் எப்போதும் நினைத்திருந்தார்கள். அவர்கள் இருதயம் தெய்வீக ரப்பாகவேயிருந்து விரிந்துகொண்டேயிருந்தது. சிலருடைய இருதயம் குண்டூசியின் தலைபோல் சிறுத்து இருக்கிறது. இவர்

கள் பரமநாயகனைநோக்கி நவமும் விஸ்தீரணமுமான பரம இருதயத்தை தங்களுக்கு கொடுக்க பிரார்த்திக்கவேண்டும்.

பனைமரமானது எப்படி நெருங்கி வளருகிறதோ அத்தன்மையாய் ஐயரவர்களும் சகல மனுஷரோடு நெருங்கி ஜீவித்து அன்னியோன்னியமாய் கர்த்தருடைய வேலையை நடப்பித்து வந்தார்கள். பெரிய ஆலவிருட்சம் ஒன்று தன் கொப்புகளை விழுதுகளோடு விஸ்தாரமாய் அடர்ந்திருக்கக்கூடிய இடத்தில் நூறு அல்லது இருநூறு பனைமரங்கள் வளர்ந்து செழித்திருக்கும் இப்படி ஒன்றோடொன்று சேர்ந்து நெருங்கி வளரும்படி இந்த பனைமரங்கள் தங்கள் சொந்தக்காரனைப் பார்த்து எங்கள் மட்டைகளை எல்லாம் அடியிலிருந்து தலைப்புமட்டும் வெட்டி எறியுங்கள், அப்போதுதான் நெருங்கி வளருகிறதற்கு இடமாகும் என்று கேட்டுக்கொண்டதுபோலிருக்கிறது. இவ்விதமாய் கிறிஸ்தவர்கள் ஒருவரோடொருவர் நெருங்கி ஜீவிக்கிறதற்கு தங்களிடத்திலிருக்கிற பெருமை, சுயநயம் முதலிய பட்ட மட்டைகளை வெட்டி எறிந்துவிடும்படி கடவுளை நோக்கிப் பிரார்த்திக்கவேண்டும். ஐயரவர்கள் நீதிமானாகிய பனைமரமாய் இருந்தமையால் தன்னுடைய திவ்விய பணிவிடையின் காலத்தில் தான் எப்போதும் ஜெபிக்கிறதிலும் வேதம் வாசிக்கிறதிலும் பிரசங்கிக்கிறதிலும் தனித்திருந்தபோதிலும், தன்னோடு வேலை செய்கிற உபதேசிமார் உபாத்திமார் சபையார்களையும் திவ்விய பணிவிடையை நடத்தும்படி ஏவி எழுப்பிவிடுவார்கள். தானே சகல வேலைகளையும் செய்யத்தக்க திராணியும் திறமையும் மனமும் உடையவர்களாயிருந்தாலும் தன்னோடு வேலை செய்கிற மற்ற போதகமாரையும் தானிருக்குமிடத்திலே பிரசங்கிக்க அல்லது ஆராதனை நடப்பிக்கக் கேட்டுக்கொள்வார்கள். தூரதேசங்களிலிருந்து வருகிற கிறிஸ்தவர்களைக் கண்டால் அவர்களை பிரசங்கிக்கும்படியாயும் தன் சபையாருக்குப் புத்திசொல்லும்படியாகவும் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொள்வார்கள். மற்ற இடங்களில் ஒருக்காலும் பிரசங்கியாதிருந்தவர்களுங்கூட ஐயரவர்களை கண்டதக்ஷணமே இரட்



சணிய பெருமானாகிய கிறிஸ்துவினுடைய மகத்துவத்தைக்குறித்து சாக்ஷி கொடுக்கிறோம் என்று பற்பல இடங்களிலும் சாட்சிபகர்ந்து போயிருக்கிறார்கள். இவர்களை பார்க்கிறவர்களும் இவர்களோடு கொஞ்சநேரம் சம்பாஷிக்கிற கிறிஸ்தவர்கள் யாராலும் மெய்யாகவே இந்த தேவபக்தன் தெய்வ அன்பினால் நிறைந்தவர்களாயிருக்கிறார்கள் என்று அறிந்து, இதோ நீதிமான் என்னும் பனைமரமென்று சொல்லத்துணிவார்கள்.

கிறிஸ்தவர்களுக்குள் எந்தக் கோட்பாட்டுக்காரர்களை ஐயரவர்கள் எச்சமயத்தில் கண்டாலும் உடனே அவர்களை அன்போடும் ஆதரவோடும் ஐக்கியத்தோடும் ஏற்றுக்கொண்டு அவர்களை சகோதரர்களாகவே பாவித்து நடத்துவார்கள் அவர்களோடு சம்பாஷிக்கையில் அவர்களின் உபதேச வித்தியாசங்களிருக்கக்கண்டால் தன் புத்திக்கு எட்டினமட்டும் ஊக்கத்தோடும் மிகுந்த அன்போடும் அவர்கள் உபதேசம் தப்பு என்று எடுத்துக்காட்டி சீர்திருத்தம் செய்துகொடுப்பார்கள். பனைமரமானது மகாதயாள தன்மையை வைத்திருக்குமாப்போல ஐயரவர்களும் தன் ஜீவனின் ஓட்டத்தின் முடிவுமட்டும் தன் தயாளம் மட்டற்றதென்று காட்டினார்கள். பனைமரத்தின் அமுர்தமான நீரை களங்கமற்றதும் பரிசுத்தமானதுமான புருக்கள் வந்து சாப்பிடுகின்றன. அவைகள் போனபின் பட்சிகளில் சண்டாளப் பட்சி என்று அழைக்கப்படுகிற காகங்கள் வந்து அந்த அமுர்தத்தை பானம்பண்ணுகின்றன. அவ்வாறே நல்லவர்களும் சன்மார்க்கருமாத்திரமல்ல எப்பேர்ப்பட்ட துன்மார்க்கராலும் ஐயரவர்களுடைய தயாளத்தின் பலனை அனுபவிக்காமல் போகமாட்டார்கள். உன் சகல மீறுதல்களோடும் உன்னை நான் சிநேகிக்கிறேன் என்று சொன்ன கடவுளுடைய தாசனாகிய இவர்கள் எந்த நிலைமையுள்ளவர்களைக் கண்டாலும் அவர்களோடு அன்பாய்பேசி அவர்கள் பசியாயிருந்தால் அவர்களுக்காகாரம் கொடுத்து, அவர்களுக்கு அவசியமான எந்த நன்மையும் செய்யும்படி தன் கையை நீவிரித்து நீட்டி, அவர்களைத் தொட்டு பாவிகளின் சிநேகிதரும் திக்கற்றவரின் ரட்சக

ருமாகிய கிறிஸ்துவை நோக்கிப்பார்க்கச் செய்வார்கள். எந்த மனுஷனையும் அவன் இருக்கிற நிலைமையிலேயே அவனை போய் தழுவி, அவனை கடவுளண்டை வழிகாட்ட முயற்சிப்பார்கள். அவன் நடத்தை பொல்லாததாய் அவன் குணம் சீர்கெட்டதாயிருக்கிறதென நினைத்து அவனுக்கு நன்மை செய்யக்கூடாதென்று ஒருக்காலும் சொன்னதாக தெரியவில்லை. சித்திரப்படம் எழுதுவதில் பேர்போன ஒருவர் பரம தரித்திரனும் அவலக்ஷண ரூபியுமான ஒருவனுடைய படத்தை எழுதி உலகத்திற்கு காட்டவேண்டுமென்று நினைத்து அநேகநாளாய் தன் உத்தேசத்திற்குத்தகுந்த ஆளை ஒரு பெரிய நகரத்தில் தேடிக்கொண்டிருந்தார். ஒருநாள் தன் மனதிற்கு திருப்தியான மனுஷன் ஒருவனைக்கண்டு தான்படம் எழுதுகிற அறைக்கு மறுநாள் வரும்படி அவனைக் கேட்டுக்கொண்டார். குறித்த நேரத்திற்கு முன்னதாகவே அந்த துரை படம் எடுக்கிற கருவியை ஆயத்தமாய் வைத்துக்கொண்டிருந்தார். கந்தையும் நிர்தையும் அணிந்திருந்த மனுஷன் தான் சற்று மரியாதையாய் தோன்றும்படிசெய்து படம் எடுக்கிறவர் முன்வந்து நின்றான். அந்த துரை அவனைக் கண்டவுடன் ஆச்சரியப்பட்டு "ஆ சகலத்தையும் கெடுத்துப்போட்டாயே நான் வாரக்கணக்காய் உன்னை தேடினேனே நீ இருந்தபடிதானே இங்கு வரவேண்டும்" என்று சொல்லி வருத்தப்பட்டார். இவ்வாறே ஐயரவர்களும் மனுஷரக்ஷண்ணிய விஷயத்தில் இயேசுபெருமானிடம் எப்பேர்ப்பட்ட பாவியாகிலும் அவனிருக்கிறபடியே வரலாமென்று அழைத்துக்கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட பெரும் பாவிகளுக்கும் நன்மையே செய்துகொண்டு வந்தார்கள். அவன் சீர்ப்படுமட்டும் சிலர் நினைக்கிறபடி நன்மை செய்யக்கூடாதென்று நினைத்தவர்களல்ல. இயல்பான சுபாவத்தின்படி மனிதர்கள் தங்களை சற்று சீர்ப்படுத்திக்கொண்டு தெய்வத்தினிடத்தில் போகலாமென்று நினைக்கிறார்கள். இவர்கள் ஆத்மத்தின் கறை நீங்குகிறதற்குவேறே வழியில்லை. இவர்கள் தங்கள்கையை தேய்த்து தேய்த்து கழுவினாலும் அதின் பாவக்கறை மங்கப்போகிற



தில்லை. அரேபியா தேசத்தின் சகல வாசனைத் திரவியத்தையும் இவர்கள் தெளித்தாலும் அந்த அசுத்தம் நீங்கப்போகிறதில்லை.

உவிட்பீல்டு என்னும் பேர்போன அங்கிலேய தேசத்துக்குரு பிரசங்கித்தபின் விர்த்தாப்பியமும் பாவ உளையில் அமிழ்ந்திருந்தவளுமான ஒரு பெண் அவரைப்பார்த்து நீர் சொல்லியபடி "பிசாசுகூட தள்ளிவிட்ட ஆத்துமாவை கிறிஸ்து ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறீரா? என்று கேட்டாள். இந்த ஸ்திரீ தன் வாழ்நாள் எல்லாம் பாவத்திலேயே கழித்து நிர்ப்பாக்கியத்தோடு சாகும் தருணமாயிருந்தாள். உவிட்பீல்டு (Whitfield) அவளை தைரியப்படுத்தி கிறிஸ்துவின் மட்டற்ற அன்பின் மகத்துவத்தை எடுத்துக்காட்டி இந்த பரிதபிக்கப்படத்தக்க மகதலேனாளை ஆறுதல்படுத்தினார். அவள் சுவிசேஷத்தினால்வரும் சகல பாக்கியத்தையும் நம்பி மரித்தாளாம்.

ஐயரவர்கள் தன் திவ்வியபணிவிடையின் ஓட்டத்தில் எந்த சமயத்திலும் சுவிசேஷத்தின் சத்தியமாகிய வெளிச்சத்தை மனுஷர் முன்பாக வைத்துக்கொண்டேயிருந்தார்கள். இந்த சுவிசேஷத்தின் வெளிச்சத்தைக்கண்டு பாவ அந்தகார இருளில் மதிமயங்கிக்கிடந்த எத்தனையோபேர் கண்டார்கள். இவர்களுடைய ஊழியத்தின் மத்திய காலத்தில் இவர்கள் சுற்றிப்பார்க்கவேண்டிய கிராமங்கள் 50 மயில் சுற்றளவுள்ளதாயிருந்தது. பிந்தி 20 மயில் சுற்றளவுள்ள கிராமங்களுண்டு. அந்தக் கிராமங்களில் இவர்கள் போகும்போதெல்லாம் சுவிசேஷமாகிய இந்த பெரிய வெளிச்சத்தை இந்தக் கிராமத்தாருக்கு முன்பாக திட்டமாய் வைப்பார்கள். அப்படி வெளிச்சத்தைக் கண்டவர்களில் சிலர் தேவனோடு ஒப்பரவாகி சொல்லவொண்ணாத ஆசீர்வாதங்களைப்பெற்று அவர்களும் அவர்கள் சந்ததியாரும் இகபர நன்மைகளை அடைந்திருக்கிறார்கள். கிரீக் தேசத்தில் பேர்போன ஓர் சக்கிரவர்த்தியிருந்தார். அவருக்கு மகா அலக்சாந்தர் என்று பேர். அவர் எந்தப் பட்டணத்தையாகிலும் ஜெயிக்கும்படி நினைத்துப் புறப்பட்டால் அதற்குமுன் பாளையம் இறங்கியிருக்கும்

போது ஒரு வெளிச்சத்தை ஏற்றிவைப்பார். அந்த வெளிச்சம் எரிந்துகொண்டிருக்கும்போது அந்தப் பட்டணத்திலிருந்து யாராவது இவரிடத்தில் வந்தால் அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு இருப்பிடம் முதலியவை கொடுத்து அவர்கள் ஜீவனை ரட்சிப்பாராம் அப்படி அவரிடத்தில் வாராதவர்களுக்கு இரக்கம் காண்பியாமல் அவர்களை அழித்துவிடுவாராம். இத்தன்மைபோல "நானே உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறேன் என்று சொன்ன கிறிஸ்துவே உலகத்தாருடைய இரட்சண்ணியத்திற்கு ஏற்றப்பட்ட வெளிச்சமாயிருக்கிறார். இந்த வெளிச்சம் உலகத்திலிருக்கும்போதே அவரைப் பின்பற்றாதவர்கள் தேவகோபாக்கினைக்கு தப்புகிறதற்குயிடமில்லை என்பதே ஐயரவர்கள் காண்பித்துவந்த வெளிச்சத்தின் கருத்தாம்.

ஐயரவர்களுடைய திவ்விய பணிவிடையின் காலத்தில் அவர்கள் முடிவுமட்டும் காண்பித்த நன்மாதிரியும் அவர்கள் பண்ணின பிரசங்கங்களும் அவர்களை உத்தம புருஷனாகவே காட்டுகிறது. இது போதகமாருக்கு இருக்கவேண்டிய விசேஷித்த காரியம். ஒருவர் பரீட்சையில் நன்றாய்த் தேறியிருப்பார், ஆனால், குணத்திலே குறைவுள்ளவராயிருப்பார். ஒருவர் பிரசங்கம் நன்றாய்ச் செய்வார், அவருடைய ஜீவியமோ வெறுவெறுப்பாயிருக்கும். ஒருவர் மிஷியன் காரியத்தில் அதிக ஜாக்கிரதையுள்ளவராயிருப்பார், ஆனால் சபையிலோ ஓயாத குளப்பத்தையும் அலங்கோலத்தையும் உண்டாக்கிவிடுவார். ஒருவர் அமிர்தமான வார்த்தை பேசுவார், ஆனால், பரோபகார சிந்தையைக் கனவிலும் நினையார். ஒருவர் மார்க்க வைராக்கியத்தினால் தன் சரீரத்தை சுட்டெரிக்க ஒப்புக்கொடுக்கத்தக்கவராயிருப்பார், ஆனால், அவரோ அன்பற்றவராய், சத்தமிடுகிற வெண்கலத்தைப்போலவும், ஓசையிடுகிற கைத்தாளத்தைப் போலவும் இருப்பார். கிறிஸ்துவின் ராஜ்யம் வருவதாக என்று ஜெபிப்பார், ஆனால், தன் காரியத்திலேயே நோக்கமாயிருப்பார். ஜாதிபேதம் பிசாசினால் உண்டானதென்பார், ஆனால், தன் ஜனம், வகுப்பு, குடும்பம் என்று கையில் கங்கணம் கட்டித்



திரிவார். ரோமாபுரியை ஆண்டவர்களில், பேர்போன சக்கரவர்த்தியாயிருந்தவருக்கு டிறஜான் (Trajan) என்று பேர். இவருடைய குணத்தினாலும், பெருந்தன்மையினாலும் தயாளத்தினாலும் மற்றவர்கள் தனக்கு குற்றஞ்செய்தால் அதை முற்றிலும் மறக்கிறதினாலும், தன் விஷயத்தை மறந்துவிடுகிற தன்மையினாலும், அவர் காலத்திலிருந்த சகல உலகத்தாரும் அவரை ரோமாபுரியின் "மிகவும் நல்ல சக்கிரவர்த்தி" என்பார்கள். அவருடைய பிரஜைகள் அவர் மரித்த பின், அவருடைய ஸ்தானத்தில் வருகிற சக்கிரவர்த்திகளுக்கு ஆசீர்வாதமாக, டிறஜான் சக்கிரவர்த்தியினிடத்திலிருந்த நன்மையான குணமும் அவரிடத்திலிருந்த சன்மார்க்கங்களும் உம்மிடத்திலுங் காண்பதாக என்று வாழ்த்துவார்கள். ஆனால், இந்த சக்கிரவர்த்தி அநேக மல்லகசெட்டிகளை வைத்திருந்தார். இவருக்கு சந்தோஷம் உண்டாகும்படி, ஆயிரக்கணக்கான மல்லகசெட்டிகள், ஒருவரோடொருவர் சண்டைபோட்டு, ஒருவரை ஒருவர் கொல்லத்தக்கவிதமாய்ப் பழகியிருந்தார்கள். ஒருமுறை நூற்று இருபத்து மூன்று, நாள் விடாமல் கொலோசியம் என்கிற வேடிக்கைச்சாலையில் இந்த மல்லகசெட்டிகள் ஒருவரோடொருவர் சண்டைபோட்டு சாகும்படி இவரும் மற்றவர்களும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இவர் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தத்துவக்கி அவர்களை சித்திரவதைபண்ணினார். சிலரை நெருப்பிலே போட்டார். சிலரை பாஷாணத்தினால் கொன்றார். சிலரை ஈட்டிகளினால் குத்தச்செய்தார். சிலரை நெருக்கமும் ஒடுக்கமும் இருட்டுமான பயங்கரமுள்ள இருட்டறையில் போட்டார். சிலரை சிங்கமுதலிய துஷ்ட மிருகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். சிலரை சர்ப்பத்தைவிட்டுக் கடிக்கவிட்டார். அவர் கனம்பொருந்திய ரோமாபுரியின் அத்தியக்ஷராகிய கிளிமன்ஸ் என்பவருடைய கழுத்திலே பெரியநங்கூரத்தைக் கட்டி கடலில்தூக்கிப்போட்டு தாழ்த்தினார். விருத்தாப்பியமான இக்னிஷியஸ் என்னும் மகாபரிசுத்தவானை பட்டினியாய்க் கிடந்த சிங்கங்களுக்கு இரையாக ஒப்புக்கொடுத்தார். இவரில் காணப்பட்ட எத்த

னையோ சிறந்த குணங்கள் புஷ்டியும் செழிப்புமான பார்வோன் ராஜா கனவில்கண்ட எழுபசுவைப் போலிருந்தது. அவருடைய பிந்தின குணங்களோ மிகவும் மெலிவும் அவலட்சணமுமான பார்வோன் கனவில்கண்ட பசுக்களைப்போலிருந்தது. இந்தப் பிந்தின பசுக்கள் அந்த முந்தின பசுக்களை விழுங்கி விட்டதே. இத்தன்மையாகத்தான் அநேகருடைய நல்லகுணங்களை அவர்களுடைய கெட்ட குணங்கள் விழுங்கிவிடுகின்றன. ஆனால் ஐயரவர்களோ "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும பூரண சற்குணராய் இருக்கக்கடவீர்கள்" என்று சொன்ன இயேசுரட்சகருடைய ஆவியை உடையவர்களாய் ஜீவித்தமையால் அவர்களுடைய திவ்விய பணிவிடையின் காலமெல்லாம் நேர்மையும், சிறப்பும் பெற்று ஞானருகூமுடையவர்களாய் காந்தியையும், சௌசன்னியத்தையுங் காட்டிக்கொண்டேயிருந்தார்கள்.

ஐயரவர்கள் வாக்கு வல்லபமுள்ளவர்களாயிருந்தார்கள். இது பிரசங்கிகளுக்கு இருக்கவேண்டிய இன்றியமையாத ஓர் இலட்சணம். வேதசாஸ்திரத்தில் தேர்ச்சியும கல்வியில் தகுந்த ஆராட்சியும் சுகுணமும் தேவதாபக்தியும் உடையவராய் மாத்திரம் ஒருவர் இருந்து அவரிடத்தில் வாக்கு வல்லபம் காணப்படாத விஷயத்தில் அவர் தேவ ஊழியத்திற்குத் தகுந்தவர்தான் என்று நினைக்கக்கூடாது. இப்படிப்பட்டவர் சபையில் ஒரு அவயவமாயிருப்பாரானால் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். தற்காலத்தில் அநேக பிரசங்கிகள் தங்கள் பிரசங்கங்களை எழுதி கோவிலில் வாசிக்கிறது இத்தேசத்தில் மாத்திரமல்ல மற்றமேல் நாட்டு கிறிஸ்தவ தேசங்களிலும் வழக்கமாயிருக்கிறது. இவர்களில் சிலர் வேதசாஸ்திரிகளாயும் பேர்போன போதகமார்களாயும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் சிலர் வாசிக்கிறது இன்பமும் எழுப்புதலுமாகத் தானிருக்கிறது. ஆனால் போதகமார்கள் எல்லாரும் தங்கள் பிரசங்கங்கள் முழுவதையும் எழுத மனமாயிருந்தால் எழுதி அவைகளை வீட்டில் வைத்துவிட்டு கோவிலுக்குப்போகிறதே நலமாயிருக்கும் ஐயரவர்



கள் எக்காலத்திலும் எந்தயிடத்திலும் பிரசங்கம்பண்ணினாலும் பிரசங்கங்களை எழுதி வாசித்தவர்கள் அல்ல. வாக்கு வல்லபத்தின் ஆவியை கர்த்தர் கொடுத்திருந்தார். ஆகையால் இவர்கள் பிரசங்கங்கள் அருமையாயும் எழுப்புதலுமாயிருந்தன. 19-வது நூற்றாண்டில் எழும்பின பிரசங்கிகளில் ஸபர்ஜன் என்பவர் மகா சிறந்த பிரசங்கி என்று யாவரும் ஒத்துக்கொள்வார்கள். இவர் லண்டன் பட்டணத்தில் ஓரிடத்தில் பிரசங்கம் பண்ணப் போகிறார் என்று 24 மணி நேரத்திற்குமுன் விளம்பரஞ் செய்தால் 3000 ஜனங்களுக்குமேல் கூடிவந்து இவர் பிரசங்கத்தைக் கேட்பார்களாம். இவரிடத்தில் குருப்பட்டத்திற்குப் படித்த மாணாக்கமார்களில் ஒருவனை இவர் பார்த்து வாலிபனே நீர் சிறந்த அறிவும் கல்வித்திறமையும் உடையவனென்று நான் அறிவேன். நீர் அநேக புஸ்தகங்களை வாசித்திருக்கிறீர், உமக்கு பலத்த ஞாபகசக்தியிருக்கிறது, ஆனால், நீர் பிரசங்கியாகிறதற்கு முன் நான் உம்மை மதிக்கிறதற்கு அடையாளமாக ஒரு தூச்சிடுக்கியை (கார்க் ஸ்குருவை) இனாமாகக் கொடுக்க விரும்புகிறேன் என்றாராம். இவ்விதமாய் எத்தனையோ போதகமாருக்கும் பரிசுத்தாவியாகிய தூச்சிடுக்கி தேவையாயிருக்கிறது. அவரால் அவர்களின் நாவின்கட்டு அவிழ்க்கப்படவேண்டியதாயிருக்கிறது. இங்கிலாந்து தேசத்தில் ஒரு வேதசாஸ்திரியாரிருந்தார். (Dr. Guyse) அவர் 20 வருஷமாய் பிரசங்கம் பண்ணியபின், நேத்திரப்பார்வையற்றவரானார். 21-ம் வருஷத்தில் தாம் வழக்கமாய் பிரசங்கங்களை எழுதி வாசிக்கிறபடி வாசிக்கவிடமில்லை. ஆனபடியால் தன் பிரசங்கத்தை வாக்கு வல்லபத்தோடு மனதிலிருந்து எடுத்து உரைத்தார். அவர் பிரசங்கத்தைக் கேட்டவர்களுக்கு மிகுந்த எழுப்புதல் உண்டாயிற்று. அதைக் கேட்ட விருத்தாப்பியமான ஒரு துரைசானி போதகருடைய அறைக்குப்போய் சாஸ்திரியாரே கடந்த 20 வருஷமாய் நீர் நேத்திர பார்வையற்றவராய் இருந்தீரில்லையே என்று விசனப்படுகிறேன். ஏனெனில் இன்று நீர் செய்த பிரசங்கத்தைப்போல முன்பு ஒருநாளும் செய்ததில்லை. என்றார்கள்.

ஐயரவர்களின் இவ்வியபணிவிடையின் காலத்தில் அடிக்கடி கண்ணீரோடே பிரசங்கித்திருக்கிறார்கள். இனத்தார்கள் மரித்தால், தனக்குப் பெரிய உபத்திரவங்கள் துன்பங்கள் சோதனைகள் உண்டானால் கண்ணீரோடே கடவுளை நோக்கி ஜெபிக்கிறவர்கள் உண்டு. ஆனால் தன் சபையின் ஆத்ம ஸ்திதி குளிர்ந்திருக்கிறதென்றும், அங்கே உலர்ந்த எலும்புகளாய்க்கிடக்கிறார்களென்றும், அவர்களில் சிலர் இன்னும் புது ஜீவியமடையவில்லை என்றும், சிலர் மட்டற்ற கிறிஸ்துவின் அன்பை ருசியாதிருக்கிறார்களென்றும், சிலர் பாவத்திலே அமிழ்ந்துகிடக்கிறார்கள் என்றும், சிலர் தாங்கள் விரும்பியதைச் செய்யாமல் வெறுக்கிறதை செய்கிறார்கள் என்றும், சிலர் தேவகோபத்தையும் அதால் வரும் சாபத்தையும் வரவழைத்துக்கொண்டிருக்கிறார்களே என்றும் ஐயரவர்கள் மிகுந்த கவலையோடும் கரிசனையோடும் தேவ ஆவியின் உதவியினாலே கண்ணீர்விட்டு பிரசங்கித்திருக்கிறார்கள். இரத்தச்சாட்சிகளின் ரத்தம் திருச்சபையின் வித்து என்று சொல்லப்படுகிறது. இந்த உத்தம போதகர் சிந்திய கண்ணீர் தேவவசனத்தை திருச்சபையின் மத்தியில் வளரச்செய்யும் தண்ணீராய் மாறமாட்டாதா? இவர்களின் ஜீவனின் ஓட்டத்தில் இவர்கள் கண்ணீரோடே பிரசங்கித்த வார்த்தைகளும் கண்ணீரோடே ஜெபித்த ஜெபங்களும் வீணாகுமா? இவர்கள் தன் சபையாருக்காகவும், இந்தியாவிலுள்ளவர்களுக்காகவும் விசேஷமாக திருநெல்வேலி நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்காகவும், இந்துக்களுக்காகவும்பண்ணின வேண்டுதல்களும் விண்ணப்பங்களும் தேவசமுகத்தில்போய் எட்டியிருக்கிறது. ஒரு சமயத்தில் பாவஞ்செய்த ஒரு ஆத்மாவை ஐயரவர்கள் தனித்துக் கூட்டிவைத்துக்கொண்டு தன் தலையிலே கையினால் அடித்துக்கொண்டு ஒன்றும் சொல்லாமல் மாலைமாலையாய் கண்ணீர்விட்டழுதார்கள். இந்தக் கண்ணீர் ஈட்டிபோல் அந்தப் பாவியின் இருதயத்தில் குத்தவில்லையா? மற்றவர்களுடைய ஆத்ம நன்மைக்காகக் கண்ணீர்சொரிந்து அழுது பிரசங்கித்து ஜெபிக்கிற போதகர்கள் எத்தனைபேர். எருசலே



முக்கு வரப்போகிற அழிவைக்கண்டு கண்ணீர்விட்ட இயேசு ரட்சகரின் தாசனாகிய இவர்கள் குணப்படாத ஆத்மாக்கள் இம்மையிலும் மறுமையிலும் நிர்ப்பாக்கியர்களாயிருப்பார்களே என்று கண்ணீர் சொரிந்து மிகுந்த கவலையோடே பிரசங்கித்தார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட திருந்தகைமையை எழும்பச்செய்வாராக. அப்போது இருதயங்கள் உருகவும் திருச்சபை பெருகவும் ஏதுவாகும். கண்ணீரோடே விதைக்கிறவன் சந்தோஷத்தோடே அறுப்பான்.

ஐயரவர்களுடைய இவ்வியபணிவிடையைக் குறித்து சொல்லவேண்டுமானால் புஸ்தகம் விரிவாகும். இவர்களுடைய ஞாபகபுஸ்தகங்களை நன்றாய்க் கவனிக்கையில் அநேக கோவில்களும் பள்ளிக்கூடங்களும் நவமாய் இவர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகவும் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாகவும் அநேகருக்கு விவாகஞ்செய்து வைத்ததாகவும் தெரியவருகிறது. மேலும் இவர்களைச் சந்திக்கிற சகல இந்துக்களிடத்திலும் தெய்வம் மனுஷனாகி பாவஜென்மிகளாகிய மனுஷரை ரட்சிக்கும்படி இயேசு இரட்சகர் தன்னைப் பலியாக ஒப்புக்கொடுத்து சிந்திய ரத்தமும், செலவிட்ட ஜீவனும் போதுமானதாயிருக்கிறதென்று போதிப்பார்கள். இவ்வாறு போதிக்கையில் அநேக திருஷ்டாந்தங்களை எடுத்துச் சொல்வது மாத்திரமல்ல இந்துக்களின் தமிழ்ப்பாடல்களையும் எடுத்துக்காட்டி அத்தாட்சிகொடுப்பார்கள் பாவிகளை ரட்சிக்க தேவன் மனுஷனாக வேண்டியது அவசியமாவென்று ஒருவர் கேட்டால் ஆம் என்றே எந்தக் கிறிஸ்தானுசாரியும் சொல்லவேண்டியதாயிருக்கிறது. ஒரு பெரியகுளத்தில் தண்ணீர் இல்லாததால் ஆண்களும் பெண்களுமான அநேகம் கூலியாட்கள் மடை கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் மீனாட்சி என்கிற பெண் தன் இரண்டு வயதுள்ள ஒரு பையனை அங்குகொண்டுவந்து ஒரு பக்கமாய் வைத்துவிட்டு மண் சுமந்துகொண்டிருந்தாள். எவ்வித காரணத்தினாலோ அக்குழந்தை மடைக்குள் நகர்ந்து நகர்ந்து போய்விட்டது. தாய் குழந்தையைத் தேடும்போது குழந்தை

யின் குரல் மடையிலிருந்து வரக்கேட்டாள். உடனே பயந்து அழுது கதறவே கூடியிருந்த ஜனங்களெல்லாரும் ஆச்சரியத்தோடு கூடி வருத்தப்பட்டு குழந்தையை எடுக்க முயன்றார்கள். ஆனால் பிள்ளை உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தது. எவ்வகையினாலும் பிள்ளையை வெளியே கொண்டுவர மார்க்கமில்லை. இவ்வாறு கஷ்டப்படுகிற சமையத்தில் ஒரு வழிப்போக்கன் அவ்வழியாய் வந்தான். அவன் இவ்விஷயத்தை அறிந்து இரண்டு வயதுள்ள இன்னொரு குழந்தையைக் கொண்டுவரச் சொல்லி, அதின் இடுப்பில் பலமான நாடாவைக் கட்டி, கையில் ஒரு பழத்தைக் கொடுத்து மடையின் முகத்துவாரத்தில் அக்குழந்தையை வைத்தான். மடையினுள்ளே அழுதுகொண்டிருந்த அப்பிள்ளையானது இந்தப் பிள்ளையின் கையிலிருக்கிற கனியைக் கண்டு அழுகையை நிறுத்தி இப்பிள்ளையினிடமாக வந்தது. நாடாவால் கட்டியிருந்த பிள்ளையை வெளியே மெள்ள மெள்ள இழுத்தார்கள். கடைசியாய் வெளியே இரண்டு பிள்ளைகளும் வரவே மீனாட்சிக்கும் மற்ற எல்லா ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. சகல மனுஷர்களும் இராக்காலத்தில் வெளிச்சம் வேண்டுமென்று கதறுகிற பிள்ளையைப்போல இருக்கிறார்கள். "ஏதுமறியாதெனை மறைத்தவல்லிருளை நாதா நீக்க ஒரு ஞானவிளக்கில்லையோ" என்று கதறிக்கொண்டிருக்கும்போது தற்பரனாகிய கடவுள் மோக்ஷ மண்டலத்திலிருந்து தேவ அன்பென்னும் கயற்றினால் இயேசு கிறிஸ்தென்னும் இரக்ஷகருடைய இடையில் கட்டி ஆத்மரட்சண்ணியமென்னும் கனியை அவர் கையில் கொடுத்து அவரை உலகத்தில் ஜென்ம பாவமின்றி மற்றெவ்விஷயத்திலும் மனுஷனாகவே அனுப்பி, தமம் நீங்கச்செய்தார். அவரைக் கிட்டிச்சேருகிற யாவரையும் மோட்சலோகத்திற்கு இழுத்துக்கொள்கிறார் "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்" என்றார். இந்த ஆறுதலான வார்த்தைகள் சொன்ன இரக்ஷகருடைய ஜீவனின் துவக்கத்தில் கிழக்கிலிருந்து சாஸ்



திரிகள் இவரை வந்து வணங்கினார்கள். இவர் உலகத்திற்காக மரிக்கபோகும் சமயத்தில் மேல்தேசமாகிய கிரேக் தேசத்திலுள்ள ஞானவான்கள் யூத மார்க்கத்தில் அமைந்து அதிலும் திருப்தியில்லாமல் இவருடைய சீஷர்களில் ஒருவனாகிய பிலிப்புவினிடத்தில் வந்து "ஐயா, இயேசுவைக்காண விரும்புகிறோம்" என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு மறுமொழியாகத்தான் சகலரையும் இழுத்துக்கொள்ளப்போகிற காலம் சீக்கிரமாய் வரப்போகிறதென்று சொன்னார். இவர் உலகத்திற் சபிக்கப்பட்ட சிலுவையிலே உதவியற்றவராயும் மனுஷர்களால் கைவிடப்பட்டவராயும் தம் ஜீவனைத் தத்தமாகக்கொடுத்து பிராயச்சித்தத்தை உண்டாக்கின அந்த நிமிஷத்திலே தம்மிடத்தில் இழுத்துக்கொள்ளக்கூடிய சத்துவமும் வல்லமையும் உண்டானது, இந்தப் புண்ணியமும் வல்லமையும் பரிசுத்த ஆவியின் திவ்விய கிரியையினாலே பலித்து வருகிறது. "நான் எல்லாரையும் இழுத்துக்கொள்வேன்" என்று சொல்லுகிறார். நான் என்று சொன்ன இவர் 1873-ம் வருஷங்களுக்குமுன் உலகத்தாரால் புறக்கணிக்கப்பட்டவரும் தம் சொந்த ஜனமாகிய யூதரால் அற்பமாக நினைக்கப்பட்டவரும் தம்சொந்த சீஷரால் கைவிடப்பட்டவருமாயுமிருந்தார், இவரே நாகரீகமுள்ளவர்களையும், மிலேச்சர்களையும், கல்விமான்களையும், பாலர்களையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் சகல இடையூறுகளையும் உடைத்து, தம்மிடமிழுத்து ஒன்று சேர்க்கிறார். அவருடைய திருச்சபை துவக்கத்தில் மலையிலிருந்து வந்த ஒரு சிறு கல்லைப்போலிருந்தது. அற்பமாயும் லேசாயும் நினைக்கப்பட்ட இது வரவர மகா பருவதத்தைப்போல பூமியை நிரப்பத்தக்கதாகிறது. அவருடைய கூட்டமாகிய இந்தசிறு மந்தையை ஒன்றாகச் சேர்த்து பலப்படுத்துகிற இந்த கிறிஸ்துவே நம்முடைய ஜீவனின் நோக்கமும் நம்பிக்கையுமாயிருக்கவேண்டும்.

இவரால் இப்படி இழுக்கப்பட்ட பக்தர்கள் மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுகிறதுபோல தேவனே என்கள் ஆத்மா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது என்று சொல்லக்

கூடியவர்கள். இவர்கள் ஆத்ம தாகத்தைத் தீர்க்கக்கூடியது எது? நன்மை செய்வதினாலும் ஏழைகளின் உபத்திரவத்தை நீக்குவதினாலும் ஞானானுமான திரவியங்களைக் கையாடுவதினாலும் வெளிப்படையான பாதகங்களாகிய கொலை, திருட்டு, குடி முதலியவைகளை விடுகிறதினாலும் ஆத்ம தாகத்தை தீர்க்கக்கூடுமோ? கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகி நவமான ஜீவனையடைந்து பிதாவோடும் குமாரனோடும் ஐக்கியப்பட்டு பரிசுத்த ஆவியினாலே இருதயம் கழுவப்பட்டிருக்கிறதே மேலான பாக்கியம். இந்த நிலைமையிலிருப்பவர் உயிருள்ள கிறிஸ்துமார்க்கமாகிய ஜீவத்தண்ணீரென்னும் நதியால் தம் ஆத்ம தாகத்தைத் தீர்த்துக்கொண்டிருப்பவரெனச் சொல்லலாம். இதை அடையுமட்டும் எந்த கிறிஸ்தவனும் நான் ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறேனென்று வாஞ்சிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்த மேலான கிறிஸ்துமார்க்கத்தின் இரகசியத்தை உணருமட்டும் எந்த கிறிஸ்தவ சகோதரனும் சிறைச்சாலையிலிருக்கிற ஒருவன் தான் சுயாதீனனாய் நகரத்தின் வீதிகளிலே உலாவித்திரிகிறதாய்க் கனவு காண்கிறதுபோலிருக்கிறான். இந்தப் பரம இரகசியத்தை அறியுமட்டும் மனுஷனுடைய உள்ளான சுபாவங்கள் மிருகத்தின் நிலைமையிலும் சற்று கேடாயிருக்கும்.

சிங்கங்கள், புலிகள், ஓநாய்கள், சல்லபாம்புகள் தன் தன் சொந்த வகுப்போடே சண்டைபோட்டு ஒன்றை ஒன்று கொல்லுகிறதில்லையே. துஷ்ட மிருகங்களும் விஷஜெந்துக்களுங்கூட தன் இனத்தோடே சண்டை சச்சரவில்லாமலிருக்கும்போது மனுஷன் தான் தன் பிறனை சகோதரனாகவும் சிநேகிதனாகவும் நடத்துகிறதற்குப் பதிலாக அவனுக்கு சகல துற்குணத்தையும் காட்டுகிற தன்மை இருப்பதேது. இது மாறாதிருக்குமட்டும் கிறிஸ்து மார்க்கத்தின் வெளிப் பிரகாரங்களில் சுற்றித்திரிகிறதாக நினைக்கவேண்டும். ஏனெனில் துஷ்ட மிருகங்களைப் பார்க்கிலும் கெட்ட குணத்தையுடையவர்களாயிருக்க பரமானுபவமடைந்து அதின் பாக்கியத்தை அனுபவிப்பதாய்ச் சொல்வதெப்படி?



ஐயாவர்களுடைய திவ்விய பணிவிடையின் காலத்தில் இரட்சகருடைய மகத்துவமான இரண்டாம் வருகைக்கு ஒவ்வொரு நிமிஷமும் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். தன் சபையாரை எச்சரித்து புத்தி சொல்லி, நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்கள் அவரோடுகூட மகிமையோடே வெளிப்படத்தக்க சலாக்கியத்தைப் பெறுவீர்களென்று சொல்லுவார்கள். இரட்சகருடைய வருகைக்காகக் காத்திருக்கிற நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய் நம்முடைய கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் வருகைக்குக் காத்திருங்கள் என்பார்கள். மேலும் காத்திருக்கிறதுமட்டுமல்ல, எதிர் நோக்கிக்கொண்டு இருக்கவும்வேண்டுமென்பார்கள். உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, உங்களுக்குப் புகழ்ச்சியும், கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும். மரித்தவர்களின் ஆன்மாக்கள் இனிமேல் எப்படியிருக்குமென்று உலகத்திலுள்ள சாஸ்திரிகளும் ஞானவான்களும் திகைக்கிறார்களே. ஆனால் பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை ஆகிலும் கிறிஸ்து வெளிப்படும்போது அவரிருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போமானால் அவருக்கு ஒப்பாக இருப்போமென்று அறிந்திருக்கிறோம். கிறிஸ்துவைப்போல இருக்கக்கூடிய நிலைமை எவ்வளவு பாக்கியமான நிலைமை. அவரைச் சந்திக்கிற காலம் சீக்கிரம் வருகிறது. இராவுக்குப்பின் வெளிச்சம் எப்படி நிச்சயமாய் உதிக்கிறதோ, அவ்விதமாய் அவருடைய வருகை அருணோதயம்போல நிச்சயமாயிருக்கும், இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக்காணும். அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். விசுவாசிகள் அவர்களோடுகூட மேகங்களில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். தேவன்தாமே அவர்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார். ஆகையால் அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன்

இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நானளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது, என்கிற வேதவாக்கியத்தின் சத்தியத்தை எடுத்து சபையாருக்குக் காட்டுவார்கள். இரட்சகருடைய வருகையைக் குறித்து எந்தப் போதகர் தன் சபையில் பிரசங்கித்து எச்சரித்து வருகிறாரோ அவர் தன்னிலே உயிரடைந்தவரும் சபையில் அனல் உண்டாக்கக்கூடியவருமாயிருப்பார். இரட்சகருடைய வருகையின் பற்பல விஷயங்களைக்குறித்து ஐயரவர்கள் அடிக்கடி தெளிவும் திட்டமுமாய்ப் பிரசங்கித்து வந்திருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய மேலானநோக்கம் தெளிவாய் விளங்குகின்றது. கிறிஸ்துவாகிய பரமமணவாளனுடைய வருகைக்கு இவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்த "எப்போ வருவாரோ எந்தன் கலி தீர எப்போ வருவாரோ" இதோ கேட்கிறேன் என் நேசர் சப்தம், அவர்க்கென்மேலல்லவோ பூண்டதிப்த்தம் நான் தாங்காத பாவச் சுமையாலே, மனந்தள்ளாடித் தயங்குகின்ற காலே; ஓங்கும் குன்றுமலைகள் மேலே, குதித்தோடி வருகிறார், என்னைப்பெற்ற அன்னைபோல. இதோ கேட்குதே என் நேசர் சப்தம் என்பதாய் ஐயரவர்களுடைய திவ்விய பணிவிடையின் காலமெல்லாம் பாடிக்கொண்டிருந்தது போல் விளங்குகின்றது.

"எனது கர்த்தரின் ராசரீக நாள் எப்போ வருகுமோ
எங்கும் என் கலி நீங்கி மகிழ்ச்சி எப்போ பெருகுமோ"

நம்மெல்லாருடைய மனதில் இந்த மகத்துவமான விஷயத்தைப்பற்றிய சிந்தனை எக்காலத்திலும் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருப்பதாக.

# 4-வது அதிகாரம்

## அவர்களுடைய பிரசங்கார்த்தம்.

ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்களுடைய பிரசங்கங்கள் தெளிவாயும் சுருக்கமாயும் இருதயத்தில் படத்தக்கதாயும் யிருப்பதாய்க் காணலாம். வேத வாக்கியங்களில் அநேகத்தைப் பாராமல் சொல்லத்தக்க ஞாபகசக்தியுடையவர்களாயிருந்தார்கள். தான் பிரசங்கம்பண்ணி, வீட்டுக்கு வந்தவுடன் தன் மனைவியைப்பார்த்து பிரசங்கம் நீண்டதா அல்லது வழக்கப்படியிருந்ததாவென்று வினவுவார்கள். சிலவேளைகளில் கொஞ்சநேரம் அதிகமாய்விட்டதென்றால் எனக்குத்தோன்றவில்லையே என்று சொல்வார்கள். இவர்கள் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது எம்மாவு என்னும் கிராமத்திற்குப்போன சீஷர்களைப்போல் நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டெரியவில்லையா என்று சொல்லவேண்டியதாயிருக்கும். இவர்களுடைய வாலிபகாலத்தில் பற்பல புஸ்தகங்களை வாசித்துத் தியானிக்கிறதுண்டு. ஆனால் வர வர வேதாகமத்தையே எல்லாவற்றிற்கும் எல்லாமான புஸ்தகமாக மதித்து ஆராய்ச்சி செய்துவந்தார்கள்.

இவர்கள் பிரசங்கம் ஆயத்தம்பண்ணும்போதெல்லாம் பாதி நேரத்தை ஜெபத்திலும் பாதி நேரத்தை தியானத்திலும் செலவிடுவார்கள். ஆனபடியால் இவர்களின் பிரசங்கங்கள் எல்லாம் கேட்கிறவர்களுக்கு உணர்ச்சியைக்கொடுக்கிற ஜீவனுள்ள வார்த்தைகளாய்க் காணப்பட்டது. இவர்கள் வேதாகமத்தின் பற்பல பாகங்களில் பிரசங்க வாக்கியத்தைத் தெரிந்துகொள்வார்கள். தன் சபையிலே வருத்தங்கள், துன்ப துயரங்கள்

குழப்பங்கள் தாறுமாறுகள் காணப்பட்டால், அதைக் கண்டிக்கும்படிதே வஞுத்தாசையைத்தேடி சமய உசிதமான வாக்கியங்களைத் தெரிந்தெடுத்துப் பிரசங்கிப்பார்கள். இவர்களின் சப்தம் மெதுவும் அமூர்தமும் போன்றதுமாயிருக்கும். இவர்கள் எந்தப் பாவத்தையும் கண்டித்துப் பேசும்படி கடவுள் வல்லமையைக் கொடுத்தது மாத்திரமல்ல, சகல பாவங்களைச் செய்கிற மனுஷர்களை நேசிக்கவும், அவர்கள் பாவங்களை மாத்திரம் வெறுக்கத்தக்க குணத்தையும் இவர்களுக்குக் கொடுத்தார். இத்தன்மையானது கிறிஸ்துமார்க்கத்தின் மேலான பதவியை அடைந்தவர்களுடையதேயன்றி வேறல்ல.

இவ்விஷயத்திலும் இவர்களை நீதிமான் என்னும் பனைமாமென்றே சொல்லலாம். பனைமரமானது தன்னிடத்திலுள்ள அமூர்தத்தைக் காகமும் புறாவும் வந்து சாப்பிட இடங்கொடுக்கிறது. காகம் பட்சிகளிலெல்லாம் சண்டாளப் பட்சி என்று அழைக்கப்படுகிறது, ஆனதால் இவர்கள் பாவிகளைக் கண்டித்துப் பிரசங்கம்பண்ணுவார்களேயல்லாமல் தன்னிடத்தில் எவ்வித குற்றம் செய்தவனுகிலும் வந்தால் அவனை அல்லத்தட்டாமல், செய்யக்கூடிய உபகாரத்தைச் செய்வார்கள். தனக்கு எவ்விதமான வருத்தத்தைச் சபையாராகிலும் மற்ற யாராகிலும் கொடுத்தால் அவர்களுடைய குற்றங்களை மன்னிக்கிறதும் மறந்துவிடுகிறதுமான இயேசுரட்சகரின் திவ்ய இலட்சணத்தையே கடைசிமட்டும் வைத்திருந்தார்கள். இவர்களுடைய எல்லா பிரசங்கங்களிலும் கிறிஸ்து இயேசு பெருமானின் மகத்துவமே மருத்துவமெனக் காட்டுகிறதாயிருக்கும்.

இவர்கள் ஆதியாக மத்தியிலிருந்து வெளிப்படுத்தின விசேஷமட்டும் சமையத்திற்கு ஏற்றதான வாக்கியங்களைத் தெரிந்தெடுத்து பிரசங்கம் செய்திருக்கிறார்கள். அப்பிரசங்கம் மிகவும் அருமையானவைகளாய் எண்ணப்படுகின்றன. இவ்விடத்தில் ஒரு பிரசங்கத்தை மாதிரியாக அச்சடித்திருக்கிறது.

பரிசுத்த மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம், 22-ம் அதிகாரம் 42-ம் வாக்கியத்தில் ஒரு பங்கு.



‘கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்”

கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்ட யாவரும் கிறிஸ்துவைக்குறித்துத் தெளிவும் திட்பமுமான அறிவுடையவர்களாய் இருக்கவேண்டியது அவசியம், ஏனென்றால் இவ்வறிவிலேதான் நம்முடைய சலாக்கியமும் மெய்யான பாக்கியமும் அடங்கியிருக்கிறது. நீங்களும் நானும் அவரைக்குறித்துபோதுமானபடி அறிந்திருக்கிறோமென்றால் இப்படிச் சொல்லுதலே நீங்கள் அவரைக்குறித்து அறியவேண்டிய பிரகாரமாக இன்னமும் அறியவில்லை என்பதற்கு அத்தாட்சி.

வானோர் அவரைப்பார்த்து அதிசயித்திருக்க பூமியிலுள்ள பக்தர்களும் அவரைக்குறித்து தங்கள் மனதில் உணர்வதை சாவிளும் வர்ணிக்கக்கூடாமல் திகைத்து நிற்க, அறிவிலே பாலகரான நீங்களும் நானும் அவரைக் குறித்து அறிந்திருக்கிறோம் என்று சொல்வது எவ்வளவு அசந்தோஷமும் அணிசாரமுமாயிருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள், இப்பொழுது இவ்வுலகத்திலுள்ள பிரசங்கிகளெல்லாரும் இவ்வுலகத்தில் கிறிஸ்துவை விடாமல் பிரசங்கித்துவந்தாலும் அவரைக் குறித்துச் சொல்லவேண்டியதெல்லாம் சொல்லித்தீரமாட்டார்களென்பது குன்றாத சத்தியம். ஆகையால் இவ்வுலகில் நாம் வசிக்கும் சொற்ப காலத்தில் நம்மால் இயன்றளவு நம்முடைய நாதரைக்குறித்து அறியக்கூடியதெல்லாம் அறிந்துகொள்வது எவ்வளவு முக்கியமான அலுவலாயிருக்கவேண்டியது, ஏனென்றால் இம்மையில் அவரை எவ்வளவாக அறிகிறோமோ, அவ்வளவாய் மறுமையில் அவரை அனுபவித்து அவரோடு என்றும் பாக்கியசாலிகளாய் இருப்போம். ஆகையால் இச்சமயத்தில் இங்கு கூடிவந்திருக்கிற உங்களுக்கும் எனக்கும் பிரயோஜனமுண்டாக.

I. அவர் தன்மையையும்.

II. உத்தியோகத்தையும்,

III. அவருக்கும் நமக்கும் உண்டான சம்பந்தத்தையும்

குறித்து சுருக்கமாய் கவனிக்க தேவன் நமக்குக் கிருபை செய்வாராக. கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

I. அவர் தன்மையைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

(1) அவர் மெய்யான தேவனாயிருக்கிறார்: (1) தேவ நாமம். (2) தேவ இலட்சணம். (3) தேவ செய்கை. (4) தேவாராதனை

(2) மெய்யான மனிதனாயும் இருக்கிறார். புத்தியுள்ள ஆத்மா, மெய்யான ஸ்தூல தேகம். சந்தோஷம், பசி, துக்கம், தாகம், இளைப்பு மரணம் முதலியவை.

இவ்விரு தன்மையும் அவரிடத்தில் ஒன்றாய் ஆச்சரியப்படத்தக்கவிதமாயும் இரகசியமாயும் கூடியிருந்தது. அவர் 33 வருஷம் உலகத்தில் சஞ்சரித்து உபத்திரவம், கனவீனம், நிந்தை என்பவைகளை சகித்திருந்தும் இவை எல்லாவற்றிலும் பரம்பரன் நம்மோடேயிருக்கிறார் என்ற அர்த்தம்கொள்ளும் இம்மானுவேலாகயிருந்தார். சூரியன் கார்மேகத்தால் மறைக்கப்படும்போது தன் ஒளிப் பிரகாசமாய் இராததுபோல் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை மனுஷீகத்தன்மை என்னும் திரைச்சீலையினால் மூடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் மரித்த லாசருவின் சமாதி அருகில் நின்று லாசருவே வெளியே வாவென்று உரைத்து, மகத்துவ சப்தமாய்க் கூப்பிட்டபொழுதும், தாபோர் சிகரத்தின்மீது தமது சீஷர் முன் அவர் முகம் சூரியனைப்போலவும் பூமியில் வண்ணான் வெளுக்கக்கூடாத வெண்மையாகவும் மாறின பொழுதும், அவர் தெய்வீகத்தன்மை தாழ்மை என்னும் திரைச்சீலை நீங்க, அங்கே ஜோதிமயமாய் விளங்கினின்றதில்லையோ? மேலும் அவர் பராபரனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாய் மாத்திரமிருந்தாரென ஜனங்களுக்கு உபதேசித்து, கிறிஸ்துவினிடம் தெய்வீகத் தன்மை மனுஷீகத்தன்மை என்னும் இரு சுபாவமும் எவ்விதமாய்க் கூடியிருந்ததோவென்று வஞ்சனையாக கேட்கும், வேதபுரட்டராகிய ஒருத்துவமார்க்கத்தாரை, நீங்கள் சந்திக்கும்போது தேவனுடைய மாறுத்தரத்துவ வாக்கைப் பார்க்கிலும், சொற்ப புத்தியின்மேற்



சார்ந்து மதிகெட்டலைவாரோ அரூபமாகிய நம்முடைய ஆத்மாவும் காணப்படக்கூடிய நம்முடைய சரீரமும் தங்கள் தங்கள் சுபாவத்திற்கு வித்தியாசமாயிருப்பினும் இவ்விரண்டும் இணைபிரியாமல் கூடியிருப்பதெப்படி என்று கேளுங்கள் இப்படியாக நமக்குள்ளிருக்கும் இரகசியத்தை அறியக்கூடாத நாம் நம்முடைய சிருஷ்டிகரை ஆராய்ந்து அறியத்தேடுவது துணிகரமே ஒழிய வேறல்ல

பிரியமானவர்களே, ஸ்தோத்திரிக்கப்பட்ட நம்முடைய இரட்சகர் தமது தன்மையால் மெய்யான தேவனுமாய் மெய்யான மனுஷனுமாயிருக்கிறார். இப்பொழுது கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?

இயேசு நமது மீட்பராய்த் தாழ்மை மேன்மை என்னும் இவ்விரு நிலைமையில் நின்று அநேக தொழில்களை நடப்பித்து வருகிறார். அவையாவன.

(1) மத்தியஸ்தத் தொழிலை நடப்பிக்கிறார் தேவனுக்கும் நமக்கும் பகை உண்டாகிறது. கிறிஸ்து நமக்கும் நியாயமாய் நமதுபேரில் கோபமாயிருக்கும் தேவனுக்கு இடையில் நின்று, பகை என்னும் நடுச்சுவரை தமது குறையாத கீழ்ப்படிதலாலும் மரணத்தாலும் தகர்த்துவிட்டார். நீதிமானாகிய தேவனுடைய பாதாரவிந்தத்தை அடையக்கூடிய குற்றவாளிகளான நாம் இயேசுக்கிறிஸ்து மூலமாகப் போகவேண்டும். இவரை அல்லாமல் ஆடு, கோழி, நெய்வேத்திய முதலானவைகளால் அவரைக் கிட்டிச் சேரக்கூடியமார்க்கமில்லை யோசேப்பு தன் சகோதரரை நோக்கி பென்னியமின் உங்களோடு வராதிருந்தால், நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லை என்று சொன்னதுபோல, நம்முடைய மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் மூலமாயல்லாது கர்த்தருடைய குளிர்ந்த முகத்தைப் பார்க்கமுடியாது. நீங்கள் பென்யமீனுக்குப்பதிலாக சிமியோனை ஈடாகவைத்தாலும் யோசேப்புக்குப் பென்னியமீனே உதவவேண்டும். அதைப்போலவே நீங்கள் எந்தக் காணிக்கையாலும் திர்ப்தியுண்டாக்கமாட்டீர்கள். பின்னை யாராகிலும் பதிலாகக்கொ

ண்டுவாருங்கள் அவர் முகத்தைப்பார்க்கமாட்டீர்கள். மத்தியஸ்தராகிய இயேசுவை நீங்கள் கையோடு கூட்டிக்கொண்டு போகவேண்டும். அவரே மத்தியஸ்தர் பராபரனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. 1 திமோ. 11: 5.

(2) நம்முடைய ரக்ஷகர்:—

இயேசு என்னும் நாமமானது இத்தொழிலைக்காட்டுகிறது. அவர் எதில் நின்று நம்மை மீட்கிறவராயிருக்கிறார் பாவம், அதின் வல்லமை, அதின் அசுத்தம் தண்டனை என்னும் இவை முதலியவைகளினின்று நம்மை மீட்கிறவர் அவரே.

அவரே இஸ்ரவேலருக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் கொடுக்கும்படி அதிபதியாகவும் இரட்சகராகவும் பராபரனுடைய வலது பக்கத்திலுயர்த்தப்பட்டிருக்கிறவர். அவரை யல்லாமல் தேவர்களென்று பேர்விளங்குகிற மற்றவர்களால் ரக்ஷிப்பில்லை. நாங்களுங்களுக்குப் பிரசங்கிக்கிற சிலுவையிலறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவை விட்டு வேறு விதமாய்ப் பாவநிவாரணத்தைத் தேடுகிற இந்துக்களான என் நாட்டாரே இரட்சிப்பைக் கண்டுபிடித்தீர்களா? நீங்கள் பல தேவதைகளை விட்டுவிட்டு இந்த இயேசுவைப் பற்றிக்கொள்ளும் வரையிலும் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்களுமாய் வாக்குத்தத்தத்திற்கு அந்நியருமாய் அலைந்து திரிவீர்கள். நான் சொல்லும் இச்சத்தியத்தைப் பரிசோதித்துப் பாருங்கள். ஏனென்றால் இவரையல்லாமல் மனிதர் இரட்சிக்கப்படுகிறதற்கு வானத்தின் கீழ் பூமியில் எங்கும் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்பது குன்றாத சத்தியம்.

(3) அவரே நம்முடைய தீர்க்கதரிசி.

பராபரனுடைய சித்தத்தை உலகத்தாருக்குப் போதித்து வரப்போகிற காரியங்களை முன்னறிவிப்பதுமே தீர்க்கதரிசியின் தொழிலாம். இவர் தேவனால் அனுப்பப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசிகளிலும் மேலானவருமாய் உன்னிதமானவருமாய்



பிதாவின் சித்தத்தைத் தெளிவாய் அறிந்து போதித்தார். (மேற்கண்ட சில வாக்கியங்களைக் காணும்போது [illegible]ந்துமார்க்க வேதகிதர்களும் தேவாலயத்துக்குள் வந்திருந்தார்கள் என்று தோன்றுகிறது.)

கனமான சத்தியங்களை உபதேசித்தாலும் தாம் போதித்த சத்தியத்தின் நிச்சயங்களை அற்புதங்களால் மெய்ப்பிக்கிறார்.

அவர் போதித்த விஷயங்களை மூன்று காரியங்களில் அடக்கிச் சொல்லலாம். அது என்னவெனில் பராபரனைக் குறித்தும், மனிதரைக் குறித்தும், மறுமையைக் குறித்துமாம். இவரே அறிவீனரான நம்மை தமதாவியைக்கொண்டு பிரகாசிப்பித்து மெய்யறிவாகிய இவர் நமது ஞானமாயிருக்கிறார். இவர் சகலத்தையும் நன்றாய் அறிந்திருந்த வல்லமையுள்ள தீர்க்கதரிசியாயிருக்கிறார். இவரின் மதுரமான போதகத்தைக் குறித்து இவரைப்பகைத்து நின்றவர்களே இயேசு கிறிஸ்துவைப்போல ஒருவனும் ஒருக்காலமும் பேசினதில்லை என்று சாக்ஷியிட்டார்கள். அறிவில் பாலகரானவர்களே இவரிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். இவரை உங்கள் ஆலோசனைக்காரராக ஏற்றுக்கொள்ளுங்கள். இவருக்கு சீஷராகுங்கள். ஏனென்றால் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். இவரைத் தள்ளி நடந்தால் நீங்கள் இருளிலே மதிமயங்கி அலைவீர்கள். இவரைப் புறக்கணித்து அவர் சொற்கேளாமல் போனால் மோசம்போவீர்கள். அப். 3: 22, 23.

இவர் நமது ஆசாரியராயிருக்கிறார். கிறிஸ்து என்னும் மொழிக்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அர்த்தமாம். பூர்வீகத்தில் ஆசாரியர் இராஜாக்கள் எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். இவர் நம்முடைய ஆசாரியராகவும் இராஜாவாகவும் பிதாவினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். பலியிடுதலும் ஜனங்களுக்காக வேண்டுதல் செய்தலும் ஆசாரியர் தொழிலாம். பூர்வீகத்து ஆசாரியர் வருஷத்திலோர் முறை முதல்[illegible]ங்கள் பாவத்திற்காகவும்பின்பு ஜனங்களுடைய பாவத்திற்காகவும் ஆட்டுக்கடாக்களை பலியிட்டு ரத்தத்தை

ஒரு கிண்ணியிலேந்தி மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து தங்களுக்காகவும் ஜனங்களுக்காகவும் வேண்டுதல் செய்வார்கள்.

இயேசு, பாவம், மாசு, குற்றம், குறையற்ற பரிசுத்தமான ஆசாரியரானதால் ஆடுகளையல்ல தம்மைத்தாமே சிலுவை என்னும் பீடத்தின்பேரில் தனியாய்த் தேவகோபத்துக்கு தகன பலியாக ஒப்புவித்துக் காயங்களோடு எருசலேமிலுள்ள தேவாலயத்திலல்ல, மனிதரால் கட்டப்படாமல் தேவனால் உண்டாக்கப்பட்ட நித்திய ஆலயத்தில் மகா பரிசுத்த ஸ்தலமான பராபரனுடைய சந்நிதியில் பிரவேசித்து பாவிகளான உங்களுக்காகவும் பாதகனான எனக்காகவும் வேண்டுதல்செய்கிறார். பிதா நமக்கு இரக்கத்தைப் பாராட்டும்படி கெஞ்சுகிறார். ஆகையால் அவருடைய திரு உதிர ஊற்றில் கழுவி சுத்தமாகுவோமாக. அவரால் ஆசீர்வதிக்கப்பட்டு அவரால் மன்னிப்பையும் அடைந்துகொள்ளுவோமாக. எபி. 5: 10.

(5) நம்முடைய ராஜாவாயிருக்கிறார்.

இவர் நமதுமேல் ஆளுகைசெய்யும் அரசனாய் ஓர் ராஜ்யத்தை ஸ்தாபித்திருக்கிறார். அது கிருபையின் ராஜ்யம் என்றழைக்கப்படுகிறது. அது போசிப்பினாலும் குடிப்பினாலுமல்ல நீதி மெய்யான சந்தோஷம் பரிசுத்த ஆவியால் வருகிற ஆறுதல் ஆகிய இவைகளில் அடங்கியிருக்கிறது. இக்குணங்களடங்கிய இவ்விராஜ்யத்தை அவர் தம்மைப் பற்றிக்கொள்ளும் ஒவ்வொரு பக்தரின் இருதயத்திலும் ஸ்தாபிக்கிறார். அவரவர்கள்மேல் ஆளுகை செய்துவருகிறார். இம்மையில் அவரால் ஸ்தாபித்திருக்கிற திருச்சபையின் இராஜ்யத்தில் கூடினவர்களுக்கு அளவில்லாததும் நித்தியமாய் கிடைக்கக்கூடியதுமான ஓர் ஸ்திதியுள்ள பரம ராஜ்யத்தையும் மறுமையில் ஸ்தாபித்திருக்கிறார். தங்கள் ராஜாவை இங்கே நிழலாட்டமாய் கண்ணாடியினாலே பார்க்கிறதுபோல பார்த்தவர்கள் அங்கே சேருகையில் முகமுகமாய் அவரைப்பார்த்து அவரோடே கிமானித்து என்றும் அரசாளுவார்கள். உங்களுக்கு ஒரு ராஜ்யத்தைக் கொடுக்க வல்லமையுள்ள இரட்சகராகிய அவ



ரை நம்புங்கள் அவருக்கு நடுக்கத்துடன் ஊழியஞ்செய்யுங்கள்.

(6) நம்முடைய சேனாபதி.

சேனைகளை சத்துருக்களுக்கு விரோதமாய் நடத்திப்போகுதல் ஒரு சேனாபதியின் தொழில். கிறிஸ்தவர்களென்றழைக்கப்படுகிற யாவரும் இயேசுவின் சேனைகள். நம்முடைய சத்துருக்கள் யாரென்றால் பசாசு, பூலோகம், மாம்சம், இம்மூன்று சத்துருக்களும் கொடிய வல்லமையும் தந்திரமுமான சத்துருக்கள். இவர்கள் எக்காலத்திலும் நம்மைத் தங்கள் வசமாக்கி அடிமைப்படுத்திக்கொள்ள வகைதேடி தங்கள் திரண்ட சேனையோடு நம்மைச் சுற்றி முற்றிக்கை போட்டிருக்கிறார்கள். நாம் அவர்களோடு எதிர்த்துப் போர்செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அவர் பலத்தையும் உபாயத்தையும் சரியாய் அறியாதவர்களாயிருக்கிறோம். நம்முடைய சேனாபதியாகிய ஏசுவோ அவர்களை நன்றாய் அறிந்திருக்கிறார். அவர்களை ஜெயித்து முறியடித்த நம்முடைய வல்லமையுள்ள சிம்சோனிவரே. கிறிஸ்தவர்களே, நீங்கள் திருச்சபையில் பிரவேசித்த நாளில் இந்தச் சேனாபதிக்கு உண்மையுள்ள சேவகராய் அவர் சிலுவையின் கீழே போராடுவோமென்று வார்த்தைப்பாடுகொடுத்து ஆணையிட்டிருக்கிறீர்கள், இதை எக்காலத்திலும் எண்ணி உங்கள் வாக்குத்தத்தத்திற்கு உத்தமமாய் நின்று போராடுங்கள். போராடினாலல்லாமல் ஜெயமில்லை, ஓடினாலல்லாமல் ஜீவகிரீடத்தைப் பெறமாட்டீர்கள். ஆகையால் திடன்கொள்ளுங்கள், கொடியை விடாதிருங்கள், சண்டைசெய்து ஜெயங்கொள்ளுங்கள். புறமதஸ்தர்களே இவர் சேவகத்தில் எழுதிக்கொள்ளுங்கள். உலகமுண்டானது முதல் இருந்தவர்களும் இப்பொழுதுமிருக்கிறவர்களுமான எல்லா சேனாதிபதிகளிலும் மகா விசேஷமும் வல்லமையுமுள்ள சேனாதிபதியாக அவரைக் கண்டுபிடிப்பீர்களாக. இந்து சிநேகிதர்களே ஆளுகைசெய்து உங்களைக் கீழ்ப்படுத்திவரும் உங்கள் ராஜனாகிய பசாசின் தலையை நசுக்கி அவனை முற்றிலும் கீழ்ப்படுத்தின பராக்கிரமசாலியான சேனு

படி இவரே, இவரை அண்டிக்கொள்ளுங்கள் அப்பொழுது ஜெயங்கொண்டு ராஜ்யத்தைக் கட்டிக்கொள்வீர்கள்.

(7) நம்முடைய மேய்ப்பர்.

ஆடுகளைப் போஷித்துக் காப்பாற்றி சிதறுண்டு போனவைகளைத்தேடி தொழுவத்தில் கொண்டுவந்து சேர்த்து நசல்பிடித்தவைகளைக் குணமாக்குவதே ஒரு மேய்ப்பனின் தொழிலாம். இயேசு இத்தொழிலை மகா சாமர்த்தியமாய் நடப்பித்து வருகிறார். இவரே நல்ல மேய்ப்பன் அவர் நாமத்தைத் தரித்திருக்கிறவர்களே நீங்கள் அவர் தொழுவத்தின் ஆடுகள். அவைகள் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அவைகள் பசியால் வருந்துவதுமில்லை, தாகத்தால் நாவரண்டு போவதுமில்லை, ஏனெனில் அவர் அவைகளைப் பசுமையான புல்லுள்ள ஸ்தலங்களில் மேய்த்து தெளிவான தண்ணீர் தடாகங்களண்டை நடத்திப்போகிறார். மந்தையைவிட்டு வழி தப்பி அலைந்துபோனவைகளைத் தேடிக் கண்டுபிடித்து மந்தையிற் சேர்த்துக்கொள்ளுகிற சாக்கிரதையும் விழிப்புமுள்ள மேய்ப்பன், நோய்கொண்டவைகளையும், பலவீனமுள்ளவைகளையும், இளமையான குட்டிகளையும், பின் தங்கி விட்டுவிடாமல் அவைகளை சொந்தமாக்கி குட்டிகளை புயத்திலே சேர்த்து மடியிலே சுமந்து சகல ஆடுகளை மெதுவாய் நடத்திப்போகும் நல்ல மேய்ப்பனும் இவரே. இவர் தொழுவத்தின் ஆடுகளே இவரைப் பின்செல்லுங்கள். வழி தப்பி அலையாதிருங்கள், இவர் மாமிசத்தைப் புசித்து இவர் ரத்தத்தைப் பானம்பண்ணி புஷ்டியாகுங்கள், இவர் தொழுவத்தின் ஆடுகளல்லாதவர்களே இன்றாவது உங்கள் மேய்ப்பனின் சத்தத்துக்குச் செவிகொடுங்கள். உங்களை நடத்தும் மற்ற மேய்ப்பரோ கூலியாட்கள், உங்கள் அருமை தெரியாதவர்கள். இயேசுவோ! சிதறுண்ட ஆடுகளான உங்களுக்காகவும், தம்முயிரைவிட்ட நல்ல மேய்ப்பன், இவரையண்டி பாக்கியவான்களாகுங்கள்.

(8) கடைசியாக நியாயாதிபதியாயிருக்கிறார். உங்கள் மத்தியஸ்தரும் இரட்சகரும் தீர்க்கதரிசியும் ஆசாரியரும் ராஜாவும்



சேனாபதியும், மேய்ப்பருமான இவரே உங்கள் நியாயாதிபதியாகவுமிருக்கிறார். "வழியில் இருக்கும்போதே அவரோடே நன்மனம் பொருந்திக்கொள்ளுங்கள்" உங்களுக்குக் கிடைத்திருக்கிற இந்தக் கிருபையின் காலத்தைப் போக்கடித்துவிடுவீர்களானால் சீக்கிரத்தில் அவரை நியாயாசனத்தின்மேல் வீற்றிருக்கும் நீதியும் பாரபட்சமில்லாத நியாயாதிபதியாய் அவரை நோக்குவீர்கள். இது கட்டுக் கதையல்ல. உங்களைத் திடுக்கிடப்பண்ணும்படிக்கு கிறிஸ்தவர்களாகிய எங்களால் ஜோடிக்கப்பட்ட விசித்திரக் கதையல்ல. இது சத்தியம். பொய் சொல்லக்கூடாதவரான மகத்துவமுள்ள கடவுளால் நிருணயிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒப்புக்கொள்ளுங்கள். குமாரன் கோபமடையாமலும் நீங்கள் வழியிலே அழியாமலிருக்கும்படி அவரை முத்தஞ்செய்யுங்கள். இன்னும் கொஞ்சக் காலத்தில் அவர் கோபம் பற்றி எரியும் அவரை அண்டிக்கொள்ளுகிறவர்களோ பாக்கியவான்கள். விசுவாசிகளே! அவர் வருகைக்கு ஆவலுடன் காத்திருப்பவர்களே மகிழ்ந்து களிகூருங்கள். உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்ம ஈடேற்றத்தை அடைந்து மகிழ்வீர்கள். அவிசுவாசிகளே நீங்களும் உங்கள் நியாயாதிபதியைச் சந்திக்க ஆயத்தப்படுங்கள். தம்மை இகழ்ந்து அசட்டைபண்ணுகிற உங்களிடத்தில் பழிவாங்குகிறவராக வருகிறார். ஆகையால் உங்கள் பாவாயுதங்களை எறிந்துவிட்டு அவரோடே ஒப்புரவாகுங்கள். அப்பொழுது அவர் மகிமையோடே வரும் ஆனந்தத்தில் அவரால் அங்கீகரிக்கப்படுவீர்கள். இல்லாவிட்டால் அந்நாள் உங்களுக்குப் பயங்கரமாயிருக்கும். இரக்கத்தைக்கண்டு பிடிக்க மாட்டீர்கள். அவர் வாயின் சுவாசத்தால் அழிந்து நிர்மூலமாவீர்கள்.

III அவருக்கும் நமக்கும் உண்டாகிய சம்பந்தத்தைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள். அவர் வானராஜ்யத்தைவிட்டு பூதலத்தில் மனிதவதாரமெடுத்த காலத்தில் அவருக்கும் நமக்கும் சம்பந்தமுண்டாகியிருக்கிறது. அவை என்னவெனில்

(1) அவர் நமது பிதாவாயிருக்கிறார். அவர் பிதா என்

னும் சிரேஷ்ட பெயரால் அழைக்கப்படுகிறார். நாமனைவரும் அவர் பிள்ளைகளாயிருக்கிறோம். ஒரு தகப்பனானவன் எப்படித் தன் பிள்ளையை நேசித்து ஆதரித்து சவரக்ஷணை செய்து வருகிறானோ அப்படியே இவரும் இத்தொழிலை விசேஷித்த விதமாக செய்துவருகிறார். எவ்விஷயத்திலும் நாமவரைப் பார்த்தாலும் இவர் நமது பிதாவாய் நம்மால் கனம் செய்யப்படவும் சிநேகிக்கப்படவும் தக்கவராயிருக்கிறார். பிள்ளைகள் தங்களுக்குத் தேவையானவைகளுக்காக தங்கள் பெற்றாரின்மேல் சார்ந்திருக்கிறபடியே நாமுமவரில் பிழைக்கிறோம். அசைகிறோம் இருக்கிறோம். பிள்ளைகள் தங்கள் தகப்பனின் ஜீவகாலத்துக்குப்பின் அவன் ஆஸ்தியாவத்துக்கும் சுதந்தரவாளிகள். நாம் அவர் பிள்ளைகளாய் சுதந்திரராக்கப்படுவோம். ரோமர் 7: 17. நாம் புத்திரராயிருக்கிறதால் சுதந்தரராகயிருக்கிறோமென்று சொல்லியிருக்கிறது. பாவமன்னிப்படைப்பெற்று வாழ்கிற கிறிஸ்தவர்களே, உங்கள் ரக்ஷணிய பிதாவாகிய இயேசுவை கனம் செய்து சிநேகித்து உங்களுக்குத் தேவையான சகலத்துக்கும் அவரையே நோக்கிப் பார்த்திருங்கள். நீங்கள் பாக்கியவான்கள். ஏனெனில் மகிமையான ராஜாவை உங்கள் பிதாவாகக்கொண்டிருக்கிறீர்கள். இம்மைக்குப் பிறகு மறுமையில் சுதந்திரராக்கப்படுவீர்கள். இந்துக்களே நீங்களும் அவர் பிள்ளைகள்தான். எப்படிப்பட்ட பிள்ளைகள் என்றால், சொல்லுக்கு அடங்காத பிள்ளைகள். அவர் கட்டளையை மீறி நடக்கிற கீழ்ப்படியாத பிள்ளைகள் உங்கள் பிதாவாகிய அவருக்குச் செலுத்தவேண்டிய சிநேகத்தையும் துன்மார்க்கரோடு அழித்த கெட்டகுமாரன்போல் போய் தேவர்களுக்குக்கொடுத்த பிள்ளைகள். அப்படியிருந்தும் இன்னும் உங்களோடு பொறுமையாயிருக்கிறார். நீங்கள் தம்மிடம் திரும்பி வரமாட்டீர்களோவென்று உங்கள் வருகையை எதிர்பார்த்திருக்கிறார் ஆகையால் உங்கள் குற்றத்தை உணருகிற உணர்வோடே அவரண்டைக்கு திரும்பிவாருங்கள். உங்களை ஏற்றுக்கொள்ளுவார். உங்களையும் சுதந்தரத்துக்குள்ளாக்குவார்.



2. நம்முடைய மணவாளனாயிருக்கிறார்.

இயேசு பெருமான் நம்முடைய பரம மணவாளனும் திருச்சபை அவருடைய பரம மணவாட்டியாயிருக்கிறது. அவர் மிகுந்த கிரயத்தால் நம்மை வாங்கியிருக்கிறார். அவர் நமது மணவாளனாய் நம்மை நேசித்து துக்கத்தில் நம்மை யாற்றி துன்பத்தில் நம்மைத் தேற்றி நம்மைக் கை சோரவிடாமல் ஆதரித்து வருகிறவராயிருக்கிறார். இப்படியிருக்கின்றமையால், அவரையே நம்முடைய எஜமானாகத் தெரிந்துகொண்டு அவரை விடாமல் சோரநாயகன் பின்னே போய் அவருக்கு உண்மையல்லாமையைக் காட்டாமல் அவருக்கே நம்மை கற்புள்ள கன்னியா ஸ்திரீகளாக ஒப்படைத்து அவருக்கு ஜீவகாலமெல்லாம் உண்மையுள்ளவர்களாய் அவரை நேசித்து கீழ்ப்படிந்து வருதல் நம்மேல் விழுந்த விசேஷித்த கடமை. இப்படிச் செய்து வருகிறீர்களோ உங்களைச் சோதித்துப்பாருங்கள்.

(3) நம்முடைய சகோதரன் மாற்கு 12: 50.

என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவர்களே என் சகோதரர் இவர் நமது மூத்த சகோதரர் இவர் நம்முடைய மாம்ச தேகத்தை எடுத்து பிறந்தவராதலால் முறையில் நம்முடைய சகோதரர். அவருக்குக் கீழ்ப்படிந்து நேசித்து நடக்க வேண்டியதும் நம்முடைய கடன். சகோதரராதலால் அவரோடு கூட உடன் சுதந்திரவாளிகளாய் இருக்கிறோம் அப்படியே பவுல் உரோமருக்கு எழுதின நிருபத்தில் 7: 17. அவரோடேன் சுதந்திரராயிருக்கிறோம் என்று சொல்லுகிறார்.

நான் உங்களுக்குக் கட்டளையிடுகிறதை நீங்கள் செய்தால் என் சிநேகிதராயிருப்பீர்கள் என்று திருவுளம்பற்றி இருக்கிறார். யோவான் 15: 14. இவர் உத்தம சிநேகிதர் தாழ்வில் நம்மைக் கைவிடாத சிநேகிதர். நம்முடைய நிர்ப்பந்தத்தின் குறைவை யுணர்ந்து நம்மோடு பரிதபிக்கும் சிநேகிதர். மன்னுயிருக்காகத் தன்னுயிர்விட்ட நல்ல சிநேகிதர் நீங்கள் இவரை உங்கள் சிநேகிதர் ஆக்கிக்கொள்ளுங்கள் இவரை சிநேகி

யுங்கள். உங்கள் அந்தரங்கங்களெல்லாவற்றையும், இவருக்கு மனந்திறந்து சொல்லுங்கள் இவரைக்காட்டிக்கொடாதிருங்கள் கடைசியாய் எல்லாவற்றுக்கும் எல்லாமுமாயிருக்கிற இந்தப் பூரண இரட்சகரைப்பற்றித்தான் உங்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிறோம். சத்தியவேதாகமத்தின் தொகுப்பும் நம்முடைய பிரசங்கத்தின் அடையடக்கமும் என்னவென்றால் சிலுவையிலறையப்பட்ட இயேசு யூதருக்கு இரட்சகராகவும், கிரேக்கருக்குப் பயித்தியமாகவும், இந்துக்களுக்கு நகைப்புமாயிருந்தாலும் இதுவே கிறிஸ்தவர்களாகிய யாவருக்கும் மேன்மைபாராட்டும் நாமம் நம்முடைய நம்பிக்கையின் அஸ்திபாரம், திருச்சபை என்னும் முழுக்கட்டிடத்தையும் தாங்கும் மூலைக்கல். இரட்சிப்பின் கன்மலை, ஜீவனின் ஊற்று, இந்த நாமமே பகலிலே நம்முடைய மகிமை இரவிலே நம்முடைய ஜோதி, மரண காலத்திலே நம்முடைய ஆறுதல், நியாயத்தீர்ப்புநாளில் நம்மெல்லோரும் ஒதுங்கும் அடைக்கலப்பட்டணம், நித்தியத்தில் நம்முடைய பாக்கியம், இப்படி மேன்மை தங்கியவராயிருக்கிற பூரண இரட்சகரை அறியாதவர்களான உங்களுக்கும், அவரை ஏற்றுக்கொள்ளாதவர்களான உங்களுக்கும் கற்பித்துப் பிரசங்கிப்பதைவிட எங்களுக்கு விசேஷித்த அலுவலுண்டோ? இல்லவேயில்லை. சிலுவையிலறையப்பட்ட இந்த இயேசுவை அறிகிற அறிவையல்லாமல் எங்களுக்கொன்றுந் தெரியாது. பூமிசாஸ்திரம், கணித சாஸ்திரம், அளவுநூல் முதலிய தத்துவ சாஸ்திரங்களை அறியாதவர்களும் படிப்பிக்கத் தெரியாதவர்களுமான நாம் இந்த நசரேயனாகிய இயேசுவை பிரசங்கிக்கப் பிரிந்திருக்கிறோம். இந்துக்களுக்கு நகைப்பாய்க் காணப்படும் இந்த நாமத்தால் ராஜ்யங்களை ஜெயித்து, உலகத்தின் பிரபாகிய பசாசைக் கீழ்ப்படுத்தி, அவன் கோட்டையின் அலங்கங்களை இடித்து நரக ஒலிமுகவாசல்களைக் குலுங்கிவிழப்பண்ணியிருக்கிறோம். அப்படியே நம்முடைய பலவீனத்தில் நம்மை தைரியவான்களாக்கும் கிறிஸ்துவின் கிருபையால் செய்துவருகிறோம். இப்படி நாம் பிரசங்கிக்கையில் நீங்களவரை ஏற்றுக்கொண்டு அவ



ரை விசுவாசிக்கவேண்டும். மனந்திரும்பாதவர்களே இன்று அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். விசுவாசிகளே கிறிஸ்துவை உங்களுக்காகத் தம்முடைய ஜீவனை விட்டவரை பிரசங்கியுங்கள், அவரை அறியாதவர்களுக்குள்ளே அவரை அறிவியுங்கள், அவரை அறிவிப்பதும் கனப்படுத்துவதும் பிரஸ்தாபம்பண்ணுவதுமே உங்கள் ஜீவ ஆயுட் நாட்களின் ஒன்றான நோக்கமும் இலக்குமாயிருக்கட்டும். தேவன் இந்த வசனத்தின் பொருள்களை இருதயத்தில் பதித்து ஆசீர்வதிப்பாராக.

ஐயரவர்கள் அநேகரை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு நடத்தும் கருவியாயிருந்தார்களென்பது சத்தியம். கனம்: டக்கரய்யரவர்களுடைய சரித்திர புஸ்தகத்தில் 130-ம் பக்கத்தில் "மிஸ்டர் ஈசாக்கு சுதேச உதவிக்குரு தம்முடைய அரும்பிரயாசத்தினால் முன் சொல்லப்பட்ட கிராமத்திலல்லாமல் இன்னொரு கிராமத்தில் 100 ஆத்துமாக்களை அந்தகாரத்திலிருந்து கொண்டுவந்தாரென்றும், கனம்: டக்கர் ஐயரவர்கள் அந்தக் கிராமத்தைச் சந்தித்தபோது உடைந்த விக்கிரகங்கள் மணலிலே கிடக்கிறதையும், பெற்றோர்கள் வணங்கின அந்த விக்கிரகங்களை பிள்ளைகளெடுத்து விளையாடுகிறதையும் ஆனந்தத்தோடே பார்த்தார்கள்" என்றும் சொல்லியிருக்கிறது.

பெருங்குளத்திலுள்ள வாணிய ஜாதியாருக்குள் ஒரு வாலிபன் இவர்கள் மூலமாய்க் கிறிஸ்துவை யறிந்து அவருடைய வல்லமையினால் இழுப்புண்டு ஞானதீக்ஷை பெற்று ஞானராசன் செட்டியார் என்ற பேர் பெற்று தமிழ்ப் பாஷையில் பாண்டித்தியமடைந்து அநேக சிறப்புள்ள செய்யுள்களைச் செய்து பற்பல வித்தியாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்து, சென்னபட்டணத்தில் அநேக காலம் வாசஞ்செய்து, எஸ். பி. ஜி மிஷியோனைச் சேர்ந்த சலவன் தோட்டத்திலிருந்த வேதசாஸ்திரப் பாடசாலையில் தமிழ் முனிஷியாயிருந்து கர்த்தருக்குள்ப்பட்டு மரித்தார்.

ஆனந்தப்பிள்ளை என்னும் மலையாளி, ஐயரவர்களால்

கிறிஸ்துவினிடத்திற்கு வழிநடத்தப்பட்டு தெய்வபணிவிடையை வெகுகாலமாய் செய்துவந்தார். இவருடைய குமாரர்களில் ஒருவர் பாதிரியாராயும் இன்னொருவர் பி. ஏ. பரீட்சை கொடுத்த உபாத்தியாயராயுமிருக்கிறார்.

கன்னாண்டிவிளையில் ஒரு இந்து மார்க்கப் பையனை இவர்கள் குணப்படுத்திப் படிக்க வைவிட்டார்கள். இப்போது அவர் பி. ஏ. பரீட்சை கொடுத்து மிகவும் கண்ணியமும் நற்குணமும் பூஸ்திதியும், சன்மார்க்கமும், மிகுந்த தேவபக்தியும் முள்ள யோனத்தான் உபாத்தியாயரென்ற பெயர் பெற்று தூத்துக்குடியில் நாளதில் வசித்துவருகிறார்.

நூற்றுக்கணக்கான இந்துமார்க்கப் பிள்ளைகளுக்கு இவர்கள் தகப்பனைப்போலிருந்து அவர்களைச் சீர்ப்படுத்தி நல்லவழிக்குக்கொண்டுவந்து கிறிஸ்தவர்களாக்கியுமிருக்கிறார்கள்.

இவர்களால் கிறிஸ்துவை யறிந்த ஆத்மாக்களின் தொகையை இன்னதென்று கடவுள் தம்முடைய தேவ ஞாபகமென்னும் புஸ்தகத்தில் எழுதிவைத்திருக்கிறார்.

கனம்: டக்கரய்யாவர்கள் காலத்தில் இவர்கள் பண்ணைவிளையிலிருந்து, பன்றிகுளம் கழுகுமலை வட்டமெல்லாம் போய்ப் பிரசங்கித்து வந்திருக்கிறார்கள். அதற்குப்பின் அநேக வருஷங்களாய் மணற்காடு மடத்துப்பட்டி வட்டங்களையும் இப்போது பாளையங்கோட்டையைச் சேர்ந்திருக்கிற முறப்பநாடு, வசவப்பபுரம், செய்துங்கநல்லூர் முதலிய கிராமங்களிலும் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாய் வேலை செய்திருக்கிறார்கள். இவர்கள் அந்தியகாலம்வரை 53 கிராமங்களடங்கிய பண்ணைவிளை சேகரத்திற்கு சர்க்கிள் சேர்மனாகவேயிருந்து 3576 சபையாருக்கு இகபர நன்மைகள் உண்டாகப் பிரயத்தனம்பண்ணியும் அவர்களிடத்திலிருந்து வருஷத்துக்கு 1200, ரூபாய் சங்கப்பணமும் ஏறக்குறைய 824, ரூபாய் உற்சவ காணிக்கையும் சேர்த்து கர்த்தருடைய ஊழியத்துக்கென்று வைத்ததுமல்லாமல் இவர்கள் சேகரத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் கிராண்டு வருஷத்துக்கு 657, ரூபாய் கிடைத்ததையும் மிஷியோனுக்குச் சேர்த்திருக்கிறார்கள்.

## 5-ம் அதிகாரம்

### அவர்களுடைய சபையின் விஷயங்கள்.

ஒரு நல்ல சமுசாரியானவன் தன் நிலத்தின் ஒன்றில் உரம்போடுகிறதும், மற்றொன்றில் விதைக்கிறதும், இன்னொன்றில் களை எடுக்கிறதும், இன்னொன்றில் வேலைப் பார்க்கிறதும்போல கனம்: ஆபிரகாம் ஐயரவர்களும் சுவிசேஷ விதையை விதைத்ததுமாத்திரமல்ல, அசதியாயிராமல் அவை வளர்ந்தேறத்தக்கவகையாய் அடிக்கடி சபைகளைச் சந்தித்து அன்புகூர்ந்து வேலி எழுப்பி களைகளைப்பிடுங்கி, விளையச்செய்கிற கர்த்தனை நோக்கி சிந்தையாய் ஜெபித்து வந்தார்கள். "சோம்பேறியின் வயலையும் மதியீனனுடைய திராட்சத்தோட்டத்தையும் கடந்துபோனேன் இதோ! அதெல்லாம் முள்ளுக்காடாய் முட்செடிகள் நிலத்தின் முகத்தை காஞ்சொறிச்செடி மூடினது அதின் கற்சுவர் இடிந்துகிடந்தது அதைக்கண்டு சிந்தனை பண்ணினேன் அதை நோக்கி புத்தியடைந்தேனென்று" சொல்லத்தக்கவிதமாய் கர்த்தருடைய தோட்டமாகிய சபையை இவர்கள் வைத்துக்கொள்ளாமல், வாகைக்குளத்துச் சபையின் வேலியின் ஒருபக்கம் இடிந்து விழப்போகிறதென்று தெரிந்தால் இவர்கள் செப்பனிடவும் செம்மைபண்ணவும் போய்விடுவார்கள். அழகாபுரி சபையார் அசதியடைகிறார்களென்றால் அவர்களைத்தட்டி எழுப்பிவிட அங்கேயும் போவார்கள். கைலாசபுரம் சபையில் கொஞ்சம் கலக்கம் என்றால் அக்கலக்கம் நீங்கிப்போகுமட்டும் கருணையுக் கடவுளின் கடாச்சத்திற்காக அங்கே காத்திருப்பார்கள். வாகைக்குளத்தின் சபையாரில் ஒருவன் வாந்திபேதியாலிறந்துபோனால், அவன் வீட்டார் வானுதி தேவனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளும்படி அங்கே

போய்த் தேற்றிக்கொண்டிருப்பார்கள். எங்கே ஆறுதலில்லையோ, எங்கே துக்கமோ, நஷ்டமோ, வருத்தமோ, சண்டை சச்சரவோ அங்கே இவர்கள் போகாமலிருக்கிறதில்லை. அவர்களைப் பார்த்து கர்த்தர் நம்முடைய மேய்ப்பர் நாம் அவருடைய ஆடுகள், குளிர்ந்த தேசத்தின் ஆடுகளின் ரோமத்தைக் கத்தரிக்கிறது வழக்கம். அது ஆடுகளுக்கு வருத்தமாயிருக்கும். ஆனால் அப்படிக் கத்தரிக்கவேண்டுமென்று அவசியம் இருக்குங்காலத்தில் மேய்ப்பன் முடியை வெட்டாமல் விடமாட்டான். என்றாலும் அந்த ரோமம் மறுபடியும் முளைக்கும். நம்முடைய பரமபிதா நாம் தாங்கவொண்ணாத பாரத்தை நமதுபேரில் சுமத்துகிறதில்லை. ஒரு கதவை யடைத்தால் மற்றொன்றைத் திறப்பது நிச்சயம். தண்மலையின் தண்ணீர் உங்களைப் பின்தொடர்ந்து வரவிட்டால் யோர்தானின் குளிர்ந்த தண்ணீர் உங்களுக்கே இரேஇடிவரும் என்பதாய்ச் சொல்லுவார்கள்.

நாம் ஒரு நாயைக் கோலாலடித்தால் அந்த நாய் கோலைக் கடிக்கிறது என்ன ஆச்சரியம்! கோலென்ன செய்யும்? எய்தவனிருக்க அம்பை நோகலாமா? கர்த்தரல்லவோ தம்முடைய கோலால் நம்மைத் தண்டிக்கிறார். அவருக்கு ஏராமாயிருக்கிறோம் அவரிடம் கிட்டச் சேரும்படி பலமுறையும் கூப்பிடுகிறார். உங்களிருதயத்தை கடினப்படுத்தாதேயுங்கள். அவருடைய ஆடுகள் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கும். மாரிகாலத்திற்காக இரை சம்பாதித்து வைப்பது மேய்ப்பனின் கடமையல்லவா? அவ்வாறே நம்முடைய பரம மேய்ப்பனும் நம்முடைய துன்பகாலங்களில் கவலையற்றவரா யிரார். தேவ பராமரிப்பென்னும் பண்டகசாலை குறைந்து போகவில்லை என்றும் போதிப்பார்கள்.

ஒரு துன்பமானால் சகிக்கலாம் ஒன்றின்மேல் ஒன்றுவந்தால் என்ன செய்யலாமென்பீர்களோ. வருத்தங்கள் அதிகப்பட்டால் அவர் நமக்கு அருளும் பலனும் அதிகரிக்கும். முன்னே சிவந்த சமுத்திரமும், இருபக்கமும் செங்குத்தான மலையும் பின்னே எகிப்தியர்கள் தொடருகிறார்களென்றும்



சோர்ந்துபோகாமலும் பயப்படாமலுமிருங்கள் நீங்கள் "நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்" என்பதாய் ஆறுதல் சொல்லியும் பிரார்த்திப்பார்கள்.

இருபது மைல் சுற்றளவுள்ள கிராமங்களில் இவர்களின் சபையார்களிருந்தார்கள். அங்கே அவர்களை விசாரித்துவரப்போகும்போது தன்னுடன் சிலவேளை ஒருவரைக்கூட்டிக்கொண்டு கால் நடையாய்ப் போவது வழக்கம். தன் சொந்த சௌக்கியத்திற்கென்று ஒரு சாமானையாவது தன் கையில் வைத்துக்கொள்ளுகிறதில்லை. காலில் பாதரட்சையும் கையில் குடையும் ஒரு சிறு கம்புமிருக்கும் இராவென்றும் பகலென்றும் பார்க்கமாட்டார்கள் இவர்கள் தூரமான கிராமங்களிலிருந்து ஒரு சமயத்தில் அதிகாலையில் திரும்பிவரும்போது வழியிலிருக்குங் கிராமத்திலிருக்கிற சபையாரைச் சந்தித்து அவர்களோடு ஜெபித்து விடைபெற்றுப்போகும்போது, ஏழையும் நல்ல விசுவாசியுமான ஒருவன் ஐயா காலை ஆகாரம் என் வீட்டில் புசித்துப்போக வேண்டுமென்று அரிமையாய்க் [illegible] நல்லது என்று அவன் குடிசையில்போய் சந்தோஷமாய் உட்கார்ந்தார்கள் [illegible] ஒரு செம்பில் கொஞ்சங் கம்பம்புல் சோற்றைக் கரைத்து வைத்து ஊறின மிளகாயையும் கொண்டுவந்து கொடுத்து இது தான் என் வீட்டிலுள்ளது [illegible] புசியுங்களென்றான் உடனே கண்ணைமூடி [illegible]யும் கு[illegible] அந்த ஆகாரத்தைக் கொடுத்த கட[illegible] ஸ்தோத்தரித்து [illegible]த்தார்கள். போகும் போது அவனு[illegible] கையில் நான்கு அணா கொடுத்தார்கள். ஆனால், அவன் அதை வாங்கமாட்டேனென்று சொல்லி தன்னை ஆசீர்வதித்து[illegible] போகும்படி கேட்டுக்கொண்டான். அவன் விருப்பத்தின்படியே அவனுடைய வீட்டிலே[illegible]ன் ஜெபம் பண்ணி அவர்[illegible] ஆசீர்வதித்துப்போனார்கள்.

செக்கார[illegible] என்னும் கிராமத்தில் [illegible]வர்களும் இவர்களோடு இன்[illegible] [illegible]கோ[illegible] போயிருந்தபோது அங்குள்ள இ[illegible] [illegible]டில் போஜனம் செய்

யும்படி வேண்டிக்கொண்டார். அப்பொழுது இவர்களுடன் வந்தவரை மறுபுறத்தில் கொண்டுபோய் ஆகாரங்கொடுத்து விட்டார். இது இவர்களுக்குத் தெரியாது. இவர்களைப் போஜனத்திற்கு அழைப்பித்த சமயத்தில் தன் கூடவந்தவரையும் கூப்பிட்டார்கள். போஜனம் செய்தவுடன் தான் பண்ணைவிளைக்கு போகவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அந்த இந்து மதஸ்தரோ சாயங்காலமும் தன் வீட்டில் போஜனஞ்செய்துவிட்டுப் போகவேண்டுமென்று வெகுவாய்க்கேட்டுக்கொண்டார். அதற்கு இவர்கள் கூடவந்த கிறிஸ்தவரை என்னோடு உட்கார்ந்து போஜனம்செய்ய இடம் கொடுத்தால் தான் இங்கே இராததங்குவேனென்று சொன்னார்கள். அதையறிந்த அந்த மனிதன் துக்கப்பட்டு ஐயோ இந்தப் பரமசாதுவை நான் மனவருத்தப்படுத்தினேனே என்று நினைத்து இவ்விருவரையும் இரவில் வைத்து சந்தோசமாய்ப் போஷிப்பித்து தான் இந்து மார்க்கத்தானாயிருந்தாலும், வியாதியாயிருந்த தன் மகளுக்காக ஜெபம் பண்ணிப்போகும்படி கேட்டுக்கொண்டார். ஜாதி பேதத்தையும், [illegible] பாசத்தையும், [illegible] சமாதி, ஐக்கியம், யோகம் என்ற முதியோர் வாக்குப்படி இவர்களுடைய ஜீவாத்மா பரமாத்துமாவோடே ஐக்கியப்பட்டுக்கொண்டிருந்தபடியால் மாய்கையாய்த் தோன்றுகிற ஜாதி பேதமுதலிய இவ்விபரீதங்களை இவர்கள் அற்பமாயும் குப்பையாயும் நினைத்து ஜீவித்தார்கள்.

இவர்கள் சபை விசாரிப்புக்காக கிராமங்கிராமமாய்ப் போகும்போது சபையிலுள்ள வியாதியஸ்தர்களின் தலையின்மேல் கையைவைத்து ஜெபிக்கும்படி பிரியமாய்க்கேட்கிறதுமுண்டு. அப்படி ஜெபித்தபின் சுகமடைந்திருக்கிறார்கள்.

தென்னிந்தியாவில் மகம்மதியருக்குள் வேதாந்தி என்று பேர்பெற்ற குணங்குடி மஸ்தானும்; இந்துக்களுக்குள் தாயுமானவர் பட்டணத்தார் முதலிய ஞானிகளான சிலர், ஜாதி பேதமாகிய இந்தப் பெரிய துக்கசாகரத்தைக் கடந்து [illegible]ணப்பட்டது போல, இந்த மகானும் கடந்த மனுஷனாய்ப் பேரானந்தமென்



னும் குன்றின்மேல் ஏறி நின்றார்கள். இவர்கள் இரட்சணிய மூர்த்தியின் கிருபா கடாக்ஷத்தினால் அந்தகாரத்தின் கிரிகைகளாகிய ஜாதிபேதமுதலிய காரியங்களைத்தள்ளி நடந்துகொண்டதற்கு அநேக திருஷ்டாந்தங்களுண்டு. அவைகளை இங்கே எழுதினால் புஸ்தகம் விரியும்.

இவர்கள் வாசம் செய்த பண்ணைவிளையில் விஷபேதி மும்மரமாயிருக்கும் சமயம் இவர்கள் பகலிலும் இரவிலும் வீடு வீடாய்ப்போய் ஜெபித்து கர்த்தரின்பேரில் நம்பிக்கையாயிருக்கும்படி தைரியஞ்சொல்லி வீட்டுக்குத் திரும்புகிறதற்கு வெகு நேரம் ஆகிவிடும். இதுமாத்திரமல்ல, மற்றக் காலத்தில் இந்த ஊரிலுள்ள மிகவும் ஏழைக் கிறிஸ்தவர்கள் இன்னார் இன்னாரென்று இவர்களுக்குத் தெரிந்து, அவர்கள் வீட்டுக்குத்தான் இராத்திரி போஜனம்பண்ணுமுன் ஒவ்வொரு வீடாய்ப்போய் சமையல் செய்தீர்களா? சாப்பிட்டீர்களா? என்று விசாரிப்பார்கள். அவர்களில் யாராவது பசி பட்டினியாயிருக்கிறதைக் கண்டால் தன் வீட்டுக்குக் கூட்டிவந்து, அமுதுபடியாவது ஆகாரமாவது கொடுத்தனுப்புவார்கள். ஒரு இரவில் அவர்கள் வீட்டில் சமையல் செய்தபின் பல விருந்தினர்கள் வந்தார்கள். [illegible] பண்ணைவிளை, பண்டாரவிளை, [illegible] விசாரித்து 9 மணி மட்டும் திரும்பிவரவில்லை. இவர்களுக்குமாத்திரம் ஆகாரம் எடுத்துவைத்து மற்றதை வீட்டாரும் விருந்தினர்களும் புசித்தார்கள். 10 மணிக்குமேல் இவர்கள் திரும்பிவருகிறபொழுது இவர்கள் வீட்டுக்குச் சமீபத்திலிருக்கிற ஏழை கிறிஸ்தவர்களை வீட்டுக்கு முன்நின்று கூப்பிட்டு ஒவ்வொருவர்களையும் சாப்பிட்டீர்களா என்று விசாரித்ததில் அதில் ஒரு மனுஷன் பட்டினியாகக்கிடக்கிறதாகச் சொன்னான். உடனே அவனைக் கூட்டிக்கொண்டு வீட்டுக்குவந்து அவனுக்கு ஆகாரம் கொடுக்கும்படி தன் வீட்டாரைக் கேட்டார்கள். அதற்கு இவர்களுக்கு மாத்திரம் ஆகாரமிருக்கிறதாயும் வேறு ஆகாரம் இல்லை என்றும்சொல்ல, அந்த ஆகாரத்தையும் இவனுக்குக் கொடுத்து அனுப்பி, தன் மனைவியை நோக்கி பூர்

ஸீக திருச்சபையாருக்கு ஒரு பொதுவான பொக்கிஷசாலை இருந்தது, அதிலிருந்து ஏழைகளும் மற்றவர்களும் எடுத்துப்புசித்தார்கள், கர்த்தருடைய பிள்ளைகளாகிய ஏழைகளும் நம்மோடுகூட புசிக்கவேண்டாமா வென்றும், இவர்கள் அடிக்கடி சொல்லுகிற வழக்கப்படி "தானுண்டது மண்ணுண்டது, பிறனுண்டது பரனுண்டது" என்று அப்பொழுதும் சொன்னார்கள். பின்பு தாங்களோ நீராகாரத்தை மாத்திரம் சாப்பிட்டு ஊக்கத்தோடே வழக்கப்படி ஜெபித்து நித்திரை செய்தார்கள். இவர்களை சந்திக்கிற ஏழைக் கிறிஸ்தவர்களுக்குப் புத்திசொல்லி, அவர்களோடு ஜெபிக்கிறதுமாத்திரமல்ல, அவர்களுக்குத் தன்னாலியன்றமட்டும் பொருள் சகாயம் செய்துவருவார்கள். தாம் செய்கிறதுமாத்திரமல்ல கொடுக்கக்கூடிய மற்றவர்களையும் அருமையாய்ச் சொல்லி கொடுக்கும்படி ஏவிவிடுவார்கள். அதுவுந்தவிர தமக்கு மேலான பெரியவர்களுக்கும் எழுதி ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு அவசியமான சிலவித உபகாரங்களையும் செய்துவருவார்கள்.

இவர்களுடைய பரம எஜமானாகிய கிறிஸ்துவைக் குறித்து அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தாரென்று சொல்லியிருக்கிறதுபோல அவருடைய வழியை உடைத்தாயிருந்த இவர்களும் தன் சபையின் மத்தியில் கூடியவரை [illegible]தும் நன்மை செய்கிறவர்களாய் சுற்றித்திரிந்து சகல மனுஷராலும் "அறிந்து வாசிக்கப்பட்டிருக்கிற ஒரு நிருபமாயுமிருந்தார்கள்."

பகலில் எந்த நேரத்திலும் இரவில் முன்னேரத்திலும் பின்னேரத்திலும் நடுச்சாமத்திலும் சபையாரில் யாராவது வந்து யாதொரு காரணத்தினால் தன் வீட்டுக்கு வரவேணுமென்று கேட்டால் உடனே போவார்கள். இவர்களின் சபைகளில் சிலர் பனையேறுகிற தொழில் செய்கிறபடியால், அவர்களில் நினையாத நேரத்தில் யாதாமொருவர் பனைமரத்திலிருந்து விழுந்து அபாயமடைகிறதுண்டு. இச்சம்பவத்தை இவர்களறிந்தால், பரிதாபமாய் ஆத்திரத்தோடே வுபாயப்பட்டு மனு



ஷனை உடனே சந்தித்து, அவனுக்குவேண்டிய உதவியெல்லாம் செய்வார்கள். இவர்கள் கடைசியாய் 1890-ம் வருஷம் எழுதிவைத்திருக்கிற ஞாபகக்குறிப்பில் இவ்விஷயத்தைப்பற்றினதுதான். வேறே ஒன்றும் எழுதிவைத்திருக்கிறதாய்த் தோன்றவில்லை.

1890-ம் வருஷம் எப்பிரல்மீ 7உ பின்வருமாறு எழுதிவைத்திருக்கிறார்கள். "செவ்வாய் காலையில் பங்களா தேவாலயத்தில் கூடின 85 ஜனங்களுக்கு யோவான் 21: 17-ம் வசனத்தின்பேரில் புத்திசொல்லி ஜெபம்பண்ணினேன். அப்பால் பண்டாரவிளைக்குப்போய் பனையிலிருந்துவிழுந்து வருத்தப்பட்ட இயேசுவடியான் நாடானைப்பார்த்து ஜெபம்பண்ணினேன். சபையின் புறம்பான காரியங்களையும் பார்த்தேன் என்று கண்டிருக்கிறது."

இவர்கள் இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயிராமல் வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே நலம் என்கிற திவ்விய பிரமாணமுடையவர்களாயிருந்து நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாதவர்களாயிருந்தார்கள். இப்படி ஜாக்கிரதையும், தெளிந்த புத்தியும், யோக்கியதையும், அன்னியரை உபசரிக்கிறதும் போதக சாமர்த்தியமும் உள்ளவர்களாய் இருந்ததினால் சபையாரெல்லாரும் இவர்களைத் தங்கள் மத்தியில் வாசஞ்செய்கிற உத்தம இஸ்ரவேலனாக எண்ணி மதித்து நடத்திவந்தார்கள். வருஷபிறப்பு முதலிய பண்டிகை நாட்களில் சபையார்கள் பல சாமான்களோடு அன்பாய் இவர்களைச் சந்திக்க வருவார்கள். அவர்களுக்கு சந்தனம் தாம்பூலம் கொடுத்து நவவருடவாழ்த்துதல் சொல்லி ஜெபித்து ஆசீர்வதித்து அனுப்புவார்கள். அவர்கள் கொண்டுவந்த சாமான்களைத் தன் வீட்டுக்கு வேண்டியதை அளவாய் வைத்துக்கொண்டு, மற்றவைகளெல்லாம் ஏழைக்கிறிஸ்தவர்களுக்கும் சுற்றியிருக்கிற மற்ற உடன் வேலைக்காரர்களுக்கும் கொடுப்பார்கள். சபையார்கள் சந்தோஷமாய்க் கொடுக்கிற சாமானில் தாங்களும் புசித்து கர்த்தருடைய ஏழைகளுக்கும் கொடுத்தால் எவ்

வளவு நலமாயிருக்கும். அப்படியிருக்க சில வேதியரென்னப் பட்டவர்களோ தங்களுக்கு வரும் சாமான்களை தாங்களே புசித்து மிச்சமானவைகளை கடையில் போட்டு, விற்று, காசாக்கி, முடிகிறது என்ன அன்போ? தெரியவில்லை. சபைகளில் இவர்கள் விவாகம் நடப்பித்தால் ஒழுங்குப்படி காணிக்கை வாங்கி சங்கத்துக்குச் சேர்த்துவிடுவார்கள். தன் சொந்தத்திலிருந்து கலியாணப் பெண் மாப்பிள்ளை கையில் தன்னால் கூடியதை பட்சமாய்க் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்புவார்கள் சபையாருக்குள்ளும் மற்றவர்களுக்குள்ளும் ஏற்றத்தாழ்ச்சியான குணமுடையவர்களுண்டு. மற்றச் சபைகளிலிருக்கிறபடியே இந்தப் பண்ணைவிளை பகுதியிலுமிருந்தபடியால், சில சமயங்களில் ஐயரவர்கள் நடுநிலைமையாயிருந்து அவர்களுக்குள் நடப்பித்த நியாய முறைமைகளைப்பற்றி பிந்திய பாகத்தில் பார்க்கலாம்.

ஜெர்மானியா தேசத்தில் மகா பிரடரிக் என்னும் ஒரு அரசன் ஜெயவீரனும் கல்வித்திறமையும் செல்வாக்குமுள்ளவராயுமிருந்தார். இவருக்கு நடுவயதாகும்பொழுது தானடைந்த பற்பல ஜெயத்தினாலும், ராஜாங்க விஷயமாய்த் தன் தேசத்தில் நடப்பித்த அநேக கிருத்தியங்களினாலும், உண்டான வருத்தத்தை நீக்கி சமாதானமாயும், ஆறுதலாயும், தன் மீதியான ஜீவகாலத்தைச் செலவிடவேண்டுமென்று தன் ராஜதானியாகிய பார்லீன் நகரத்துக்குச் சமீபமாய் ஒரு சிங்காரமான தோட்டத்தையுண்டாக்கி, அதில் மட்டப்பாவான ஓர் மாளிகையைக் கட்டி அதற்கு கவலையற்ற ஸ்தானம் அன்று அருத்தம் கொள்ளும் "சானசூசி" என்று பேரிட்டு அதில் வாசஞ்செய்தார். இவர் இந்த இடத்தை வாங்கி கட்டடம் கட்டுகிறதற்கு முன்னே ஒரு ஏழைச் சமுசாரி காற்றினால் சுழற்றப்படும் ஒரு சின்ன யந்திர சாலையைக் கட்டி கோதுமை மாவை அரைத்துக்கொண்டிருந்தான். இந்த சின்ன யந்திரசாலை பார்வைக்கு மிகவும் அவலட்சணமாயிருந்தது. இவ்வரசன் அதை இடித்துவிடவேண்டுமென்ற எண்ணத்தோடு அதை கிரயத்துக்குக் கேட்டார். அக்



குடியானவன் அதை விலைக்குக் கொடுக்கிறதில்லை என்று ஒரே பிடிவாதமாய்ச் சொல்லிவிட்டான். இப்படியிருக்கையில் இந்த மேடான இடத்தில் கட்டப்பட்ட இந்த அரண்மனையின் கோட்டைவாசல் இந்த உயிண்டுமில் என்னப்பட்ட யந்திரசாலைக்கு 10 கெஜத்துக்குள்ளிருந்தது. ஆனபடியால் அரசனுக்கு மிகவும் கோபமூண்டு, அந்த யந்திரசாலையைக் கட்டாயமாய் இடித்துவிட்டு அந்த நிலத்தை தன் கோட்டைக்குட் சேர்த்துக்கொள்ள எத்தனித்தார். அந்த சமுசாரி மேலான அதிபதிக்குப் பிராது பண்ணிக்கொண்டான். அந்த நியாயாதிபதி, குடியானவனுக்கு அனுகூலமாய்த் தீர்ப்புசெய்து ராஜனை அதை எடுத்துக்கொள்ளக்கூடாதென்று தடுத்து, நியாயம் செய்வதில் ஜெர்மானிய தேசத்தாரின் மேன்மை யடைந்திருக்கிறதென்று யாவருக்கும் தெரிவித்தார்.

அவ்விதமாய் பூர்வீகத்தில் பார்வியா தேசத்து அரசன் ஒருவன் தனக்கு விஸ்தாரமான கோட்டை கொத்தளம் கட்டுவதற்கு அநேக இடங்களைச் சேர்த்து விலைக்குவாங்கினான். அதற்குள் விருத்தாப்பியமும் யெளிமையுமான ஒரு விதவை ஒரு சிறு குடிசையை கட்டி வாசம்செய்தாள். அதை அரசனுக்கு விலைக்குக் கொடுக்கமாட்டேனென்றும் அதில் தன் ஜீவகாலமெல்லாம் வாசஞ்செய்யவேண்டுமென்று சொன்னாள். அரசன் அவள் விருப்பப்படியே செய்து சுற்றிவரக் கோட்டை மதிலை எழுப்பி அரண்மனைகட்டி வசித்தான். அந்த கோட்டைக்குள்ளிருந்த அந்தச் சிறு குடிசையில் ஏழையான கிழவியும் குடியிருந்தாள். இதல்லவோ நீதி. இந்தியாவில் இவ்விதமான நீதி நம்மவருக்குள் காணப்படுமேயானால், எவ்வாறு சந்தோஷமாயிருக்கலாம். இத்தேசத்தை ஆளுகிற இங்கிலீஷ்காரர் பெரும்பான்மையோர் இவ்வாறு நீதி செலுத்தி வருகிறார்களென்று சொல்லலாம். இவர்கள் நீதியில் வழுவும்போது காரியத்தை இட்டமாய் அறியாததினாலும், நம்முடைய சகோதரர் சிலர் பொய்யை மெய்போல் காட்டுகிறதினாலும் சில சமயங்களில் நீதி தப்பிப்போகிறது. ஆனால் கனம்; ஐயா

வர்களோ தன் ஜீவகாலத்தில் எத்தனையோ வழக்குகளைப் பேசி நிதானிப்பார்கள். ஒருவராகிலும் அநியாயம் செய்தார்களென்று சொல்வதற்கிடமில்லை. இவர்களின் சபைக்குள் அடிக்கடி வழக்குகள் நேரிடும்போது, அவ்வழக்குகளை இராஜாங்கத்தாரிடத்திற்குப் போகவிடாமல் இவர்களே சமாதானப்படுத்திவிடப்பார்ப்பார்கள். பகலில் இவர்கள் வீட்டின் பிராந்தாவில் வழக்குப்பேசி ஒழுங்குசெய்யும்படி இவர்கள் வீட்டிலிருக்கும்பொழுதெல்லாம் ஜனங்கள் வந்து கூடுவார்கள். இராக்காலங்களில் பெரிய ஆலயத்துக்கு முன்பாக வழக்குப்பேசுவதுமுண்டு. அல்லாமலும் சில சில [illegible]கிற சண்டைகளை வழக்குப்பேசி ஒழுங்குசெய்யப் போய்வருவார்கள்.

கிறிஸ்தவர்களுக்குள்ளே சச்சரவை ஒழுங்குசெய்வதுமாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் நேரிடுகிற வருத்தத்தையும் நிவர்த்திசெய்வார்கள். இவர்கள் நியாயமாயும் கிஞ்சித்தேனும் பாரபக்ஷமில்லாமலும் ஒழுங்குசெய்கிறார்களென்று பக்கத்து கிராமங்களிலுள்ள இந்துக்களுக்குத் தெரிந்துகொண்டதினால் பெருங்குளம், செவ்விலை, பேரூர், ஏரல், முடிவைத்தானேந்தல், முதலிய கிராமங்களிலிருந்து வந்து தங்கள் வழக்கைத் தீர்த்துவிடக் கோரிக்கொள்வார்கள். மேலும் ஸ்ரீவைகுண்டம் தாலூகாவுக்கு கோர்ட்டாராயிருந்த கனம் ராமச்சந்திரய்யரவர்கள், தாசில் வேலைபார்த்த கனம் நாராயணசாமி முதலியாரவர்கள் இன்னும் அநேக அதிகாரிகள் தங்களிடத்தில் பிராது கொண்டுவருகிறவர்களை கனம் ஐயரவர்களிடத்தில் அனுப்பி பஞ்சாயித்து மூலமாய் ஒழுங்கு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுவார்கள். அப்படி இவர்கள் ஒழுங்கு செய்வதை அவர்கள் உறுதிப்படுத்துவார்கள். அதிகாரிகள் முன் இவர்கள் யாதாமொரு விஷயமாய் சாக்ஷிக்குப்போயிருந்தால், இவர்கள் சாக்ஷியை முக்கியமாய் எடுத்துக்கொண்டு காரியத்தை உறுதிசெய்வதுமுண்டு.

கொம்புக்காரன் பொட்டல் என்கிற கிராமத்தில் சில இந்



துக்கள் புதிதாய் கிறிஸ்தவர்களானார்கள். தங்களுடைய நிலத்தில் ஒரு கோயிலைக்கட்டி ஐயரவர்களால் முதல் தடவை ஆராதனை நடத்திய சமயத்தில், மற்ற இந்துக்கள் எரிச்சலாய்க் கட்டடத்தின்மேல் ஏறி, முகட்டைப் பிரித்தெறிந்தார்கள். ஐயரவர்களும், சபையாரும் ஆராதனை முடிந்து வெளியே வந்தவுடனே, இவர்கள் கூடவந்திருந்த சாமுவேல் உபதேசியார் (பின்பு பட்டம் பெற்ற கனம். சாமுவேல் ஐயரவர்கள்) வைராக்கியம் நிறைந்திருந்த பேதுரு அப்போஸ்தலன் தன் கத்தியை உருவி மல்குவின் காதை வெட்டினதுபோல, மத வைராக்கியம் கொண்டவராய் தன் கையிலிருந்த ஊன்றுகோலால் இந்து மார்க்கத்தாரில் ஒருவன் தலையில் அடித்தார், இதைக்கண்டு கனம் ஐயரவர்கள் உபதேசியாரைத்தடுத்து, கலகத்தை நிறுத்தும்படி முயன்றபோதிலும், கலகம் அதிகரித்தது, ஐயரவர்களின் கையிலிருந்த ஜெபபுஸ்தகத்தையும் பிடுங்கி கிழித்துப்போட்டார்கள்.

என்றாலும் கடைசியாய் கலகத்தை அமர்த்தி கிறிஸ்தவர்களை அமைதலாய் இருக்கச்சொல்லி ஐயரவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். இதுமத்தியில் போலீஸ் புலிகள், இது காரியத்தைக்கேட்டு நடந்த சங்கதியை விசாரித்துத் திட்டமாய்த் தெரியாமல், இந்துக்கள் கோவிலில் கிறிஸ்தவர்கள் பிரவேசித்து, அவர்களை அடித்துக் காயம்பண்ணினதாக அதிகாரிகளுக்குத் தெரிவித்து உபதேசியாரையும் இன்னும் சில கிறிஸ்தவர்களையும் குற்றவாளிகளாக்கி சிறைச்சாலையில் அடைத்துப்போட்டார்கள். தூத்துக்குடி கலெக்டர் துரையவர்கள் இதை விசாரிக்கும்படி கனம் ஐயரவர்களையும், இதில் சம்பந்தப்பட்ட மற்ற எல்லாரையும் தமக்கு முன்பாக ஆஜராகவேண்டுமென்று ஒரு நாளைக் குறித்து தெரிவித்தார்கள். கனம் ஐயரவர்களும் மற்ற கிறிஸ்தவர்களும் ஒரு ஜாகையில் தங்கினார்கள். கனம் ஐயரவர்களை வக்கீல் முதலிய யாவரும் தங்கள் உபதேசியார் இந்துக்களில் ஒருவரை முதலில் அடித்ததாகச் சொல்லக்கூடாதென்றுகேட்டுக்கொண்டார்கள், அப்படிச் சொல்லுகிற விஷயத்தில், கிறிஸ்தவர்கள் தண்டனை அடையவும், கொம்புக்காரான்

பொட்டல் சபையார் மறுபடியும் இந்துமார்க்கத்துக்குப் போகவும் நேரிடும். அன்றியும் இப்பிராந்தியமெங்கும் இச்சங்கதி பரவிவிடும், நவமாய்க் கிறிஸ்துமார்க்கத்திற்கு வரக்கூடிய இந்துக்களும் நின்றுவிடுவார்களென்று மிஷியோனைச் சேர்ந்த சில ஆசாமிகளும் சொன்னார்கள். இதுமாத்திரமா கிறிஸ்தவர்களாகிய நாங்கள் சிறைச்சாலைக்குப்போக நேரிடும்பொழுது ஐயரவர்கள் ஏவுதலால் நாங்கள் கலகத்தைச் செய்தோமென்று அவர்களையும் இழுத்துக்கொள்வோமென்று பயமுறுத்தினார்கள். கனம்: ஐயரவர்கள் இவைகள் யாவையும் குறித்து ஆலோசித்து நான் சொல்லவேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியுமென்று மறுமொழிகொடுத்தார்கள். இவர்கள் பொய்சொல்லமாட்டார்கள் என்று சந்தேகப்பட்டு, சில கிறிஸ்தவர்கள் இவர்களுக்கு அதிகாரியாகிய சங். சார்ஜென்ற அத்தியக்ஷரவர்களிடம் ஓடி கனம்: ஆபிரகாம் ஐயரவர்கள் தங்களைக் காட்டிக்கொடுக்கப்போகிறதாயும், புதுச் சபையை உலைத்துவிடுகிறதாயும் முறையிட்டார்கள். ஆனால் அத்தியக்ஷரவர்களோ, மெய்யை மறைக்கச்செய்வது எப்படி என்றார்கள். கடைசியாய் நியாயாதிபதிக்குமுன் நிற்கவேண்டிய முன்னிரவில் கனம் ஐயரவர்கள் போஜனமானபின் கிறிஸ்தவர்களை கூட்டிவைத்து ஜெபித்து சிமிர்னா பட்டணத்து அத்தியக்ஷர் சொன்னதுபோலவே "எப்படி நான் மறுதலிப்பேன் என் ஆண்டவனை என்ன குறை சொல்லித் தள்ளுவேன்," இவ்வளவு காலமும் சத்தியத்தையே பேசின நான், சர்வலோக நியாயாதிபதியாகிய கடவுளுக்கு முன்பாக, ரட்சிப்பை தன் நோக்கமாகவும், கடவுளை தன் ஆக்கியோனாகவும், பொய்கலவாத மெய்யைத் தன் பொருளாகவும் வைத்திருக்கிற இந்த வேதாகமத்தை என் கையில் எடுத்துக்கொண்டு எப்படி பொய்சொல்லுவேன் என்று கண்ணீர்விட்டு ஜெபித்தார்கள். மறு நாள் ஐயரவர்கள் பகல் 11 மணிக்கு நியாயாதிபதி முன்னின்று நடந்த யாவற்றையும் ஒழுங்காயும் திட்டமாயும் சொன்னார்கள். கையை நீட்டி சுட்டிக்காட்டி அதோ, நிற்கிற சாமுவேல் உபதேசியார்தான் தன் கையிலிருந்த



தடியால் இதோ, நிற்கிற இந்துவை முதலில் அடித்தாரென்று சொல்லியபின், நியாயாதிபதியாகிய துரை மற்றச் சாட்சிகளை விசாரிப்பதற்கு அவசியமில்லை என்று நிறுத்திவிட்டார். இதைக் கண்ட மற்ற யாவரும் ஐயரவர்கள் குற்றத்தை ஒத்துக்கொண்டபடியால் இனிமேல் சாக்ஷி என்னத்திற்கு கிறிஸ்தவர்கள் தண்டனையடைவார்கள் என்று பேசிக்கொண்டார்கள். ஐயரவர்கள் தன் ஜாகைக்கு வந்தவுடன் இவர்களை எப்போதும் அவர்கள் இவர்களென்று மரியாதையாய்ப் பேசின ஒரு மிஷியன் ஆசாமி "நீர் காரியத்தைக் கெடுத்துப்போட்டீரே இந்தக் கிறிஸ்தவர்கள் ரத்தப்பழி உம்முடைய தலைமேல் சுமரும்" என்றார். என்றாலும் கனம் ஐயரவர்கள் இவர்களின் கோபத்தை தன்னுடைய பரமசாத்மீகத்தினால் அடக்கினார்கள். அன்றிரவு தன்னோடுகூட வந்திருக்கிற கிறிஸ்தவர்களைக் கூட்டி நீதிபரராகிய கர்த்தர் நியாயம் செய்யாமலிருப்பாரா? திடன்கொள்ளுங்கள், புசியுங்கள். நித்திரை செய்யுங்கள் என்று சொல்லி சமாதானமாய் புசித்து இரவில் 12 மணிமட்டும் அடிக்கடி ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். அதன்பின் நித்திரை செய்தார்கள். 3 மணிக்கு ஒரு கனவு கண்டு திடீரென்று விழித்து, எல்லாரையும் எழுப்பி கனம்: துரையவர்கள் கிறிஸ்தவர்களை விடுதலை செய்து, இந்துக்களைக் கைதிபண்ணும்படியாக கர்த்தர் தரிசனையளித்திருக்கிறார் என்று சொல்லி திரும்பவும் ஜெபித்து எல்லாரும் சமாதானமாய் நித்திரை செய்யுங்கள் என்றார்கள். அவ்விதமாகவே மறு நாள் துரையவர்கள் கச்சேரிக்கு வந்தவுடன் கிறிஸ்தவர்களை விடுதலையாக்கி, இந்துக்களைக் காவலில் வைக்கச் சொன்னார்கள். ஐயரவர்களுக்கோ இந்துக்கள் பேரில் பிராதுசெய்ய மனமில்லை என்றும் அவர்களை மன்னிக்கவேண்டுமென்றும் துரையவர்களை வெகுவாய்க் கேட்டுக்கொண்டார்கள்.

இவ்விஷயத்தைக் குறித்து 1874-ம் ௵ ஜனுவரி ௴ 4உ சங். சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்கள் கனம்: ஐயரவர்களுக்கு எழுதின கடிதத்தில் பின்வருமாறு காணலாம். "தொம்புக்கா

ரன்பொட்டல் சபையாருடைய கொல்லையில் கோவில் கட்டுவதைப்பற்றி முந்தின விரோதக்காரர்கள் இப்பொழுது சம்மதித்திருக்கிறது சந்தோஷமான காரியம்" என்பதே.

பெருங்குளம், பண்ணைவிளை, பண்டாரவிளை, கொம்புக்காரன்பொட்டல், மன்னராயன்தட்டு, பண்ணைவிளை பங்களாக்குடியிருப்போர் முதலியவர்களுக்குச் சமீபமாயிருக்கிற பெரியகுளம் பெருகியிருக்கும்பொது அதன் வடக்குப்பக்கத்து வழியாயிறங்கித் தண்ணீர் எடுத்துக்கொண்டுபோவது சகசம். இந்தத் துறைக்குச் சமீபத்தில் பெருங்குளம் கிராமத்தார் பிரேதங்களைக் கொண்டுவந்து தகனம்செய்து சுட்ட அஸ்திகளைப் பொறுக்கித் தண்ணீரில் போடுவார்கள். இப்படிச் செய்கிறதைத் தடுக்கவேணுமென்று கிறிஸ்தவர்கள் மேலான அதிகாரிக்கு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அவர்கள் விருப்பத்தின்படி மனுஷருக்கு ஸ்நானபானத்துக்கு உபயோகமாயிருக்கிற ஜலத்தைக் கெடுக்கிறது சரியல்லவென்று உத்தரவுசெய்து அந்த இடத்துக்கு இனிமேல் பிரேதத்தைக் கொண்டுபோகிறவர்கள் தண்டனைக்குள்ளாவார்களென்று நிபந்தனை செய்தார்கள். என்றாலு பெருங்குளத்துக் கிராமத்தார் ஒரு பிரேதத்தை எடுத்துக்கொண்டு கலகம் செய்ய வேண்டியதற்கு ஆயத்தமாய் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு, பண்ணைவிளை பங்களாவுக்கு மேல்புறமாய் வந்தார்கள். அவர்களைத் தடுக்கும்படி சபையாரில் சிலரை விட்டுக்கொண்டு கனம்: ஐயரவர்களும் கனம்: ஞானமுத்து விசாரணை உபாத்தியாரவர்களும் பாதையில் ஒரு பக்கமாயிருந்த பத்திரகாளியம்மன்கோவில் கம்பவுண்டில் நின்றுகொண்டு ஒரு மனுஷனை விட்டு பிரேதத்தை இங்கே கொண்டுவருவது சரியல்லவென்று சொல்லிச் சொன்னார்கள். என்றாலும் அவர்களை மீறி நடந்து வந்தார்கள். வடக்கேயிருந்து கனம்: ஐயரவர்களைப் பார்க்க வந்த வைத்திலிங்கத் தேவர் என்ற ஒருவர் கிறிஸ்தவர்களுக்கு உதவிசெய்யத் தீர்மானித்து அந்தப் பிரேதத்தைக் கொண்டுவந்த பாடையைப் போய் தொட்டு, கீழத்



துங்களென்று சொன்னார். பாடையைச் சுமந்துகொண்டிருக்கிறவர்கள் வடக்கே இழுத்தார்கள், தேவர் தெற்கே தள்ளினார், பாடையிலிருந்த பிரேதம் கீழே விழுந்தது. கூடவந்த ஜனங்களெல்லாரும் தடிக்கம்பு சகிதமாய் வந்திருந்தபடியால், துவேஷங்கொண்டு கிறிஸ்தவர்களை மடங்கச் சாற்ற ஆரம்பித்தார்கள். முதலில் வைத்திலிங்கத் தேவரை மண்டை உடைய அடித்தார்கள். வந்திருந்த கிறிஸ்தவர்கள் மிகவும் சொற்பப்பேரானபடியால் கனம்: ஐயரவர்களையும் விசாரணை உபாத்தியாரவர்களையும் இந்தப் பெருங் கூட்டத்துக்குள் விட்டுவிட்டு போய் விட்டார்கள். விசாரணை உபாத்தியாரவர்களை அடிதண்டமாய் சத்ருக்களும் பெரிய மனுஷனென்று எதிர்பாராமல் அடிக்கத் தலைப்பட்டார்கள். அவர்களுடைய மெல்லிய தேகம் அடியைப் பொறுக்கக்கூடாமல் போயிற்று. அவர்களை ஒரு பக்கமாய் இழுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். இச்சமயத்தில் மத்தேயு பிரசங்கியாரும் அடிபட்டார். இப்படி இருக்கும் போது கனம்: ஐயரவர்கள் அவர்களை அடியாதேயுங்கள், அடியாதேயுங்கள், என்னை அடியுங்களென்று சொல்லி கூடே போய் பாய்ந்தார்கள். இவர்களை அடிக்கச் சிலர் ஓடிவந்தார்கள். இச்சமயத்தில் பெருங்குளத்திலிருந்த சிலர் ஐயரவர்களை அடித்தால் நாங்கள் உங்களை அடிப்போமென்று தடுத்துவிட்டார்கள். பின்பு மண்டையில் அடிபட்ட காயத்தினால் மயங்கி மரத்தடியில் உட்கார்ந்திருந்த வைத்திலிங்கத்தேவரிடம் விருத்தாப்பியமான ஒரு கிறிஸ்தவ ஸ்திரீ தடியைக்கொண்டு வந்து கையில் கொடுத்து, ஐயரவர்களையும் விசாரணை உபாத்தியாரவர்களையும், கொல்லுகிறார்கள் அவர்களை விடுவித்து வாருங்கள் என்று சொன்னாள். வைத்திலிங்கத்தேவர் தேக பலமும், திடசித்தமுமுள்ளவர், இடியென்று பட்ட காயத்தினாலும் கையில் ஆயுதமில்லாததினாலும் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். இவர் கையில் தடி அகப்பட்டவுடனே புலிபோல் அந்தப் பெருங்கூட்டத்தில் பாய்ந்து அந்தக் கூட்டம் கெளித்து ஓடும்படி அடித்து விசாரணை உபாத்தியாரவர்களையும் மீட்டு கொண்டுவந்து

சேர்த்தார். இவ்விஷயத்தைக் குறித்து இருகக்ஷிக்காரரும் பிரியாது பண்ணினார்கள். அதிகாரி கனம்: ஐயரவர்கள் சொன்ன சாக்ஷியை நம்பி இந்துக்களுடைய பிரியாதைத்தள்ளி அவர்கள்பேரில் குற்றப்பத்திரிகை வாசித்தார். கனம்: ஐயரவர்கள் தாசில்தாரவர்களிடம்போய் இந்துக்களுக்கு மன்னிக்கவேண்டும் அவர்களைத் தண்டிக்கக்கூடாதென்று வேண்டிக்கொண்டார்கள். தன்னைக்கொலை செய்யவந்த யூதர்களுக்காகப் பிதாவே இவர்களுக்கு மன்னியும் இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள் என்று சொன்ன இயேசு ரட்சகருடைய முன் மாதிரியை இவர்கள் பின்பற்றினார்கள். இந்த சம்பவத்தைக்குறித்து கனம்: ஐயரவர்களுக்கு கல்: சாக்ஜென்று அத்தியக்ஷரவர்கள் 1877-ம் வருஷம் மே மீ 26௳ எழுதின கடிதத்தில் அடங்கியிருக்கிறது. "நீர் அனுப்பிய காகிதம் இப்போது என் வசம் வந்திருக்கிறது. ஸ்ரீவைகுண்டம் தாசில்தாரவர்கள் உங்களை விசாரணை செய்தது, எனக்கு மிகவும் சந்தோஷந்தான், இனிமேல் இந்த இடத்துக்கு வந்து சர்க்கார் உத்தரவை மீறுமலிருந்தால்போதும், அதற்கு மேற்பட அவர்களைத் தண்டியாமல் விடுகிறது உங்கள் கோரிக்கை. அவர்களைத் தண்டிக்கிறதைப்பார்க்கிலும் இதுவே உங்களுக்குப் பெரிய ஜெயமாயிருக்கும்."

தன்னோடுகூட பஞ்சாயத்துக்காரர்களாயிருந்து வழக்குத்தீர்க்க தன் சபையிலிருந்து தெளிந்த புத்தியும், தேவபக்தியுமுள்ள சுவிசேஷமுத்து நாடார், வேதமாணிக்க நாடார், சிதம்பர நாடார், பாக்கியநாத நாடார், சவடியான் டிரசர், ஞானக்கண் உபாத்தியார் முதலிய பேர்களைத் தெரிந்தெடுத்து வைத்திருந்தார்கள். வெகுகாலமாய் கனம். ஞானமுத்து விசாரணை உபாத்தியாயரவர்கள் இவர்களுக்கு வலது கைபோலிருந்து சகல விஷயத்திலும் உதவி செய்தார்கள்.

ஐயரவர்கள் சில சமயங்களில் தன் பகல் போசனத்தைப் பெரிதென்று பாராமல் வழக்குப்பேசிக்கொண்டிருப்பார்கள். சில வேளைகளில் இரவில் 12 மணிமட்டும் இராச்சாப்பாடு



இல்லாமல் வழக்குப்பேசிக்கொண்டிருப்பார்கள். இப்படி வழக்குப்பேசுகையில் பெரும்பாலும் இருகக்ஷிக்காரரையும் சமாதானப்படுத்தும்படியே பார்ப்பார்கள். ஒரு கக்ஷிக்காரனை இன்னொரு கக்ஷிக்காரன் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று பஞ்சாயத்தார் தீர்மானிக்க, அந்த மனுஷன் மன்னிப்புக் கேட்கமாட்டேனென்று முரட்டுத்தனம் பண்ணினால் அவனுக்காக ஐயரவர்கள் மன்னிப்புக்கேட்கிறதுமுண்டு.

இவர்கள் வீட்டுக்கு முன் அடிக்கடி வழக்குப்பேசவேணுமென்று கூடிவருகிறதை டக்கர் ஐயர் அம்மாளவர்கள் கண்டு "ஞான உயிர்ப்பிள்ளை வழக்குப் பேசிப்பேசி சீக்கிரம் இறந்து போவார். அதுபோல சகாக்கு ஆபிரகாம் ஐயனையும் அடிக்கடி வந்து ஜனங்கள் தொந்தரவு செய்கிறார்கள்" என்று சொல்லி கூட்டம் வரக்கூடாதென்று தன் வேலைக்காரனை ஏவி துரத்துவார்கள், என்றபோதிலும் இவர்கள் ஜனங்களின் பொது நன்மையை நாடித்தன் ஜீவகாலமெல்லாம் கழித்து வந்தார்கள்.

மிஷியோனைச் சேர்ந்த சங்கக்கூட்டத்திற்காக ரூ 25 ஒரு மனுஷனிடம் உடை வெட்டும்படி கொடுத்திருந்தது. ரூபாயை வாங்கின பின் அவனுடைய மாமியார் அவனுக்குத் தெரியாமல் ரூ 2—0—0 வாங்கிக்கொண்டு மற்றொருவருக்கு ஓடையை விட்டுவிட்டாள். இது விஷயத்தைப்பற்றி இவர்களிடத்தில் வழக்குக்கொண்டு வந்தார்கள். இவர்கள் காரியத்தை நன்றாய் அறிந்துகொண்டு அந்த ரூ 25-யும் வாங்கி வேறே ஓடை மரம் வாங்கிக்கொள்வது நலமென்று சொன்னார்கள். இப்படி ஒழுங்கு செய்ததினாலே எவ்வளவோ தொந்தரவும் வருத்தமும் சபையில் உண்டாகாதபடி காத்துக்கொண்டார்கள். தேவனுடைய மனுஷனாகிய இவர்கள் மெய்யாகவே பாம்பைப் போல் விவேகமும், புறாவைப்போல் கபடமற்றவர்களாயுமிருந்தார்கள்.

இவர்கள் 1882-ம் வருஷம் தன் சபையைக்குறித்து எழுதிய ரிப்போட்டில் சிலதை இங்கு சேர்த்து வரைகிறோம். "நானது வருஷத்து துவக்கத்தில் அத்தியக்ஷரவர்கள் உத்திரவுப்படி தன்

சை, புன்சை, பனை, இவற்றின் பலாபல விருத்திக்காக நம்முடைய சபைகளில் செய்த ஜெபத்தை தேவன் கேட்டார் என்பதற்குச் சந்தேகமில்லை. எங்கும் விளைவு உண்டாகி தானியம் சகாயமாய் விற்கப்படுகிறது. பதநீர் அமோகமாய்க் கிடைத்ததுந்தவிர, கருப்புக்கட்டி விலை கிராக்கியானதால், ஏழைகள் கையிலும் பணம் தாராளமாய்க் கிடைக்கிறதற்கு ஏதுவாயிருக்கிறது ஆகையால் சகலரும் உற்சாகப்பட்டு முன்னையவிட சங்கப்பணம் அதிகமாயும் சந்தோஷமாயும் கொடுப்பார்களென்று நம்ப இடமுண்டு."

"சபைகளில் காலை மாலை ஜெபம் ஒழுங்காயும் வேதாகம ஆராய்ச்சி ஜெபக்கூட்டம் புறமதஸ்தர்களுக்குப் போதித்தல், ஓய்வுநாள் பள்ளிக்கூடங்கள் முதலியவைகள் கிரமமாயும் நடந்துவருகிறது. அந்தந்தக் கோவில்களுக்கு பொக்ஷ இருப்பு வைக்கவேண்டுமென்கிற ஆசையும், அவற்றிற்கு குனோப்பு முதலிய விளக்குகள் நன்கொடையாய்க்கொடுத்து சிறப்பிப்பதும் மிகுதியாய்க் காணப்படுகிறது. மணலூரில் மூன்று வீட்டுக்காரர் 17 ஜனம்வரை நூதனமாய் கிறிஸ்து மார்க்கத்துக்கு வந்து அவர்கள் ஆராதித்த பேய் கோவிலை மிஷியோனுக்கு ஒப்புக்கொடுத்து அதில் ஜெபம் நடத்தி வருவதும் தவிர, பள்ளிக்கூடமும் வைக்கப்பட்டு உத்தேசம் 20 பிள்ளைகள்வரை படித்து வருகிறார்கள்."

"நம்முடைய சேகரத்திலுள்ள பள்ளிக்கூடங்கள் 34 அதில் படிக்கிற பிள்ளைகள் 960, இதும் தவிர போர்டிங் ஆண் பள்ளிக்கூடத்தில் 48 பிள்ளைகளும் உண்டு. சபைகளில் சில குறைவுகளுண்டு மற்றவர்களைக் குறைசொல்லாமல் அவர்களை விழி எழுப்பி "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே. உனக்கு வெளியரங்கமாய்ப் பலனை அளிப்பார்" என்கிற திவ்விய வசனத்தை எண்ணி உற்சாகத்தோடு காணிக்கைகளைச் செலுத்தக்கடவோம்."

## 6-வது அதிகாரம்.

### பரோபகார சிந்தை.

"தனக்கானவைகளை மாத்திரமல்ல பிறருக்கானவைகளையும் தேடக்கடவன்" என்பது சத்திய வாக்கு. இயல்பாய் பிறருக்கானவைகளையல்ல தனக்கானவைகளையே தேடுகிறது எங்கும் பார்க்கக்கூடிய காரியமாயிருக்கிறது. ஆவிக்குரிய ஜீவியத்தில் மேலான பதவியை அடைந்து நிற்கிறவர்களே பிறர் பாசமுடையவர்கள். "அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையோர் என்புமுரியர் பிறர்க்கு" என்று திருவள்ளுவர் சொன்னார். எக்காலங்களிலும் பிறருக்கு நன்மை செய்யக்கூடிய சிந்தையோடு பிரயத்தனம் பண்ணவும் சமயம் வரும்போது தன்னெலும்பைமாத்திரமல்ல, தன் உயிரையும் கொடுக்கக்கூடிய தன்மையுடையோரே சாயுச்சிய பதவியை அடைவார்களென்று சொல்லலாம். இவ்வாறு தன் ஜீவகாலமெல்லாம் பரோபகார சிந்தையாகிய குன்றின்மேல் நின்று கொண்டாட்டம் செய்பவர்களில் ஆபிரகாம் ஐயரவர்களும் ஒருவர். இவர்கள் நன்மை செய்யக்கூடிய சமயம் இன்னதென்றும் செய்யக்கூடாத சமயம் இன்னதென்றும் பிரித்துவைத்தவர்களல்ல. தேவனுடைய மனுஷன் எச்சமயத்திலும் உதவிசெய்ய ஆயத்தமாயிருக்கவேண்டுமென்பது இவர்களுடைய நோக்கம். இவர்களின் ஜீவகாலமெல்லாம் இவர்கள் வீடு அன்ன சத்திரமென்று சொல்லலாம். விருந்தினரில்லாத நாள் அபூர்வம். அந்தஸ்து மரியாதையுள்ளவர்கள் மாத்திரமல்ல தன்னுடன் வேலைக்காரராகிய உபதேசிமார் உபாத்திமார் மாத்திரமல்ல தன் வீட்டில் சாப்பிடக்கூடிய ஏழைகள் யார் வந்தாலும், போஜனம் கொடுப்பார்கள். தன் வீட்டில் சாப்பிட மனமில்லாதவர்கள் வந்தால்

அவர்களுக்குப் படிவிசாரிப்பார்கள்; அல்லது கையிலே துட்டைக் கொடுத்து பெருங்குளத்தில் போய்ச் சாப்பிடச் சொல்லுவார்கள். ஒரு சமயத்தில் ஒரு இந்து மனிதன் இரவில் 8 மணிக்கு வந்து ஐயரவர்களிடத்தில் பணமில்லாதபோது பசியாய் இருக்கிறதாய்ச் சொன்னான். பக்கத்திலிருந்த போஜன பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளிடம் போய் பிரதானமான மாணாக்கரைக் கூப்பிட்டு 2 அணா கொண்டுவாவென்று சொன்னார்கள். அதற்கு அந்தப் பையன் தன்னிடத்தில் அரை அணா மாத்திரமிருக்கிறதாகச் சொன்னான். மீதியை மற்றப் பையன்களிடத்தில் 1 பைசா 2 பைசாவாகச் சேர்த்துக் கொண்டுவந்து கொடுத்தான். அதை வாங்கி இந்துமார்க்கத்தானிடத்தில் கொடுத்து பெருங்குளத்தில் போய்ச் சாப்பாட்டு விடுதியைக் காட்டும்படி ஒரு மனுஷனையும் அனுப்பிவித்தார்கள். மறுநாள் விடியக்காலத்தில் அந்தப் பையன்களிடத்தில் வாங்கின இரண்டு அணாவையுங் கொடுத்துவிட்டார்கள். மகமதியர்களான ஏழைகள் வந்தாலும் அவர்களுக்கும் உதவிசெய்வார்கள். இவர்கள் தர்மசிந்தனையை மட்டுப்படுத்தக்கூடாமற்போயிற்று. இவர்கள் இராக்காலங்களில் வெளியேபோய் வீட்டுக்குத் திரும்பிவரும்பொழுது யாராவது வழிப்போக்கர் தன் வீட்டு விராந்தாவில் படுத்திருக்கிறார்களாவென்று பார்ப்பார்கள் யாராவது நித்திரை செய்யக்கண்டால், அவர்களை எழுப்பி, எந்த ஊர்? எங்கே போகிறீர்கள்? போஜனம் செய்தீர்களா? என்று கேட்பார்கள். போஜனம் செய்யக்கூடிய மனுஷனாயிருந்து சாப்பிடவில்லை என்று சொன்னால் அவனுக்குச் சாப்பாடு பண்ணுவித்து அதன்பின் தான் சாப்பிடுவார்கள்.

ஒரு இரவில் பன்னிரண்டு மணிக்கு அவர்கள் தூங்கும்போது ஒரு ஏழை கதவைத் தட்டி பசியாய் இருக்கிறதாகக் கூப்பிட்டுச் சொன்னான். அடுத்த அரையில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த ஐயரவர்கள் பேத்திமார்களை எழுப்பித் தொந்தரவு செய்ய மனமில்லாமல் தானே எழுந்து சமயலரைக் கதவைத் திறந்துபோய்ச் சட்டிபானையைத் தடவ ஆரம்



பித்தார்கள். இவர்கள் சட்டிபானையை உருட்டுகிற சத்தத்தை இவர்கள் மனைவி எப்படியோ கேட்டுக்கொண்டு அதற்குப்பின் தன் பேத்திமார்களில் ஒருத்தியை எழுப்பி, நம்முடைய சமயலரையில் கள்ளன் கள்ளன் என்று சத்தம்போட ஐயரவர்கள் நகைத்துக்கொண்டு, ஓகோ, கள்ளனில்லை நான்தான் என்று சொன்னார்கள். நீங்கள் அங்கே என்னத்தைத் தேடுகிறீர்களென்று கேட்க ஒரு ஏழை பட்டினியாய் வந்திருக்கிறான், அவனுக்கு ஆகாரம் வேண்டுமென்று சொல்லிக் கொஞ்சம் ஆகாரம் எடுத்துக்கொண்டுபோய் அவனுக்குக் கொடுத்து அவன் புசித்தபின் தன்னுடைய பிராந்தாவில் படுத்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு மறுபடியும் நித்திரைக்குப்போனார்கள். ஒரு சமயத்தில் இவர்கள் வெளியே கிராமங்களுக்குப் போய்வரும்பொழுது ஏழைமனுஷன் ஒருவன் வந்து ஐயா, வஸ்திரமில்லாமல் கஷ்டப்படுகிறேன் என்றான். அவனுக்குத் தன் தலைப்பாகையை எடுத்து இதைக்கிழித்து உடுத்திக்கொள்ளென்று சொன்னார்கள். இன்னொரு முறை குளிரினால் கஷ்டப்படுகிற ஒரு மனுஷன் இவர்களைக் கண்டு தனக்கு உதவிசெய்யவேணுமென்று கேட்க ஐயரவர்கள் தான் அணிந்திருந்த உடுப்பை எடுத்து கொடுத்துவிட்டார்கள். தான் கட்டியிருக்கிற வேஷ்டிபோக இன்னும் ஒரு வேஷ்டியைக் கொண்டுபோகிற காலங்களிலும் அவ்வாறே அதையும் சில வேளையில் கொடுத்திருக்கிறார்கள். இவ்விதமாய்த் தன் உடுப்புகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு சில நாள் தானும் உடுப்புகளில்லாமல் கஷ்டப்பட்டு, அப்புறம் வேறே வாங்கி உடுத்திக்கொள்ளுவார்கள். இதையறிந்த ஏழைகள் இவர்களிடம் வஸ்திரம் கேட்கப் பயப்படுவார்கள். ஏனென்றால் இந்தப் பக்தனிடத்திலிருக்கிற வஸ்திரத்தை நாம் வாங்கிக்கொண்டு அவர்களை வஸ்திரமில்லாமல் சங்கடப்படவிடலாமாவென்று நினைப்பார்கள்.

தன் சொந்தக் குடும்பத்தை நடத்திவந்ததுமல்லாமல் தன் சகோதரன் சிறு குழந்தைகளை விட்டு இறந்தபிறகு அப்பிள்ளைகள் மூன்று பேரையும் தன் வீட்டிலே வளர்த்து அவர்

களுக்கு விவாகமும் செய்வித்தார்கள். இந்துமார்க்கத்திலிருந்து கிறிஸ்துமார்க்கத்திலே சேர்ந்த அனாதை ஆண் பெண்பிள்ளைகளுக்குக் கலியாணம் செய்யவேணுமென்று நேரிட்டபோதும் இவர்கள் அவர்களைத் தன் வீட்டிலேவைத்து கலியாணம் செய்வித்து அதற்குவேண்டிய செலவெல்லாம் தானே போட்டு அவர்களில் சிலரை மறுவீட்டுக்கும் அழைத்து செய்ய வேண்டிய உபசரணைகளைச் செய்தும் அனுப்பியிருக்கிறார்கள். இச்சமயத்தில் தன் வீட்டுக்கு வரக் கூடாத பெண்களுக்குப் பிரசவகாலத்துக்கு உதவிசெய்ய தன் மனைவியையும் அனுப்பினார்கள். இவ்விதமாய் 27 அனாதைபிள்ளைகளுக்கு இவர்கள் வீட்டில் கலியாணம் நடப்பித்து அவர்களுக்கு வேண்டிய காரியாதிகளை இவர்களே செய்துவந்தார்கள். இவ்விஷயத்தைக் குறித்து கனம்: சிம்மனஸ் ஐயவர்கள் ஆச்சரியப்பட்டு "ஈனாக்கு ஐயர் வீடு நித்திய கலியாண வீடாயிருக்கிறதே" என்று சொன்னார்கள். இப்படி ஒரு கலியாணம் ஒரு சமயத்தில் நடப்பிக்க எத்தனித்திருந்த சமயத்தில் மாப்பிள்ளை தாலிசெய்து கொண்டுவர மறந்துவிட்டாரோ அல்லது தாலி செய்ய வழியில்லையோ அல்லது சமயமில்லையோ தெரியாது. தாலியில்லாமல் வந்தார்கள். விவாகம் தடைப்படக்கூடாதென்று நினைத்து ஐயரவர்கள் தன் மனைவியினிடம்போய் தனித்துப்பேசி அவர்கள் மங்கிலியத்தைக் கொடுக்கக்கேட்டார்கள். அந்த அம்மாளும் யாதொரு பதில் பேசாமல், முன்போட்டிருந்த கயிற்றைக் கழற்றி விட்டுவேறே புதுக் கயிறு திரித்து அதில் கோர்த்துக் கொடுத்தார்கள். இவ்விதம் ஸ்திரீயர்க்குள் செய்வது மகா அபூர்வமல்லவா? எதைக் கொடுத்தாலும் தாலியைக் கழற்றிக்கொடுப்பது மிகவும் துர்ச்சகுனமென்று நினைப்பார்கள். கனம்: ஐயரவர்களோ பிறருக்குத் தான் கொடுக்கக்கூடாத வஸ்து ஒன்றுமில்லை என்று நினைத்தார்களென்று துலங்குகிறது. இந்தக் கலியாணத்துக்கு வந்திருந்த சில இந்து ஸ்திரீகள் ஐயரவர்கள் மனைவியைப் பார்த்து என்ன காரியம் செய்தீர்கள் இப்படிச் செய்தது ஐயரவர்கள் ஜீவனுக்கு மோசமாகுமே என்று சொன்னார்கள். பின்



மாமானது முன்னூறு விஷயத்தில் மனுஷர்களுக்கு உபகாரமாயிருப்பதுபோல நீதிமான் என்னும் இச் செழித்த கற்பகத் தருவானது முதிர்வயசுமட்டும் ஏராளமான உபகாரங்களைச் செய்து கனி தந்துகொண்டிருந்தது.

இவர்கள் தன் வரும்படிக்கு மிஞ்சி தர்மம் செய்துவந்தமையால் குடும்பத்துக்குக் கஷ்டம் நேரிடுகிறது என்று இவர்களுடைய மாமியார் கனம்: டக்கரையரவர்களுடைய பத்தினியிடத்தில் ஆவலாதி சொன்னார்கள். அந்தம்மாள் இவர்களை வரவழைத்து கடிந்துகொண்டு, இப்படிச்செய்யக்கூடாதென்றார்கள். எப்போதும் கனம்: டக்கர் ஐயரவர்களுடைய அம்மாளைத் தாயைப்போல பாவித்து, மதித்து, பணிந்து, நடந்தவர்கள் இப்போது எதிர்த்து உரத்த சத்தமாய்ப் பேசி, "கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் காணாதிருக்கிற தேவனிடத்தில் அன்பு கூருவது எப்படி" என்றார்கள். வேதநாயக சாஸ்திரிகளுடைய சரித்திரத்தின் அநேக பிரதிகளை 10 ரூபாய்க்கு வாங்கியும், அப்படியே திருநெல்வேலியில் போதகராயிருந்த கனம்: தேவப்பிரசாதம் ஐயரவர்களுடைய சரித்திர புஸ்தகங்களையும், ரூ. 10க்குவாங்கியும் மற்றவர்களுக்கு இனாமாகக் கொடுத்தார்கள்.

ஐயரவர்களுடைய சபையிலே வேலைசெய்யத் திராணியுள்ளவர்களாயிருந்தும் சங்கடப்பட்டுக்கொண்டிருந்தவர்களை சௌக்கியமடையும்படி கொழும்புக்கு உபதேசியாராகவும் ராயசமாகவும் உபாத்தியாயராகவும் அனுப்பப்படவேண்டுமென்று சங். சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்களிடத்தில் கேட்டுக்கொண்டார்கள், அதைக்குறித்து 1874-ம் ௵ சங். சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்கள் எழுதுகிறதாவது "கொழும்புக்குப் போக மனமுடையவர்களின் பெயரை வரிசையாய் இத்துடனனுப்பிய டாப்பில் எழுதியனுப்பவேண்டும். இந்த மாசத்துக்குள்ளாக கொழும்பிலிருக்கிற ஐயரவர்கள் இவ்விடத்திற்கு வருவார்கள், அப்போது உங்களுக்குத் தெரியப்படுத்துவேன். அந்தக் காலத்தில் அவர்களைக் கண்டுகொள்ள ஆயத்தமாயிருக்கவேண்டும்" என்பதே.

இவர்களுக்கு ஏற்பட்ட சம்பள ரூபாய் 42-ம் இவர்களுடைய நற் செலவுக்குப் போதாததாயிருக்கிறதென்று நினைத்து கனம் டக்கர் ஐயரவர்கள் ஒரு சமையத்தில் ரூ. 10 கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல, ஈசாக்கு ஐயரவர்கள் எனக்கு வேண்டாம் தயவுசெய்து என் சேகரத்திலிருக்கிற மற்ற என் உடன் ஊழியக்காரர்களில் சிலருக்கு சம்பளம் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்விதமாகவே தீர்மானித்தார்கள். மிஷியோன் ஆசாமிகள் மாசந்தோறும் பண்ணைவிளையில் ஆத்மசம்பந்தமான விஷயமாய் கூடுகிறதுண்டு. அச்சமயத்தில் அவர்களுக்கு எழுப்புதலான புத்திமதிகளைச் சொல்லி ஜெபித்து சம்பளங்கொடுத்து அனுப்புவார்கள். சற்றேறக்குறைய இந்தப் பண்ணைவிளைச் சேகரத்திற்கு மாசம் 1-க்கு ரூ. 400 வந்து செலவாகும். இதில் ஐயரவர்கள் சம்பளத்திலிருந்து தன் விஷயமாய் அங்கங்கே நன்மைப் பாகமாய்ச் செலவிட அவசரமாய் வாங்கினபேர்களுக்கெல்லாம் திரும்பக்கொடுத்துவிட்டு ஒரு முறை சம்பளத்தின் மிச்சம் ரூபாய் பத்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்புகையில் ஒரு இந்து மதஸ்தன் அவாகளுக்குமுன் வந்துநின்று என் வீடு தீப்பற்றி எரிந்துபோய்விட்டது, என் வஸ்திரம் அதோடே போய்விட்டது, நான் மிகவும் ஏழையாயிருக்கிறேன் என்றான். அவனை அப்புறம் கூட்டிக்கொண்டுபோய் அவன் கையில் ரூ. 3 கொடுத்து இன்னும் 2 ரூபாயை ஒரு சிநேகிதனிடத்தில் கொடுத்து இவனுக்கு $1\frac{1}{2}$ ரூபாய்க்கு வேஷ்டியும் 2 அணாவுக்கு சாப்பாடுஞ்செய்வித்து மீதம் 6 அணாவையும் அவனுக்கே கொடுத்து அந்த மனுஷனை அனுப்பிவிட்டு வரவேண்டுமென்றும் இந்த விஷயத்தை ஒருவருக்குஞ் சொல்லவேண்டாமென்றுங் கேட்டுக்கொண்டார்கள்.

இன்னொரு முறை இவர்கள் சம்பளம் ரூ. 42-ல் 2 அணா தான் மீதியிருந்தது. அதைத் தன் மனைவியிடங்கொண்டுவந்து கொடுத்தார்கள். பாளையங்கோட்டைக்கு விசேஷித்த கூட்டங்களுக்கு வரும்பொழுது சாயங்காலம் பண்ணைவிளையை



விட்டுப் புறப்பட்டு, சிலவேளையில் வாடகை வண்டியிலே சிநேகிதர்களோடே ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து, இவர்கள் சேகரத்திலிருந்து வந்த உபதேசிமார் உபாத்திமார்களில் சிலரை அழைத்துச் சாப்பாட்டுவிடுதியிலே போஜனம் செய்விப்பார்கள். பாளையங்கோட்டைக்குப் புறப்பட்டவுடன், கூட வந்தவர்களையெல்லாம் வண்டியில் இடமிருக்குமட்டும் ஏற இடங்கொடுத்து, தான் நடக்க முயல்வார்கள். கொஞ்சதூரம் போனபின் வண்டியிலிருக்கிற சிநேகிதர்கள் நாங்கள் இறங்கி நடக்கிறோம், நீங்கள் வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள் என்று கீழே இறங்கி நடக்க ஆரம்பிக்க ஐயரவர்கள் நீங்களே ஏறிக்கொள்ளுங்கள் நான் நடந்து வருவேனென்று முன்செல்ல, வண்டி வெறுமையாய் வரும். மாட்டுக்கு இலகுவானதென்று ஐயரவர்கள் சந்தோஷப்படுவார்கள். வேறே யாரும் கூட வராத சமயத்தில் தான் வண்டியில் ஏறிப்போவார்கள்.

ஒரு நாள் பாளையங்கோட்டைக்கு இவர்கள் கொண்டு வந்த பணமெல்லாம் செலவழிந்துபோக 4 அணா மாத்திரம் தபால் வண்டிக்கென்று வைத்திருந்தார்கள். இவர்கள் ஊருக்குத்திரும்புகிற சாயங்காலத்தில், ஒரு ஏழைக் கிறிஸ்தவன் தன் வருத்தத்தைச் சொல்ல, அந்த 4 அணாவையுங் கொடுத்து தான் இரவெல்லாம் நடந்து பண்ணைவிளை போய்ச்சேர்ந்தார்கள்.

சுதேசிகளுக்கு மாத்திரமல்ல ஐரோப்பியர்களான குருக்கள் மாராவது மற்ற ராஜாங்கத்தை அடுத்த உத்தியோகஸ்தர்களாவது பண்ணைவிளைக்கு வந்தால் அவர்களுக்கு தன் சக்திக்குத் தக்கதான மரியாதை செய்து அவர்கள் அந்த இடத்தை விட்டுப் போகுமட்டும் வேண்டிய அற்ப சொற்ப காரியங்களெல்லாம் தன் கையிலிருந்து கொடுக்கிறது வழக்கமேயன்றி அவர்களிடத்திலிருந்து யாதாமொரு சகாயத்தைப் பெற்றுக் கொள்ள நினைக்கமாட்டார்கள்.

ஒரு இரவில் 8 மணிக்கு தன் வீட்டுக்குமுன் உட்கார்ந்து தன் சிநேகிதர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போது தெற்கேயிருந்து ஒரு துரை குதிரையின்மேலேறி

அவர்கள் வீட்டுக்குமுன் வந்துநின்றார். இவர்களோடு பேசிக்கொண்டிருந்த மனிதர் அந்தத் துரையினிடத்தில்போய் யார் என்று விசாரித்தார். உடனே அவர் தூத்துக்குடியிலிருக்கிற அசிஸ்டாண்டு சூப்பிரின்டெண்டு என்றும், தான் தெற்கே வெகு தூரத்திலிருந்து வருகிறதாயும், தான் முந்தி அனுப்பின தன் வேலைக்காரனும் வண்டியும் இன்னும் வந்து சேராத காரணம் தெரியவில்லை என்றும், இப்போது தனக்குப் பசியும் களைப்புமாயிருக்கிறதாகவும், தாகத்துக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டுமென்றும் சொன்னார். இச்செய்தியை கனம்: ஐயரவர்களுக்குச் சொல்ல அவர்கள் விரைவில் வீட்டுக்குள்ளே போய் ஒரு ஆசனத்தை எடுத்து அவருக்குப்போட்டு அவரை உட்காரச்செய்து தண்ணீருக்குப் பதிலாக பாலை தாகத்துக்குக் கொடுத்து அத்துரையோடு தன் வீட்டில் வந்திருந்த ஒருவரைப் பேசிக்கொண்டிருக்கும்படி செய்வித்து, தான் அங்குமிங்கும் ஓடி துரைக்குவேண்டியவைகளை வாங்கி சமைத்து துரைக்கு முன்பாக வைத்தார்கள். அவர் ஆகமகிழ்ச்சியாய்ப் புசித்து, இளைப்பாறியபின் ஐயரவர்களிடத்தில் கொஞ்சநேரம் சம்பாஷணை பண்ணிக்கொண்டிருந்தார். அதற்குள் துரையினுடைய வண்டியும் ஆட்களோடு வந்தது. துரை பங்களாவுக்குப் போகும்பொழுது தன்னிடத்தில் முன்பேசிக்கொண்டிருந்த ஐயரவர்களின் இனத்தாரிடத்தில் இந்தப் போதகர் உண்மையும் மகா தயாளமுமான புருஷனென்று நான் நம்புகிறேன், நான் இந்த ஜில்லாவிலிருக்குமட்டும் இவரை ஒரு சிநேகிதராய்ப் பாவித்துக்கொள்வேனென்றார். அவ்விதமாகவே அத்துரை இந்த ஜில்லாவில் இருந்த காலமெல்லாம் இவர்களை மறவாமல் தன் உத்தம சிநேகிதராகப்பாவித்து வந்தார்.

ஆப்பிரிக்கா தேசத்திலுள்ள சகாரா என்னும் பாலைவனத்தில் பிரயாணமாய்ப்போகிறவன் தன் கண்ணுக்குப் பசுமையாயிராததும், மனதுக்கு இன்பம் இல்லாததுமான அவ்வழியில் செல்லுகையில் தாகத்தினால் விடாய்த்து களைத்துப் போகிறான்.



அச்சமயத்தில் அங்கே அவனுக்கு ஒரு செடியும் அதில் சில பழங்களும் தென்படுகிறது. அதற்கு வாட்டர்பரி, அதாவது தண்ணீருள்ள ஒரு வகையான பழமென்று பெயர். அதிலிருக்கிற ஒவ்வொரு காயிலும் கால் படி தண்ணீர் அடங்கியிருக்கும். அதைக்கண்டு இந்தப் பிரயாணி பறித்துப் புசித்து தாகந்தணிந்து சந்தோஷமாய்த் தன் வழியே போகிறதுபோல, இப்பாகத்தில் மனவருத்தமும் வியாகுலமுமடைந்த யாரிலும் பற்பல வகையான கஷ்டங்கள் நிறைந்தவர்களானாலும், பண்ணைவிளைக்கு வந்து கனம். ஐயரவர்களைக் கண்டால் அவர்கள் சந்தோஷமடைகிறது மாத்திரமல்ல தங்கள் ஜீவனின் ஓட்டத்தில் இவர்களைப்போல் இன்னொரு மனுஷனை எப்பொழுது காண்கிறது என்று நினைக்க இடமாயிருக்கும்.

ஒருகாலத்தில் வட அமெரிக்காவில் விர்ஜினியா என்கிற மாகாணத்திலுள்ள ஓர் நதிக்கரையின்மேல் ஒரு வாலிப துரை உலாவிக்கொண்டு நின்றார். திடீரென ஆற்றுக்குள் பெரிய கூக்குரலுண்டாயிற்று. அது இன்னதென்று இவர் பார்க்கப் போகும்பொழுது ஒரு சிறு குழந்தை ஆற்றில் விழுந்துவிட்டதாகவும், விரைவாய் ஓடுகிற நீரோட்டம் அந்தக் குழந்தையை இழுத்துக்கொண்டு போகிறதாகவும், தண்ணீர் ஆழமானதினாலும் விரைவாய் ஓடினதினாலும் ஒருவரும் அதில் இறங்கத் துணியாதிருக்கிறதாகவும் கண்டு அந்தத் துரைமகன் தன்மேல் உடுப்பைக் கழற்றி அப்புறம் எறிந்துவிட்டு தண்ணீரில் பாய்ந்து பிள்ளையைத் தேடினார். சற்று நேரம்வரை பிள்ளையைக்கண்டு பிடியாமல் திகைத்து திகைத்து தனக்கு முன் ஒரு வெள்ளையைக்கண்டு அதை நோக்கி விரைவாய் நீந்தினார். பிள்ளையை மூன்று முறை தொட்டும் அதைப் பிடிக்கக்கூடாமல் போயிற்று. இவ்விதமாய் உடைந்த பாறைகளின் வழியாயும், மேடும் பள்ளமும் நெருக்கமும் வளைவுமான இடங்களின் வழியாயும் பிள்ளையை அடித்துக்கொண்டு போகவே இவர் பின்தொடர்ந்து போகப்போக களைத்துப்போனபோதிலும், மனம் சோர்ந்துபோகாமல் இரெட்டிப்புப் பலத்தோடு, பிள்ளையைப்

பிடிக்க துரிதப்பட்டார். ஏனென்றால் இவர்களுக்குமுன் 15 அடி உயரமுள்ள பாறையின்மேல் தண்ணீர் தத்தி விழுந்து கொண்டிருந்தது. அந்தப் பாறைக்கு அருகாமையில் பிள்ளை வரும்போது பிள்ளையைப் பிடித்து தூக்கிக்கொண்டு பிள்ளையும் இவருமாய்க் கீழே விழுந்தார்கள். கொஞ்ச நேரத்துக்குப் பின் ஒரு கையால் பிள்ளையையும் இன்னொரு கையால தண்ணீயும் பறித்து கரையை நோக்கித்திரும்பினார். இவர் வருத்தப்படுகிறதைக்கண்டு கரையில் நின்றவர்கள் உடனே ஓடிவந்து இவருக்கு உதவி செய்தார்கள். பிள்ளையைத் தாயிடத்தில் ஒப்புக்கொடுத்தார். தாயானவள் தன் பிள்ளை உயிரோடிருக்கிறதைக்கண்டு ஆனந்தங்கொண்டு மார்பில் அணைத்து இந்த வாலிபனைப்பார்த்து இன்று நீர் காட்டிய ஜீவகாருண்ணியத்துக்காக நான் பதில் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. கர்த்தர் தாமே உம்மை ஆசீர்வதித்து அநேக நன்மைகளைச் செய்வாராக என்று சொல்லி, என் ஆசீர்வாதமாத்திரமல்ல ஆயிரமான ஜனங்களினுடைய ஆசீர்வாதமும் உம்மைப் பின்தொடர்ந்துவருவதாக என்று வாழ்த்தினாள். பிற்காலத்தில் இந்த வாலிபன்தான் அமெரிக்கா தேசத்தில் குடியரசை ஸ்தாபித்தவரும், பெரிய யுத்தங்களில் ஜெயவீரனாய் வெளிப்பட்டவரும், அமெரிக்கா தேசத்தில் முதலாவது பிரசிடெண்டுமாயிருந்த ஜியார்ஜ் வாஷிங்டன், என்னும் பேர்பெற்ற துரை. இவர் செய்த மற்றக்காரியங்கள் எல்லாவற்றைப் பார்க்கிலும் தன்னுடைய உயிரைப் பெரிதாய் எண்ணாமல் அன்னிய பிள்ளையின் ஜீவனை ரக்ஷித்ததை பெரிதாகப் பேசுவார்கள். அத்தன்மைபோல. ஐயரவர்களும் ஜீவரக்ஷணை செய்தார்கள். கனம்: டக்கர் ஐயரவர்கள் பெரிய குளத்தில் ஜலம் பெருகியிருக்கும்போது தானும் தன் பத்தினியும் அக்குளத்தில் ஒரு சிறு தோணியின்மேல் ஏறிக்கொண்டு உலாவி வருவார்கள். ஒரு நாள் அந்தத் தோணி துறையிலே கட்டியிருந்தது. இவர்களுக்கும் கனம்: ஈசாக்கு ஐயரவர்களுக்கும் பேருதவியாயும் பெருஞ் சிநேகமுமாயிருந்த ஞானஉயிர்ப்பிள்ளை, அவர்களின் சிறு குழந்தைகளும் இனத்தாருமாக எட்டுப்பேர் இந்த வள்ளத்திலே



றிக்கொண்டு கயிற்றை அவிழ்த்துவிட்டு தங்கள் வேஷ்டிகளை பாய்போல விரித்துப் பிடித்தார்கள். கீழ்காற்றடித்தபடியால் வள்ளம் தண்ணீரில் இலேசாய் ஓடிற்று. வள்ளம் தண்ணீருக்குள் போகிறதைக்கண்டு பிள்ளைகள் பயந்து அழுது கதறி கூச்சலிட்டுக்கொண்டு இருந்தார்கள். காற்றினால் வள்ளந் தண்ணீருக்குள் வெகு தூரம் போய்விட்டது. தகப்பனாரவர்கள் இவ்விஷயத்தைக்கேட்டு கரையில் வந்து நின்று தன் பிள்ளைகள் தண்ணீரில் அரை மயில் தூரம் மேற்கே நோக்கிப்போவதைக்கண்டு கூக்குரலிட்டு பிள்ளைகள் பயப்படாதபடி தைரிய வார்த்தைகளைச் சொன்னார். விர்ஜினியா மாகாணத்தில் நதியில் விழுந்துவிட்ட தன் ஒரே பிள்ளைக்காக கரையோரமாய்நின்ற தாய் கதறினதுபோல இவ்விடத்தில் ஞான உயிர்ப்பிள்ளையவர்களோ தோணியிலுள்ள 8 பேர்களுக்காகக் கதறினார்கள். அங்கே கூடியிருந்தவர்களில் சிலர் இறங்கித் தோணியைப்பிடிக்க சக்தியற்றவர்களாயிருந்தார்கள். இச்செய்தியைக் கேள்விப்பட்ட ஆபிரகாம் ஐயரவர்கள் ஓடிவந்து தண்ணீரிலிறங்கி, வேகமாய் நீந்தி வள்ளத்தை நோக்கிப்போனார்கள். வள்ளம் முன்னும் இவர்கள் பின்னுமாய் ஒரு மயில் தூரத்திற்கு மேற்கேபோய் வள்ளத்தைப்பிடித்து பிள்ளைகளைத் தைரியமாயிருக்கும்படி சொல்லி தான் களைத்துப்போனபடியால் மிகவும் மெதுவாய் தெற்குக்கரையை நோக்கித் தள்ளி, மனவருத்தமடைந்திருந்த தகப்பனார் தாயாரிடத்தில் ஒப்புவித்தார்கள் இவ்விஷயத்தையறிந்த இவர்களின் சபையார் யாவரும் இவர்கள் காட்டிய ஜீவகாருண்ணியத்தைக்குறித்தும் தன் உயிரைப் பெரிதாகப் பாராமல் அபாயத்துக்குள் அகப்பட்டிருந்த பிள்ளைகளின் ஜீவனை ரக்ஷித்த விஷயத்தைக்குறித்தும் இன்னாள்மட்டும் பேசி வருகிறார்கள்.

இவர்கள் கையின்கீழ் உத்தியோகம் செய்து வந்தவர்கள் எவ்விதமான தப்பிதங்கள் செய்துவந்தாலும் அதைப் பொறுத்து, சகித்து, எச்சரித்து மன்னித்துவருவார்கள், யாராவது இவ்வளவு பெரிய தப்பிதக்காரருக்கு தாங்கள் தயவு காட்டலா

மாவென்று கேட்டால் ஐயோ! கிருபை நிறைந்த தேவன் தமமிடத்தில் வருகிற எந்தப் பாவியைத் தள்ளுவார்? கெட்டகுமாரன் போன திசையை அவர் கருணைக்கண் நோக்கியிருந்ததே என்பார்கள். யாரையாவது வேலையைவிட்டு தள்ளக்கூடிய சமயங்கள் வந்துவிட்டபோதிலும் மேலான அதிகாரிகளுக்கு சாத்மீகப்படுத்தியே எழுதிக்கொண்டிருப்பார்கள். எத்தனையோ பேர்கள் இவர்கள் ஜீவனுள்ளமட்டும் பண்ணைவிளை சேகரத்திலிருந்து வேலை செய்துவந்திருக்கிறார்கள். அவர்களெல்லாருக்கும் இவர்கள் ஒரு தகப்பனைப்போல் இருந்தார்களேயன்றி வேறல்ல, பெரும் பாதகங்களைச் செய்தவர்களை மாத்திரம் விசாரித்து அவர்களைக் கண்டித்துப் புத்தி சொல்லி மேலேயிருக்கிற அதிகாரிகள் உங்களை வேலையைவிட்டு நீக்கி வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுவார்கள். ஒரு உபதேசியார் அணிகரமான பாவத்தைச் செய்தாரென்ற உண்மையை இவர்கள் நன்றாயறிந்து நடு இராத்திரியில் அவரைக் கூப்பிட்டு பரிசுத்தமான கிறிஸ்துவின் நாமத்துக்கும், சபைக்கும், வெட்கமுண்டாகாதபடி, நீர் சூரிய உதயமாகுமுன் இவ்விடத்தை விட்டு ஓடிப்போய்விடுமென்று சொன்னார்கள். அவ்விதமாகவே அவர் போய்விட்டார்.

எத்தனையோ பையன்களை பற்பல வகுப்பிலிருந்தும் மிஷியோனதிகாரிகளுக்கு சிபார்சுசெய்து படிக்கவைத்து ஆளாக்கிவிட்டிருக்கிறார்கள். அப்படி இவர்களால் அனுப்பப்பட்டவர்களே இந்த விஷயத்துக்கு சாக்ஷிகளாயிருக்கிறார்கள். இவ்விதமாய் இவர்களால் அனுப்பப்பட்ட பிள்ளையாண்டான் ஒருவனை சங். சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் தன் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொண்டு இவர்களுக்கு எழுதின கடிதத்தில், "மணியாச்சி மறப் பிள்ளையாண்டானை இங்கே பள்ளிக்கூடத்தில் சேர்த்துக்கொண்டேன்" என்று எழுதினார்கள். இந்த மறப்பிள்ளையாண்டான்தான் T. B. பாண்டியனென்று அழைக்கப்படுகிறவரும் இந்நூலாசிரியருமானவர்

மேலும் கனம்: ஐயரவர்கள் தன்னிடத்தில் யாராகிலும்



எவ்வகையான சகாயத்துக்கு வரும்பொழுது அவர்களுடைய பாத்திரா பாத்திரங்களைக் கவனியாமல் அவர்களுக்கு எவ்வகையிலும் உதவி செய்யவேண்டுவது நமது கடன் என்று நினைத்து தன்னால் கூடிய உதவியைச் செய்ய முயலுவார்கள். தன்னாலே கூடாத காரியமாயிருந்தால் மற்றவர்களைக் கொண்டாகிலும் செய்விப்பார்கள்.

ஒருமுறை ஐயரவர்கள் பாளையங்கோட்டைக்கு வந்து திரும்பும்போது தன் சேகரத்துத் தபால்காரனையும் தன்னோடு கூட்டிக்கொண்டு ரூ. 400 சம்பளப்பணத்தையும் எடுத்துக்கொண்டு வல்லநாடு போய் சாயங்காலம் ஜெபஞ்செய்து, ஒற்றடிப் பாதையாய் வல்லநாட்டு மலையைச் சார்ந்து பண்ணைவிளைக்குப் போக வழிநடந்துகொண்டிருக்கும்போது, இரண்டு கள்ளர்கள் வந்துசேர்ந்தார்கள். இராவில் 12 மணி நேரமாயுருக்கும். ஐயரவர்கள் அவர்களைப் பார்த்து தன் ஊரையும் பேரையும் சொன்னவுடனே அவர்களில் ஒருவன் ஐயா! தாங்கள் எனக்கு ஒரு முறை நன்மைசெய்திருக்கிறீர்கள். எங்கள் பசியினால் உங்களிடம் இனம் தெரியாமல் ஓடிவந்தோமென்று சொல்லி, வெகுதூரம் கூடப்போய் வழிகாட்டிவிட்டுத் திரும்பும்போது ஐயரவர்கள் நீங்கள் பசியாயிருக்கிறீர்களே என்று பெட்டியைத் திறந்து கொஞ்சம் ரொட்டி எடுத்து கொடுத்து, திருட்டுத் தொழில் செய்யாமல் நியாயத்தின்படி வேலைசெய்து பிழைப்பது நலமென்று சொல்லியனுப்பினார்கள்.

## 7-வது அதிகாரம்.

### நேரிட்ட சங்கடங்கள்.

நான் 1899-ம் வருஷத்தில் ஐரோப்பாவை விட்டு அமெரிக்காவுக்கு ஏறிப்போன புகைக் கப்பல் அத்திலாந்திக் கென்னும் மகா சமுத்திரத்தின் மத்தியில் வந்துசேர்ந்தது. அடிக்கடி அந்த இடத்தில் திடீரென்று மேகந்தோன்றி புசல்காற்றும் மழையுமுண்டாகிறதுண்டு. ஒரு நாள் காலை 9 மணிக்கு சூரியப்பிரகாசமும் காற்றுமில்லாமல் அமைதியாயிருந்தது. கப்பல் மாலுமி மணியடித்து கப்பல் ஓட்டிகளை ஒன்றாய்க்கூட்டி புசல் சீக்கிரம் வரப்போகிறபடியால் அவரவர் வேலை இன்னதென்னவென்றும் அவைகளை சீக்கிரமாயும் ஜாக்கிரதையாயும் செய்யக் கட்டளையிட்டார். மேலும் பாய்மரங்களை எல்லாம் விரித்து நீராவி யந்திரத்தின் பலத்தை இரட்டிக்கச்செய்து வழக்கத்துக்கு மிஞ்சின வேகமாய் ஓட்டவும் சொன்னார். விசுவாசிகளாகிய கிறிஸ்தவர்களெல்லாரும் அவரவர்கள் அரையில் கடவுளின் உதவிக்காகப் பிரார்த்தித்தபின் கப்பலின் மேல் தட்டினின்று கவனிக்கும்போது நாலு பக்கங்களிலும் திடீரென்று கொஞ்சங் கொஞ்சமாய் மேகங்கள் காணப்பட்டு மழைபெய்ய ஆரம்பித்தது. கப்பலுக்கு எதிரே சோனுமாரியும் புசலும் ஒத்துவந்து சேர்ந்தது. இச்சமயத்தில் என்னுடைய பக்கத்திலிருந்த துரையினிடம் இந்தப் புச்ல்காற்று கடந்துபோகுமட்டும் கப்பலை நிறுத்திவைக்கக்கூடாதா, அல்லது புசல் வராமலிருக்கிற வெளியான பக்கத்தில் நம்முடைய கப்பலைத் திருப்பக்கூடாதாவென்று கேட்டேன். அதற்கு அவர் இந்தப் புசல்காற்றினால் அபாயத்துக்குத் தப்பித்துகொள்ளுகிற வழி இந்தக் கப்ப



லின் நீராவியந்திரத்தின்விசையை இரெட்டிப்பாக்கி, தீவரித்து, அதிக வேகத்தோடே கப்பலை காற்றுக்கு நேரே ஓட்டுகிறதேயன்றி வேறல்ல என்று சொன்னார். கொஞ்ச நேரத்தில் அந்தப் புசல்காற்றும் மழையும் கப்பலை மோதியும் கப்பல் குறித்த பக்கமாகவே சேதமில்லாமல் சென்றது. அச்சமயத்தில் பிரயாணிகள் தங்கள் அரையில் போய்ப் புகுந்துகொண்டார்கள். கப்பலிலுள்ள சாமான்கள் கீழது மேலானதுபோலிருந்தது. என்றாலும் மாலுமி தன் ஸ்தானத்தில் தானிருக்கவேண்டிய இடத்திலிருந்து கப்பலை ஓட்டினார்.

உலகமாகிய மகா பெரிய சமுத்திரத்தில் ஐயரவர்களுடைய ஆத்மாவாகிய கப்பல் தூரமான மோட்ச துறைமுகத்தை நோக்கி ஓடத் தலைப்பட்டபோது பாவமாகிய காற்றால் கடுகாசமோசமென்ற கல்விலும் களைப்பிலும் கரையற்று மோதி வந்த இவர்களுக்கடுத்த விஷயங்கள் மேலது கீழதாகவும் புரண்டதுபோலிருந்தது. இவர்களுக்குச் சமீபமாய் நின்றவர்கள் எல்லாரும் இன்பமென்னும் அரைகளில் போய்ப் புகுந்துகொண்டார்கள். சந்தேகம் என்னும் பாறையின் மேல் தட்டின, காலபேதங்களாகிய உறைந்த பனிக்கட்டிகள் வந்து எதிரே தென்பட்டன. கஷ்ட நஷ்டமென்னும் காரிருள் வந்துமூடினது. இவர்களோ விசுவாசமென்னும் சுக்கானைக் கைப்பிடித்து, மனச்சாக்ஷி என்னும் திசை காட்டும் கருவியை முன்வைத்து, கிறிஸ்துவின் நீதி என்னும் பாய்மரத்தை விரித்து, ஜெபமென்னும் நீராவி யந்திரத்தை இரட்டிப்பாய் வேலை செய்ய வைத்து, இயேசு என்னும் பரம மாலுமியை நோக்கி, கப்பலில் தூங்கிறீரோ ஐயனே கனத்த நித்திரை செய்கிறீரோ, நீர் எப்பொழுது எழுந்திருப்பீர் எம்மையாளும் ஏசுநாதா வென்று கூப்பிட; அவர் உதவியால் இவர்களுக்கு நேரிட்ட எல்லா சோதனைகளையும் ஊடுருவிப்போய் இவர்கள் ஆத்துமாவாகிய கப்பல் மோட்ச துறைமுகம் வந்துசேர்ந்தது.

இவர்களின் யௌவன வயசில் மும்மாமான பேதிகாலத்தில் தமிழ் மருந்து ஒன்று வாங்கிச் சாப்பிட்டார்கள். அதி

னால் நரம்புகள் பலவீனமடைந்து நடுக்குவாதம் ஆரம்பித்தது. இதை நீக்கும்படி எவ்வளவோ மருந்துகளைச் சாப்பிட்டும், கடவுளை நோக்கி ஊக்கமாய் ஜெபித்தும், இதை இவர்கள் தேகத்தில் ஒரு முள்ளாகவே வைத்து என் கிருபை உனக்குப் போதுமென்று பரமபிதாவாகிய கர்த்தர் இவர்களுக்குச் சொன்னதாக நினைத்து தன் ஜீவகாலமெல்லாம் மனமகிழ்ச்சியாகவே அதை சகித்து வந்தார்கள்.

இவர்களின் மூத்த குமாரத்தியும் மூத்து ஐயாவர்கள் மனைவியுமான செல்லம்மாள், சுகவீனமடைந்து அநேக நாட்களாய் இவர்கள் வீட்டில் வந்திருந்து, பற்பல ஔஷதம் சாப்பிட்டுச் சௌக்கியப்படாமல் கடைசியில் தன் புருஷனிடம் போய் கர்த்தருக்குள் நம்பிக்கையோடே அமைதலாய் நித்திரையடைந்தார்கள்.

இவர்களின் பிள்ளைகள் இவர்கள் உண்கிற பாத்திரத்தில் சாப்பிடுகிறது வழக்கமில்லை. ஆனால் இவர்கள் மூன்றாவது குமாரனாகிய இராக்லாண்டு யோசேப்பை மட்டும் தன்னோடு கூட வைத்துப்புசிக்கச் செய்தும், தான் படுக்கிற கட்டிலில் கூடப் படுக்கச்செய்தும் அருமையாய் வளர்த்து வந்தார்கள். இப்பிள்ளையாண்டான் 23 வயசுள்ள பாலியனாயிருக்கும்போதே தேவதாபக்தியுள்ளவனாய் கர்த்தருக்குள்ப்பட்டு மரித்தான். இன்னும் குடும்பத்தில் அநேக தொந்தரவுகளும் வருத்தங்களும் நேரிட்டன. அவைகள் எல்லாவற்றிற்கும் மனம் சகித்து "கர்த்தர் கொடுத்தார் அவர் எடுத்தார் அவருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லி ஜெபம் பண்ணுவார்கள். பொன்னைப் புடம்போடப்போட உயர்ந்த மாற்று தங்கமாகிறதுபோல இவர்களுக்கு நேரிட்ட சகல சோதனைகளும் இவர்களின் ஆத்மாவை ஒட்டின துருவைப்போக்கும் ஒருவித புடமாயிருந்தது.

மேற்கூறிய சகல சோதனைகளைப் பார்க்கிலும் இவர்களுடைய விருத்தாப்பிய காலத்தில் இவர்களுக்கு நேரிட்ட சோதனையைப் பெரிதென்று சொல்லலாம். ஆனால் அந்த சோதனை



யும் பெரிதாகக் காணப்படாமல் பரம வெளிச்சமென்னும் பட்டப்பகலிலே மனத்திடசித்தமாய் இவர்களின் பரம பிதாவினுடைய சட்டதிட்டங்களைக் கைப்பற்றிக்கொண்டு இருந்தார்கள்.

நான் அமெரிக்காவைவிட்டு திரும்பி ஐரோப்பாவுக்கு வரும்பொழுது ஸ்காத்லாந்து தேசத்திலிருந்து ஒரு துரை காலிபோர்னியா தேசத்திற்குப்போய் கிச்சிலித் தோட்டம் வைத்து திரண்ட ஐசுவரியத்தைச் சம்பாதித்து வெகுநாட்கழித்து தன சுய தேசத்தை நோக்கி என்னோடுகூட கப்பலில் வந்தார். அவர் விருத்தாப்பியமானவராயிருந்தாலும் எப்போதும் சந்தோஷமாயும், கெம்பீரமாயுமிருந்தார். வாலிபர்களோடே கெம்பீரமாய்ப்பாடி சங்கீத பெட்டியை வாசிப்பார். இவருடைய சந்தோஷம் ஒரு முறை துக்கமாய் மாறிற்று. எப்படியெனில் ஒரு நாள் இருபது வாலிபர்களை இவர் பின்னே ஒருவர்பின் ஒருவராய் நடந்து பாடிக்கொண்டுவரச்செய்து, இவர் அவர்களுக்கு முன் சங்கீதப்பெட்டியை கையில்வைத்து வாசித்துக்கொண்டு சல்லாபமாய் நடந்து கப்பலின் மேல்தட்டில் ஒருமுனை தொடங்கி மறு முனைமட்டும் வரும்போது ஒரு நெருக்கமான பாலத்தைக் கடக்கும்படி நேரிட்டது. அது காரணத்தினாலோ இவர் தவறிவிழ ஒரு கை முறிந்து இரண்டு பல்லுமுடைந்தன. சில நாள் படுக்கையிலிருந்து கொஞ்சங் குணமாகி இங்கிலாந்து தேசத்துக்குச் சமீபமாய் வரும்போது இவர் மேல் தட்டிலே வந்து மற்றப்பிரயாணிகளோடு நின்று தனக்கு நேரிட்ட துன்பத்தை நினைத்து விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறதுபோல் தோன்றிற்று, இப்படிக் கொஞ்சநேரம் இருக்கையில் இங்கிலாந்து தேசத்தின் மேல்கரையின் அழகான சிகரங்கள் காணப்பட்டன. அதை இவர் கண்டவுடனே திடீரென்று குதித்து சந்தோஷப்பட்டு, ஆண்டு கொள்வாயே பிரித்தானியா, ஆண்டு கொள்வாயே, ஒருபோதும் அடிமையாகாயே ஆண்டு கொள்வாயே, பிரித்தானியா ஆண்டு கொள்வாயே, என்று சந்தோஷமாய் பாடி ஆனந்தக்கண்ணீர் விட்டார்

இவ்வாறே கனம்: ஐயரவர்களும் தனக்கு நேரிட்ட துன்ப சோதனை யாவற்றையும் மறந்து விருத்தாப்பிய காலத்தில் நேரிட்ட பெலவீனத்தையும் பெரிதாகப்பாராமல் மோட்ச பட்டணத்தின் சிகரத்தை இவர்கள் கண்டு அவ்விடத்தில் பேரானந்தமென்னும் அசையா மணியின் சத்தத்தையும் தேவ தூதர்கள் கெம்பீரமாய்ப் பாடிக்கொண்டிருக்கிற வீணையின் இனிய தொனியையும் கேட்டுப் பரவசப்பட்டு,

மோக்ஷ மண்டலத்திலுள்ள,
மாக்ஷிமை என் பாக்கியம்.
கிறிஸ்து என்னும் நேசமுள்ள,
ரக்ஷகர் என் பொக்கிஷம்,
மோக்ஷலோக,
நன்மையே என் ஆறுதல்.

என்பதாய்க் கெம்பீரித்தார்கள்.

## 8-ம் அதிகாரம்.

### குணாதிசயங்கள்.

ஒருவன் சிறு பிள்ளையைப் போலிராவிட்டால் பரலோக இராஜ்யத்தில் சேரமாட்டான் என்பதாய் திருவாய்மலர்ந்தருளிய வசனித்த யேசுநாத சுவாமியினுடைய வாக்கியத்தின்படி கனம்: ஐயரவர்கள் ஆவிக்குரிய குணாதிசயங்களுடையவர்களாய் சிறு பிள்ளையைப்போலவே ஜீவித்தார்கள். சிறு பிள்ளை பெற்றோரை நம்பி மற்றவர்களுக்குத் தீமை செய்யாமல் பெருமையன்றி, களங்கமன்றி, புறங்கூறுதலின்றி, பொறாமையன்றி, பொருளாசையன்றி குற்றமற்றதாய் ஜீவிக்கிறது போல, இந்தப் பெரியவர்களும் பிரத்தியக்ஷமாய் யாவருக்கும் தெரிந்தபடி மறு ஜென்மியாய் நடந்துகொண்டார்கள். பல கிரகங்கள் சூரியனிடத்திலிருந்து ஒளி பெற்று பிரகாசிக்கிறதுபோல கனம்: ஐயரவர்களுடைய குணாதிசயங்களும் நீதியின் சூரியனாகிய கிறிஸ்துவினிடத்திலிருந்து ஒளியைப்பெற்றன. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மனுஷர் உங்கள் நற் கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்றுசொன்ன திருவாக்கின்படியே இவர்களுடைய குணாதிசயங்களும் பரஞ்சோதியிலிருந்து ஒளிபெற்று ஜோதிமயமாய் விளங்கின. உலக சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடிக்கொண்டிருந்தமையால், சேதன வஸ்துக்களுக்கு சாரத்தையும், அசேதன வஸ்துக்களுக்கு சத்து சாரத்தையும் உண்டாக்கினதுபோல, இந்த ஆவியானவரே நிச்ச

யமாய் மனுஷருடைய இருதயத்தில் கிரியை செய்யத் தலைப்படும்போது அவர்களுடைய ஜீவியத்தில் பெரிய காரியத்திலும் சிறிய காரியத்திலும் ஜீவனும் சத்துமாயிருக்கத்தக்கதாக கிரியை செய்துவருகிறார் என்பது மாறாத சத்தியம். அவர் ஒரு மனுஷனுடைய இருதயத்தில் கிரியைசெய்ய அசைவாடிக்கொண்டிருக்கும்கால் அவனுடைய பாவக் கசப்பின் ஊற்றை மாற்றி, ஜீவதண்ணீர் என்னும் ஊற்று அவனிருதயத்திலிருந்து சுரந்துபோகும்படிச் செய்கிறார். சகல கனிகரமான குணங்களும் ஆவியின் கனிகளும் கொத்துக் கொத்தாய் காய்த்து தொங்குகின்றன. அவன் நீர்க்காலின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலை உதிராத மரத்தைப்போலிருக்கிறான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். இவ்வாறே பரிசுத்த ஆவியினால் இருதயம் அலங்கரிக்கப்பட்டு பூரண பரிசுத்த ஜீவியமாகிய சாயுச்சிய பதவியை அடைந்து ஜீவித்திருந்த ஐயரவர்களிடத்தில் காணப்பட்ட பொறுமை, உண்மை கடைப்பிடித்தல், களங்கமற்ற அன்பு, சுயநயமின்மை, தாழ்மை, பரிசுத்தம், நீதி, சந்தோஷம், முதலிய குணாதிசயங்களை இவ்வளவென்று சொல்லமுடியாது.

பரிசுத்தமாய் ஜீவித்தார்கள் என்று யாவரும் ஒப்புக்கொள்கிறதுமாத்திரமல்ல, இந்த ஜீவனில் மேலான பதவி அடையக்கூடியதென்பதற்கு இவர்களே ஒரு தெளிவான சாக்ஷியம். பரிசுத்தமாய் ஜீவிக்கிறதற்கு தேவ கிருபையினால் இவர்களுடையநினைவு பரிசுத்தமானதால் செய்கையும் பரிசுத்தமாயிற்று. இப்பேர்ப்பட்ட மேலான பதவிக்குவந்தவர்களுக்குத்தான் இந்த தேவ ரகசியம் விளங்குமேயன்றி மற்றவர்களுக்கு விளங்காது. இவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த பரமானந்த சந்தோஷமானது, எவ்வளவாகிலும் இவ்வுலகத்தின் சிற்றின்பத்தில் சதாகாலமும் உழன்றுகிடக்கிறவர்களுக்கு விளங்காது. தேவபக்தியானது இந்த ஜீவியத்திற்கும் இனிமேலும் வரக்கூடிய ஜீவியத்திற்கும் அனுகூலமாயிருக்கிறது. பரிசுத்த ஜீவி



யம் மனுஷத் தன்மைக்கு மிஞ்சினதென்றும் சிலர் நினைத்துக்கொள்ளுகிறார்கள். பரிசுத்தமாய் ஜீவிக்கிறதுபோல வேஷம் போட்டு சிலர் காட்டுகிறார்கள். இச்சீவன் அநித்தியமென்றும், நினையாத வேளையில் தங்களுக்கு மரணம் வருமென்றும் பரிசுத்தமில்லாதவன் தேவனைத் தரிசிப்பதில்லை என்றும், எண்ணமற்றவர்களாயிருந்து, சுயநய மென்னும் ஆழியில் அமிழ்ந்து தன் காரியம் தன் விஷயம் தான் சம்பாதித்தது தன்னுடையதென்றும் பொருளைப் பாவித்து நிற்போர் யாவரும் பரிசுத்தமாய் ஜீவிப்பது கூடாதென்று சொல்லுகிறார்கள். பரமலோபிகளே பரிசுத்த ஜீவியத்தை வெறுப்போரென்றுஞ் சொல்லலாம். கிறிஸ்தவர்களில் சிலர் தாழ்மையாயிருப்பார்கள். சிலர் பொருளாசையை வெறுப்பார்கள், மற்றவர்களிடத்தில் அன்புபாராட்டுவார்கள், தான தர்மங்களைக் கொடுக்க ஆசிப்பார்கள். ஆனால், நீதிமானென்னும் பனைமரத்தைப்போல வானோக்கி நிமிர்ந்துநிற்கத் தேடாமல் ஒரு நிமிஷத்திற்குள் ஒன்பது கோணலான வழிகளை நினைத்து அதில் நடந்து அப்புறம் போய் பூமியை நோக்கிக் குனிந்து குப்புற விழுகிறார்கள். இப்பேர்ப்பட்டோர் தனித்துத் தன் இருதயத்தைச் சோதித்து, கர்த்தருடைய வார்த்தையை வாசித்து, ஜெபித்து, ஒவ்வொரு நாளும் சொஞ்சம் கொஞ்சம் நேரத்தையாகிலும் கடவுளோடே சம்பாஷணை செய்து கொண்டிருக்கச் செலவிட தீர்மானிப்பார்களானால், இவர்கள் ஆத்மாவுக்கு புறாவைப்போல விசுவாசமென்னும் ரெக்கைகளுண்டாகி, விரித்து அடித்து வானோக்கி பறந்து, பூரண பரிசுத்தமென்னும் மண்டலம்போய்ச் சேர இடமாகும். இப்படிப் பூரண பரிசுத்த நிலைமையை அடைவோர் மலையேறி குகைகளில் மண்டிபோடுவது அவசியமில்லையென்றும், தாம்தாம் செய்யவேண்டிய வேலைகளை கிரமமாய் நடப்பித்துக்கொண்டு இல்லற வாழ்க்கையிலிருந்தே கடவுளுடைய தாசனாகி பரிசுத்தமாய் ஜீவித்து குணங்குடியாய் வாழ்வது குன்றாதவிஷயமென்று யாவருக்கும்பிரத்தியக்ஷமாய் அறியத்தக்கதாக கனம். ஐயரவர்களுடைய பரிசுத்த ஜீவி

யத்தினால் தெளிவாய் விளங்குகிறது. பரிசுத்தமாய் ஜீவிப்போர் இவ்வுலகத்தின் பற்றற்றவர் "நீங்கள் உலகத்திலிருந்தும், உலகத்தாரில்லாதவர்களாயிருக்கிறீர்கள்" என்று பரமகுருவாகிய இயேசு சுவாமி சொல்லியவண்ணமாயும்,

"மாத் தானவத்தையு மாயா புரியின் மயக்கத்தையு
நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ
நித்த னன்புகொண்டு, வேர்த்தாற் குளித்து,
பசித்தாற் புசித்து, விழித்துயின்று,
பார்த்தா லுலகத்தவர்போ லிருப்பார்
பற்றற்றவரே".

என்று சொல்லப்பட்டபடியேயும் ஐயரவர்களுடைய ஜீவியமுமிருந்தது. ஒரு நரியை வீட்டிலடைத்துவைத்து பிற்பாடு நரி அவ்விடத்திலில்லையென்று ஒருவரிடத்தில் சொல்ல, கதவினுடைய சின்னத்துவாரத்தின் வழியாய் அவர் உள்ளே பார்க்க நரியைக் காணாமல் வாலின் நுனியை மாத்திரம் காண, ஓ கோ, நரி உள்ளேயிருக்கிறதென்று சொன்னார். நரியின் உடலைக் காணாவிடினும் அதினுடைய வால் நுனியைமட்டும் கண்டதினால் சம்பு இருக்கிறதென்று சொல்லக்கூடியதுபோல, எத்தனையோ கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய திருச்சபையில் நரியைப்போல உபாய தந்திரத்தினால் பரிசுத்தமுள்ளவர்களெனக் காட்டுகிறார்கள். இவர்கள் மாயை வழி பரிசுத்தவான்கள் தான். இவர்கள் பரிசுத்தம் வெள்ளையடித்த கல்லறைக்கு ஒப்பாயிருக்கிறது, உள்ளேயோ சகல அசுத்தங்களும் நிறைந்த கல்லறையாயிருக்கிறது. நன்றாய்க் கவனிக்கும்போது இவர்களில் நரி வாலின் நுனியாகிய பொறாமை, அகங்காரம், தற்பெருமை, புறங்கூறுதல், சுயநயம், என்பவைகள் காணப்படுகின்றன. தங்களுக்கு விருப்பமுள்ள ரகசியமான பாவத்தைப்பேணி பாராட்ட விரும்புகிறவர்களும் பூரண பரிசுத்தத்தை வெறுப்பார்கள். சாக்ஷாத் கடவுள் சிம்சோனைப்போல கிறிஸ்து சபையிலிருக்கிற முந்நூறு குள்ளநரிகளைமாத்திரமல்ல, அங்கிருக்கிறஎல்லா நரிகளையும் பிடித்து, அதன் வால்களை ஒன்றோடு



ஒன்றாய் அன்பென்னும் கயிற்றால் கட்டி, மனுஷனுடைய தீமையென்னும் கந்தைகளைச் சுற்றி, பரிசுத்த ஆவியின் அக்கினியால் கொளுத்திவிடுவாரானால் அஞ்ஞானம், அறியாமையாகிய காடு எங்கும் வெந்து தணலாகுமே.

பன்னிரண்டு ஆரக்கால்களாலமைந்த ஓர் சக்கரத்தில் பதினொரு ஆரக்கால்கள் ஒரே அளவாயும் ஒன்று குறைவாயுமிருந்தால் அச்சக்கரம் சமமான வட்டஞ்சேராவது, அல்லது சரியாய் உருளுவது முடியாதது போல, சகல சுகுணங்களுடைய ஒரு போதகரானாலும் அல்லது சபையாரானாலும் பூரண பரிசுத்த ஜீவியத்தை நோக்கா திருந்தால் அவர்கள் ஜீவனின் ஓட்டம் குறைந்து ஆவியின் அளவும் பின்னபேதமாய் கெடுதலடையும். உலகத்திலே அநேக கல்விமான்களும் தனவான்களுமிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு பிரயோசனமுண்டாக்கத்தக்க பெரிய காரியம் செய்ய எத்தனித்தால் தீமையைவிட்டு முற்றிலும் விலகி, நன்மை செய்தாலொழிய எப்பேர்ப்பட்ட பெரிய காரியங்களையும் செய்து முடியார்கள். உலகத்தில் பெரிய நன்மைகளைச் செய்தோனைத்தான் பெரியோனெனச் சொல்லலாம்.

ஐயரவர்களுடைய தாழ்மையைக்குறித்து என்ன சொல்லலாம். இவர்கள் எப்பொழுதும் வெள்ளை உடை தரித்தவர்களாயிருப்பார்கள். விருத்தாப்பிய காலங்களில் குளிர் பொறுக்கமாட்டாமல் சில வேளைகளில் கருப்பு உடுப்பு தரித்துக்கொள்ளுவார்கள். இவர்களுடைய நடையுடை பாவனைகளில் எல்லாம் மிகவும் தாழ்மையுடையவர்களாயிருந்தார்கள். ஏழைகளைக் கண்டாலும், பிச்சைக்காரர்களைக் கண்டாலும், அவர்களோடு கனிகரமாய்ப் பேசுவார்கள். பெரிய மனுஷர்களுக்கு முன்பாக கந்தையும் கிந்தையுமணிந்த ஒரு மனுஷன் இவர்களோடு பேச வந்தால் அவனோடும் சந்தோஷமாய்ப் பேசுவார்கள். சிறு பிள்ளைகள் இவர்களிடத்தில் பேசவந்தாலும் அவர்களோடு பேசுகிறதுமாத்திரமல்ல, அவர்கள் திரும்ப இவர்களிடத்தில் வர உரிமை பாராட்டி அனுப்புவார்கள். தன்னிடம்

தாழ்ந்த அந்தஸ்துள்ள யாரானாலும் அவர்களோடு மரியாதையாய்ப் பேசி, அவர்களைக் கண்ணியப்படுத்துவார்களே. இவர்களுடைய வீட்டுக்கு யார்வந்தாலும் தானே அவர்களுக்குமுந்தி வந்தனம் செய்வார்கள். இவர்களறிந்தவர்களை எந்த இடத்தில் கண்டாலும் அவர்களுக்குமுந்தி வந்தனம் செய்து தன் வீட்டுக்கு எவர் வந்தாலும் மரியாதையாய் உட்கார்ந்து பேசும்படி கேட்டுக்கொள்வார்கள்.

சாதாரணமாய் அநேகர் தங்களுக்கு கீழ்ப்பட்டவர்கள் வந்தால் நிறுத்திவைத்துப் பேசுவார்கள். சிலவேளைகளில் கீழே அல்லது பாயிலே உட்காரச்செய்துவைப்பார்கள். சிலரை பெஞ்சில் உட்காரச் சொல்லுவார்கள். சிலரையோ நாற்காலியில் உட்காரச்செய்வார்கள். இந்த மகத்துவமான கனம்: ஐயரவர்களோ எல்லாரையும் ஒன்றுபோல பாவித்து நடத்துவார்கள். எந்த மனுஷன் கூப்பிட்டாலும் அவனுடைய வீட்டுக்குப் போவார்கள். யாதாமொரு அறிந்த மனுஷன் இவர்கள் ஊருக்கு வந்திருந்தால் இவர்களே அவர்கள் இருக்கிற வீடு தேடிப்போய் முதலில் பார்க்கிறதுண்டு. யாவரையும் தன்னைப்போல நினைத்து நடத்துவார்கள். சற்றென்னிலும், நினைவிலும், பேச்சிலும் செயலிலும் வீண்பெருமை என்னும் துர்க்கந்தத்தை காட்டமாட்டார்கள். இவர்கள் தற்பெருமை பாராட்டவேணுமானால் எத்தனையோ காரியங்களை நினைத்துப் பாராட்டலாம். என்றாலும் இவர்கள் தாழ்மையென்னும் பள்ளத்தாக்கின் வழியாய் நடந்து அங்கே ஜீவத்தண்ணீர் ஓடுகிறதையும், அன்பென்னும் புஷ்பம் மலர்ந்திருக்கிறதையும் கண்டு களிகூர்ந்து தான் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பார்ப்பார்கள். சகல ஆகாமியத்துக்கும் உறைவிடமாகிய சிவலப்பேரியிலிருந்து நன்மை தோன்றினதும் ஆச்சரியமே! கர்த்தரால் கூடாத காரியமெது? ஆகஸ்டியன் என்னும் சிரேஷ்ட குருவினிடம், ஒருவர், மோக்ஷத்திற்கு முதற்படி எது என்று வினவ, அந்தக் குரு "தாழ்மை" என்றாராம்.



இரண்டாம்படி எது என்று கேட்க "தாழ்மை" என்றாராம். மூன்றாம்படி யாது என்று கேட்டதற்கு "தாழ்மைதான்" என்றாராம்.

பொறுமை—பொறுத்தார் புவியாள்வார். ஆத்துமாவென்னும் அரசன் ஆக்கை என்னும் ராஜ்யத்தையாளுகிறது பொறுமையாலேதான். தங்கள் சித்தத்தை ஆதீனப்படுத்தினவர்களுடைய பிரதான சின்னம் பொறுமைதான். இவ்வுலகத்தில் பொறுமையாயிருக்கிறது எவ்வளவு பெரிய காரியம். எல்லாரோடும் பொறுமையாயிருக்கிறவர்கள்கூட தங்கள் சொந்த வேலைக்காரர் பேரில் எரிந்துவிழும்படி சில வேளைகளில் நேரிடுகிறது. வெளியே இருக்கிறவர்களோடு பொறுமையைக் காட்டுகிறவர்கள் சில சமயங்களிலே தன் வீட்டாரோடு கோபத்தைக் காட்டுகிறார்கள். கிரேக்க தேசத்து மகா ஞானியாகிய சாக்ரீத் என்பவருடைய மனைவி அவரைச் சொல்லொண்ணாத வார்த்தைகளைப் பேசித் திட்டி அசுத்தமான தண்ணீரை எடுத்து அவர்பேரில் எறிந்தாளாம். அதற்கு அவர் இவ்வளவு நேரம் இடித்த இடிக்குப் பெய்த மழை இதுதானோவென்று சொன்னாராம். கனம்: ஐயரவர்களுடைய பொறுமையை ஒரு முறையல்ல, பல முறையும் அவர்கள் ஜீவகாலமெல்லாம் காட்டி வந்தார்கள். தன்னுடைய மூத்த குமாரன் பாளையங்கோட்டையில் படித்துக்கொண்டிருந்தபொழுது சாமுவேல் என்கிற ஒரு வண்டிக்காரனிடம் ரூ. 3 கொடுத்துத் தன் மகனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கவேணுமென்று சொல்ல, அவன் அந்த ரூபாயைக் கொடுக்காமல் தான் எடுத்துக்கொண்டு போய் விட்டான். இதையறிந்த மற்றவர்கள் மனவருத்தப்பட்டு அந்த மனுஷனுக்கு புத்திவரும்படி சில ஏற்பாடு செய்யவேண்டுமென்றபோது கனம்: ஐயரவர்கள் அது கூடாதென்று தடுத்து "ஐயோ சாமுவேலின் வருத்தம் எப்படியிருந்ததோ" ஆகையால் நம்முடைய ரூ. 3-யும் எடுத்துக்கொண்டு போய் விட்டான் என்று சொல்லி மறுபடியும் ரூ. 3 அனுப்பினார்கள்.

நட்டாத்தி என்கிற கிராமத்தில் ஆபிரகாம் நாடார் என்

ஒரு கிறிஸ்தவர் மரித்தபோது இந்துக்களான இனத்தார் அவர்களுடைய இந்துமார்க்க முறையின்படி அடக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அதைத்தடுத்து கிறிஸ்துமார்க்கத்தின்படி அடக்கம் செய்யவேண்டுமென்று அவரை யெடுத்துக்கொண்டு போகும்போது இந்துமார்க்கத்தார் ஐயரவர்கள் தலையின்மேல் மணலை வாரிப்போட ஐயரவர்கள் மௌனமாயும், மிகவும் அமைதலாயும் நடந்து போனார்கள்

ஒரு நாள் ஐயரவர்கள் பெருங்குளத்தில் மறுகாலில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கும்பொழுது, போலீஸ்காரர்கள் இவர்களைப்பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வாரும் என்று சொல்லி ஸ்டேஷனில் அடைத்து வைத்தார்கள். சிறுபிராயத்திலே இவர்களுக்கு நல்லகண்ணுத்தேவர் என்று பேர் இருந்தமையால், இந்தப் பேரையுடைய ஒருவரைப் பிடித்துக்கொண்டுவர உத்திரவு பெற்றிருந்த போலீஸ் புலிகளுக்கு இவர்கள்பேரில் துவேஷமுள்ள கிறிஸ்தவனொருவர் இவர்கள்தான் அந்த நல்லகண்ணுத்தேவரென்று காட்டிக்கொடுத்ததினால், இவர்களைத் தப்பிதமாய்ப்பிடித்து அடைக்க நேரிட்டது. தான் போதகரென்று அவர்களிடத்தில் சொல்லி தப்பித்துக்கொள்ள வழிபார்த்ததேயில்லை. இதை யறிந்த கனம்: சிம்மனல் ஐயரவர்கள் உடனே ஓடிப்போய் போலீஸ் புலிகளை அதோகதிப்படுத்தி கனம்: ஐயரவர்களை வெளியேற்றிக்கொண்டு வந்தார்கள். இவ்விஷயங்கள் நடக்கும்பொழுது கனம்: ஐயரவர்கள் தன் வாயைத்திறவாமல் மௌனமாயிருந்தார்கள்.

இவர்களுடைய இனத்தாரில் ஒருவர் இவர்களை அடிக்கடி முகத்துக்கு நேரே தாறுமாறாய்த்திட்டி இவர்களை எத்தனென்பார், வயிற்றுக் கிறிஸ்தவனென்பார், மாய்மாலக்காரனென்பார், திருடன் என்பார், இன்னும் சொல்லவொண்ணாத வார்த்தைகளெல்லாம் சொல்லி தூஷிக்கிறதுமுண்டு. ஐயரவர்கள் இதைக்கேட்டு சிரித்துக்கொண்டிருப்பார்கள். இதை யெல்லாம் பேசியமர்ந்தபின் அவரோடு



சந்தோஷமாய் பேசி, அவர் சொன்னதை கொஞ்சத்தேனும் கவனியாமல் இருப்பார்கள். இப்படித்தான் அடிக்கடி சொல்லத்தகாதவைகளைச் சொல்லியும், ஐயரவர்கள் அவைகளைப் பெரிதாய் பாராட்டாமல் பொறுமையாயிருக்கிறதை அந்த மனிதர் யறிந்து ஈசாக்கு ஐயருக்கு கோபமும் ரோஷமும் வரும்படி எத்தனை முறை பேசியும் இவர் ஒன்றும் சொல்லவில்லையே. என்னைப் பயித்தியகாரன் என்று நினைத்துவிட்டாரே" என்றார்.

ஒரு சமயத்தில் அநேக சபையார் ஐயரவர்களிடம் கூடிவந்து பல விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கும்போது, ஒரு மனுஷன் ஐயரவர்களை மிகவும் மனவருத்தமுண்டாகப் பேசிவிட்டுப் போய்விட்டான். ஐயரவர்கள் அமைதலாயிருந்தார்கள். அந்த மனுஷனுக்கு அன்று இரவில் விஷபேதி உண்டாகி மரித்துப்போனான். ஐயரவர்கள் தன்னை மனவருத்தப்படுத்தினவர்களை மன்னித்தும் அவர்கள் செய்த தீமைகளை மறந்துவிடுகிறவர்களாயிருந்தாலும், அன்புள்ள கடவுள் நீதியுள்ளவராயுங்காட்டிக்கொண்டு வந்தார். "பக்தர், சித்தர்கள், பரமஞானிகள், சித்தங்கலங்கிட தீவினை மூண்டிடும்" என்றவாறு இவர்களுக்கு அதிக மனவருத்தத்தைக் கொடுத்தவர்கள் அலங்கோலப்பட்டு தெய்வ சாபத்தை யடைந்திருக்கிறார்கள் என்பதை மிகுந்த துக்கத்தோடும் பயங்காரத்தோடும் இங்கு சொல்ல நேரிடுகிறது. அரசன் அன்று கேட்பான் தெய்வம் நின்று கெட்கும். தெய்வ பக்தர்களை அவமதித்து, நிந்தித்து, அவர்களுக்கு அநியாயம் செய்கிறவன், தனக்குத்தானே ஒரு வேர் புழுவாயிருக்கிறான்; பரம சாதுக்களை யேற்றுக்கொண்டு அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்கிறவனே தெய்வ ஆசீர்வாதத்தைப் பெறுகிறான்.

தச்சன், கொல்லன், கன்னான் முதலிய தொழிலாளிகள் யாதாமொரு சமானைச்செய்ய பணம் வாங்கி, அந்த சாமானைக் கொடாமல் அவர்கள் வருஷக்கணக்காய் நகட்டிக்கொண்டு வந்தாலும், அவர்களை ஒரு நாளாகிலும் கோபத்தோடே அந்த சாமான்களைக்கொண்டு வாருங்கள் என்று சொல்லமாட்டார்கள்.

இவர்களுடைய குமாரத்தியின் ஒரு வெங்கல சாமானை ஒரு கன்னனிடம் செப்பனிட்டுக் கொண்டுவா கொடுத்ததில் அவன் அதை வருஷக்கணக்காய் நகட்டிக்கொண்டு வந்துவிட்டான். இவ்விஷயத்தை யறிந்த சிலர் அவனைப் பிடித்துக் கொண்டுவந்து ஐயரவர்களிடத்தில் விட்டு சாமானைக் கொண்டு வந்து கொடு எனறு கேட்க அவன் அந்தச் சாமானை அடகு வைத்துவிட்டதாயும், அதைத் திருப்ப தன்னிடத்தில் பணமில்லை என்றும் சொன்னான். மேலும் இன்றையத்தினம் என் சாப்பாட்டுக்கும் வழியில்லை என்றான். உடனே ஐயரவர்கள் அவனுக்கு 3 அணா கொடுத்து உன்னால் கூடியபோது அந்தச் சாமானை திருப்பிக்கொண்டுவந்து கொடு என்றார்கள்.

சுயநயமின்மை. "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று இயேசுநாத சுவாமி சொல்லியிருக்கிறார். அவ்வாறே தன் பரம எஜமானின் சித்தத்தின்படியே ஐயரவர்கள் நடந்து அவருடைய சீஷனென்று உலகத்தாருக்குக் காண்பித்தார்கள். கனம்: டக்கர் ஐயரவர்கள் இவர்கள் வாசம்செய்த கூரை வீட்டை ஓடு போட்டுக்கொடுக்கிறேன் என்று சொல்ல, தான் 20 வருஷகாலம் அக்கூரை வீட்டிலேயே வாசம்செய்துவந்தபடியால் அதுவே போதுமானதென்றும் அதற்கு ஓடுபோடவேண்டுமென்பது அவ்வளவு அவசியமில்லை என்றும் மறுமொழிகூறினார்கள். இவர்கள வீட்டின் பிராந்தாவின் முன்னின்ற கால்களோ உழுத்த உடங்கம்புகளல்லாமல் வேறல்ல. "நெற்கொண்டு போகுமட்டும் நில்லாய் நெடுஞ் சுவரே" என்று சொல்லியவாறு மனுஷருடைய கைகளால் கட்டப்படாததும், உலகமுண்டாகிறதற்கு முன்னமே ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதுமான மோட்ச வீட்டை நாடியிருந்த இவர்கள் அங்கு எப்பொழுது போகலாமென்று நினைத்திருந்தார்களன்றி வேறல்ல. தனக்காக ஒரு கைக்கெடிகாரத்தையாவது, அல்லது விலை உயர்ந்த எந்தச் சாமானையாவது வாங்கி வைத்தவர்களல்ல. இவர்கள்



சற்றேறக்குறைய 50 வருஷமாய் வாசம் செய்த அறையில் ஒரு மேசையும், ஒரு கட்டிலும், இரண்டு நாற்காலிகளும், ஒரு சின்னப்பெஞ்சும், ஒரு தலைப்பாகை மாட்டியும், ஒரு கயிற்றுக் கொடியும், இரண்டு படங்களும் தவிர வேறே சாமான்களில்லை. இந்தப் படங்களிரண்டையும் இவர்கள் மனைவிக்கு கனம்: பொருந்திய உவாக்கரையரவர்கள் அம்மாள் கொடுத்திருந்தார்கள். அவைகள் ஒன்றில் என் கிருபை உனக்குப் போதும் 2 கொ. 12: 9. கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தருமென்றும் மற்றொன்றில் "உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப் பிடித்து பயப்படாதே நான் உனக்குத் துணையாய் நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" என்றும் எழுதியிருந்தது.

இவர்கள் தனக்கென்றாவது தன் குடும்பத்துக்கென்றாவது ஒரு செம்புக்காசுங்கூட சேர்த்துவைக்கவில்லை. அநியாயமான சம்பாத்தியம் செய்ததேயில்லை. தனக்குக் கிடைத்த சம்பளத்திலே மாசம் ஒன்றுக்கு 5 ரூபாய் மீத்து வைத்திருந்தால் சாகும் பொழுது வட்டியும் முதலுமாய் ரூ. 5000-க்கு குறைவில்லாமல் சேர்க்கலாம். என்றாலும் ஒரே ஒரு பொருளைமாத்திரம் இவ்வுலகத்தில் சம்பாதித்து வைத்தார்களென்று தெரியவருகிறது. தன் வீட்டுக்கு முன்னிருந்த மாமரம் பட்டபோது அதை வெட்டி 6 பலகைகளாக அறுத்துவைத்திருந்தார்கள். இதையும் அநேகர் சும்மா தங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், சிலர் விலைக்குக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டார்கள். இவைகள் ஒரு கவைக்கு வேண்டியதிருக்கிறது, தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். மேலும் மற்றொரு சிநேகிதனிடத்தில் இன்னும் நாலு பலகை தனக்கு சம்பாத்தியம் பண்ணிவைக்கவேண்டுமென்று மிகவும் கவலையோடு கேட்டதாயும் தெரியவருகிறது. அவ்வாறு சம்பாத்தியும் பண்ணிவைக்க கூடாமல் போயிற்று. ஒருவருக்கும் வருத்தம் கொடாமல் திடீரென்று கூட்டைவிட்டு ஆத்துமா பரலோகத்துக்குப் போய்விடுமென்ற எண்ணத்தை

வைத்து தன் சரீரத்தை அடக்கம்செய்யப் பெட்டிவேண்டுமென்றே இந்தப் பலகைகளை வைத்திருந்தார்கள். இந்தப் பலகைகளாலேயே இந்தப் பரிசுத்தவானின் சரீரத்தை அடக்கம் பண்ணப் பெட்டி செய்யப்பட்டது.

**உண்மை கடைபிடித்தல்.**—சத்தியமே ஜெய மென்பர் சிலர், என்றாலும் சமயத்துக்குத் தக்கதாயும் பேசுவார்கள். பொய்யை மெய்போலும் மெய்யைப் பொய்போலும் வசனிப்பாருமுண்டு. மற்றவர்களுக்கெல்லாம் எவ்விஷயத்திலும் பொய் சொல்லுவது சரியல்லவென்றும் சொல்பவர்கள் தன் விஷயம் தன் குடும்ப விஷயங்களில் கொஞ்சம் பொய் கலந்து காரியசித்தி பெறப்பார்ப்பவர்கள் அநேகர். கனம்: ஐயரவர்கள் எச்சமயத்திலும் என்ன கஷ்டநஷ்டம் வந்தாலும் சத்தியவானாகிய கர்த்தாவே நான் எப்போதும் உண்மையைப் பேசும்படி உதவி செய்யவேண்டுமென்று ஜெபம்பண்ணுவார்கள். கனம்: டக்கர் ஐயரவர்கள், "என்னிடத்தில் ரூ. 5000 இருந்து என் சொந்த மனைவியை நம்பிக் கொடுப்பதுபோல ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்களிடத்திலும் கொடுப்பேன்" என்றார்களாம்.

ஒருசமயத்தில் இவர்களின் மருமகன் ஒருவர் இவர்களை கலெக்ட்டர் எக்கின்ஸ் துரையிடம் வந்து தனக்காக ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவர் விரும்பினபடியே ஐயரவர்கள் அவரைக் கூட்டிக்கொண்டு துரையவர்களிடம்போக அவர் துரையிடத்தில் தனக்கு வேண்டியவைகளைக் குறித்துத் தெரிவித்தார். துரையவர்கள் உடனே ஐயரவர்களை நோக்கி, தாங்கள் இதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஐயரவர்கள் இந்தவிஷயத்தில் பிரயாசப்படுவது பிரயோஜனமில்லை யென்று இவர்களுக்கு முன்னமே சொல்லியிருக்கிறேனையா என்று சொன்னார்கள். ஆ, நீர் உம்முடைய மாமனாருடைய பேச்சைக் கேட்கவேண்டுமே என்று சொல்லியனுப்பிவிட்டார்கள். மருமகனோ, மறுபடி வீட்டுக்குத் திரும்புகையில் மாமனாரைக் கூட்டிக்கொண்டு வந்ததினிமித்தம் தன் காரியம்



மோசம்போயிற்று. நாமாய் நேரே துரையவர்களிடத்தில் விண்ணப்பம் செய்திருந்தால் நமது காரியம் ஒருவேளை ஜெயமாகுமே என்றும், சத்தியத்தைப் பேசுகிற இவர்களால் நமக்கு சங்கடமாய் நேரிட்டதே என்றும் நினைத்துக்கொண்டுபோனாராம்.

ஐயரவர்களுடைய தமையனார் மகன் ஆபிரகாம் என்பவர் இவர்களை ஸ்ரீவைகுண்டம் தாசில் கனம்: நாராயணசாமி முதலியாரவர்களிடம் தனக்கு அமீன் வேலைக்கு சிபார்சு செய்யவேண்டுமென்று கூட்டிக்கொண்டுபோனார். ஐயரவர்களிடம் தாசில்தார் இவருடைய நடக்கை எப்படி என்று கேட்டபோது அவர்கள் ஆபிரகாம், என்னும் பிள்ளையாண்டானுடைய ஜீவியத்திலுள்ள தப்பிதங்களை உள்ளபடி எடுத்துச்சொல்லி பிள்ளையாண்டானுக்குத் தயவுசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அவர்களின் விருப்பத்தின்படியே சத்தியத்தைச் சொன்னதற்காக சந்தோஷப்பட்டு பிள்ளையாண்டானுக்கு வேலைக்கு ஏற்பாடுசெய்தார்கள்.

இவர்கள் விருத்தாப்பிய காலத்தில் ஒரு தடவை ஸ்ரீவைகுண்டம் தபாலாபீசுக்கு பென்ஷியோன் விஷயமாய்ப் போக நேரிட்டது. இவர்களோடு கனம்: ஆசீர்வாதமையரவர்களும் போயிருந்தார்கள். இவ்விருவரையும் இன்னாரென்று அறியாத தபாலாபீஸ் உத்தியோகஸ்தர், அவர்களை வெளியே நிறுத்திப் பேசினார். கனம்: ஐயரவர்களின் பேரை எழுதிக்கொடுத்தவுடன் இந்த மார்க்கத்தாராயிருந்த போஸ்டுமாஸ்டர் சத்தியவான் என்று பேர்விளங்கிய ஈசாக்கு பாதிரியார் இவர்கள்தானோ? வென்று கனம்: ஆசீர்வாதமையரவர்களிடம் கேட்க, அவர்கள் ஆம், என்று சொல்ல உடனே அவர் கதவைத் திறந்து மரியாதையாய் ஏற்றுக்கொண்டு ஆசன முதலியவைகளைக் கொடுத்து உபசாரனை பண்ணியனுப்பினர்.

இவர்களை அறிந்த சபையார்களும் போதகமார்களும் ஐரோப்பிய மிஷனெரிகளும் இவர்கள் சத்தியத்தைப் பேசுகிறவர்களென்று எண்ணி கனப்படுத்தி வந்தார்களே. இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மனவருத்தம் நேரிட்டால் கோடு கச்

சேரி போகும் சமயத்தில் ஐயரவர்கள் சத்தியத்தையே பேசுவாரென்று நினைத்து இந்துக்களே இவர்களைச் சாக்ஷிகளாக கோருவார்கள். இப்பாகத்திலிருக்கிற மகம்மதியர்களும் இவர்களை சத்தியவானென்று நம்பி வந்தார்கள்.

புறங்கூறுதலின்மை.—அநேக ஆறுகளையும், குளங்களையும், நீரோடைகளையும், தாண்டி வந்த ஒருவன் அல்ப வாய்க்காலைத் தாண்டும்போது அடித்துப்புரண்டு குப்புற கீழே விழுவதுபோலவும், புகைக்கூண்டிலேறி ஆயிரம் அடிக்கணக்காய் மேலே போய் அங்கிருந்து குதித்து ஒரு விசித்திரமான குடையை விரித்துப் பிடித்துச் சேதமின்றிப் பல முறையும் பூமியின் மேல் வந்து இறங்கின ஒருவன் ஒரு வில்வண்டியின்மேல் ஏறிக்கொண்டு போகையில் தடுமாறி கீழே விழுந்து காலை முறித்துக்கொள்ளுவதுபோலவும், புனுகு சவ்வாது அத்தர் முதலிய பரிமள வஸ்துக்கள் கலந்த சந்தனத்தில் பன்னீர் மேருகை எடுத்து வார்ப்பதற்குப்பதிலாய் மண்ணெண்ணெய்ப் போத்தலை எடுத்து வார்த்து அதின் வாசனையைக் கெடுப்பதுபோலவும், அநேக விஷயங்களில் மிக வெச்சரிக்கையாய் ஜீவிக்கிற கிறிஸ்தவர்களுடைய புறங்கூறுதல் என்னும் சிறு ஓடையில் வாகைமீறின குதிரைபோல ஓடி வந்து விழுந்து கடூரணமென்னும் சேற்றில் புரண்டு அவதூறு பண்ணுதலென்னும் மண்ணெண்ணெயால் தங்களுடைய மற்ற சலாக்கியமான குணங்களாகிய வாசனைத் திரவியத்தில்கொண்டு வந்து சேர்த்து, அதின் வாசனையைக் கெடுத்துவிடுகிறார்கள்.

கனம்: ஐயரவர்கள் புறங்கூறுதலென்னும் ஆபாசத்தைக் கட்டோடே ஒழித்திருந்தார்கள். யாதாமொருவர் இவர்களிடத்தில் வந்து புறங்கூறினால், அதைத்தடுத்து மற்றவர்களை ஞாயம் தீர்ப்பது நம்மைச் சேர்ந்த கடமையல்லவே, இந்த நாவு எவ்வளவு பொல்லாததென்றும், இது புகழவும், இகழவும், தக்க வஸ்துவென்றும் சொல்லுவார்கள்.

தங்கள் சொந்தப்பிழைகளும், குற்றங்களும், பெரும்பாதங்களுமுள்ள ஒரு பளுவான பையை முதுகில் சுமந்து



கொண்டு போகும்போது, தங்கள் முன் தென்படுவோரெல்லாருக்கும் மற்றவர்களுடைய அற்பசொற்ப குற்றங்களைத் தங்கள் கைகளில் மூடி வைத்து விரித்துக்காட்டிக்கொண்டு போவது எவ்வளவு இழிவான காரியமென்று எண்ணுதிருக்கிறார்களே.

பொறமையானது புறங்கூறுதலின் அண்ணனென்றே சொல்லவேண்டும்.

ஐயரவர்கள் யாரைக்கண்டாலும் பொறாமைப்பட்டிருப்பாரென்று கொஞ்சமேனும் எண்ணக்கூடியதன்று. நல்விமான்களைக்கண்டால், அவர்களைக் குறித்து மெச்சிப்பேசிக்கொள்ளுவாகள். நல்ல பிரசங்கிகளையும் பற்பல வார்த்தையுடையவர்களையும், பூரண மனதோடே அங்கிகரித்து, அவர்களைத் தழுவி மிகப்புகழ்ந்து பேசுவார்களேயன்றிப் பொறாமைப்படார்கள். பொறாமையானது ஞானவானின் நினைவின்படி பாதாளத்தைப்போல கொடியதாயிருக்கின்றது. பொறாமையுள்ளோர் எத்தனை பேருடைய நன்மையைக் கெடுத்துவிடுகிறார்கள். எத்தனை குடும்பங்களுக்கு கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறார்கள். பொறாமையல்லவா சகோதரர்களுடைய மார்பில் ஈட்டியால் குத்தி தகப்பனுடைய கண்ணைப் பிடுங்கச் செய்கிறது. பொறாமையுடையோர் தங்கள் அம்பராத்துணியை நிறைய மொட்டைக்காயிதம், கள்ளச்சாக்ஷி, நயவஞ்சகம், அடுத்துக்கெடுத்தல், தோளிலிருந்து செவியைக்கடித்தல், முதலிய அம்புகளால் நிரப்பிவைத்துக்கொண்டு இராக்காலங்களிலே தங்கள் சகோதரர்கள்பேரிலெய்து காயப்படுத்தி விடுகிறார்கள். கிறிஸ்தவர்களென்று அழைக்கப்படுகிற நாமத்துக்கு எவ்வளவு இழிவை உண்டுபண்ணுகின்றனர்.

பொருளாசையின்மை.—இது மேலான பதவியடைந்த கிறிஸ்தவ போதகரிடத்திலிருக்கவேண்டிய சிறந்த இலக்ஷணங்களில் ஒன்று. ஏனென்றால் பண ஆசை எல்லாவித தீமைக்கும் மூலகாரணமாயிருக்கின்றது. இவர்கள் அநேகவிதமான மிஷியன் வேலைக்காக மேலதிகாரிகளிடத்திலிருந்து அனுப்பப்படுகிற பணத்தை மிஷனைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களிடத்தில்

கொடுத்து அவசியமாய் வேண்டும் காரியங்களுக்குத் தக்கபடியாய் செலவழிக்கும்படி ஏற்பாடு செய்வார்கள். பண்ணைவிளை போஜன பாடசாலைகளின் பணத்தை இவர்களே வைத்துச் செலவிடும்படி 1874-ம் வருஷம் செப்டம்பர் மீ கனம்: சார்ஜென்ட் அத்தியக்ஷரவர்கள் இவர்களுக்கு ஒரு நிருபம் எழுதியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இவர்கள் அந்தத் தொந்தரவுகளை வைத்துக்கொள்ளாமல் மேலான நோக்கத்தோடே வேலை செய்துகொண்டிருந்தார்கள். அதிகாரிகள் விரும்பியும் பணக்கணக்கை தனக்கு வைத்துக்கொள்ளப் பிரியமில்லாமல் இருந்திருக்க, அதிகாரிகள் விரும்பாதிருக்கும்போதே பற்பல வகையான பணக்கணக்கைத் தங்கள் கைவசமிருக்கவேண்டுமென்று விரும்புகிற சில போதகமாரின் நோக்கம் என்னமோ தெரியவில்லை. பஞ்சகாலத்தில் வறியவர்களுக்கு உதவிசெய்யும்படி அதிகாரிகள் அடிக்கடி இவர்களுக்குப் பணம் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளை வருத்தப்படுகிற ஏழைகளுக்கு முற்றிலும் கொடுத்துவிடுகிறதுமல்லாமல் தன் சொந்தப் பணத்திலிருந்தும் அவர்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். இவர்கள் சுகவீனமாயும் பலவீனமாயுமிருந்த காலத்தில் மாணிக்க உபாத்தியாயர் வந்து ஐயா தங்களுக்கு இந்தச் சமயத்தில் பால்மாடு வைத்து பால் சாப்பிட்டால் நலம். வடநாட்டுக்காரர்கள் பஞ்சத்தினால் பசுமாடுகளைக் கொண்டுவந்து நமது குளத்துப்பக்கம் வைத்திருக்கிறார்கள். மாடு ஒன்றுக்கு ரூ. 30 பெறக்கூடியதை இப்போ ரூ. 14-க்குக் கொடுக்கிறார்கள் என்றார். அது சரியல்லவே, பெறக்கூடிய விலையை நாம் கொடுக்கவேண்டும். ஆனால் ரூ. 30 நம்மிடமில்லையே என்று ஐயரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.

களங்கமற்ற அன்பு.—பூர்வீகத்தில் எகிப்து தேசத்தை ஆண்ட ராஜாக்களுக்குப் பார்வோன் என்னும் பட்டப் பேர் வழங்கி வந்தது. அவ்வரசர்களில் ஒருவர் அநேக குதிரைகள் ஒன்றாய்ச் சேர்ந்து பவுஞ்சு பவுஞ்சாய் நின்று தன்னுடைய அழகிய ரதத்தை, லகானில்லாமல் விரும்பிய இடமெல்லாம் திருப்



பித் திவரித்து இழுத்துக்கொண்டு ஓடும்படியாய் பழக்கி வைத்திருந்தாராம். அவ்வாறே கனம்: ஐயரவர்களுடைய குணாதிசயங்களாகிய பரிகள் இவர்கள் ஆவாவின்படி வழுவின்றிப் போகத்தக்கதாய் பரிசுத்த ஆவியானவர் அப்பியாசப்படுத்தி வைத்திருந்தார். ஆகையால் இவர்களின் களங்கமற்ற நடையைக் குறித்து என்னதான் சொல்ல, சிலர் பக்தி வைராக்கியத்தினால் தங்கள் சடலத்தை சுட்டெரிக்கப்படுவதற்கு ஒப்புக்கொடுப்பார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களிடத்தில் களங்கமற்ற அன்பு இல்லை. கனம்: ஐயரவர்களோ யாவரையும் சகோதரர்களாகவே பாவித்து சிநேகிப்பார்கள். சகம் = பாகம்; உதிரம் = இரத்தம்; சகஉதிரம் = சகோதரம் என்கிற பதஅர்த்தத்தின்படியே இவர்கள் சகலரையும் தன் மாமிசத்திலொருபங்காகவும் மனுஷிய ஜாதியாரில் தான் ஒரு அவயவமுமாகவும் நினைத்து மற்றவர்களிடத்தில் அன்பு கூறுவார்கள். நாவிலே அமிர்தமான வார்த்தையும் பல்லின் கீழ் விஷப்பாம்பைப்போல விஷப்பையை வைத்துக்கொண்டிருக்கிறதாக பேசமாட்டார்கள். தன் இருதயமாகிய கண்ணாடியிலிருந்து அன்பை யாவரும் பார்க்கத்தக்கதாக தெளிவாய்க் காட்டுவார்கள், யதார்த்தமான அன்பு இவர்களுக்கு இருந்தபடியால் தான் அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்பட்டு சகலத்தையும் நம்பி, சகலத்தையும் சகித்து, நீடிய சாந்தமும், தயவுமுள்ளவர்களாய் பொறாமையாயிராமலும் தன்னைப் புகழாமலுமிருந்தார்கள்.

ஒருக்கால் ஜெர்மானியா தேசத்திலே நைட் என்று சொல்லப்படுகிற சிற்றரசர் ஒருவரிருந்தார். அவர் மலையின்மேலே கோட்டை கொத்தளமும் கட்டி வாசஞ்செய்தார். அவர் இறந்தபின் அவருடைய இரண்டுகுமாரரில் இளையவன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டு மூத்தவனை கோட்டையைவிட்டுத் துரத்திவிட்டான். சிரேஷ்டன் அநேக இடங்களுக்குப்போய் தனக்கு ஒரு படையைச் சேர்த்துக்கொண்டு ராஜ்யத்தை அடையவேண்டுமென்று தன் தம்பியோடே யுத்தம்செய்ய

வந்து கோட்டையை முற்றிகைபோட கோட்டைக்குள்ளிருந்தவர்களுக்கு ஆகாரம் குறைவுபடவும் தண்ணீரில்லாமலும் சங்கடப்படவும் நேரிட்டது. இந்தச் சமயத்தில் மூத்தவன் இளையவனுடைய தளகர்த்தனுக்கு மூன்று நாளைக்குள் கோட்டையை ஒப்புவிக்காவிட்டால் உங்களில் ஒருவரையும் உயிரோடு வைக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டான். மூன்றாம் நாள் கோட்டையிலிருந்து சில ஸ்திரீகள் வெளியே வந்து மூத்த ராஜ குமாரனிடத்தில் நீர் பெருந்தன்மையுள்ள ராஜாவானால் ஸ்திரீகளாகிய எங்களை வெளியேபோக இடங்கொடுக்கவேண்டுமென்றும், நாங்கள் மாத்திரமல்ல நாங்கள் சுமந்துகொண்டுபோகக்கூடியது எதுவோ அதையும் எங்களோடுகொண்டுபோக வாக்களிக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவ்வரசன் இணங்கி நீங்கள் கேட்கிறது சொற்பக் காரியமானதால் உங்கள் விருப்பத்தின்படியே கொண்டுபோகலாமென்று வாக்குக்கொடுத்தான். இது மாறாத வாக்குத்தானா என்று கேட்டார்கள். ஆம் இது சத்தியம் உண்மை என்று சொல்ல மறுநாள் காலையிலே நாலு கோட்டை வாசலும் திறந்து விடப்பட்டது. கோட்டையிலிருந்த ஸ்திரீகள் எல்லாரும் புறப்படும்போது பெண்சாதி தன் புருஷனையும், தாய் தன் மகனையும், சகோதரி தன் சகோதரனையும், தோழி தன் தோழனையும் தூக்கி தோள்மேல் வைத்துக்கொண்டு வெளியே நடந்துபோனார்கள். இதைக் கண்ட ராணுவத்தார் காரியம் மோசமாச்சுதே, கோட்டைக்கு வெளியே ஸ்திரீகள் தூக்கிக்கொண்டுபோகிற ஆடவர்களை எல்லாம் நாங்கள் அதம் பண்ணிவிடுகிறோம் என்று சொன்னார்கள். ராஜன், அது கூடாது, என் வாக்கு ஒருபோதும் மாறுகிறதில்லை என்று சொன்னார். இவ்வாறே கனம் ஐயரவர்கள் தனக்கு என்ன நஷ்டம் வந்தாலும் எச்சமயத்திலும் கொடுத்த வாக்கு மாறாமலிருந்து, கஷ்டநஷ்ட, துன்பதுயர் அபாயத்துக்குள்பட்டிருந்த அநேகருடைய பாரத்தை தானே சுமந்து அவர்களுக்கு சந்தோஷத்தையும், சௌகரியத்தையும், சலாக்கியத்தையும், உண்டாக்கி



அடிக்கடி ஜீவ காருண்ணியராய் விளங்கியிருக்கிறார்கள். அன்பற்ற மனுஷரெல்லாம் தமக்குத்தாமே உடையவர். அன்புடையோர் எச்சமயங்களிலும் பிறருக்கென்று ஜீவிப்பார்கள்.

நான் இங்கிலாந்து தேசத்திலிருந்தபோது ஒரு நாள் காலையில் ஒரு துரையைப்பார்க்க போயிருந்தேன். வீட்டுக்கு வந்தவர்கள் உட்கார்ந்து பேசக்கூடிய அறையில் கொஞ்ச நேரம் காத்திருக்க நேரிட்டது. விநோதமான அநேக சாமான்களைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அங்கே வைத்திருந்த நாலு ரோஜாச்செடியில் அழகான 4 புஷ்பங்கள் பூத்திருந்தன. அதின் சமீபமாய் நின்று பார்த்துப் பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டு, அந்த புஷ்பங்களில் ஒன்றை முகர்ந்தேன். அதில் வாசனை இல்லை. மற்றவைகளையும் முகர்ந்தேன், அவைகளிலும் வாசனையில்லை. நன்றாய்க் கவனித்துப் பார்த்தபோது அவைகள் உயிரற்ற போலி ரோஜாபுஷ்பங்களென்று அறிந்துகொண்டேன். அன்பில்லாத கிறிஸ்தவர்களும் இவ்வாறே உயிரற்ற ரோஜாபுஷ்பத்துக்கு சாமானமாயிருக்கிறார்கள்.

நீதியின் எரிச்சல்.—சகல விஷயத்திலும் பொறுமையையும் மட்டற்ற அன்பையுங் காட்டிக்கொண்டிருந்த ஐயரவர்கள் எலியாவைப்போல சில சமயங்களில் சத்தியத்தினிமித்தம் எரிச்சலடைவார்கள். கிறிஸ்துவின் வெளிச்சத்தை இவர்கள் அடைந்தபின் இவர்களுடைய தகப்பனார் ஒரு ஓய்வு நாளில் மாட்டைக் குளிப்பாட்டிக்கொண்டுவரச் சொன்னார். போகிற வழியில் ஆண்டவரே இந்த மாட்டுக்கு ஒரு காயம் வரவேண்டுமென்று ஜெபித்துக்கொண்டுபோனார்கள். திரும்பிவருமுன் காலில் காயமுண்டானது.

மொட்டச்சி குடியிருப்பு என்ற ஒரு கிராமத்தில் இந்துக்கள் கிறிஸ்துமார்க்கத்தில் வந்து சில காலஞ் சென்று மருள விழுந்து பேய்க்கொடை கொடுக்கத் திரும்பவும் போய்விட்டார்களென்று ஐயரவர்கள் கேள்விப்பட்டு அங்கே போனார்கள். இவர்களோடு கிறிஸ்தவர்களாயிருந்து கடவுளைத் தொழுது

கொண்டிருந்த ஜனங்கள் அவலக்ஷணமான பேய்யாராதனை செய்கிறார்களென்று வருத்தப்பட்டு அவர்கள் வில்லடித்துக் கொண்டிருந்ததைக் கேட்டு ஐயோ பிசாசின் கிரியைகளைச் செய்ய எத்தனித்துவிட்டீர்களே என்று சொல்லிப் பாய்ந்து வில்லைப் பிடுங்கினார்கள். வில்லடித்தவர்கள் அதை விட்டு விட்டு ஓடிப்போனார்கள்.

ஐயரவர்கள் பெருங்குளத்திலுள்ள மற்றவர்களுக்குப் புத்திசொல்லியும் சத்தியத்தை அவர்களறியும்படி வெகுவாய்ப் பிரயாசைப்பட்டும் வந்தார்கள். அவர்களில் சிலர் இவர்கள் சபையைச்சேர்ந்த கிராமங்களுக்குப் போய் இராக்காலங்களில் சில்லரைக் களவுகளைச் செய்துவந்தார்கள். இதைச்* சபையார் காத்திருந்து பிடிக்கவேண்டுமென்று முயற்சித்ததில் அவர்களில் இரண்டுபேரைப் பிடித்து இரவில் 2 மணிக்கு ஐயரவர்களுடைய வீட்டுக்குக் கொண்டுவந்து விராந்தாவில் உட்கார்ந்துகொண்டு ஐயரவர்களைக் கூப்பிட்டார்கள். வெளியே வந்து கிறிஸ்தவர்களுடன் திருடவந்த கள்ளர்கள் உட்கார்ந்திருக்கக்கண்டு மிகவும் விசனப்பட்டு திருடரைப் பார்த்து பசாசின் பிள்ளைகளே, வெளியேபோய் நில்லுங்கள், கிறிஸ்தவர்களோடே உட்காரவேண்டா மென்று சொல்ல சபையார் அந்தத் திருடருக்காக ஐயரவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.

எந்த மனுஷனாவது பொல்லாதவனாயும், பரமபோக்கிரியாயும் காணப்பட்டால் ஐயரவர்கள் அப்படிப்பட்ட மனுஷனை மிருகமென்றுமாத்திரஞ் சொல்லுவார்கள். கையில் கங்கணம் கட்டிக்கொண்டு கெட்டுப்போவேனென்று சொல்லுகிறவனை குப்பையென்று தள்ளு என்பார்கள். இவைகள் தான் இவர்கள் பேசின எரிச்சலான வார்த்தைகள்.

## 9-வது அதிகாரம்.

### சரீர பலஹீனமும் சங்கத்தாரின் அங்கிகாரமும்.

பரம பிதாவாகிய கடவுள் தம்முடைய பிள்ளைகளை இந்த ஜீவன் உள்ளளவும் வழிகாட்டி அவர்கள் வழிக்கு ஒளியும் உதவியுமாயிருந்து பகலிலே மேகஸ்தம்பத்தையும், இரவில் அக்கினிஸ்தம்பத்தையும் பரம கானான்மட்டும் அவர்களுக்குமுன் செல்லச்செய்வது சத்தியம். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்தாலும் கர்த்தரிடத்தில் பயபக்தியும் விசுவாசமும் உடையவருக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது என்பது சத்திய வாக்கு. இஸ்ரவேல் குறைவுபடத் தொடங்குமுன் அவரது குமாரனாகிய யோசேப்பை எகிப்து தேசத்தின் பண்டகசாலைக்கு அதிபதியாயும், ராஜாவின் பிரதான மந்திரியாயும் உயர்த்திவைத்த கடவுள், தம்முடைய தாசனாகிய ஈசாக்கு ஆபிரகாம் ஐயரவர்களின் வாழ்நாளெல்லாம் மகத்துவமான ஊழியத்தில் செலவிடவும் பால்யத்தையும் அதன் இச்சைகளையும் அவருடைய பாதத்தில் வைக்கவும் செய்தார். தன்னுடைய அதிக வீரியமும் சத்துசாரமும், பராக்கிரமமும், சிவந்த மேனியும், சிரித்த முகமும் அழகிய தோற்றமும் உள்ள யௌவன பிராய முழுமையும் நிர்வசாரியாயிருந்து நிர்மலபாதத்தைத் தொழுதுவந்தார்கள். தன் இருதயத்தையே அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தி பரம ஐசுவரியத்தின் பொக்ஷத்தையே அல்லாமல் வேறே பொக்ஷத்தை அறியேன், நின் திருவடியே சரணம், சரணமென்று ஜீவித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் ஆயுள் குறைவுபடத் தொடங்கி விருத்தாப்பிய காலத்தின் சின்னங்களாகிய தீங்கு நாட்கள் வராதிருக்குமுன்னும், எனக்குப் பிரி

யமானவைகளல்ல என்று சொல்லும் வருஷம் சேராதிருக்குமுன்னும், மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத்திரும்ப வருகிறதுபோல களைப்பும் இளைப்பும் வாராதிருக்குமுன்னும், வீட்டுக் காவலாளிகளாகிய கைகள் தள்ளாடி பலசாலிகளாகிய கால்கள் கூனி எந்திரம் அரைக்கிறவர்கள் (பல்லுகள்) கொஞ்சமானதினால் ஓய்ந்து பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் (கண்கள்) இருண்டு எந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் (நவத்துவாரங்கள்) கதவுகளெல்லாம் அடைபட்டு குருவியின் சத்தத்திற்கும் எழுந்திருக்கவேண்டியதாகி கீதவாத்திய கன்னிகைகளெல்லாம் (அம்புலன்கள்) அடங்கிப்போவதற்குமுன்னும், மேட்டுக்காக அச்சமுண்டாகி வழியிலே பயங்கள் தோன்றி வாதுமை மரம் பூப்பூத்து (முடிகள் நரையுண்டாகி) பசி தீவனம் அற்றுப்போவதற்கு முன்னும், வெள்ளிக் கயிறு கட்டுவிட்டு (நரம்புகள் பலவீனப்பட்டு) பொற்கிண்ணி (இரத்தாசியம்) நசுங்கி ஊற்றினருகே சாலுடைந்து (நீர்ப்பை கிழிந்து) துரவண்டையில் உருளை (பின்துடை) நொறுங்கி இவ்விதமாய் மண்ணாகிய தேகம் தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததிற்கு முன்னும் கடவுளை வாலிபப் பிராயத்திலேயே நினைத்து தொழுதுகொண்டும், தனக்குத் தேவ ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருந்த இயேசுநாதசுவாமியை ஸ்துதித்துக்கொண்டுமிருந்த கனம்: ஐயரவர்கள் மேற்கூறியவாறு பலவீனப்படவும் இளைக்கவும், களைக்கவும் தக்கதான சம்பவம் நேரிட்டது.

காலத்தின் தோற்றங்களை எல்லாம் அளவிட்டிருக்கிற கடவுள், சின்னஞ்சிறிய ஜெந்துக்களாகிய எறும்புகள்கூட மாரிகாலம் வருவதற்கு முன்னே அக்காலத்துக்கு வேண்டிய ஆகாரத்தை சுறுசுறுப்பாய்ச் சேர்த்து வைக்கத்தக்க மனதைக்கொடுத்தவர், தம்முடைய அடியானாகிய ஐயரவர்கள் தன் ஜீவகாலத்தின் சாயங்கால நேரத்தைச் சமாதானமாய்க் கழிக்கச் செய்வதற்கு, அவர்களுக்கு யாதொரு குறைவும், தாழ்ச்சியும் உண்டாகாமல் கர்த்தர் நல்லவரென்றே அந்திய காலத்தின் கடைசி



நேரத்திலும், அவர்கள் சொல்லத்தக்கதாக சாக்ஷாத் கடவுள் குறித்த காலத்தில் வழியையும் வகையையும் ஆயத்தம்பண்ணி வைத்தார்.

இவர்களுக்குப் பிதாவாயிருந்த கனம்: டக்கர் ஐயரவர்கள் கர்த்தருடைய ராஜ்யம் சேர்ந்தார்கள். இவர்களுக்குக் குருவாயிருந்த சார்ஜெண்டு அத்தியக்ஷரவர்களும் மோக்ஷ லோகம் அடைந்தார்கள், மற்றும் திருநெல்வேலி நாட்டில் இவர்களைத் துவக்க முதல் அறிந்திருந்த ஐரோப்பிய குருமார் அதிகமில்லை. இவர்களுடைய உள்ளான காரியங்களை யதார்த்தமானபடி அறிந்து சங்கத்தாருக்கு இவர்களுடைய நிலைமையை உள்ளபடி தெரிவித்து விசேஷித்த பாதுகாப்பும், பாரமரிப்பும், சங்கத்தார்களின் சகாயமும் இவர்களுக்கு அவசியம் கிட்டும்படி செய்யவும், ஆண்டவரே உமது வார்த்தையின்படி உமதடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர் உம்முடைய ரக்ஷண்ணியத்தை என் கண்கள் கண்டது என்று இவர்கள் வயோதிக காலத்தில் சொல்லத்தக்கதாகவும் கடவுள் தம்முடைய தாசர்களில் ஒருவராகிய கனம்: உவாக்கர் ஐயரவர்களையும் அவர்களுடைய அம்மாளவர்களையும் பண்ணைவிளையில் போய் குடியிருந்து இவர்களோடு அந்நியோந்நியமாயும், நகமும் சதையும்போலவும் நேசமாயிருந்து கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி இவர்களை ஏற்றுக்கொண்டு இவர்களோடு சுவிசேஷ வேலையில் அன்போடு சேர்ந்து உழைக்கும்படி அனுப்பினார்.

கைலாசபுரமென்னும் கிராமத்திலிருந்த சுதேச ஐயரவர்கள் சுகவீனமாயிருந்து சாயர்புரத்துக்குப் போயிருக்கையில் அவ்விடத்தில் தெய்வபணிவிடையைச் செய்து சங்கப்பணம் சேகரிக்க கனம்: ஐயரவர்கள் 1896-ம் ௵ எப்பிரல் ௴ 5௳ காலை 10 மணிக்குமேல் கால்நடையாய் அகோர வெயிலில் அதிகப் பசியோடும், தாகத்தோடும், 15 மைல் தூரத்திலுள்ள அந்தக் கிராமம் போய்ச்சேர்ந்தார்கள். சங்கப்பணத்தைச் சேகரித்துப் பாளையங்கோட்டைக்கு அனுப்பியபின் பண்ணைவிளை வந்து

சேர்ந்து மூன்று நாள் தலைவலியும் இரண்டு கண்களிலும் குத்தும் நீரோட்டமும் உண்டாகி அதிக வருத்தமடைந்து சில நாட்கழித்து இரண்டு கண்களிலும் பாசிபடர்ந்தன. அதை நிவிர்த்தியாக்க 1898-ம்௵ சென்னபட்டணத்திற்குப் போகத் தீர்மானித்து சங்கத்தாரிடத்தில் ரஜாப்பெற்றுக்கொண்டு கனம் உவாக்கரையரவர்களிடத்தில் வழியனுப்பப்போனபொழுது அவர்கள், ஐயரவர்கள் வெள்ளியும் பொன்னும் கையிலில்லாமல் இயேசுக்கிறிஸ்து நாமத்தையே பூஷணமாகவைத்து நன்மைசெய்துகொண்டிருந்தவர்களானதால் பிரயாணத்துக்கு உதவியாகக் கொஞ்சம் பணச்சகாயம் செய்து ஜெபம்பண்ணி வழிவிட்டனுப்பினார்கள். பாளையங்கோட்டைக்குப் போய் தன் மூத்த குமாரனை அழைத்துக்கொண்டு சென்னபட்டணம் சேர்ந்து, டாக்டர் போப் துரையவர்களிடம் கண்களைக் காட்டி சிகிச்சை செய்ததில் சித்திபெறாமல் சில நாட்சென்று மறுபடியும் பண்ணைவிளைக்குத் திரும்பிவிட்டார்கள்.

மனுஷனுடைய ஆயுசு நாட்கள் 70 வருஷம் பெலத்தின் மிகுதியால் 80 வருஷமாயிருந்தாலும் அதின் பெரும்பாகம் வருத்தமும் சஞ்சலமுமே.

பூர்வீகத்தில் தேவதாசபக்தனென்னும் ஈசாக்கு முதிர்ந்த வயதானதினால் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போனது என்று அறிகிறோம். அவ்வாறே அவன் நாமத்தைத் தரித்த ஈசாக்கு ஐயரவர்களுக்கும் 70-ம் வயதில் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப்போயிற்று. இவர்களை இந்த நிலைமையில் கொண்டுவந்த பரம இரகசியம் நம்முடைய புத்திக்கெட்டாததாயிருக்கின்றது.

தேச சரித்திரத்திலும் திருச்சபை சரித்திரத்திலும் கர்த்தருடைய தாசராயிருந்தவருக்குள் சிலர் பால்யத்திலும் சிலர் நடுவயதிலும், சிலர் விருத்தாப்பிய காலத்திலும் நேத்திர பார்வை இழந்திருந்ததாய்த் தெரியவருகிறது. இந்த பரம இரகசியத்தை மறுமையில் சாக்ஷாத் கடவுளுடைய திவ்விய பாதாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்துக் கேட்டறியவேண்டியதாயிருக்கிறது.



ஐயரவர்களுடைய சரீர நிலைமையை அறிந்த சங்கத்தார் இவர்களோடு உடன் வேலைக்காரராயிருக்கும்படி கனம்: ஆசீர்வாதம் ஐயரவர்களை அனுப்பி பண்ணைவிளை சேகரத்திலுள்ள மிஷியன் காரியங்களை எல்லாம் பொறுத்துப் பார்க்கும்படி வைத்தார்கள். கனம்: ஐயரவர்கள் பவுல் அப்போஸ்தலனைப்போலவும் கனம்: ஆசீர்வாதம் ஐயரவர்கள் தீமோத்தேயுவைப்போலவும் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்து ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து சமாதானத்தோடும் மிகுந்த சந்தோஷத்தோடும் வேலை செய்துவந்தார்கள்.

சுயநயம் சற்றெனிலும் இல்லாமல் கர்த்தருக்கென்று உழைத்த ஐயரவர்களுக்கும் பென்ஷன் கொடாமல் முழுச்சம்பளத்தையும் அவர்கள் ஜீவகாலமெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கும்படி சிபார்சுசெய்த கனம்: உவாக்கரையரவர்கள் கனம்: காரையரவர்களின் தயாள குணத்தையும் ,பெருந்தன்மையையும் என்னவென்று சொல்லலாம். கர்த்தர் தமது பரம பொக்ஷத்தைத் திறந்து தம்முடைய ஆசீர்வாதமென்னும் ஐசுவரியத்தினால் இவர்களுடைய சிரசில் எப்போதும் சொரிந்துகொண்டிருப்பாராக. இந்த ஐயமார்களின் வேண்டுகோளின்படி செய்த சங்கத்தாருக்கு சகல பெருமையும் புகழ்ச்சியும் தேவ ஆசீர்வாதமும் தங்கியிருப்பதாக.

ஐயரவர்கள் வீட்டிலடங்கி தள்ளாடி நடக்கக்கூடியவர்களாயிருந்தபோதிலும், சபைக்கடுத்த ஆவிக்குரிய விஷயத்திலும் புறம்பான விஷயத்திலும் முன்போலவே வேலைசெய்து சகல பணிவிடைகளையும் நிறைவேற்றிக்கொண்டிருந்தார்கள். சகல வழக்குகளும் மற்றச் சபைக்கடுத்த காரியங்களும் இவர்கள் ஆலோசனையைத் தழுவி நடந்தது. வெளியே கிராமங்களுக்கு அடிக்கடிபோய்ப் பிரசங்கித்து ஜெபித்துவருவார்கள். சில சமயங்களில் கனம்: உவாக்கரையரவர்கள் இவர்களைக் கூட்டிக் கொண்டுபோயிருக்கிறார்கள்.

பண்ணைவிளையிலுள்ள தேவாலயத்தில் ஒவ்வொரு நாளும் காலை மாலை ஜெபத்திற்குத் தவறாமல் போய் அநேக

முறை பிரசங்கித்து ஜெபித்துவருவார்கள். இதே ஆலயத்தில் இவர்களின் சரீர பலவீனம் நேரிட்டிருந்த ஆறு வருஷங்களுக்குள் ஞாயிற்றுக்கிழமைகளில் 64 பிரசங்கங்கள் செய்திருக்கிறார்கள். பிரசங்க ஆயத்தம் செய்கிறதற்குமுன்னமே தான் பிரசங்கம் செய்யும் வாக்கியங்களையும், ஒத்தவாக்கியங்களையும் வீட்டில் மற்றவர்களைக்கொண்டு வாசிக்கச் செய்து ஜெபத்தோடே தியானித்துக்கொண்டிருப்பார்கள். கோவிலிற் போய்தானே மனதிலிருந்து வாக்கியத்தையும் அது இன்ன புஸ்தகத்திலிருக்கிறதென்றும் சொல்லி மிக ஊக்கத்தோடும் வைராக்கியத்தோடும் யாவருக்கும் எளிதில் விளங்கும்படி பிரசங்கிப்பார்கள்.

சபையார் தனித்துவந்து இவர்களோடு பேசி இவர்கள் கைகளை தங்கள்பேரில் வைத்து ஆசீர்வதிக்கும்படி கேட்டுக்கொள்வார்கள்.

சில இந்து மதஸ்தர்கள் இவர்களிடத்தில் வந்து ஐயா தாங்கள் புண்ணியவானாச்சுதே, தங்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் வரலாமா? எங்களைப்போன்ற பாவிகளுக்கன்றோ வரவேண்டியது என்று சொல்ல அதற்கு ஐயாவர்கள், எங்கள் வேதத்தில் ஈசாக்கு என்னும் மகா தேவ பக்தர் ஒருவர் இருந்தார், அவர் விருத்தாப்பிய காலத்தில் 15 வருஷம் பார்வையற்றவராயிருந்ததும் தெய்வச் செயலே என்று உத்தரம் சொல்லுவார்கள்.

கடவுள் அநேக பிரமாணங்களை ஏற்படுத்தியிருக்கிறார். அதில் ஆவியின் பிரமாணத்தின்படி நடக்கிறவர்களுக்கு மறுமையில் தண்டனை இல்லை. அப்படிப்பட்டவர்கள் இயற்கைப் பிரமாணத்தை மீறினால் இம்மையிலேயே சங்கடப்பட நேரிடும். இது கர்த்தர் நம்மைத் தண்டிக்கிறதாய் நினைக்கக் கூடாது. இவ்விஷயத்தில் நாமே தண்டித்துக்கொள்ளுகிறோம். எப்படி என்றால் நெருப்பில் கையைவைக்கிறவனுக்கு உடனே பொத்துப்போகிறதுபோலவும், உயர்ந்த கோபுரத்துஉச்சியிலிருந்து கீழே விழுந்தால் உயிர்ச்சேதம் நேரிடுவதுபோல



வும் ஜீவகாலமெல்லாம் தேக சௌக்கியத்தையும், சுகத்தையும் பாராமல் இளைப்பையும், தாகத்தையும், களைப்பையும் பெரிதென்று நினையாமல் நரிகளுக்கு குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்று சொன்ன நமது அருமை இயேசுநாதருடைய முன்மாதிரியைப் பின்பற்றினதில் இந்தப் பலவீன சரீரம் இதற்கு முன்னமே சங்கடப்பட்டிருக்கவேண்டுமென்பது புத்திசாலிகள் ஒத்துக்கொள்ளக்கூடிய விஷயமே. இம்மட்டும் இவர்கள் தேகம் பொறுத்தது தேவனுடைய கருணைகடாக்ஷம்தான். என்ன நினைக்கிறீர்கள். ஆ! பங்குனிமாசத்துப் பட்டப்பகலில் சூரியன் தீப்பந்தமாய் எரிகிற சமயத்தில், பாம்பும் மிருகங்களும் வெளியே வரப் பயப்படுகிற அந்த நேரத்தில், பக்ஷிகள் பறக்கிறதை நிறுத்தி இலைகளில் மறைந்திருக்கும் சமயத்தில், வேனில் நீரோடைபோல பறந்தோடிக்கொண்டிருக்கும்பொழுது காலிலே பாதரக்ஷையும் கையிலே குடையுமில்லாமல் கைலாசபுரத்துக்கு நடந்து கர்த்தருடைய ஊழியம் பெரிதென்று போனதினாலல்லவா இவர்கள் மூளை கொதித்தது. மண்டை இடித்துக் கண்களினின்றும் ஊற்று நீர் ஓடி இவர்கள் தேகசுகம் இவ்வாறாயிற்று. என்றாலும் கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் என்று ஐயாவர்கள் சொல்லுவார்கள்.

கிறிஸ்தவர்கள் வந்து அடிக்கடி தங்களுக்கு இப்படி நேரிட்டது ஆச்சரியமென்பார்கள். அதற்கு 1 கொரி. 11: 32. நாம் நியாயந்தீர்க்கப்படும்பொழுது உலகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம் என்று சொல்லுவார்கள்.

ஒரு நாள் இவர்களுக்கு அன்பான குமாரனைப்போல இருந்து கர்த்தருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்துகொண்டிருந்த கனம்: ஆசீர்வாதமையரவர்கள் இவர்களைப் பார்த்து தங்களுடைய தற்கால நிலைமையைக்குறித்து மனவருத்தமுண்டா?

என்று கேட்க இல்லை, என் சரீரக்கண்கள் மங்கினபோதிலும் என்னுடைய ஆத்துமக்கண்கள் பிரகாசமடைந்திருக்கிறது என்றார்கள். இன்னும் சில சமயங்களில் பரம எருசலேமுக்கு நாம் போகும்போது "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே துவைத்து வெளுத்தவர்கள்" என்று நம்மைக் குறித்துச் சொல்லப்படுமல்லவா? என்றுஞ் சொன்னார்கள்.

இக்காலத்தில் இவர்கள் பற்பல ஜனங்களுக்கு ஞானஸ்நானமும் சில சமயங்களில் இராப்போஜனமும் கொடுத்திருக்கிறார்கள். கனம்: ஆசீர்வாதமய்யரவர்களுடைய குழந்தைகளில் ஒன்றுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். அவர்கள் வரியில்லாத காலத்தில் சாயங்கால வேளையில் அவர்கள் வீட்டுக்குப்போய் அவர்களுடைய வீட்டாரையும் குழந்தைகளையும் வைத்து ஜெபம் செய்து வருவார்கள். அவர்களிருக்கிற காலத்தில் சாயங்காலம் 5 மணி நேரத்துக்குப்போய் அவர்கள் வீட்டாரோடு கொஞ்ச நேரம் சம்பாஷணை செய்து வருகிறது வழக்கம். இவர்கள் சரீர பலவீனம் நேரிட்ட காலங்களில் கோவிலுக்குப்போகும் பொழுதெல்லாம் ஜெப புஸ்தகம் வேதாகமப்புஸ்தகம் கையில்கொண்டு போகவேண்டியது அவசியமில்லாததினால் பரதேசியின் மோட்ச பிரயாணம் என்ற புஸ்தகத்தை எப்பொழுதும் கையில் எடுத்துகொண்டு போவார்கள். இதை வாசிக்கக்கூடாத நிலைமையிலிருந்தபோதிலும் மோக்ஷ பிரயாணம் செய்துகொண்டிருக்கிற பரதேசி என்ற தனக்கும் மற்றவர்களுக்கும் நினைப்பூட்டுவதற்கு ஏதுவாயிருந்தது.

கோவிலுக்கும் கூட்டங்களுக்கும் இவர்கள் நிரோக சௌக்கியமாயிருக்கும்பொழுது எவ்விதம் போவார்களோ அவ்விதமாகவே முதல் மணி அடித்துக்கொண்டிருக்கும்பொழுதே கோவிலுக்குப் போவார்கள். காலை ஆகாரம் கொஞ்சம் சாப்பிட்டபின் போகலாமென்று சொன்னால் அப்படியில்லை கொஞ்சம் நீராகாரம் கொடுங்களென்று சொல்லி நிவரித்து கோவிலுக்



குப்போவார்கள். முதல் மணிதானே அடித்திருக்கிறது, இது சபையாருக்கல்லவா இரண்டாமணிதானே பாதிரிமாருக்கென்று [illegible] அப்படியல்ல சபையாருக்கு முன்மாதிரியாயிருக்கும்படி ஏற்கனவே கர்த்தருடைய ஆல[illegible] போய்க் காத்திருப்பது நலமென்று சொல்லுவார்கள்.

1902-ம் ௵ மே ௴ இவர்களுடைய இளைய குமாரத்தியும் மருமகனும் பிள்ளைகளும் இவர்களைப் பார்க்கும்படி வந்திருந்தபொழுது இவர்களுடைய பேரப்பிள்ளைகளை வேதாகமத்தைக் கொண்டுவரச்சொல்லி ஆதியாகமம் 49-ம் அதிகாரத்தில் யாக்கோபு தன் குமாரர்களை யழைத்து அவர்களை ஆசீர்வதித்ததைக் குறித்து பேசி பிள்ளைகள் பெற்றோர்களுடைய ஆசீர்வாதங்களை அவசியம் பெற்றுக்கொள்ளவேண்டியது என்று புத்திமதி சொல்லிக்கொண்டிருந்தார்கள். அந்த ௴ [illegible] பகல் 1 மணிக்கு இவர்கள் இளைய மருமகனோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று மயக்கம் வந்து கீழே விழப்போகிற சமயத்தில் மருமகன் உடனே இவர்களைப் பிடித்துத்தாங்கி கட்டிலில் வைக்க அவர்கள் தம் கையை நீட்டி கட்டிலில் சாயும்பொழுது இயேசுவே ரட்சியும் இயேசுவே ரட்சியுமென்று இரண்டு தரம் சொன்னார்கள். இவர்கள் சோகத்தை ஆற்றும்படி தண்ணீர் தெளித்து மற்ற ஏற்பாடுகளைச்செய்ய வழக்கப்படி பேசவும் போஜனம் செய்யவும் ஆரம்பித்தார்கள். என்றாலும், அதிகப் பலவீனமும் சுகவீனமுமுண்டாயிற்று. ஆனபடியால் சங்கத்தாரிடம் தனக்கு மூன்று மாசம் ரஜா வேண்டுமென்று எழுதிக்கேட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு தன் மருமகனோடே பாளையங்கோட்டைக்குப்போய் தன் மூத்த மகளிடத்தில் அநேக நாட்களாயும், தன் இளைய மகளிடத்தில் சில நாட்களாயுமிருந்து திரேகத்தை பலப்படுத்திக்கொண்டு மறுபடியும் பண்ணைவிளைக்குப் போய் முன் பார்த்த சபைக்கடுத்த காரியங்களைப் பார்க்கத்தலைப்பட்டார்கள். ஆகிலும், முன் பார்த்ததுபோல வேலைபார்க்க இவர்களுக்குச் சரீரபெலன் போதாதென்றறிந்து கனம்: ஆசீர்வாதமய்யரவர்களும் அங்கிருந்த மற்ற சிநேகிதர்களும் இவர்களுக்கு முன் பார்த்தபடி வேலை செய்ய இடம் கொடுக்கவில்லை.

இவர்களுக்குப் பெலவீனமும் சுகவீனமும் நேரிட்ட தலை [illegible] பரமானந்த சந்தோஷம் உண்டாக்கத்தக்கதாக பிரசங்கங்களும் ஜெபக்கூட்டங்களும் ஆவியின் எழுப்புதலுக்கேற்றதாக கனம் உவாக்கர் ஐயரவர்களால் சற்றேறக்குறைய நாலு வருஷக்காலமாய் பண்ணைவிளையிலும் அதைச்சேர்ந்த கிராமங்களிலும் நடந்தினது கர்த்தர் எனக்குச் செய்த மகா பெரிய தயை என்று சொல்லி கர்த்தரை ஸ்தோதரித்தார்கள். இந்த அருமையான காரியங்கள் நடந்ததைப் பற்றி பற்பல சிநேகிதர்களிடத்திலும் பேசி இது தன் ஜீவகாலத்தில் தனக்கு கிடைத்த அருமையான சமயமென்று சொல்லுவார்கள். கனம் உவாக்கரையரவர்களும் இவர்களை உத்தம இஸ்ரவேலனாகவும், கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரனாகவும் மதித்து நடத்தி வந்தார்கள் என்பது யாவருமறிந்த விஷயமே. கனம் உவாக்கரையரவர்கள் மாத்திரமல்ல C. M. S. சேர்ந்த சகல மிஷனெரிமார்களும் பிஷப்மார்களும் மற்றும் சுதேச பாதிரிமார்களும் S. P. G. சேர்ந்த கேனன் மார்காஷில் ஐயரவர்களும், மற்றும் பாதிரிமார்களும் சுதேச குருக்களும் இவர்களை பரிசுத்த ஆவியை சம்பூரணமாய்ப்பெற்ற கர்த்தருடைய விசேஷித்த மனுஷராகவே எண்ணி நடத்தி வந்தார்கள்.

இந்தப் பரிசுத்தவானை விட்டுப்பிரிந்து டோனாவூரில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யப்போன கனம் உவாக்கரையரவர்களும் அம்மாளும் திருநெல்வேலி நாட்டில் விசேஷித்த வேலைசெய்து கொண்டிருக்கிற கனம் கார்மிக்கல் மிஸ் அம்மாளும் டோனாவூருக்கு போகிறதற்கு முன், கனம் உவாக்கரையரவர்கள் இவர்கள் வீட்டுக்கு வந்து குளிர்காலமாயிருந்தபடியால் இவர்கள் போர்த்துக்கொள்ளும்படி ஒரு கம்பளமும் வாங்கிக்கொடுத்து அன்போடு ஜெபித்து விடை பெற்றுக்கொண்டு டோனாவூர் போய்ச்சேர்ந்தார்கள்.

இவர்களைக்குறித்து மற்ற மிஷனெரிமார்கள் கொடுத்த சாக்ஷி பத்திரங்களை இந்தப் புஸ்தகத்தின் முதலிலே பிரசுரம் செய்திருக்கிறோம்.

## 10-வது அதிகாரம்.

### அந்தியகாலம்.

1903-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துவின் ஜெனனப்பண்டிகை கொண்டாடுகிற சாயங்கால வேளையிலே பண்ணைவிளை பெரிய தேவாலயத்தில் லூக்கா சுவிசேஷம் இரண்டாம் அதிகாரம் 25-ம் வாக்கியத்திலிருந்து 30-ம் வாக்கியமட்டும் வாசித்து நீதியும் தேவபக்தியும் உள்ளவனும் இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருந்தவனும் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனுமான சிமியோன் யேசுநாதசுவாமியை குழந்தைப் பருவத்தில் கையிலேந்தி தேவனை ஸ்தோத்திரித்து ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர் என்று சொன்ன வார்த்தைகளின் பேரில் கேட்போர் யாவரும் பரவசப்படத்தக்கதாகவும் ஒவ்வொரு மனுஷனும் மனுஷியும் தன் மூச்சு ஒடுங்கும் நேரத்தில் இவ்விதமாய்ச் சொல்லி பரகதியடையத்தக்க ஸ்திதியிலிருக்கக் கூடியதே மகா பாக்கியமென்று நினைக்கத்தக்கதாயும் ஆவியில் அனல்கொண்டு போதித்ததினால் இதைக் கேட்டவர்கள் சிலர், ஐயரவர்கள் இவ்விதமாய் இயேசுவென்னும் குழந்தையை தன் கையால் ஏந்திக்கொண்டு தன் அந்தியகாலத்தின் சமீபத்திலே பாடினதாய் நினைக்கத்தக்கதாயிருந்தது. இதே டிசம்பர் மாதத்திலேயே, மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயமெங்கே! என்றும் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயமென்றும் பிரசங்கிக்கும்போது அவர்கள் முகம் பரிசுத்தஆவியினாலே பிரகாசமடைந்து சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமுள்ளதாய்க் காணப்பட்டது. அந்த வசனங்களைக் கேட்டவர்களு

டைய இருதயத்தில் ஈட்டிபோல குத்தினது. மேலும் யோவேல் என்னும் தீர்க்கதரிசி அந்நாட்களிலே மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரர்களும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள் உங்கள் முதியோர் சொப்பனங்களையும், வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் என்று முன் அறிவித்தவாறு, முதியோர்கள் அல்லது விருத்தாப்பியர்களான விசுவாசிகள் கனவு காண்பார்கள் என்பது சாதாரணமான கனவு என்று நினைக்கிறதற்கு இடமில்லை. தூங்கும்போது எத்தனையோ வித காரணங்களினால் கனவு காண்பதுண்டு, பரிசுத்த ஆவியினால் நிறையப்பட்ட கர்த்தருடைய தாசர்கள் கனவு காணும்போது அது சரீர சம்மந்தத்தையடுத்த காரணங்களினால் அல்ல, கடவுள் தம்முடைய திருவுள சித்தத்தைத் தெரிவிக்கும்படி அருளிச்செய்த கடாக்ஷமுள்ள தரிசனையாயிருக்கிறது. பக்தர்களுக்கு மாத்திரமல்ல அவபக்தரும் அஞ்ஞானிகளுமான சில ராஜாக்கள் முதலியவர்களுக்கும் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும்பொருட்டு பயங்கரமான தரிசனங்களை அளித்திருக்கிறார். கர்த்தரோடு உறவாடிக்கொண்டு மோக்ஷக் குழாங்கூட்டங்களோடே தன் ஆவி சம்மந்தப்பட்டதாய் வைத்திருந்த ஐயரவர்கள் தேகம் தேவனுடைய ஆலயமாயும், பரிசுத்தஆவி இவர்கள் இருதயத்தின் உறைவிடமாயும் இருந்தது என்பது நிச்சயமே. தேவன் இவர்கள் குடும்பத்திற்கும், சபைக்கும், நாட்டுக்கும் சம்பவிக்கப்போகிறவைகளைக் குறித்து அடிக்கடி இவர்களுடைய கனவின்மூலமாய்த் தெரிவித்தபடியே நடந்திருக்கிறதென்று பலமுறையும் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

"கனவோ நினைவோ கண்டதும் பொய்யோ" என்று சொல்லுவோர் லௌகீகமாகிய உலையிற் சிக்கிக்கொண்டு இரவில் கயிற்றைக்கண்டு பாம்பென்று சொல்பவர்போல, மாய்கையான பாசவிருளினால் நிறைந்தவராய் ஆவிக்குரிய ஜீவியத்தை யதார்த்தமாய் தாம் அறியக்கூடாமையினால் சாஸ்திர சம்பிரதாயமான சில நியாயங்களைச் சொல்லி கனவோ நினைவோ என்



பார்கள். இது நிற்க இடேசம்பர் 31உ இரவில் 12-மணிக்கு ஐயர [illegible] கண்டவுடனே விழித்து தன் மனைவியை அழைத்துத் தான் கண்ட கனவைச் சொல்லி தன் முடிவு உடனேயிருக்குமென்று நினைத்தார்கள். இவர்களுடைய சூட்சம தேகம் சக்கில தேகத்தைவிட்டுப் பிரிந்து பரமசாம்பிராச்சியம் போய் சேருகிற காலம் வந்துவிட்டதென்று, கடவுள் இந்தக் கனவின் தரிசனையினால் தெரிவித்தார். இரவு 12-மணிக்கு ஐயரவர்கள் இந்தக் கனவு கண்டார்கள் என்று சபையார் அறிந்து, அவர்களிடம் சென்று ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டு திரும்பினார்கள். ஐயரவர்கள் வந்தவர்களை ஆசீர்வதித்து அந்த சமயத்தில் வராதிருந்த சபையாருக்கும் மற்ற ஐரோப்பிய பாதிரிமார் எல்லோருக்கும் என் சலாம் என்று கனம் ஆசீர்வாதம் ஐயரவர்களிடத்தில் சொல்லி அவர்களுக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

இவ்விதமாய் பந்துக்களுக்கும் பெரியோர்களுக்கும் மரண வந்தன உபசார வாழ்த்துதல் சொல்லி விடைபெற்று கர்த்தரிடத்தில் தன் ஆவியை ஒப்புவித்து வந்த சிநேகிதர்களை தனக்காக தன் ஆத்துமா கர்த்தருடைய பாதத்திற்போய் சேரும்படி பிரார்த்தித்து ஸ்தோத்திரம் செய்யக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் முடிவு உடனே வரவில்லை. மறுநாள் 1904-ம் வருஷமாகிய நவவருடத்தையும் கண்டு அன்றும் காலையில் வழக்கப்படி சபையார்களெல்லாரும் சந்திப்புக்கொண்டு சங்கீதங்களையும், கீர்த்தனைகளையும், பாடிக்கொண்டு சந்தோஷமாய் ஆண்களும், பெண்களும், பெரியோரும், சிறியோரும் ஐயரவர்களைச் சந்தித்து அவர்களால் புத்திபோதனைகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு போனார்கள். அடுத்தநாள் துவக்கி வழக்கப்படி திவ்விய பணிவிடைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். இந்த சம்பவங்களுக்குப்பின், இவர்கள் மனைவி ஒருநாள் தனிமையாய் கட்டிலில் உட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது கிலேசப்பட்டு துக்கிக்க ஆரம்பித்தார்கள். ஐயரவர்கள் தம்

மனைவியைப் பார்த்து என் அழுகிறாய் என்று கேட்டார்கள். உங்களுக்கு முந்தி நான் போகவேண்டுமல்லவா? எனக்குப்புகலென்ன என்றார்கள். உன் மக்கள் உன்னைப் பார்த்துக்கொள்ளுவார்கள் என்று ஆறுதலாய்ச் சொன்னார்கள். நான் சேலப்பேரியிலிருந்து வரும்போது ஒரே வேஷ்டியோடே இந்தத் தாம்பிரவருணி நதியைத்தாண்டி வந்தேன். வேறே ஒன்றுங்கொண்டுவந்ததில்லை. இப்போது என்னை இம்மட்டாக ஆசீர்வதித்த கர்த்தர் உன்னையும் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். மேலும் திருச்சபையும், உன் பிள்ளைகளும் இருக்கிறார்களே. தவிரவும் உனக்காக 5000 ரூபாய் சம்பாதித்து வைத்திருக்கிறேனே என்று சொல்லி சிரித்தார்கள். அதற்கம்மாள் அவர்கள் ஐம்பெண் சங்கப்பணம் ரூபாய் ஐந்தா என்று கேட்க ஆமென்று சொல்லி அன்றிரவில் குடும்ப ஜெபத்தில் தன் மனைவிக்காக கடவுளை நோக்கி மிக வைக்கத்தோடு விண்ணப்பண்ணினார்கள். கொங்கராயகுறிச்சி சபையார் கொடுக்கல் வாங்கல் விஷயமாய் ஸ்ரீவைகுண்டம் முன்சீபுகோர்ட்டில் பிரியாது செய்து ஐயரவர்களை ஒரு சாக்ஷியாய்க் கோரினார்கள். 1904-ம் ௵ மார்ச்சு ௴ 7௳ யன்று சாக்ஷி சொல்லப்போக எத்தனித்தபோது எனம், ஆசீர்வாதம் ஐயரவர்களும் மற்றும் சிநேகிதர்களும் இவர்கள் மனைவியும் இவர்களின் பலஹீனத்தை அறிந்து அங்கே போகக்கூடாதென்று தடுத்து, அந்தச் சபையாரைக்கொண்டு படிகட்டச் சொல்லி, கேஷே பிரதிநிதிகள் மூலமாய் இவ்விடத்திலேயே விசாரிக்கலாமெனச் சொல்ல, ஐயோ! சபையார்கள் ஏழைகளாச்சுதே அவர்கள் காரியம் கெட்டுப்போகுமே நான் போகத்தான் வேண்டுமென்று சொல்லிப் புறப்பட்டுப்போகிற வழியில், அதிகவுஷ்ணத்தினாலும், வண்டிச் சவாரியினாலும், தேகம் அதிகமாய்க் குலுங்கினதினால் ஜாவரட்டியுண்டாயிற்று. ஸ்ரீவைகுண்டம் போனதின் பேரில் வைக்கீல் N. யோசேப்பு ஐயாவர்கள் இவர்களின் சரீர தளர்ச்சியைக்கண்டு வேண்டிய உபசரணைகளைச்செய்து கோட்டாரவர்களிடத்தில் இவர்கள் சாக்ஷியம்



அவசியமில்லையென்று தெரிவித்து அவ்விதம் தீர்மானித்தபின், அன்றிரவிலேயே வீடுவந்து சேர்ந்தார்கள். 8௳ யன்று கண்கள் இரண்டும் சோர்ந்து தேகபலவீனமும் அதிகரித்தது. 9௳ தன் மனைவியைப் பார்த்து தன்னுடைய அங்கி வெள்ளையாயிருக்கிறதாவென்று கேட்டார்கள். 10௳ காலையில் பெரிய தேவாலயத்தில் சங்கீதம் 22:11. என்னைவிட்டுத்தூரமாகாதேயும் ஆபத்து கிட்டியிருக்கிறது சகாயம் செய்வார் யாருமில்லை என்று ஜனங்களுக்குப் புத்தி சொல்லுகிற சமயத்தில், ஐயரவர்கள் கர்த்தரிடத்தில், மரணமாகிய ஆபத்து தனக்குக் கிட்டியிருப்பதினால், தான் சேவித்துவந்த கடவுள் மரணமாகிய யோர்தான் நதியைக் கடக்கும் சமயத்தில் தனக்கு துணைநிற்க அவருடைய திருக்கரத்தின் உதவி அவசியம் வேண்டியதென்பதாய், என்னைவிட்டுத் தூரமாகாதேயும், கர்த்தாவே என்று சொன்னதுபோலிருந்தது. கர்ப்பத்திலிருந்து வெளிப்பட்டபோதே உமது சார்பில் விழுந்தேன் நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல் நீர் என் தேவனாயிருக்கிறீர் என்று சொல்லக்கூடியவர்களாயிருந்த ஐயரவர்கள் தன் ஜீவனின் ஓட்டத்தை முடிக்கும் தருணத்தில் என்னைவிட்டுத் தூரமாகாதேயும் கர்த்தனே என்று சொல்லாதிருப்பதெப்படி, மறுநாள் தலையில் பத்துப்போட்டுக் கொண்டார்கள். 14௳யாகிய ஞாயிற்றுக்கிழமை காலையில் ஒழுங்காய் வாசித்து வருகிற காலை தியானத்தில், மேலானவைகளைத் தேடுங்கள் "கொலோ. 3: 1 என்கிற வாக்கியத்தின் மேலெழுதியிருந்த தியானத்தை வாசித்து, அதின் முடிவில் எழுதியிருந்த "ஆத்மாவே எழும்பு மேலான பங்கைத் தேடு லோகம்விட்டுத் திரும்பு பரமஸ்தலம் நாடு, என்ற பாட்டையும் வாசித்து முடித்தபின் ஐயரவர்கள் ஜெபம்பண்ணினார்கள். பின்பு ஸ்நானம் செய்து வழக்கப்படி காலை ஆகாரத்தைப் புசித்து பலஹீனத்தினால் கோவிலுக்குப் போகக்கூடாமல் வீட்டிலிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தார்கள். தன் மனைவியை நோக்கி நீ, இன்று காலையில் பண்ணைவிளை கிராமத்திலுள்ள ஓய்வுநாள் பள்ளிக்கூடத்தைப்போய்ப் பாராமல் நமது வீட்டுக்குச் சமீபத்திலேயே பங்களாக் குடியிருப்பிலுள்ள ஓய்வுநாள் பள்ளிக்கூடத்துக்குப்

போய் வருவது நலமாயிருக்குமென்றார்கள். ஒருநாளாகிலும் இவ்விதம் சொல்லாதவர்கள் இன்று இப்படிச் சொல்லுகிறதற்கு ஏதோ காரணமிருக்கவேண்டுமென்று நினைத்து, அவர்கள் விருப்பத்தின்படியே செய்தார்கள். மேலும் பள்ளிக்கூடத்துப் பையன்களில் ஒருவனை தன்னோடு கூடவே யிருக்கவேண்டுமென்று விரும்பினார்கள். இதற்குமுன் அவர்கள் இவ்விதமாய் விரும்பினதேயில்லை. மத்தியான ஜெபத்திற்கு இந்தப் பையனை கோவிலுக்குப் போகச் சொல்லி, இவர்களுடைய ஐந்தாவது குமாரத்தியின் மகளை அந்திரேயா மரே, என்பவர் எழுதின மனத்தாழ்மை பரிசுத்தத்தின் அலங்காரம் என்னும் புஸ்தகத்தின் 9-ம் அதிகாரத்தில் மனத்தாழ்மை விசுவாசம் என்பதின் பேரில் எழுதியிருந்ததை வாசிக்கச் சொல்லி "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல் ஒருவராலே ஒருவருக்கு வருகிற மகிமையைத் தேடுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்களென்கிறது" மூல வாக்கியத்தையும் வாசிக்கக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இவ்வாக்கியமானது இவர்களில் சிறந்து விளங்கிய உத்தம குணங்களில் மனத்தாழ்மை ஒன்றென்றும் அதிலொன்றென்றும் பரிசுத்தஆவியானவர் இச்சமயத்தில் சாக்ஷிகொடுத்தது போலிருந்தது. ஏனெனில் தேவதாபக்தியுள்ளவர் இவரானென்று ஒருவனை அறியவேண்டுமானால் மனத்தாழ்மையென்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் தெரியவரும். தேவனுக்குப் பெருமையும் இறுமாப்பும் உள்ள பிள்ளைகள் கிடையாது. மாலை மூன்று மணிக்குப் பெண்களுக்குக் கூட்டம் வைத்து இவர்கள் மனைவி தன் மனைக்குத் திரும்ப வந்தபோது மிஷனெரி சங்கத்திற்குக் காணிக்கை எவ்வளவு சேர்ந்தது என்று ஐயரவர்கள் கேட்க, ரூ ஒன்று, அணா மூன்று, பைசா மூன்று, என்று சொல்ல ஜனங்கள் மனப்பூர்வமாய்க் கொடுத்திருக்கிறார்களென்று ஐயரவர்கள் சந்தோஷமடைந்தார்கள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூன்று மணிக்குப் புருஷர்களுக்குத் தன் வீட்டிலேயே வேதபாடம் நடத்துகிறது



வழக்கம். அதின்படியே அன்றையத்தினம் சபையாரிலிருந்து சிலர் கூடிவந்து வாசித்து அவர்களில் ஒருவர் ஜெபிக்க ஐயரவர்கள் ஆசீர்வாதம் கூறினார்கள்.

சாயங்காலம் 4½ மணிக்குக் கொஞ்சம் பலகாரமும் பாலும் சாப்பிட்டு சற்று இளைப்பாறி 7 மணிக்கு வழக்கமாய் வாசிக்கிற மாலைத்தியானத்தில் யாக்: 4. 8 "தேவனிடத்தில் சேருங்கள் என்கிற வாக்கியத்தின்பேரில் எழுதியிருந்த தியானத்தையும், இயேசுநாதர் வழியாம் அவராலே மோக்ஷம் சேருவோம், நாம் அவரால் பிதாவின் சமுகம் கண்டென்றும் மகிழ்வோம்" என்ற இன்பமான ஞானப்பாட்டையும் வாசிக்க இவர்கள் மனைவி ஜெபம் பண்ணினார்கள். அதன்பின் மாலை ஆகாரத்தைப் புசித்து 9 மணிக்குக் கொஞ்சம் பால் சாப்பிடும்போது பால் ருசியில்லையே என்றார்கள்.

இவர்கள் நாலாவது குமாரத்தி வேயாள் அம்மாளோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுது அந்த அம்மாள் பெருங்குளத்திலுள்ள இந்துமார்க்கப் பிள்ளைகளுக்கு அன்றையத்தினம் ஓய்வுநாள் பள்ளிக்கூடம் வைத்து வந்ததாய்ச் சொல்ல, எப்படி பிள்ளைகளை அனுப்பினார்கள் என்று ஐயரவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஏனென்றால் இந்தக் கிராமத்தில் சில இந்துமார்க்கத்து பிள்ளைகள் கிறிஸ்தவர்களானபடியால், அவ்வூரார் தங்கள் பிள்ளைகள் வேதபாடம் படிக்கிறதற்கு மனமற்றவர்களாயிருந்தார்கள். அவர்களைப்பார்க்கிலும் தேவன் பெரியவரல்லவா என்று இவர்கள் குமாரத்தி சொல்ல "ஆம் அது நிச்சயம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்றார்கள். இதுதான் இவர்கள் சொன்ன கடைசி வார்த்தைகள். சற்றேறக்குறைய 10 மணிக்கு தனி ஜெபம் பண்ணி அமைதலாய்ப் படுத்துக்கொண்டார்கள். 11½ மணிக்கு விழித்திருக்கிறதாக தெரியவந்தும், அவர்கள் தியானம் பண்ணிக்கொண்டிருக்கிறது வழக்கமானபடியால் அதற்கு இடையூறு உண்டாகுமென்று அவர்கள் மனைவி நினைத்து எழுப்பிவிடவில்லை. 12 மணிக்குத் திடீரென்று சிலேத்துமம் எழும்பி தொண்டைக்குள் கறகறவென்ற சத்தம் கேட்

டது. உடனே அவர்கள் மனைவி வந்து பார்க்கும்போது, மரணக் குறிப்புள்ளவர்களாய்க் காணப்பட்டார்கள், அவர்கள் வலதுகையைப் பிடித்து எத்தனை பேருக்கு நன்மை செய்த கையென்றும், அவர்கள் கால்களைத் தொட்டுப் பார்த்து ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும்பொருட்டு அங்குமிங்கும் நடந்த எவ்வளவு மேன்மைபொருந்திய அழகான பாதங்களென்றும், அவர்கள் மனைவி சொல்லி கண்ணீர் சொரிந்து கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். ஐயரவர்களுக்குப் பேச நாவு எழும்பாதிருந்தபோதிலும், துக்கப்படாதே நான் என் பரமபிதாவினுடைய வீட்டுக்குப் போகிறேன், என்று வகைசைகை காட்டினார்கள். இவர்கள் இரண்டாவது குமாரத்தியும் இடது கையைப் பிடித்து பிரேசித்துக்கொண்டு இருக்கும்பொழுது அவ்விதமே கைசைகை பண்ணினார்கள். பிள்ளைகளுக்குத் தந்தி கொடுக்கலாமாவென்று கேட்டபொழுது அரைகுறையான வார்த்தைகளோடு நடுவுள்ளவனுக்குத் தந்தி என்று வாய்க்குள் சப்திக்கக் கேட்டது. தானியேல் டிரசர் என்ற இந்தக் குமாரர் இவர்களை இரண்டு வருஷத்துக்குமுன் வந்து பார்த்த மைனுருக்குத் திரும்புகையில் நீ இனிமேல் என்னை இங்கே பார்க்கமாட்டாய் மோட்சத்தில் பார்ப்பாயென்று ஐயரவர்கள் சொல்லியிருந்தார்கள்.

ஏனோக்கு என்னும் பக்தன் "தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருக்கும்பொழுதே காணாமற் போய்விட்டான் கர்த்தர் அவனை எடுத்துக்கொண்டார்" என்று சொல்லியவாறு ஐயரவர்கள் விடியற்காலம் 5 மணிக்கு கர்த்தருடைய ராஜ்யமடைந்தார்கள். ஓய்வுநாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று சகல பணிவிடைகளையும் செய்து இளைப்பாறவேண்டிய காலத்தில் பரம ஓய்வுக்குள் பிரவேசித்தார்கள். அதுமட்டும் இவர்கள் மனைவியும் இரண்டாவது மகளாகிய லேயாளம்மாளும் மூன்றாவது மகளாகிய ராகேலம்மாளுடைய மூத்த மகளும் இவர்களிடத்தில் அன்பு வைத்திருந்த சபையாரும் கூடவேயிருந்தார்கள்.

இவர்கள் உத்தம தோழனும் உடன் வேலைக்காரருமாயி



ருந்த கனம் ஆசீர்வாதம் ஐயரவர்கள் இந்தச் சமயத்தில் சபை
விசாரணைக்காக வெளிக் கிராமங்களுக்குப் போயிருந்தமை
யால், பகல் 9 மணிக்கு இந்தத் துக்கமான செய்தியைக் கேள்
விப்பட்டு, ஆச்சரியத்தோடும் கவலையோடும் பண்ணைவிளைக்குத்
திரும்பி வந்தார்கள். பண்ணைவிளையின் பெரிய தேவாலயத்
தில் துக்கமணி அடித்துக்கொண்டிருந்தது, இந்தச் செய்தியை
சுற்றுக் கிராமங்களிலுள்ள சபையாரும் இந்துமார்க்கத்தாரும்
கேள்விப்பட்டு அதிகாலையில் ஐயரவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்
தார்கள். பாளையங்கோட்டையிலிருந்த குமாரனாகிய மிஸ்டர்
ஜான் ஈசாக்குத் தேவரவர்களும் அவர்களுடைய குடும்பத்தாரும்
ஆறாவது குமாரத்தி மேரியம்மாளும் அவர்கள் குடும்பத்தாரும்
பண்ணைவிளை வந்து சேர்ந்தார்கள். ஐயரவர்கள் தேகத்தைச்
சுத்திசெய்து வெள்ளை அங்கியைத் தரிப்பித்து 50 வருஷமாய்ச்
ஜெபித்து வசித்திருந்த அந்த அறையிலேயே வைத்திருந்தார்கள்.
அவர்கள் முகம் நித்திரை செய்கிறவர்கள் முகம் போலாகி மிக
வும் பிரகாசித்துக்கொண்டிருந்தது. இவர்களுடைய கை கால்
களை மிகவும் எளிதாய் நீட்டவும், மடக்கவும், ஏதுவாயிருந்தது.
ஆறாவது குமாரத்தி மேரியம்மாளுடைய பிள்ளைகள் வெள்ளை
ரோசாப்பூ அத்தரையும், சந்தன அத்தர் நிறைந்த இரண்டு குப்
பிகளையும் திறந்து ஐயரவர்கள் முகத்திலும் கை கால்களிலும்
பூசி ஆனந்தக் கண்ணீர் விட்டார்கள். ஏனெனில் ஐயரவர்கள்
பலவீனமடைந்த வருஷங்களில் மூன்றரை வருஷமாய் இவர்க
ளோடு இந்தப் பிள்ளைகள் கூடயிருக்க நேரிட்டதினால், அவர்
களுடைய அன்பையும் மதுரமான குணங்களையும் நன்றாய்
ருசித்திருந்ததுமன்றி, அந்தக் காலங்களில் ஐயரவர்களுக்குப்
பகலிலும் இரவிலும் வேண்டிய பணிவிடைகளைச் செய்து மிக
வும் கீழ்ப்படிதலாய் நடந்து, அவர்களுடைய சம்பூரண ஆசீர்வா
தங்களைப் பெற்றார்கள். இவர்கள் ஐயரவர்களை விட்டுப் பிரிந்த
இரண்டரை வருஷங்களிலும் தனக்கு உதவிக்கு ஆள் வேண்
டும்போதெல்லாம் இடீரென்று ஐயரவர்கள் ஜான், எட்வார்டு,
உவில்லியம், பிரிட்டன் என்கிற பேரை மாற்றி மாற்றிக்

கூப்பிட்டு அதன்பின் சமீபமாயிருக்கிற ஆட்களின் பேரைச் சொல்லுவார்கள்.

பெருங்குளத்துத் தேவமார் இவர்களுடைய சரீரத்துக்கு செய்யவேண்டிய மரியாதைகளை எல்லாம் தாங்களே செய்வோமென்று ஓடிவந்து தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். என்றாலும் சபையாரும் மிஷியோன் ஆசாமிகளும் கனம் ஆசீர்வாதமய்யரவர்களும் இந்த திருமேனிக்குச் செய்யவேண்டிய கடமைகளை தாங்களே செய்து கனப்படுத்தவேண்டுமென்று அவர்களைத் தடுத்துக்கொண்டார்கள். வந்திருந்த சிநேகிதர்களும், சபையாரும் பார்க்கும்படி சாயங்காலத்தில் பெட்டியை வீட்டுக்கு வெளியே கொண்டுவந்து வைத்தார்கள். இந்த பெட்டி உள்ளும் புறமும் புஷ்பங்களால் நிறைந்திருந்தன. திரளான ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் வந்து பார்த்தார்கள். சாயங்காலம் 5½ மணிக்கு மிஷியோன் உத்தியோகஸ்தர்களாகிய உபதேசிமார்களும், உபாத்தியாயர்களும பெட்டியை சுமந்துகொண்டுபோக இவர்களுடைய மகன் ஜான் ஈசாக்கு தேவரும் பேரன்மார்களும், ஸதிரீகளும், ஒரு பக்கத்திலும் மறு பக்கத்தில் சபையாரும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும், ஞானப்பாட்டுகளைப்பாடி பெட்டிக்குப்பின் நடந்து கோவிலின் பிரதான வாசலில் வந்தபோது கனம் ஆசீர்வாதமய்யரவர்கள் பெட்டியின் முன் பக்கம் வந்து வாசிக்கவேண்டிய வாக்கியங்களையும், ஜெபங்களையும் வாசித்து கோவிலுக்குள் கொண்டுபோய் வைத்தார்கள். இச்சமயத்தில் கூடிவந்திருந்த எல்லாருடைய இருதயமும் துக்கத்தினால் நிறைந்து கண்களில் கண்ணீர் மாலைமாலையாய்ச் சொரிந்துகொண்டிருந்தது.

ஆராதனை முடிந்தபின் பெட்டியைச் சுமந்துகொண்டு வெளியே போகும்போது "எப்போ காண்பேனோ" என்கிற பாட்டையும், "அருந்துணை யில்லையே எனக்கு ஆகியாம் இருப்பாவ" என்கிற பாட்டையும் எல்லாரும பாடிக்கொண்டு, கோவிலுக்குத் தென்பக்கமாய் நடந்துபோகையில் சில ஏழைகளான கிறிஸ்தவர்கள் "தகப்பனே தகப்பனே" என்று



சொல்லி கண்ணீர்விட்டழுது, ஏழைகளாகிய எங்களுடைய வீடுவீடாய் வந்து சந்தித்து உதவிசெய்து ஆறுதல் செய்வீர்களே. இனி யார் எங்களுக்கு உதவிசெய்யப்போகிறார்களோ என்று துக்கித்தார்கள். கற்பனை அலங்காரமாய்ப் பேசத்தக்க சக்தியுடையவர்களாயிருப்பார்களானால் இஸ்ரவேலருக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவர்களே நற்சமாரித்தனைப்போல சகலவகையான பெரும்பாதகங்களைச் செய்தவர்களையும் ஏற்றுக்கொண்டவர்களே, இயேசு சுவாமியைப்போல நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தவர்களே, கலைஞானத்தால் மதிமயங்கி நின்றவர்க்கு கருணாகரக்கடவுளைக் காட்டினவர்களே என்று சொல்லி பரிதாபித்துப் புலம்பியிருப்பார்கள்.

பெட்டியை கோயிலுக்கு வடமேற்கு சுவரோரத்தில் இராப்போஜன அறைக்குச் சமீபமாய் காரையினால் கட்டியிருந்த சமாதியிலிறக்கி ஆராதனை முறையின்படி ஜெபங்களை நடப்பிக்க ஜனங்கள் மண்ணுக்குப்பதிலாக புஷ்பங்களைப் போட்டார்கள்.

கோவிலிலே நடந்த ஆராதனைக்கும் அடக்கம்பண்ணும்போதும் கனம் பூத்தையரவர்களும் கனம் மெக்டீயர் ஐயரவர்களும் வந்திருந்தார்கள்.

இவர்களுடைய இளைய மருமகன் பாளையங்கோட்டையில் இச்சமயத்திலில்லாததினால் இத்துக்கமான சங்கதியைப் பிந்திக் கேள்விப்பட்டு விரைந்து வந்தும் கல்லறை கட்டிக்கொண்டிருக்கிற சமயத்தில்தான் வந்துசேர்ந்து, தான் கொண்டுவந்த பூமாலையை அவர்கள்மேல் பூண்டிருந்த அன்புக்கும் கன்னியத்திற்கும் அடையாளமாகக் கல்லறையின்மேல் வைக்க அதின் மேல் கட்டிடத்தை எழுப்பிக் கட்டினார்கள். மார்ச்சு மீ இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையில் கனம் ஆசீர்வாதமையரவர்கள் பண்ணைவிளை பெரிய தேவாலயத்தில் கூடிவந்த ஜனங்களுக்கு நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்களும் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்கிற வாக்கியத்தை வாசித்து ஐயரவர்களின் குணாதிசயங்களைக்

குறித்து பிரசங்கித்தார்கள். "அவர் மரித்தும் இன்னும் பேசுகிறார்".

ஐயரவர்களுடைய கல்லறை கட்டப்பட்டு சுற்றிலும் இரும்புக் கிராதிகள் வைத்து கதவுபோட்டிருக்கிறது. ஞாபக கல்லில் பின்வருமாறு இங்கிலீஷிலும் தமிழிலும் எழுதியிருக்கின்றன.

"கனம் ஈசாக்கு ஆபிரகாம் ஐயர் 1829-ம் வரு நவம்பர்மீ 28உ சீவலப்பேரியில் பிறந்து 1904-ம் வரு மார்ச்சுமீ 14மீ தன் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்குமட்டும் கர்த்தருடைய வேலைகளை அன்பினாலே செய்துவந்தார்".

"ஏனெனில் தேவன் தாமே கட்டியுண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்திற்கு அவன் காத்திருந்தான்". எபி 11: 10.

## அனுபந்தம்.

இச்சரித்திரத்தை வாசிக்கிற சிநேகிதர்களே சீவலப்பேரியில் கருவேலமரத்தடியில் பசியினாலும் தாகத்தினாலும் சோர்ந்து படுத்திருந்த இளைஞனை நல்லகண்ணு என்று பேர் வழங்கிய ஈசாக்கு ஐயரவர்களைக் கவனித்தீர்களா? அவர்களுக்கு வழிகாட்டியும் வழிக்கு ஒளியுமாயிருந்து, நம்மைப்போல சகல விஷயத்திலும் மனுஷீகத்தன்மையை உடைத்தாயிருந்த அவர்களின் பாவ இருளைப்போக்கி, பரோபகாரியாக்கி, பரிசுத்தவான்களின் கூட்டத்திற்குப் பங்காளியாகவும், ஜோதியில் ஜோதியான பரஞ்ஜோதியின் வெளிச்சத்தையடைந்து, பாவ மாமிச உலகத்தை ஜெயித்த ஜெயவீரனாக விளங்கவும் செய்த மகத்துவக் கடவுளை நோக்கி நம்மையும் ஆண்டடிமைகொண்டு ஆதரித்து பாவசமாக்கப் பிரார்த்திப்போமாக. ஈசாக் ஆபிரகாம் ஐயரவர்கள் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தவர்கள் என்று பார்த்தோம். மகத்துவமான வேலை செய்பவருக்கும் பரோபகாரத்தை நாடி மேலான நோக்கமுள்ளவர்க்கும் மாத்திரம் இந்த ஆவியின் பூரண ஆசீர்வாதங்கள் கிட்டும்.

கிறிஸ்துமார்க்கம் ஐரோப்பா கண்டத்தில் அநேக நாட்களாய் கிரியை செய்கின்றது. இந்தியாவில் கிறிஸ்துமார்க்கத்தின் துவக்கமென்றே சொல்லவேண்டும். என்றாலும் நம்முடைய சுதேச சபையில் கல்வியும், நாகரீகமுமுடையவர் அநேகருண்டு. அவர்களில் பலர் திரவியத்தை சம்பாதித்து சந்தோஷத்தை நாடி தங்கள் நாட்களைக் கழிக்கிறார்கள். இவர்களில் கன்னியமும் சன்மார்க்கமுமுள்ள சிலருண்டு. [illegible] அதனால்வரும் சந்தோஷத்தைத் தேடுவதிலுமே அவர்களின் விசேஷ எண்ணமாயும் முயற்சியாயும் இருக்கிறார்கள். சில போதக

மாரும்கூட இவ்விதமான நோக்கமுடையவர்களாயிருப்பது ஆச்சரியமே.

இப்படிப்பட்டவர்களின் ஜீவியத்திற்கும் இப்புஸ்தகத்தில் கண்டிக்கிற ஜீவியத்திற்கும் இருக்கிற வித்தியாசம் கொஞ்சமா! சூரிய வெளிச்சத்திற்கும் மின்மினி பூச்சியின் வெளிச்சத்திற்கும் எண்ணெய்க்கும் தண்ணீருக்குமுள்ள வித்தியாசத்தைப்போல இருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் சந்தோஷத்தையே நாடுகிறவர்கள் திடீரென யாதொரு காரணமில்லாமல் இனத்தார் மரிக்குங்கால் பாவவுணர்ச்சி சற்று தோன்றி மயான வைராக்கியம்கொண்டு உலகம் சதமாகுமா என்பார்கள். மறுபடியும் சுத்தமாக்கப்பட்ட பன்றி சேற்றில் புரளுவதுபோல இப்பிரபஞ்சத்தின் ஆசாபாசத்திற்குள் அமிழ்ந்து விடுவார்கள். இருண்ட நடுச்சாமத்தில் கார்மேகம் நிறைந்து நிற்கும்போது இருகண்கள் கூசத்தக்கதாக மின்னல் மின்னுவதைப்போல, பாவ இருளால் மூடிக்கிடக்கிற இருதயத்தில் தயாநிதியாகிய கடவுள் மெய்ஞ்ஞான உணர்வாகிய மேகத்தினின்று ஒழுகும் கதிர்களாகிய மின்னல்வீச, பாவி தன் இருண்ட இருதயத்தின் பாவத்தின் அகோரத்தைக் கண்டு சற்று கூசினாலும், மறுபடியும் அவன் இருதயம் இருளாகவே இருக்கிறது. என்றாலும் இச்சீவனின் சந்தோஷத்தையே பெரிதென்று அனுபவித்து நிற்கும்போது, மரண நிழலின் பள்ளத்தாக்கை நினையாத வேளையில் கடக்கவேண்டுமே. ஆகையால் மறுமையில் என் கதி என்னமாயிருக்குமென்று உணர்ந்தால் சர்வலோக நியாயாதிபதியாகிய கடவுளுக்குமுன்பாக ஒரு காலத்தில் நிற்கவேண்டுமேயென்று எண்ணினாலன்றி இச்சீவமார்க்கத்தின் பரிசுத்தமான வழியில் நடக்கவும், பரோபகாரத்தை நாடவும் சற்றேனினும் கூடாது. "தன்னை அறிந்தவன் தலைவனாகிய கடவுளையறிவான்." ஆயர்களின் ஜீவகாலத்தில் ஒவ்வொரு நிமிஷத்தின் எண்ணங்களையும், செய்கைகளையும் குறித்து திட்டமாய் ஒரு புஸ்தகம் எழுதிவைத்திருந்தால் அதில் தான், நல் காரியம், அபாயம் என்பவை [illegible]



மற்றவர்களாய் இருந்தார்களென்று தெரியவரும், தனக்கென்று ஆறே ஆறு மரப்பலகைகளைமாத்திரம் ஒரு கவைக்குவேண்டுமென்று வைத்திருந்தார்களே. அவைகள்தான் இவர்கள் தேகத்தை அடக்கம்செய்யும் பெட்டிக்கு உதவினது. பனங்காட்டில் வாசம்பண்ணியிருந்த இவர்கள் தன்னுடைய தேகத்தை அடக்கம்செய்வதற்கு ஒருவருக்கும் வருத்தம் கொடுக்கக்கூடாதென்று நினைத்தே இப்பலகைகளைச் சம்பாதித்து வைத்திருந்து, உண்மையுள்ள ஊழியக்காரனாக தன் ஜீவனின் ஓட்டத்தை முடித்தார்கள்.

சமுசாரமாகிய சாகரத்தைத் தாண்டிவந்த இவர்கள்மேல் எத்தனை அல்லல் தொல்லல்களாகிய அலைகள் அடித்திருக்கும். அப்படியிருந்தும் யோபைப்போன்ற பொறுமையுள்ளவர்களும், ஈசாக்கைப்போன்ற சாத்வீகமும் ஆபிரகாமைப்போன்ற உயிருள்ள விசுவாசமும் உடையவர்களுமானதினாலே இச்சீவனிலேயே சாயுச்சபதவி அடைவது கூடியதெனக் காட்டினார்கள்.

இந்துமார்க்கச் சிநேகிதர்களே, இந்துக்களைப்போல மார்க்கவிஷயத்தில் சிரத்தையுள்ளவர்களும் யதார்த்தமாய் கடவுளுடைய அடியார்களாயிருக்கிறவர்களை நன்குமதித்து கனப்படுத்துபவர்கள் வேறொரு தேசத்தாருமில்லை. இந்துக்களுடைய வேதசித்தாந்தங்கள் மிகவும் மெச்சிப் பேசப்படுகின்றன. ஆகிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் உலகத்தில் 40 கோடி கிறிஸ்தவர்கள், கல்வியும் நாகரீகமுள்ளவர்களாயும், சகல தேசங்களையும் ஜெயித்து ஆண்டு நடத்தத்தக்க திறமையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். இங்கிலீஷ்காரரும் மற்றும் ஐரோப்பியரும் கிறிஸ்தவர்களல்லவா? எத்தனை முடிமன்னர் கிறிஸ்துவைத் தொழுகிறார்கள். ஐரோப்பா தேசத்தில் மூன்று லட்சம் ஜனத்தொகையுள்ள சுவிடென், டென்மார்க், பெல்ஜியம், ஒலாந்து, சுவிச்சர்லாந்து முதலிய சின்னத் தேசங்கள்கூட ஜய அரசு புரிகின்றனவே! எத்தனையோ இயந்திரங்களை, எத்தனையோ சூட்சங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஐரோப்பிய ஸ்திரீகள் பேரிலிருந்த நுகத்தடி நீங்கி அவர்கள் ஸ்வாதீனர்களாகி, கல்வி நாகரீகமடைந்தவர்களாய் தங்கள் தேசத்துக்குச் சொல்லவொண்ணாத நன்மைகளை விளைவிக்கும் கருவிகளாயும் இருக்கிறார்கள். அவர்களுடைய எத்தனையோ சங்கடங்கள் நீங்கியிருக்கின்றன. அநாத பிள்ளைகளுக்கும், செவிடருக்கும், ஊமையருக்கும், சப்பாணிகளுக்கும், விருத்தாப்பியர்களுக்கும், தீராத நோயுடையவர்களுக்கும் ஆயிரம் ஆயிரமான தர்மசாலைகள் விநோத மாளிகைகள்போல ஸ்தாபிக்கப்பட்டு அவைகளில் அவர்களை வைத்து கரிசனையோடும் அன்போடும் பாதுகாத்துவருகிறார்களே, மற்ற நோயினால் வருந்துகிறவர்களுக்கும், பிரசவ வேதனைப்படுகிற ஸ்திரீகளுக்கும் சகாயத்திற்காக ஒதுக்கிடமான வைத்திய சாலைகளையும் ஸ்தாபித்து இருக்கிறார்கள். அவர்களில் எத்தனையோ ஆண்களும் பெண்களும் பரிசுத்தமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களில் வலியவர்கள் ஆயிரக்கணக்கான பவுன்களையும் எளியவர்கள் தங்கள் ஆகாரத்தையும் பானத்தையும் ஒறுத்து கால் துட்டும் அரைத்துட்டுமாகச் சேர்த்துக்கொடுத்து, இந்தியா, சீனா, ஜப்பான், ஆப்பிரிக்கா முதலிய தேசங்களில் மிஷனரி வேலைக்காக கைமாறில்லாமல் அனுப்புகிறார்களே. இவர்களுக்குக் கிடைக்கிற பிரதிபலனென்ன? இவர்களில் சிலர் நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களும், கல்வி சாஸ்திரங்களில் தேறின நிபுணர்களும் தங்களை வெறுத்து அன்னிய தேசத்துக்கு மிஷனரிகளாய் வந்த பரோபகாரிகளாயிருக்கிறார்களே. ஒருகாலத்தில் இங்கிலாந்து தேசத்தின் மேன்மைக்கு காரணமென்னவென்று ஆப்பிரிக்கா தேசத்து அரசன் ஒருவன் கேட்க, கிறிஸ்தவர்கள் வைத்திருக்கிற வேதபுஸ்தகம் ஒன்றைக் கொடுத்து இதுதான் அவர்கள் மேன்மைக்கு காரணமென்று மகா ராணியவர்கள் சொன்னார்களாம்.

ஐரோப்பா கண்டத்தில் ஐரோப்பியரின் மேன்மைக்கும் தேர்ச்சிக்கும் அவர்கள் தேசத்திலிருக்கிற குளிர்ச்சிதான் காரணமென்று சொல்வீர்களோ! இரண்டாயிர வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவில் குளிர்ச்சியிருந்ததில்லையா, ரோமர் போர்க்



கப்பல்களில் சில பால்டிக் சமுத்திரத்தின் ஓரமாய் நின்று சுவீடன் தேசத்தில் ஜனங்கள் இருக்கிறார்களோ என்று பார்க்கும்போது, அநேகம் காடிகள் காட்டுக்குள் அலைகின்றனவாகக் கண்டுவந்து ரோமாபுரியில் தெரிவித்தார்கள். அந்தக் காடிகள் மிருகங்களா? அல்ல, மனுஷர்களல்லவா அந்த நிலைமையிலிருந்தார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலுமிருக்கிற அதிசய காட்சி சாலைகளைப்போய் பார்ப்பீர்களானால் அங்கே குற்றம் செய்த ஸ்திரீகள் கழுத்துகளில் கட்டி தொங்கவைத்திருந்த இயந்திரக்கல்லை காணலாம், மனுஷர்களை சித்திரவதை செய்த சண்டாளக் கருவிகளை அங்கே கண்டுபிடிக்கலாம், மனிதன் மற்றொரு மனிதனுக்கு தன்னை சகோதரனாகவும், சிநேகிதனாகவும் காண்பிக்கிறதற்குப் பதிலாய் ஒரு ஓநாயாயும், கடவுளுக்கு பாம்பாயும், தனக்கு தேளாயும் காட்டினதற்கு அத்தாக்ஷியான சின்னங்களை அங்கே கண்டெடுக்கலாம். இவைகளெல்லாம் அங்கே நடக்கும்போது குளிர்ச்சியிருந்ததே, மூடுபனியும் இறங்கி உறைந்த மழையும் அங்கே பெய்துகொண்டிருந்ததே. மார்ச்சு மாசக்காற்றும், ஏப்பிரல் மாச சாரலும் மேய் மாசத்தில் காட்டில் புஸ்பங்களை பூக்கச்செய்து கொண்டிருந்ததே. அப்படியிருக்க அந்த காலங்களில் நிர்மானுஷிகம் ஐரோப்பா முழுவதிலும் நிறைந்திருந்ததில்லையா. இந்த சொல்லவொண்ணாத நிர்மானுஷிகமானவைகளை நீக்கி ஐரோப்பா முழுமையையும் ஜோதிமயமாக்கி வைத்தது கிறிஸ்துமார்க்கமல்லவா? ஆனால், அவர்கள் தேவதூதர்களென்று நான் சொல்லுகிறதில்லை. அவர்களும் நம்மைப்போல பாடுள்ள மனுஷர்களாயிருந்தும் கிறிஸ்துவால் மேல் காட்டிய சலாக்கியங்களை யடைகிறார்கள். பூர்வீகத்தில் மற்ற தேசங்களிலும் பற்பல வகையான நாகரீகம் சீர்திருத்தமுண்டாயிருந்தது. என்றாலும், அவைகளெல்லாம் குறைவுபடத் துவக்கி மங்கி மறைந்துபோயின. ஐரோப்பாவில் அநேக நூற்றாண்டுகளாய் நாகரீகமும் சீர்திருத்தமும் பரவிக்கொண்டு [illegible]வைகள் மங்காமலிருப்பதற்கு கிறிஸ்து மார்க்கத்தினாலே அவைகள் சாரமேற்றப்பட்டு வருகின்றன. ஆகையினாலே அந்த நாகரீகம் குறையாமல் இ[illegible]

ஆனால், ஐரோப்பியரான சில ஆண்களும், பெண்களும் இந்தியாவுக்கு கிறிஸ்துமார்க்கம் அனாவசியம், அவர்கள் வேதங்கள் யோகங்களே போதுமென்று சொல்லுகிறார்கள். இவர்களை நம்முடைய சிநேகிதர்களென்று நம்பக்கூடாது. இவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு வருகிற ஓநாய்கள். இப்படிப்பட்டவர்களே ஐரோப்பாவிலும் கிறிஸ்துமார்க்கம் வேண்டாமென்று சொல்லுகிறவர்கள். புத்திதீட்சண்யமுள்ள என்னுடைய நாட்டாரே, கிறிஸ்துமார்க்கம் தங்கள் தேசத்தை உயர்த்தி அதிலிருந்த புண்பொடிகளாகிய சின்பிறக்கப்படாத ஆத்ம ரோகங்களை ஆற்றி, தாறுமாறுகளை சரிப்படுத்தி, சங்கடங்களை நிவர்த்தியாக்கி, அவர்கள் ஸ்திரீகளை மேன்மைப்படுத்தி, ஒவ்வொரு பாஷைக்காரரையும் சுவாதீனமாய் ராஜ்ய பரிபாலனஞ்செய்ய ஏதுவாக்கி, சொல்லவொண்ணாத இரளான நன்மைகளை விளைவித்தபிறகு கிறிஸ்துமார்க்கம் வேண்டாம் வேறே ஒரு மதம் வேண்டுமென்று சொல்வதின் பயன் யாது. இந்தியா முழுவதும் கிறிஸ்தவர்களாகி குழந்தைகளாயிருக்கிற ஆயிரக்கணக்கான கைம்பெண்களின் அநியாயத்தை நீக்கி, பஞ்சமர்களை மனுஷர்போல பாவித்து நடத்தின பின், கிறிஸ்துமார்க்கம் வேண்டாமென்று சொல்லக்கூடியவர்கள் சொல்லிக்கொள்ளலாம். அது மட்டும் இடங்கொடுங்கள். ஒரே மந்தையும் கிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பனுமாகும்போது இந்தியா மற்ற தேசங்களுக்கு சமமாக எழுந்து நிற்கும்.

அப்படியானால் இந்தியாவில் உண்டாகிற நல்மாறுதலுக்கு கிறிஸ்துமார்க்கமும் அதால்வரும் நாகரீகமும் காரணமானால் இங்கிலீஷ்காரரும் மேல்தேசத்து கல்வியும் நாகரீகமும் இங்கே பரவுகிறதற்கு முன்னே, வாக்குறுதியாய் பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம் ரூபாய் வாங்கி யாதொரு தங்கடையில்லாமல் கொடுத்திருக்கிறோமே. இப்போது அச்சப்பத்திரம் வாங்கி ரிஜிஸ்டர் பண்ணி கொடுத்தாலும் அதுவும் பொய்யென்று புரட்டப் பார்க்கிறார்களே இது நன்மையான காரியமாவென்று நீங்கள் கேட்கலாம். ஆனால், காரியத்தை சீர்தூக்கிப் பார்க்கை



யில் மூர்த்தி தெய்வத்தைப்பற்றிய பயமிருந்தது. இப்போது கிறிஸ்துமார்க்கமே மேலானதென்று உபதேசித்து வருவதினால் அநேகர்களுக்குந் இந்த மார்க்கத்தின் பிடிப்புவிட அவர்கள் கிறிஸ்துமார்க்கத்தைச் சேர்ந்து அதன் சத்தியத்தை தழுவி நடவாமல் எந்த மார்க்கமும் தேவையில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிற உலகாயிதர்களானபடியால், வாக்கு சுத்தமில்லாமல் எழுதிக்கொடுத்தவைகளையும் புரட்டப் பார்க்கிறார்கள். கிறிஸ்துமார்க்கக் கல்விச்சாலையில் படிக்கிற மாணாக்கர் கிறிஸ்தவர்களாக வேணுமென்று விரும்புகையில் அவர்கள் பெற்றோர் பற்பல வகையாய் தடுக்கிறார்கள். அந்த வாலிபர் புருஷர்களாய் உலகத்தில் பிரவேசிக்கும்போது பேர்பிரஸ்தாபத்தை அல்லது திரவியத்தையே தேடவேணுமென்ற ஆசையுள்ளவர்களாய் இருக்கிறபடியால் அவர்கள் வழிக்கு உபயோகமான ஒரு வேதமு அவர்கள் இருதயத்தில் இல்லாமற்போகிறது மாமிஷத்தின் கிரியைகள் வெளியரங்கமாகின்றன. அவையாவன விபசாரம், பகை, பொறாமை, கொலை, வெறி முதலியவைகள். ஆனால் இவர்கள் சத்தியத்தையறிந்து தேவனை வழிப்பட்டு வருவார்களானால் அவருடைய ஆவியின் கனியாகிய அன்பு, நற்குணம், விசுவாசம், இச்சையடக்க முதலியவை உண்டாகும்.

இந்துமார்க்கத்தில் சைவசித்தாந்தம், அத்துவைதம் முதலிய எண்ணிறந்த ஞானவழிகள் இருக்கின்றனவென்று சொல்கிறதுமுண்டு. தங்கம் வெட்டி எடுக்கிற சுரங்கத்தில் தங்க மணலாகிய கிளைகள் அங்குமிங்கும் பூமியைச் சுற்றி ஓடுகின்றது போல தெய்வத்தைப்பற்றிய எண்ணம் மனுஷஜாதியாருக்குள் எங்கும் பரவியிருக்கிறதே. ஆனபடியால், நமக்குள்ளிருந்த ஞானிகள் தங்கள் புத்தி எம்மட்டும் எட்டுமோ அம்மட்டும் பற்பல சித்தாந்தங்களை ஸ்தாபித்து வைத்தார்கள். மனுஷனுடைய அறிவு மட்டுள்ளது அவன் ஸ்தாபித்து வைத்திருக்கிற சித்தாந்தங்களும் குறைவுள்ளதே என்று சொல்லவேண்டும். ஒரு நிலைக் கண்ணாடியானது துண்டு துண்டாய் உடைந்தால் அநேகர் ஒவ்

வொரு துண்டை எடுத்து வைத்துக்கொண்டு தங்கள் சாயலை மங்கலாயும் குறைவுபட்டதாயும் அதில் பார்க்கிறார்கள். அத்தன்மைபோல தெய்வசாயலைப் பார்த்துக்கொள்ளும்படி மெஞ்ஞானமென்னும் கண்ணாடியை ஆதி மனுஷனிடத்தில் கொடுக்க அதை அவன் உடைத்தெறிந்து விட்டான். சகல ஜாதியாரும் அதின் ஒரு துண்டை கையில் வைத்து தேவசாயலை மங்கலாய் பார்க்கிறது போலிருக்கிறது. என்றாலும், கிறிஸ்துமார்க்கத்தில் முழு நிலைக்கண்ணாடி இருக்கிறது. என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று கிறிஸ்து சொல்லுகிறார்.

மேலும் சூரிய வெப்பத்தினால் பூமியிலிருந்து நீராவி எழும்பி மேலே போகப்போக இந்த அணுக்கள் ஒன்றாகச் சேர்ந்து மேகமாகின்றன. அவைகள் எவ்விஷயத்திலும் ஒரு தன்மையுள்ளவைகளாயிருந்தும் காற்றினால் பற்பல இடங்களுக்குச் சிதறுண்டு போகும்போது ஒரு இடத்தில் மழையாயும், மற்றொரு யிடத்தில் தும்பைப் பூ போன்ற வெண்மை நிறமான உறைந்த மழையாயும், மற்றொரு யிடத்தில் மூடுபனியாயும் விபரீதப்பட்டுப் போகின்றன. அவைகள் பூமியில் ஒரு சில யிடத்தில் திவ்வியமான சுத்த ஜலமாயும், இன்னொருயிடத்தில் கசப்புள்ள உப்பு ஜலமாயும், மற்றொரு யிடத்தில் சிவந்த நிறமான தண்ணீராயும், நிலம்பற்றிய வித்தியாசத்தினால் மாறுகின்றன. இந்த தண்ணீர்களெல்லாம் ஆகாயத்திலிருந்தபோது மேகம் என்கிற ஓர் தேகத்திலுள்ள ஒன்று போன்ற நாடிகள் வழியாய் பற்பல இடங்களுக்குச் சென்று மேற்காட்டியபடி மாறுதல் அடைகிறதுபோல மனுஜீக உற்பத்தி, ஒரே மூலப்பொருளிலிருந்தும் அவர்களை ஜெனிப்பிக்கும் தன்மை யாதாமொரு வித்தியாசமில்லாமலும் சிருஷ்டித்து இருந்தபோதிலும் இடம்பற்றிய வித்தியாசத்தினால் மனுஷர்கள் ஐரோப்பியர் என்றும் ஜப்பானியரென்றும் காப்பிரிகளென்றும் வித்தியாசப்படுகிறார்களேயல்லாமல் வேறல்ல. லாப்பிலாண்டர் என்றும் பறையன் என்றும் பள்ளனென்றும் பாரசீக தேசத்தானென்றும் பல ஜாதி பேதங்கள் அவர்கள் வாசஞ்செய்த ஸ்தலத்தினா



லும் மற்ற கருவி காரணங்களினாலும் வந்ததென புத்திசாலிகளாகிய யாவரும் ஒத்துக்கொள்ளவேண்டியது. சகல மனுஷரும் ஒரே ரத்தத்தினால் சிருஷ்டிக்கப்பட்டு தெய்வசாயலை இழந்து பற்பல பாவத்திற்குள்ளாகி வைத்தியசாலையும் சிறைச்சாலையும் வேண்டியது அவசியமென்று காட்டுகிறார்கள். ஆகையால் ஐரோப்பியருக்கு வேறே தெய்வமும், இந்துக்களுக்கு வேறே தெய்வமுமுண்டென்று சொல்லயிடமில்லை. இராமசுவாமியின் உடுப்பு கோபாலுக்கு ஆகுமா என்று சொல்லும் திருஷ்டாந்தம் இங்கு ஒவ்வாது. ஐரோப்பியரை சீர்படுத்தி அவர்களுடைய தளர்ந்த முழங்கால்களைப் பலப்படுத்தி மேலே காட்டிய சொல்லவொண்ணாத நன்மைகளைச் செய்துவருகிற கிறிஸ்துவாகிய ஜெகத்ரட்சகரே, இந்துக்களாகிய நம்மனைவரையும் அகப்பற்று, புறப்பற்றைவிடச் செய்து விட்டார்க்கல்லோ வீடு என்று சொல்லியபடி, மோக்ஷ பேரின்ப வீடு சேர்க்கக்கூடியபரம புருஷனாயிருக்கிறார். அவரையண்டிக்கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். குரங்குப்பிடி பூனைப்பிடி என்று சொல்வதுபோல, குட்டிக்குரங்கு தாயைப் பிடித்துக் கொள்ளுகிறபொழுது தாயானது ஒன்றும் செய்யாதிருத்தல் போலவும், பூனை தன் குட்டியை கௌவிக்கொண்டு போகும்போது குட்டியானது ஒன்றும் செய்யாதிருக்கிறது போலவும் தெய்வம் நம்மை தமது திருக்கரத்தினால் தூக்கியும் நாம் அவரை விசுவாசத்தினால் பிடித்தும் வருவதே மோட்சானந்த பதவிசேர ஏதுவாகும்.

இது நிற்க, எல்லாவற்றிற்கும் எல்லாமுமான கிறிஸ்துமார்க்கம் ஐரோப்பியரை உயர்த்திவிட்டது என்று சொல்வோமானால், ஐரோப்பாவில் பெரிய ராஜ்யத்தாராகிய ருஷியர்களை மடங்க அடித்த ஜப்பானியர்கள் எவ்விதமாய் நாகரீகமும், வல்லமையும் அடைந்திருக்கிறார்கள், அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லவே என்று நினைக்க இடமாகும். ஜப்பானியர் கடந்த 50 வருஷத்திற்குள் வல்லமையும், பராக்கிரமும், நாகரீகமும், சுறுசுறுப்புமுள்ள ஒரு புதிய ஜாதியைப்போலத் தோன்றியிருக்கிறார்கள். இதற்கு காரணம் யாது? கிறிஸ்து மார்க்கத்தால் உலகத்திற்கு வரும் நன்மை இருவகைப்படும்.

1. ஞானசமஸ்காரம் பெற்று கிறிஸ்தவர்களாகி சபை சங்கங்களை ஸ்தாபித்து அதில் நேரில் வரும் பற்பல இகபர நன்மைகளை அடைதல்.

2. கிறிஸ்துமார்க்கத்தை வெளிப்படச் சேராமல் பக்கமாய் வரும் கல்வி, நாகரீகம், சீர்திருத்தம், இராஜரீக ஒழுக்கம் இரணுவ அப்பியாசம், யுத்தக் கருவிகள் உண்டுபண்ணும் தன்மை, பூமிசாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் முதலியவைகளையறிந்து நீராவிக் கப்பல்களை செய்யவும், மாலுமிகளாகவும், வர்த்தகத் திறமை முதலியவை உடையவர்களாகவும் கிறிஸ்தவர்கள் மூலமாயும் கிறிஸ்தவ நாட்டிலிருந்தும் ஜப்பானியர்கள் கற்றுத் தேறியிருக்கிறார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது. வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு மூன்றையும் சேர்த்து மென்றால் சிவப்பு நிறம் ஆகிறதுபோல ஜப்பானியருடைய ஜாதிபேதம் குன்றி திடச்சித்தமுள்ள இயல்பான சுபாவத்தோடு, தங்கள் ராஜ்யத்தை ஸ்திரப்படுத்தவேண்டுமென்ற எண்ணமும், கிறிஸ்துமார்க்கத்தின் உபகாரமும் சலாக்கியமும் ஒன்றாய்ச்சேர்ந்து அவர்களை ஜெயவீரர்களான விலையுயர்ந்த சிறப்பாக்கிக் காட்டி வருகின்றன. இப்போது ஜப்பானியரின் யுத்தத்தை நடத்துகிற தலைவர்களில் பெரும்பான்மையோர் ஐரோப்பியர் வழக்க ஒழுக்கங்களை நன்றாயறிந்தவர்களும், ஐரோப்பா அமெரிக்காக் கண்டங்களில் அநேககாலம் வாசஞ்செய்தவர்களுமாயிருக்கிறார்கள். டீன். பாறர், என்கிற சாஸ்திரியார் "கிறிஸ்மார்க்கத்திற்கு நாகரீகமென்று ஒரு லௌகீகப் பேர்" உண்டென்கிறார். ஆகையால் ஜப்பானியர் இப்போது அடைந்திருக்கிற நாகரீகமானது ஒரு வகையான கிறிஸ்துமார்க்கமென்றே சொல்லவேண்டும். இவ்வாறே இந்துக்களாகிய இந்த நாட்டார் யாவரும் கிறிஸ்துமார்க்கம் வேண்டாம், வேண்டாமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது அவர்களுக்குத் தெரியாமல் கிறிஸ்துமார்க்கத்தின் புறம்பான நன்மையும். அதின் சத்து சாரத்தின் ஓர் பாகமும் அவர்களைப் பிடித்து ஆண்டுகொண்டு வருகின்றன. இந்தியாவில் உண்டாகிற நன்மை



யான ஒவ்வொரு மாறுதலுக்கும் கிறிஸ்துமார்க்கமே மூலகாரணமென்று சொல்லவேண்டும்.

அன்றியும், நாம் முன்மாதிரியாக வைத்துப் பின்பற்றுகிறதற்கு ஏற்ற சம்பூரண சலாக்கிய ஜீவியம் செய்தவர் புத்தனு? அவர் மகா சிறந்த புண்ணிய புருஷன்தான். ஆனாலும், அவர் ஜீவியத்திலும் குறைவுண்டு. மகமது என்பவரா? கற்லாயல், என்னும் சாஸ்திரி அவரைக்குறித்து எழுதியிருக்கிறபடி அரேபியா நாட்டில் தோன்றிய சிறந்த நபியாயினும் அவரிலும் குறைவுண்டு. மற்ற எந்த மகாத்துமாக்களையும், தீர்க்கதரிசிகளையும், ரிஷிகளையும் நமக்கு ஓர் முன்மாதிரியாக வைக்கிறதற்கு அவர்களிலும் குறைவுகள் காணப்படுகின்றன. ஆனால் பக்ஷபாதமில்லாமல் புத்தி கூர்மையோடும், விஸ்தீரணமான அறிவோடும் கிறிஸ்துவினுடைய ஜீவியத்தைக் கவனித்தாலோ, அவர் மாசற்றவரும், குற்றங்குறையில்லாதவரும், சம்பூரண பரிசுத்தமுள்ளவரும், நெரிந்த நாணலை முறியாதவரும், மங்கியெரிகிற திரியை அணையாதவருமான பரம சாத்மீக புண்ணிய புருஷனென்றறியலாம். எந்த மகாத்துமாக்களும் கிறிஸ்து சொன்னதுபோலச் சொல்லத் துணியவில்லை. கிறிஸ்துவோ "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவந்தார்" என்றும் தம்மைக்குறித்துச் சொல்லுகிறார். "இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று கிறிஸ்து ரட்சகரைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி வேறே புண்ணிய புருஷனைப்பற்றிச் சொல்லப்படவில்லை. மேலும் இவரைப்பற்றித்தான் ஆதியிலே வார்த்தையிருந்ததென்றும், அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்ததென்றும், அந்த வார்த்தை தேவனாயிருந்ததென்றும், அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார், அவருடைய மகிமையைக் கண்டோம், அது பிதாவுக்கு

ஒரே பேரானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவேயிருந்தது என்றும் சாக்ஷி கொடுக்கப்பட்டிருக்கிறது.

நீதி நெறியடங்கிய சன்மார்க்க கவி காவியங்கள் இந்துக்களாகிய எங்களிடத்திலில்லையா? அதன்படி நடந்தால் போதாதா, அப்படியிருக்க கிறிஸ்துவால் அருளிச்செய்த சுவிசேஷத்தை நாங்களேன் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்பீர்களோ?

சுவிசேஷமாகிய புதியேற்பாட்டில் அடங்கிய சிறந்த சன்மார்க்க சத்திய உபதேசங்களுக்கு நிகராக வேறே ஒரு சாஸ்திரத்தை சரியாகக்கொண்டுவந்து வைப்பதற்கு உலகத்திலே சரியான பிரபந்தமொன்றுமில்லை. இந்தியாவில் பகவத்கீதை, நீதிநெறிவிளக்கம் முதலிய சன்மார்க்கப் பாடல்களும் இருந்தபோதிலும் இவைகள் புதியேற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிற மேலான சன்மார்க்க பிரமாணங்களுக்கு வீந்து எட்டுகிறதற்கு இடமேயில்லை. எப்படியென்றால் இங்கிலாந்து தேசத்தில் அநேக கவிஞர் சிறந்த சன்மார்க்கக் கவிகள் கட்டியிருக்கிறார்கள். என்றாலும் மில்டன், என்னும் கவிசக்ரவர்த்தியின் கவிக்கு நிகரானது ஒன்றுமில்லை. சில சமயங்களில் மற்ற கவிஞருடைய கவிகள் இவருடைய கவிகளுக்கு ஒத்திருந்தபோதிலும் மில்டனுடைய கவிகளெல்லாம் சுத்தத் தங்கத்துக்கு ஒத்திருக்கும். மற்றக் கவிகள் தங்கப்பூச்சுக்கு ஒக்கும். அத்தன்மைபோல இந்தியாவிலும் மற்ற தேசங்களிலுமிருக்கிற எண்ணிறந்த சன்மார்க்கக் கவி காவியங்களும் சுவிசேஷமென்னும் இந்தச் சம்பூரண, சன்மார்க்க, சலாக்கிய சங்கரக சத்திய உபதேசங்களை யெட்டுகிறதற்குக் கூடாதவைகளாய் இருக்கின்றன. மேலும் இந்துமார்க்க முதலிய புறமதங்களிலிருக்கிற சன்மார்க்கக் கவிகள் என்று சொல்லப்பட்டவைகளில் இப்பிரபஞ்சத்திற்கடுத்தவைகளையே தழுவிய போதனைகளடங்கியிருக்கின்றன. புதியேற்பாட்டில் சொல்லப்பட்ட சன்மார்க்க உபதேசங்களெல்லாம் மனுஷர்களால் பின்பற்றக்கூடியவைகளாயும் தேவ கிருபையைமுன்னிட்டு



மனுஷர்கள் முத்தி மோக்ஷமடைகிறதற்கு ஏதுவாயுமிருக்கின்றன. இதிலே கிறிஸ்து யென்னும் ரட்சகர் "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள் என்று திருவுளம்பற்றியிருக்கிறார். இதற்கு ஒத்த மேலான உன்னத உபதேசமடங்கிய வாக்கியங்களை எந்த சன்மார்க்க புஸ்தகத்தில் காணலாம். இவர் இவ்வாறு சொன்னது மாத்திரமல்ல தம்மை கொலைசெய்துகொண்டிருந்த யூதருக்காகவும், பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களென்று ஜெபித்தார். இவரை புண்ணிய புருஷனென்று மாத்திரம் நம்புகிறதாயிருந்தால் புண்ணிய புருஷனானவர் ஒருக்காலும் பொய்சொல்லமாட்டாரே. அப்படியிருக்க நானே வழியும், ஜீவனும் சத்தியமுமாயிருக்கிறேன் என்று இவர் தன்னைக்குறித்துச் சொல்லியிருக்கிறாரே. உலகத்தின் மார்க்கங்களை ஸ்தாபித்தவர்களுக்குள் கிறிஸ்தவினுடைய யதார்த்தமான ஜீவியத்தைக் குறித்து நம்பப்படத்தக்க சாட்சியம் நமக்குக் கிடைத்திருக்கிறது. மேலும் இந்த கிறிஸ்துவில் நாம் கொண்டிருக்கிற உரித்தும் ஊக்கமுமானது அவர் கிறிஸ்து மார்க்கத்தை ஸ்தாபித்தவராயிருப்பதினால் அல்ல, அவர் தாமே நம்முளுடைய மார்க்கமும் ஜீவனின் நோக்கமுமாயிருப்பதினாலும், அவருடைய பரிசுத்த முன்மாதிரிகள் நம்முடைய ஒவ்வொரு நாள் ஜீவியத்திலும் பின்பற்றக்கூடியதாயிருப்பதினாலும், இவைகள் எல்லாவற்றிற்கு மேலாக அவருடைய மரணமே நம்முடைய ஆத்ம ரட்சணியத்துக்கு போன்ற காரணமாயிருப்பதினாலும் தாமரையிலை நீர்க்கொப்பான மனதை அசையாமைக்குட்படித்தி அசோகத்தை யனுபவிக்கச் செய்வதினாலும் அவரை நாங்கள் வழிபட்டு வருகின்றோம்.

இந்த மகத்துவமான ரட்சகரைக் குறித்து இவரு

டைய திரு அவதாரத்துக்கு ஆயிர வருஷங்களுக்கு முன்னமே தீர்க்கதரிசிகள் மூலமாய் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தச் சத்தியத்தின்படியே இவருடைய ஜீவிய முழுவதும் நிறைவேறிவிட்டது. உலகத்திலிருந்தபோது தம்முடைய உபதேசங்களை சேர்த்தாக்கிப்பார்க்கவாவது அல்லது ஒரு நவமான மார்க்கத்தை ஸ்தாபிக்கவாவது அவர் முயலவில்லை. மூளையால் கட்டத்திராணியற்றவர்களும், செல்வாக்கு இல்லாதவர்களும், ஏழைகளுமான செம்படவர்களை சிஷராக்கி அவர்களை தம்முடைய இருதயத்தில் பூண்டுகொள்ளும்படி செய்துவைத்து பரலோகம் போனார். அவருடைய சிஷர்களோ அவருடைய மார்க்கத்தைப் பிரபல்லியப்படுத்தி மற்றவர்களை கிறிஸ்துவுக்கு சிஷராக்கிக்கொண்டு இக்காலமட்டுமிருக்கிறபடி ஒருவர்பின் ஒருவர் தொடர்ந்துவருகிறார்கள்.

மேலும், அவருடைய உபதேசங்களோ, அற்ப சொற்பக்காரியங்களைப்பற்றி சொன்னவைகளல்ல, அவைகளெல்லாம் மேலானதும் பொதுவானதுமான சன்மார்க்க பிரமாணம் அடங்கியவைகள். அவைகள் அவலற்றதும் உயிர் அற்றதுமான சத்தியத்தை மறைக்கக்கூடிய சடங்காசாரம் அடங்கினவைகளல்ல. அந்த ரட்சகருடைய உபதேசங்கள் சர்வஜன சமரச போதனைகளென்று சொல்லலாம். ஏனெனில் சகல ஜாதியாருக்கும், பாஷைக்காரருக்கும், ஞானிகளுக்கும், பேதைகளுக்கும், பெரியோருக்கும், சிறியோருக்கும் ஏற்றதாகவேயிருக்கின்றன. அவைகளால் பேதை ஞானியாக்கப்படுகிறது மாத்திரமல்ல ஜீவனின் வழியில் ஒவ்வொருவரும் தாம் செய்யவேண்டிய கடமைகளை காட்டிக்கொண்டிருக்கிற உபாத்தியாயுமிருக்கின்றன. அந்த உபதேசங்கள் முழுதும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமை காட்டுகிறதில்லை. மனிதனுடைய புத்தி தீக்ஷிணியமும், அறிவும், ஞான தோரணைகளும் எம்மட்டு எட்டுமோ அம்மட்டுக்கும் ரட்சகருடைய உபதேசங்கள் இடங்கொடுக்கின்றன. இந்த ஜெகத்குருவின் உபதேசத்தில் மனுஷ சுபாவமின்னதென்று திட்டமாயும், தெளிவாயும் காட்டியிருப்பதுமல்லாமல், மனுஷன்



ஈடேற வழியையும் காட்டியிருக்கிறது. இந்த உபதேசங்களடங்கிய புதிய ஏற்பாடானது மனுஷர் மூலமாய் வந்தபோதிலும் தெய்வமூலாதாரத்தைத் தெளிவாய்க் காட்டுகின்றது. அவை தெய்வீகத்தின் சாயலை வெளிப்படுத்திக்கொண்டு அதின் ஒளிப்பிரகாசத்தை அநேகவிதமான பற்பல ஆத்துமாக்கள் மூலமாய் அநேக நூற்றாண்டுகளாய்ப் பிரகாசித்துக்கொண்டு வருகின்றன. அது நிற்க இங்கிலாந்து தேசத்திலே கிறிஸ்துமார்க்க முன்மையென்று ஒரே வார்த்தையினால் ரூபகாரப்படுத்தவேண்டுமென்று ஒருவர் கேட்டார். அதற்குப் பிரதியுத்தரமாக "யூதர்" என்று மற்றொருவர் சொன்னார். எந்த மனுஷனாவது யூதருடைய சரித்திரத்தை நன்றாய் வாசித்து அறிந்தால் அவன் நிச்சயமாய் கிறிஸ்துவினடியானாவான். அப்படியானால் யூதர்கள் இன்னும் கிறிஸ்தவர்களாகவில்லையே என்று சொல்லுவீர்களோ, அவர்கள் தங்கள் சொந்த சரித்திரத்தை இன்னும் நன்றாயறியாமல் இருதயக் கடினத்தினிமித்தம் தாமரை புஷ்பத்தின் கீழாகவே கிடக்கிற மண்டூகத்தைப் போலிருக்கிறார்கள். தூரத்து வண்டுகளாகிய புறஜாதியார் கிறிஸ்து மார்க்கமாகிய தாமரை மலரின் ரட்சிப்பென்னும் ரசத்தை வந்துண்ணுகிறார்கள்.

அவர்களே, குஷ்டரோகிகள் நிறைந்த ஸ்தலங்களிலும் நரமாமிச பக்ஷிணிகளாகிய மனுஷர்கள் வாசம் செய்யும் காட்டின் கண்ணேயும் போய் அவர்களுக்கு நன்மைசெய்து தங்கள் ஜீவனையும் அவர்களுக்காகச் செலவிட்டுக்கொண்டுவருகிறார்கள். வேறே எந்த மதஸ்தர் அப்படிசெய்து வருகிறார்கள். இவ்விதமாய் அவர்களை ஏவிவிடுகிற காரணம் கிறிஸ்துவின் ஆவியல்லவா? மேலும் இந்தியாவில் நமது தேசத்தில் அநேகர் கல்வி கற்றுத் திரண்ட திரவியத்தைச் சம்பாதித்துவைத்து மரிக்கும்போது மரண சாதனத்தில் தருமத்திற்காக என்னதோ கை எழுதிவைத்தார்களென்று விசாரித்தால் ஒன்றுமில்லையென்றே பெரும்பாலும் விளங்கும். பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்துவைத்த கேடுகெட்ட மானிடரே கேளுங்களென்று ஒருவர் பாடிக்கொண்டிருந்தாலும், தன் ஆயுட்காலத்தில்

பரோபகாரத்துக்காக ஒரு நன்மை செய்திருக்கிறாரா? காதற்ற ஊசியும் கூடவாராது காண்மாய கடவழிக்கே என்று ஞானம் பாடிக்கொண்டிருந்தவரும், மரணம் வரும்போது ஒரு சின்னக் காசையுங்கூட தர்மத்துக்காக எழுதி வையாமல் மரிக்கிறது சாதாரணமாய்த் தெரிந்த விஷயமே. ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் அநேகர் தாங்கள் உயிரோடிருக்கும் பொழுதும் மரிக்குந் தருணத்திலும் தர்மத்திற்காக ஆஸ்தியில் ஒரு பாகத்தை அல்லது முழுமையும் கொடுக்கிறதை சமாச்சாரப் பத்திரிகையில் வாசிக்கிறதில்லையா! இவ்விதம் இவர்களை ஏவிவிடுகிறது கிறிஸ்துவின் ஆவியல்லவா! அவர்களில் நாஸ்திகரென்று பேர் விளங்கியவர்கள்கூட இப்படித் தருமம் செய்துவருகிறார்களே. இதற்குக் காரணம் யாதெனில் சிறுபிராயத்தில் தங்களையறியாமல் கிறிஸ்து மார்க்கமாகிய சத்துசாரத்தினால் புகட்டப்பட்டு வளர்ந்ததினாலும், அத்தேசத்தில் ஆகாயமே மனுஷனில் பிரதான கடமை அவசியமான விஷயத்துக்குத் தர்மஞ்செய்யவேண்டியதென்பதினால் நிறைந்திருந்ததினாலும் அவர்களுக்குத் தெரியாமல் சாதாரணமாய் கிறிஸ்தவர்கள் செய்துவருகிறபடியே பரோபகாரத்தைச் செய்துவருகிறார்கள். மற்றவர்களுக்கு ஒருவர் கொடுப்பதெல்லாம் தர்மமென்று நினைக்கக்கூடாது. ஏனெனில், ராஜாவுக்கு கொடுப்பது வரி, பண்ணைக்குக் கொடுப்பது படி, வேலைக்காரருக்கு கொடுப்பது சம்பளம், கூலிக்காரர்களுக்குக் கொடுப்பது கூலி, சிநேகிதருக்குக் கொடுப்பது வெகுமானம், இனத்தாருக்குக் கொடுப்பது இனாம், கர்த்தருக்குக் கொடுப்பது காணிக்கை, ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் கொடுப்பது தர்மம். இந்தப் பதத்திற்கு சில பாஷைகளில் நீதி, என்றும் அர்த்தம் பண்ணப்படும். அறஞ்செய விரும்பு என்று ஔவை சொல்லியிருக்கிறாள். தர்மம் தலைகாக்குமென்று சொல்லுவார்கள். அப்படியிருக்க திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் 64 ஊட்டுப்புரைகளில் செலவழிக்கிறது தர்மமாகுமா, ஆயிரக்கணக்கான பணக்கார பிராமணர்கள் மகிழ போஜனஞ் செய்விக்கிறது தர்மமா



குமா, ஆகையால் ஐரோப்பா அமெரிக்காவில் செய்கிற தர்மத்தைப்பற்றிய சிந்தையைச் சிதறவிடாமல் சிர்தூக்கிப்பாருங்கள்.

மரமானது அதின் கனியினால் அறியப்படுகிறது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். இந்த ஜென்மத்திலே நமக்குக் கிடைத்திருக்கிற சலாக்கியத்தை விட்டுவிடாதபடி நாம் ஜீவனுள்ளோர் தேசத்திலிருக்கும்போதே கடவுளோடே நன்மனம் பொருந்தி, அவருடைய திருவுளச் சித்தத்தின்படியே நடக்கத்தக்க கிருபையை அடைவோமாக. இந்தப் புஸ்தகத்தினால் யாதாமொருவருக்கு பிரயோஜனமும், எழுப்புதலுமுண்டாகுமானால் அதுவே ஆக்கியோனடையக் கூடிய பிரதி பலனும் பாக்கியமுமாயிருக்கும்.

"வாயினாலெல்லாளை கர்த்தனே யென்று பேர் வருத்தி
ஆயிரந்தரங் கூவினுமாவதென்— அதில்
நாயகன் பேர் வருத்தி நடைகடை பிடிப்போன்,
தூய ராஜ்யம் பேரின்ப துய்பவனறிமின்."

பெற்றது.

Printed at the Church Mission Press, Palamcottah.